# உதயன்

விலை ரூபா 30

பக்கங்கள் 56

சுடர் 31 | கதிர் 108 | வள்ளுவர் ஆண்டு 2047 | மாசி 30, ஞாயிற்றுக்கிழமை 13.03.2016



மகாராஜா பொதிகள் சேவை

சிக்கனப் பொதிகள் சேவை

Per Kg

லண்டன் 449/=

கனடா 549/=

சுவிஸ் 449/=

ஏனைய நாடுகளுக்கும் நம்பகரமாகவும் விரைவாகவும் மிகக் குறைந்த செலவில் பொதிகளை அனுப்பிக்கொள்ளலாம்

GTV Enterprises (Pvt)Ltd.

இல 225, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 - 2224338 / 021-4925024
இல 25, கந்தசாமி கோவில் வீதி, வவுனியா.
024 - 4930200 / 076 - 6908961


## 7 ரூபாவால் எகிறியது கோதுமை மா விலை

கொழும்பு, மார்ச் 13

கோதுமை மாவின் விலை 7 ரூபா 20 சதத்தினால் அதிகரிக்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இந்த விலை அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதுவரை 90 ரூபாவுக்கு விற்பனை செய்யப் பட்டு வந்த ஒரு கிலோ கிராம் கோதுமைமா, இனி 97 ரூபா 20 சதத்துக்கு விற்பனை செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-த-5)

## ரூ.18 கோடி பெறுமதியான ஹெரோயின் பொலிஸ் வேட்டையில் சிக்கியது நேற்று

### தொண்டமானாற்றில் சம்பவம்; குடாநாட்டில் கைப்பற்றப்பட்ட அதி கூடிய பெறுமதியானது

யாழ்ப்பாணம், மார்ச் 13

வடமராட்சி, தொண்டமானாறுப் பகுதியில் நேற்று சுமார் 3 கிலோ ஹெரோயின் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டது. "கைப்பற்றப்பட்ட 2 கிலோ 800 கிராம் ஹெரோயின் போதைப்பொருளின் பெறுமதி சுமார் 18 கோடி ரூபா" என பொலிஸார் தெரிவித்தனர்.

போதைப் பொருள் கைப்பற்றப்பட்டாலும் அதனைக் கடத்தியவர்கள் தலைமறைவாகிவிட்டனர் என்று வடமராட்சிக்குப் பொறுப்பான உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஏ.எம்.ஜவ்பர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பக். 53



### வலி. வடக்கு மக்களை மீள் குடியமர்த்துவது தொடர்பான

# வாக்குறுதியை நிறைவேற்ற ஜனாதிபதி மைத்திரி உறுதி

யாழ்ப்பாணம், மார்ச் 13

கடந்த டிசெம்பர் மாதம் தான் வாக்குறுதியளித்தபடி ,எதிர்வரும் ஜுன் மாதத்திற்குள் வலி. வடக்கு மக்களை அவர்களது சொந்த இடத்தில் மீளக்குடியமர்த்துவது தனது பொறுப்பு என்று தெரிவித்திருக்கின்றார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன. "மக்கள் தங்களது சொந்தக்காணிகளைத் தான் கேட்கிறார்கள். அடுத்தவர்களின் காணிகளைக் கேட்கவில்லை. அவர்களின் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு எமக்கு இருக்கின்றது. எதிர்வரும் சில மாதங்களில் இந்த வேலையை முடிக்கத்தான் வேண்டும்" என்று தெரிவித்தார் அவர்.வலி. வடக்கு மற்றும் கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட 701.5 ஏக்கர் நிலப் பரப்பு கடந்த வருடம் விடுவிக்கப்பட்டிருந்தது. அதனை உத்தியோகபூர்வமாக நேற்று மக்களிடம் கையளித்தார் ஜனாதிபதி. காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி மற்றும் காங்கேசன்துறை நடேஸ்வரா கனிஷ்ட வித்தியாலயம் என்பவற்றையும் மக்களிடம் ஒப்படைத்தார். இந்த நிகழ்வு காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியில் ஜனாதிபதி தலைமையில்

பக். 53

முச்சந்தி முரளி



அப்ப! யாழ்ப்பாணத்தில இப்ப 'தூள்' பறக்குது எண்டு சொல்லுங்கோ...

## இளைஞர் திடீர் சாவு

### அலைபேசி உரையாடல் காரணமா?

கொழும்பு, மார்ச் 13

படுத்திருந்துகொண்டு அலைபேசியில் நீண்டநேரமாக உரையாடிய இளைஞர் ஒருவர் திடீரென உயிரிழந்துள்ளார் என்று ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம்

பக். 53



காணி விடுவிப்புப் பத்திரத்தை கையளிக்கிறார் ஜனாதிபதி

## இராணுவத்தை வெறுக்கவில்லை கெடுபிடிகளையே எதிர்க்கிறோம்

### முதலமைச்சர் விக்கி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 13

இராணுவத்தினரை நாம் வெறுக்கவில்லை, ஆனால் இராணுவக் கெடுபிடிகளை முற்றாக எதிர்க்கின்றோம். சிங்கள மக்களை நாம் எதிர்க்கவில்லை. பேரினவாத அடக்குமுறைகளை மட்டுமே கண்டிக்கின்றோம் என்ற செய்தியை, அனைத்து சிங்கள மக்களுக்கும் இராணுவ அதிகாரிகளுக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவிக்க விரும்புகின்றேன். இவ்வாறு தெரிவித்தார் வடக்கு முதலமைச்சர்.

ஜனாதிபதி தலைமையில் காங்கேசன்துறையில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

பக். 53

## அச்சுவேலி தொழிற்பேட்டை முதலீடு வீணாகிவிட்டதோ?

### இந்திய துணைத்தூதுவர் ஆதங்கம்

யாழ்ப்பாணம், மார்ச் 13

அச்சுவேலி தொழிற்பேட்டைக்கான செலவினம் வீணாகிப் போய்விட்டதோ என்று எண்ணத் தோன்றுவதாக, யாழ். இந்தியத்துணைத் தூதுவர் ஆ.நடராஜன் தெரிவித்தார்.

வடபகுதி ஊடகவியலாளர்களை கிறீன்கிறாஸ் விடுதியில் நேற்றுச் சந்தித்துப் பேசினார் அவர்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு - கிழக்கில் அழிவடைந்த பகுதிகளைக் கட்டியெழுப்புவதற்கும், இங்குள்ள மக்களின் வாழ்வாதாரத்தைச் சீர்செய்யவும் பெரிதும் தேவைப்படுவது பொருளாதாரமே. அதற்காக இந்தியா என்றும் துணைநிற்கும். இதற்காகவே இந்திய அரசு,

பக். 53

## பாண் விலை குறைப்பு

### ஒரு வாரத்துக்கு ரூ.50

கொழும்பு, மார்ச் 13

நுகர்வோர் வாரத்தை முன்னிட்டு, நாளை திங்கட்கிழமை முதல் பாணின் விலை குறைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை வரை பாணின் விலை 50 ரூபாவாக இருக்கும் என்று இலங்கை வெதுப்பக உரிமையாளர் சங்கம் அறிவித்துள்ளது.

யாழ்ப்பாண வெதுப்பகங்களிலும் இந்த விலைக் குறைப்பு நடைமுறைப்படுத்தப்படும் என யாழ். மாவட்ட வெதுப்பக உரிமையாளர் சங்கம் அறிவித்துள்ளது.

யாழ்.மாவட்ட வெதுப்பக உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கமும் விலைக்

பக். 53

## அரசியல் கைதிகளை விடுவிக்கவேண்டும்

### ஜனாதிபதியிடம் முதலமைச்சர் வலியுறுத்து

யாழ்ப்பாணம், மார்ச் 13

தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்கவேண்டும் என்றும், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்க வேண்டும் என்றும் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் நேற்றுக் கோரிக்கை முன்வைத்தார்.

நிகழ்வில் உரையாற்றிய, வடக்கு மாகாண முதலமைச்சர் தெரிவித்த சகல விடயங்களையும், கவனத்திற் கொள்வதாக ஜனாதிபதி பதிலளித்தார்.

காங்கேசன்துறையில் நேற்று நடைபெற்ற நிகழ்வில், வரவேற்புரை நிகழ்த்தினார் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன். அப்போது மேற்கண்ட கோரிக்கையை முதலமைச்சர் முன்வைத்தார். அவர் மேலும்

பக். 52




www.sdb.lk

நிலையான வைப்புகளுக்கு

உயர்ந்த வட்டி

ஐந்து வருட நிலையான வைப்பொன்றுக்கு

10.75% உச்ச வருட வட்டி (முதிர்ச்சியில்) வ.தே.வ. 8.98%

| | 3மாதம் | 6மாதம் | 1வருடம் |
|---|---|---|---|
| முதிர்ச்சியில் (வ.வ.வீ.) | 8.00% | 8.50% | 9.25% |
| வ.தே.வ. | 8.24% | 8.68% | 9.25% |

60 வயதுக்கு மேற்பட்ட சிரேஷ்ட பிரஜைகளுக்கு ரூ.1 மில்லியன் வரை 15% வருட வட்டியும், 55 வயதுக்கு மேற்பட்ட சகல பிரஜைகளுக்கு அதி உயர் வட்டியும் உரித்தாகும்.

ஏனைய நிலையான வைப்புகளுக்கும் கவர்ச்சிகரமான வட்டி வீதம்

மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள சணச அபிவிருத்தி வங்கிக் கிளையை நாடுங்கள்

011 5 411 411

SDBL சணச அபிவிருத்தி வங்கி பிஎல்சி

## யாழ். இந்து அதிபர் விடுதி முன் நின்றிருந்த கார் தாக்கப்பட்டமை குறித்து விசாரணை

### சிசிரிவி உதவியுடன் நடத்தப்படுகின்றது எனப் பொலிஸார் தகவல்

யாழ்ப்பாணம், மார்ச் 13

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அதிபரின் விடுதி முன்பாக நிறுத்தப்பட்டிருந்த கார் மீது தாக்குதல் நடத்தியமை தொடர்பில் சிசிரிவி கமராவின் உதவியுடன் விசாரணை முன்னெடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அங்கு நிறுத்தப்பட்டிருந்தது தனது கார் அல்ல என்றும் அது தனது மகனின் நண்பன் ஒருவரின் கார் என்றும் அந்தக் காரே சேதமாக்கப்பட்டது என்றும் கல்லூரியின் அதிபர் நேற்றுத் தெரிவித்தார்.

இது தொடர்பில் உதயனில் நேற்று வெளியான செய்தியில் அதிபரின் கார் மீது தாக்குதல் நடத்தப்பட்டு, கண்ணாடி உடைக்கப்பட்டது என்று யாழ்.பொலிஸில் அதிபர் முறைப்பாடு செய்துள்ளார் என்று வெளியாகியிருந்தது. எனினும் அந்த முறைப்பாட்டை தனது மகனின் நண்பர் தான் செய்திருந்தார். தனது மகனும் வாய்முறைப்பாடு வழங்கியிருந்தார் என்று அதிபர் தெரிவித்தார்.

பாடசாலையில் கற்கும் மாணவர் இருவருக்கு இடையே முரண்பாடு ஏற்பட்டது. அது பற்றிய விசாரணையின்போது தாக்கப்பட்ட மாணவனின் நண்பர்கள் புகைப்படம் எடுக்க முற்பட்டனர். அவ்வாறு எடுக்கவேண்டாம் என்று தான் கூறினேன் என்றும், அதனால் அவர்கள் சென்றுவிட்டனர் என்றும் அதிபர் தெரிவித்தார்.

அதேவேளை, பாடசாலையை அண்மித்து இளைஞர் குழுக்கள் மது அருந்துகின்றன என்றும், ஒருமுறை பொலிஸார் அவர்களை விரட்டினர் என்றும் தெரிவித்த அதிபர், அதுபற்றிப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியிருக்கலாம் என்று நினைத்துத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் என்றும் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், இந்தச் சம்பவம் பற்றிய மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

(ற-ஜ-4)



வவுனியா கோவில்குளம் சந்திக்கு அருகாமையில் பயணித்துக்கொண்டிருந்த ஓட்டோ திடீரெனத் தீப்பிடித்து எரிந்துள்ளது. எரிபொருள் நிலையத்தில் ஓட்டோவுக்கு எரிபொருள் நிரப்பிவிட்டுச் சென்றுகொண்டிருந்த போது அது குடைசாய்ந்து தீப்பற்றியது என்றும் அதன்போது எவருக்கும் காயம் ஏற்படவில்லை எனவும் பொலி ஸார் தெரிவித்தனர். (ற-ஜ-4)

## சம்பூரில் மீள்குடியமர்வு ஏப்ரலில் ஆரம்பம்

கொழும்பு, மார்ச் 13

சம்பூரில் இருந்து இடம் பெயர்ந்த எஞ்சிய மக்களை மீளக்குடியமர்த்தும் பணிகளை எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி ஆரம்பிக்குமாறு மூதூர் பிரதேச செயலருக்குத் தாம் உத்தரவிட்டுள்ளதாகக் கிழக்கு மாகாண ஆளுநர் ஒஸ்ரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இந்த மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னதாக, சம்பூரில் உள்ள விதுர கடற்படைத் தளம் இடம் மாற்றப்பட்ட பின்னர், மீளக்குடியமர்த்தும் நடவடிக்கைகளை நிறைவு செய்ய முடியும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

சம்பூர் மத்திய மகா வித்தியாலய சுற்றாடல் ஏற்கனவே கடற்படையினரால் விடுவிக்கப்பட்டுள்ள நிலையில், பாடசாலையை மீண்டும் திறப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (கு-ஜ-5)

# வலி.வடக்கில் நடேஸ்வராக் கல்லூரிக்கு நேற்று விடுதலை



கல்லூரிக் கட்டடம்



வரவேற்பு



பிரார்த்தனை எல்லாம் நல்லதாக நடக்கட்டும்



வரவேற்பு நடனம்





இராணுவத்திடன் ஆலோசனை



விரைவில் பேசித் தீர்க்கலாம்



காணி கையளிப்பு



எம்.பிக்களுக்கு வணக்கம்







## ஈழத்துச் சிதம்பரத்தின் கொடியேற்றம் நாளை

காரைநகர் மார்ச் 13 காரைநகர் ஈழத்துச் சிதம்பர வருடாந்தத் திருவிழா நாளை மு.ப. 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 11 தினங்கள் இடம்பெறவுள்ளது.

இந்த உற்சவத்தில் 17 ஆம் திகதி வியாழக்கிழமை இரவு 8 மணிக்கு கைலாச வாகனத் திருவிழாவும், 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு 8 மணிக்கு வேட்டைத் திருவிழாவும், 21 ஆம் திகதி திங்கட்கிழமை இரவு 8 மணிக்கு பெரிய சப்பறத் திருவிழாவும் இடம்பெறும்.

22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 7.35 மணிக்கு இடம்பெறும் வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து 9.30 மணிக்குச் சோமாஸ்கந்தப் பெருமான் பரிவார மூர்த்திகளுடன் தேருக்கு எழுந்தருளிப் பஞ்சரத பவனி இடம்பெறும்.

புதன்கிழமை காலை 6.35 மணிக்கு நடேசர் உற்சவமும் காலை 9 மணிக்கு தீர்த்த உற்சவமும் மாலை கொடியிறக்க உற்சவமும் 24 ஆம் திகதி வியாழக்கிழமை திருக்கல்யாண உற்சவமும் இடம்பெறும்.

இந்த உற்சவங்களை முன்னிட்டு யாழ் நகரிலிருந்து ஆலயம் வரை நேரடி பஸ் சேவைகள் இடம்பெறவுள்ளன. (த-4-250)

### வேலைவாய்ப்பு

இலங்கையில் பிரசித்தி பெற்ற பிரபலமான நிட்டம்பு பஸ்யால தெமட்டகொட வத்தலை பானதுறை சீதுாவை போன்ற தொழிற்சாலைகளுக்கு உடனடி வேலையாட்கள் தேவை.
உணவு, தங்கும் வசதிகள் இலவசம். நாட்சம்பளம், கிழமைச்சம்பளம், மாதச்சம்பளமாக 38,000/= பெற்றுக் கொள்ளமுடியும். வந்தவுடனே வேலைக்கு சேர்த்துக் கொள்ளப்படும்.
கீழ்க்காணும் இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளவும்.
072 3896 106, 077 6363 156

### வேலைவாய்ப்பு

முன்மாதிரியான பொய்யின்றி உழைப்பிற்கேற்ப சம்பளம் பெற ஆண், பெண் இருபாலாருக்கும் வேலை வாய்ப்பு உண்டு.
நூடில்ஸ், பால்மா, டொபி, டிபிடிபி ஆகிய பிரிவுகளுக்கு சம்பளம் (25,000 - 35,000) உணவு, தங்குமிடம் முற்றிலும் இலவசம் வயது (18-50) OTயுடன் நாட் சம்பளம் 1500/=
077 9898 443, 076 9881 700

### வேலைவாய்ப்பு

அரசு அங்கீகரிக்கப்பட்ட பெயின்டிங், ரிங்கறிங், வெல்டிங், கப்பல் சுத்திகரிப்பாளர்கள் போன்ற உதவி ஆட்கள் உடனடியாகத் தேவை. உணவு, தங்குமிடம் வேலை நேரம் இலவசமாக வழங்கப்படும். சம்பளம் 29,000 – 55,000 வரை. வயது எல்லை 18 –40 வரை.
077 9569 606, 075 028 7319

### Majestic Cineplex Jaffna
### கார்கில்ஸ் ஸ்குவெயர்

(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)

இப்பொழுது திரையில் — CEYLON THEATRES




விசாரணை ☎ 021- 2227712

facebook CeylonTheatres
www.ceylontheatres.lk

### இலங்கையில் முதல் தடவையாகப் பெண்களுக்கான அழகுக்கலைக் கல்லூரி



Olialakan Studioஉம் British College of Beauty Studies உம் இணைந்து நடத்தும் அழகுக் கலைப் பாடநெறிகள்.

ஆரம்பம் முதல் Advance வரை அழகுக் கலையில் பல பிரிவுகளாக வடிவமைத்துள்ளோம்.

எங்களின் சிறப்பம்சம்...
*பண உதவி செய்து தரப்படும்.
*பெறுமதி மிக்க சான்றிதழ்கள் வழங்கப்படும்.
*அதிக புள்ளிகள் பெறும் மாணவர்களுக்கு Awards, பரிசில்கள் வழங்கப்படும்.
*வெளிநாடு செல்பவர்களுக்காகவே விஷேடமாக வடிவமைக்கப்பட்ட பாடநெறி.
*குறுகிய கால வகுப்புக்களையும் பெற்றுக்கொள்ள முடியும்.
*ஒருநாள் முதல் 6 மாத கால பாடநெறிகளும் பயிற்சி வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

குறிப்பு:- பொருத்தமான நேரத்தையும் நாளிகளையும் பெற்றுக்கொள்ள முடியும்.

மேலதிக விவரங்களுக்கு:- Icing வகுப்புக்கள் ஆரம்பம் பதிவுகளை மேற்கொள்ளவும்.

**British College of Beauty studies**
PalalyRoad, Thirunelvely Junction.
**076 701 1645**

### நாமிருக்க பயமேன்!

கொள்ளையர்களிடமிருந்து உங்களை பாதுகாத்துக்கொள்ளுங்கள்!
சன்சக்தி CCTV க்களை பொருத்துங்கள்!




SST - சன்சக்தி ரேடர்ஸ் - நம்பிக்கைக்கு உத்தரவாதமளிக்கின்றோம்!!
இல 651, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்
www.sunsakthy.com Email info@sunsakthy.com
தேவை:- software Engeneers/Programmers (in PHP,MySql, Java knowledge) !

### VACANCIES IN A PROJECT MANAGEMENT TEAM FOR A PRESTIGIOUS PROJECT IN JAFFNA

| | |
|---|---|
| PROJECT MANAGER cum SITE ENGINEER (Structural/Civil) | Civil/Structural Engineer with 8 years experience in project management, site supervision, project monitoring, compiling progress reports, & reporting to Consultant's head office. |
| SITE ARCHITECT | B.Arch or equivalent with 3 years experience including at least 1 year site supervision experience |
| SITE MEP ENGINEER | BSC Eng. with 3 years experience in Building Services installation or supervision , or NDT/HNDE with 5 years experience in Building Services installation or supervision |
| SITE QUANTITY SURVEYOR | BSC QS with 3 years experience in Building Projects or IQSSL Technical Membership |

APPLY WITH CV BY 23RD MARCH 2016 TO:
TA.vacancies@gmail.com
team architrave
TEAM ARCHITRAVE, CHARTERED ARCHITECTS, 55, 5TH LANE, COLOMBO 03.

# ஈழத்துச்சிதம்பரம்
## திண்ணபுரம் சிவன் கோயில் - காரைநகர்
## மன்மத வருஷம் 2016 ஆம் ஆண்டு
## பங்குனி மஹோற்சவ விஞ்ஞாபனம்



சிவநேயர்களே!

நிகழும் மங்கலகரமான மன்மத வருஷம் பங்குனித்திங்கள் முதலாம் நாள் (14.03.2016) திங்கட்கிழமை வருடாந்த பங்குனி மஹோற்சவம் ஆரம்பமாகித் தொடர்ந்து பதினொரு தினங்கள் சிறப்பாக நடைபெறத்திருவருள் பாலித்துள்ளது. அத்தருணம் அடியார்கள் யாவரும் பெருந்திரளாக வந்து மஹோற்சவத்தினைக் கண்டு எம்பெருமானை வணங்கி இஷ்டசித்திகளைப் பெற்றேகுக.

**மஹோற்சவ கிரியை விவரம்**

பங்குனி மாதம் முதலாம் நாள் (14.03.2016) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு கொடியேற்றம் அதனைத் தொடர்ந்து சுவாமி இடப வாகனத்தில் திருவீதியுலா வருதல்.
பங்குனி மாதம் 04 ஆம் நாள் (17.03.2016) வியாழக்கிழமை இரவு 8.00 மணிக்கு கைலாச வாகனத்தில் சுவாமி திருவீதியுலா வருவார்.
பங்குனி மாதம் 07 ஆம் நாள் (20.03.2016) ஞாயிற்றுக்கிழமை இரவு 8.00 மணிக்கு எம்பெருமான் பரிவார மூர்த்திகளுடன் ஐயனார் வேட்டைக்கு எழுந்தருளல்.
பங்குனி மாதம் 08 ஆம் நாள் (21.03.2016) திங்கட்கிழமை இரவு 8.00 மணிக்கு எம்பெருமான் பெரிய சப்பறத்தில் திருவீதியுலா வருவார்.
பங்குனி மாதம் 09 ஆம் நாள் (22.03.2016) செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழா காலை 7.35 மணிக்கு வசந்தமண்டப பூஜையும் முற்பகல் 9.30 மணிக்கு சோமஸ்கந்தர் பரிவார மூர்த்திகளுடன் தேருக்கு எழுந்தருளி பஞ்சரத பவனி இடம்பெறும்.
பங்குனி மாதம் 10 ஆம் நாள் (23.03.2016) புதன்கிழமை காலை 6.35 மணிக்கு நடேசர் உற்சவம், காலை 9.00 மணிக்கு தீர்த்தோற்சவம். இரவு 7.00 மணிக்கு கொடியிறக்கம்
பங்குனி மாதம் 11 ஆம் நாள் (24.03.2016) வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு அம்பாள் எழுந்தருளி பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் தபசு இருத்தல். மாலை 7.00 மணிக்கு திருக்கல்யாண உற்சவம் நடைபெற்று எம்பெருமான் சௌந்தராம்பிகை சமேதசுந்தரேஸ்வரப்பெருமான் அலங்கரிக்கப்பட்ட பூந்தண்டிகையில் வீதியுலா வருவார்.

01. தினமும் காலைத்திருவிழா காலை 8.00 மணிக்கு ஆரம்பமாகும்.
02. மாலைத்திருவிழா மாலை 4.00 மணிக்கு ஆரம்பமாகும்.
03. திருவிழா பத்துத் தினங்கள் மகேஸ்வர பூஜை (அன்னதானம்) நிகழும்

**28.03.2016 திங்கட்கிழமை ஐயனார் பொங்கல்**

"அனைவரும் வருக சிவன் சக்தி அருள் பெறுக"
"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

ஆலய ஆதீன கர்த்தாக்கள்
ஆ.அம்பலவிமுருகன், மு.சுந்தரலிங்கம்

ஈழத்துச் சிதம்பரம், சிவன் கோயில், காரைநகர்.

(அ/28947)15.17)

விசேட பஸ் சேவை இடம்பெறும்

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்





அமரர் திருமதி

## கமலாம்பிகை வித்துவசிங்கம்

அன்னை மடியில்
13.09.1934

ஆண்டவன் அடியில்
12.02.2016

12.02.2016 வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவியின் அந்தியேட்டிக் கிருத்திய நிகழ்வு 11.03.2016 வெள்ளிக்கிழமை கீரிமலையில் நடைபெற்றது. வீட்டுக் கிருத்திய நிகழ்வு இன்று (13.03.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் இறப்புச் செய்திகேட்டு நேரிலும் தொலைபேசி ஊடாகவும் அனுதாபங்களைத் தெரிவித்த நல் உள்ளங்கள் அனைவருக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

நீர்வேலி மத்தி,
நீர்வேலி.

குடும்பத்தினர்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



## திருமதி நகுலேஸ்வரி சுப்பிரமணியம்

தோற்றம்
14.04.1931

மறைவு
12.02.2016

எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய் விளங்கிய எம் அன்புத் தெய்வம் உடல் நலக்குறைவாக இருந்தபோது வீடுவந்து பார்வையிட்டு உதவிய வைத்தியர்கள் மற்றும் இறைபதம் அடைந்து நாம் துயருற்றிருந்த வேளையில் ஆறுதல் கூறி அரவணைத்த ஆர்வலர்கள், தொலைபேசி, சமூக இணையத்தளங்கள் வழியாக அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் மலர் வளையம் வைத்தும் அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்டோருக்கும், இறுதிக் கிரியைகளில் உடனிருந்து உதவிய உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எம் நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(69205) (13.18.20)


பலாலி வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

குடும்பத்தினர்
021 205 3967

## சக்கோட்டை

# புனித சவேரியார் ஆலய பெருவிழா

# சிறப்பிதழ் -13.03.2016-



### ஆலய வரலாறு

இன்று சக்கோட்டை வாழ் கத்தோலிக்க மக்கள் தங்கள் பாதுகாவலராம் புனித பிரான்சிஸ் சவேரியாரின் திருநாளை வெகு சிறப்பாகக் கொண்டாடி மகிழ்கின்றார்கள். இப்புனிதரின் பெயர் கொண்ட தொன்மை வாய்ந்த ஆலயமானது அல்வாய் வடக்கிலுள்ள பழைய வேதக் கோயிலடி என்னும் இடத்தில் போர்த்துக்கீசர் காலப்பகுதியில் கட்டப்பட்டதாக நம்பப்படுகின்றது. இக் காலப்பகுதியில் சிறு தொகையினராகக் கத்தோலிக்க மக்கள் இவ் ஆலயத்தினை அண்டி வாழ்ந்தார்கள். இவர்கள் மீன்பிடித் தொழிலை மேற்கொண்டிருந்தனர். தங்கள் இருப்பிடத்துக்கு அண்மித்த சக்கோட்டைக் கடற்பகுதிக்குச் சென்று தொழிலை மேற்கொண்டு திரும்பினர். இக்கடற்கரைப் பிரதேசமானது மக்கள் சஞ்சாரமற்ற, கற்பாறைகளும், பற்றைக்காடுகளும் நிறைந்த பூமியாகக் காணப்பட்டது. இம் மீனவ மக்கள் கடலால் வந்திறங்கக் கூடிய துவக்கேந்திய வேற்றுநாட்டு மாலுமிகளுக்கு அஞ்சியும் மாரிகாலத்து சீரற்ற கடலோரக் காலநிலைகளை எதிர்கொள்ளத் தயங்கியும். மக்களுடன் மக்களாக உட்பகுதியிலே இருந்தனர்.

1918ஆம் நூற்றாண்டின் பிற்பட்ட காலப்பகுதியில் தொழில் வசதி கருதியும். பிரதான வீதிப் போக்குவரத்து வசதியைக் கருத்திற் கொண்டும் இம் மீனவக் கத்தோலிக்க குடும்பங்கள் சிறிது சிறிதாக கடற்கரையோரங்களில் சிறு குடில்கள் அமைத்து வசிக்கத் தொடங்கினர். எனவே இவ் ஆலயத்தையும் இவ்விடத்தில் அமைக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. 1908 ஆம் ஆண்டு இவ் ஆலயத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. இவ் ஆலயம் முருகைக் கற்கள் கொண்டு சுண்ணாம்புக் கலவையினால் கட்டப்பட்டது. கட்டடம் 1924ஆம் ஆண்டு பூர்த்தி செய்யப்பட்டது.

நூற்றாண்டு கடந்த நிலையில் கட்டடம் பழுதடையத் தொடங்கியது. புதிய ஆலயம் ஒன்று அமைக்கப்பட வேண்டியதன் அவசியம் உணரப்பட்டது. 11.02.2004 இல் அருட் திரு றெஜி இராஜேஸ்வரன் அடிகள் அவர்களினால் புதிய ஆலயமொன்று அடிக்கல் நாட்டப்பட்டது. தொடர்ந்து பங்கு மக்கள் அயரா முயற்சியுடன் அப்போதைய பங்குத் தந்தை அருட்திரு ம. பத்திநாதன் அவர்களினால் கட்டடப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு 2009ஆம் ஆண்டு இறுதிப் பகுதியில் இவ் அழகிய ஆலயத்தின் வேலைகள் யாவும் பூர்த்தியாயின. 20.02.2010இல் ஆலயம் அப்போதைய யாழ். ஆயர் அதி.வண.தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களினால் புனிதப்படுத்தப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

புனித பிரான்சிஸ் சவேரியாரின் இறந்த தினமான மார்கழி மாதம் 03 ஆம் திகதியே இவரது திருநாள் தினமாகும். நெடுங்காலமாக இத்திகதியிலேயே திருநாள் கொண்டாடப்பட்டு வந்தது. மார்கழி மாதத்து மழை, கடலோர வாடைக்காற்றின் அசௌகரியங்கள் காரணமாக இத்திருநாளைச் சிறப்பாகக் கொண்டாட முடியாத நிலை காணப்பட்டது. 1930ஆம் ஆண்டளவிற்குப் பின்னரான காலங்களில் பங்கு மக்களின் வேண்டுகோளுக்கமைய ஆயரின் அனுமதியுடன் இப்புனிதரினாலேயே ஏற்படுத்தப்பட்ட வரப்பிரசாதத்தின் நாள்களாகிய பங்குனி மாதம் 4 ஆம் திகதி தொடக்கம் 12ஆம் திகதி வரை இந்நவநாள் கொண்டாடப்பட்டு வரப்படுகின்றது. முடிவு நாளாகிய 12ஆம் திகதி இவருக்குப் புனிதப் பட்டம் (1622) சூட்டப்பட்ட தினமாகும். இவ்வரலாறு பற்றிக் குறிப்பிடப்பட்டிருப்பதாவது இத்தாலியிலுள்ள நேப்பின்ஸ் நகரில் மார்செல்லோ மஸ்தி நில்லி என்னும் யேசுசபைக் குருவானவர் நோயுற்று மரணத்தறுவாயிலிருந்தார். இவரது மரணப்படுக்கையில் சவேரியார் காட்சி கொடுத்து அவருக்கு சுகம் கொடுத்துக் கூறியதாவது. பங்குனி 4ஆம் திகதி தொடக்கம் 12ஆம் திகதி வரை தொடர்ந்து எனது உதவியை நாடி வந்து அந்த ஒன்பது நாள்களுள் ஒருநாள் ஒப்புரவு அருட்சாதனத்தைப் பயபக்தியுடன் பெற்று நற்கருணை பெறுவோர் தன் மூலமாக அவரவர் கேட்ட வரங்களைத் தப்பாமல் அடைந்து கொள்வார்கள்.

திருத்தந்தை அவர்களினால் பிரகடனப்படுத்தப்பட்ட இவ் இரக்கத்தின் ஆண்டில். புனித தவக்காலத்தை தகுந்த முறையில் அனுசரித்து இதனால் ஆன்மீக சரீர நலன்களைப் பெற்றுக் கொள்வதற்கு இத் திருவிழா மக்களுக்குப் பேருதவியாக அமைகின்றது.

இத் திருநாட் கூட்டுத் திருப்பலி இன்று (13.03.2016) காலை 7 மணிக்கு அதி வணக்கத்துக்குரிய ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் தலைமையில் ஒப்புக் கொடுக்கப்படும். புனிதரின் திருச் சுரூப ஆசீரை பங்குத் தந்தை அருட்திரு கானஸ்போவர் அடிகள் அவர்கள் வழங்குவார்.

**பங்குத் தந்தையும், பங்கு மக்களும்.**

### ஆசிர்செய்தி

கீழத்தேச நாடுகளுக்கு விசுவாச வெளிச்சத்தைக் கொண்டு வந்தவர்களுள் புனித பிரான்சிஸ் சவேரியாரும் முக்கிய பங்கு வகிக்கின்றார். இவருடைய நாமத்தினாலே உருவாகியுள்ள சக்கோட்டை ஆலயத்தின் இவ்வாண்டுக்கான திருவிழா நடைபெறுவது அவருடைய போதனைகளின் நீண்டகாலக் கனிகளே இந்நன்நாளில் சக்கோட்டை இறைமக்களும் பங்குத்தந்தையும் புனிதருடைய பரிந்துரையும் ஆசிரும் புனிதரை நாடிவரும் அனைத்துப் பக்தர்களுக்கும் கிடைக்க வேண்டுமென்றும் மானிட வாழ்வுக்குத் தேவையான அமைதி, சமாதானம், இரக்கம் இவையனைத்தையும் இவ்விரக்கத்தின் ஆண்டிலே பெற்று மகிழ்வோடிருக்க செபத்தோடு கூடிய நல்வாழ்த்துக் களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**அருட் திரு.ம.கான்ஸ்போவர்,**
**பங்குத்தந்தை**
**புனித பிறான்சிஸ் சவேரியார் ஆலயம்,**
**சக்கோட்டை, பருத்தித்துறை.**

**குமார் மோட்டோர்ஸ்**
மெக்கானிக் அன்ட் சேர்விஸ்
Authorised Dealer for Abans Auto (pvt)Ltd
தும்பளை வீதி,
HNB வங்கியருகில், பருத்தித்துறை.
Tel:077 539 6840
021 5618251

**ஹப்பி ரெயிலேர்ஸ் & மல்ரி சென்ரர்**
Happy Tailors & Multi Center
நாவலடி, பருத்தித்துறை.
T.P: 077 669 2910
உரிமையாளர்: T. திலீபன்

**சென் அன்ரனீஸ் மோட்டோர்ஸ்**
முச்சக்கர வண்டி மற்றும்
மோட்டார் சைக்கிள்
பழுது பார்த்தலும்
சுத்திகரித்தலும்.
தும்பளை வீதி, பருத்தித்துறை.
077 469 4217
077 856 2174
077 527 6124

**பிரியங்கா**
பல்பொருள் வாணிபம்
தினசரி பத்திரிகை, மலிகை பொருள்கள்
மற்றும் யாழ். கொழும்பு போக்குவரத்து சேவை.
அல்வாய் வடமேற்கு, சக்கோட்டை.
T.P: 077 459 6918
உரிமையாளர்: மன்குமார்

**எமில்ரன் மோட்டோர்ஸ்**
EMILTON MOTOR WORKS
OUT BOAT MOTOR REPAIRS & SALES OF SPARE PARTS
Sakkoddai, Alvai North West, Alvai
Prop: P. Joseph Arulthas (Master)
Tel: 0777 145 714

**ரகு மெக்கானிகல் & சேர்விஸ் சென்ரர்**
TVS நிறுவனத்தின்
அங்கீகரிக்கப்பட்ட சேவை நிலையம்.
Main Street, Pointpedro.
T.P: 077 612 7541
உரிமையாளர்: ரகு

**அன்ரன் பெயின்ரிங் மெக்கானிக் அன் சேவிஸ்**
உரிமையாளர்: அன்ரன்
பருத்தித்துறை வீதி,
தம்பசிட்டி.
T.P: 0777 967 162

**Divi**
Beauty Parlour
Cake, Icing, Makeup, Facial
உரிமையாளர்: Divya
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
Tel: 0775045785

**சிறி பாம்**
இறைச்சிக்கோழி வகைகளை
மொத்தமாகவும்
சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்
மாவிலங்கையடி,
அல்வாய் வடமத்தி.
உரிமையாளர்: றூட்சன்.
T.P: 077 8020 382

உங்கள் சகல வைபவங்களுக்கும் சிறந்த முறையிலும்
தரமான வகையிலும் ஐஸ்கிறீம் வகைகளைப் பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய ஒரே இடம்
**V.நாகேஸ் கிறீம்கவுஸ்**
முத்துமாரி அம்மன் கோயிலடி
அல்வாய் வடக்கு, அல்வாய்.
T.P:0778285574

## திருச் சபைகளின் போதகர்கள் சந்திப்பு

யாழ்ப்பாணம்,மார்ச் 13

யாழ்ப்பாணம் கிறிஸ்தவ சபைகள் ஸ்தாபனங்களின் ஏற்பாட்டில் அண்மையில் யாழ்பாண வை.எம்.சி.ஏ மண்டபத்தில் திருச்சபைகளின் போதகர்கள் சந்திப்பு இடம்பெற்றது.

இலங்கை கிறிஸ்தவ சம்மேளன திருச் சபை இணைப்பாளர் வி. ஜெரோமுடன் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் இலங்கை கிறிஸ் தவ சம்மேளன செயலாளர் பிரான்சிஸ் உட்பட மூத்த திருச் சபை போதகர்கள் பலர் கலந்து கொண்டனர்.

இதில் ஆசீர்வாத பிரார்த்தனையும் இடம்பெற்றது. இந்தச் சந்திப்பு யாழ்ப்பாண திருச் சபைகள் மத்தியில் ஐக்கியத்தை வலுப்படுத்தியுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஐ-ரி4)

## பெருந் திருவிழா

சங்கரத்தை பிட்டியம்பதி வீரபத்திரர் சமேத பத்திரகாளி அம்பாள் ஆலய வருடாந்தப்பெருந் திரு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்குகொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 12தினங்கள்நடைபெறும்எனஆலய அறங்காவலர்கள் தெரிவித்துள்ளனர். தினமும் காலை 9 மணிக்கு அபிசேகம் பூசைகளைத் தொடர்ந்து அம்பாள் வீதி உலா வருதலும், மாலை 5 மணிக்கு மாலை உற்சவமும் ஆரம்பமாகும்.எதிர்வரும் 23 ஆம் திகதி புதன்கிழமை தேர்த்திரு விழாவும் மறுநாள் 24 ஆம் திகதி வியாழக்கிழமை தீர்த்த உற்சவமும் நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஐ-ரி)


## சேவை

நாங்கள் கடன்/கடன் மறுசீரமைப்பு (Loan/ Debt Restructuring), வர்த்தகநிதி (Trade Finance), சட்ட/செயலகசேவைகள் (Legal/ Secretarial Services) மேற்படி சேவைகளுக்கான ஆரம்ப இலவச ஆலோசனைகளை வாரநாள்களில் காலை 9.00 மணிக்கும் மாலை 4.00 மணிக்கும் இடையே வழங்குகிறோம்.

உள்ளூர், வெளியூர் அனுபவமுள்ள ஓய்வு பெற்ற வங்கியாளர் மூலம் நடத்தப்படுகிறது.

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கங்கள்
077 365 6445, 077 703 3348, 077 472 8905
B4B நிபுணர்கள்


## நாகபூஷணி திருமண சேவை

மணமகள்களுக்குப் பதிவுக் கட்டணம் இலவசம்.
13.03.2016 இலிருந்து 20.03.2016 வரை)

டாக்டர்கள், எஞ்சினியர்கள், எக்கௌண்டன்கள், சட்டத்தரணிகள், வங்கி உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்கள், தனியார் துறையினர், வெளிநாட்டு மணமகன், மணமகள் ஆகிய அனைவரின் ஜாதகங்களும் எம்மிடம் ஏராளமாக உள்ளன. உடன் பொருத்தம் பார்த்து உடனடியாக மிகப் பொருத்தமான ஜாதகம் தரப்படும்.

384/14B, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்
(நல்லூர் கோயிலின் வடக்குப் பக்கம்)
021 222 9306, 077 138 7596, 075 554 6000
Email: nakapoosanywedding@gmail.com



## மணிவிழா வாழ்த்து



"பொன்மனச்செம்மல்"
"கல்விக்காருண்யன்"
எனும் கௌரவ பட்டங்களைப் பெற்ற
உயர் திரு
E.S.P. நாகரட்ணம் P.M.J.F
அவர்கள் மேலும் பல்லாண்டு காலம் வாழ்கவென நல்லைக்கந்தனின் இறையருள் வேண்டி வாழ்த்துகின்றோம்.

நல்லூர் சங்கிலியன் மன்ற நிர்வாகத்தினர்.

## மணிவிழா நாயகனின் வாழ்த்து



"பொன்மனச்செம்மல்"
"மனிதநேய ஈகையாளன்"
"கல்விக்காருண்யன்"
எனும் உயர் பட்டங்களைப் பெற்ற இன்னும் பல உயர் பட்டங்களைப் பெறவிருக்கும் எமது நிறுவனத்துடன் இணைந்து பல ஆண்டுகள் விற்பனை முகவரான
" கஜமுகன் காட்வெயார் "
ஸ்தாபகர்
E.S.P Nagarathinam
மணிவிழா நாயகனை வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
METROOF Total Roofing Solutions
METECNO LANKA (PVT) LIMITED
No. 734, Hospital Road, Jaffna.
Tel: 021-5672672
Website: www.metecnolanka.com

## சமாதான நீதிவான் பதவிக்கான பாராட்டு

திரு.பொன்னையா தெண்டாயுதபாணி வட பிராந்திய போக்குவரத்துச்சபை திீர் பரிசோதகராகப் பணி புரிந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் எமது பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தில் உபதலைவராகவும் உபசெயலாளராகவும் இருந்த காலம் தொடக்கம் ஆசிரிய ஆசிரியைகளது நன்மதிப்பைப் பெற்றவர். மக்களுடன் பழகுவதிலும் சிறந்து விளங்கியுள்ளார். இவருக்கு 01.09.2014 அன்று சமாதான நீதிவான் பதவி கிடைத்ததையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றோம். இவர் சீரும் சிறப்புடனும் பலகாலம் வாழ்ந்து மக்களுக்கு கடமை.கண்ணியம், கட்டுப்பாட்டுடன் சிறந்த சேவைகள் செய்ய வேண்டுமெனக் கல்லூரி சார்பாக வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலை.

## மணிவிழா வாழ்த்துக்கள்

லயன் E.S.P
நாகரத்தினம் PMJF





நல்லூர் லயன்ஸ் கழகம்

(69239) (11,17 18 20)

The international president DR.Wing honoured Nallur president for distributing large numbers of plants.

## மகா சிவராத்திரி தினத்தை முன்னிட்டு

திருக்கேதீஸ்வரம் கௌரி அம்பாள் இளைஞர் கழகத்தால் நடத்திய வளர்ச்சி நிதி அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பில் வெற்றி பெற்ற அதிர்ஷ்டசாலிகள் பெயர் விவரம்

முதலாம் பரிசு - இல. 757
2ஆம் பரிசு - இல. 1588
3ஆம் பரிசு - இல. 368

10 ஆறுதல் பரிசில்கள்

| | |
|---|---|
| 01. இல :- 1621 | 06. இல :- 540 |
| 02. இல :- 04 | 07. இல :- 1808 |
| 03. இல :- 2297 | 08. இல :- 1111 |
| 04. இல :- 955 | 09. இல :- 2146 |
| 05. இல :- 2313 | 10. இல :- 926 |

இளைஞர் கழகம்,
திருக்கேதீஸ்வரம்.

(69233) (14,18,20)


## கல்லீரல் நோயிலிருந்து விடுபடுங்கள்

ஈரலில் கொழுப்புப்படிவு, எப்படைட்டிஸ், மஞ்சட்காமாலை சிரோஸிஸ், கல்லீரல் புற்றுநோய் ஆகிய பாதிப்புகள் கல்லீரலில் ஏற்படுவதற்கு மதுபாவனை மட்டும் அல்லாது வைரஸ் தொற்றுநோய், அழற்சி என்பவையும் காரணிகளாக அமைகின்றன.

அறிகுறிகள் - கல்லீரலில் வலி, களைப்பு, பசியின்மை, குமட்டல், மஞ்சட்கண், எடைகுறைவு, எசைட்டிஸ், சொறி

எமது உன்னதமான ஆயுர்வேத மருத்துவம் கல்லீரலின் நுண்மையான சுரப்பிகளை சீர்படுத்தி இயங்கச் செய்வது நிரூபிக்கப்பட்டுள்ளது.




FAIR PHARMA (PVT) LTD

Ceylinco House, 10th Floor, East Wing,
No : 69, Janadhipathi Mawatha, Colombo 01.
Website : www.ayurveda.lk
E-mail : fairpharmasrilanka@yahoo.com

Hotline: 0777 555 600 / 0777 708 310 / 0777 708 330
Office 011 4 388 200/ 4 388 100 / 4 388 101/4 388 102

APPROVED BY DEPARTMENT OF AYURVEDA, BOI & ISO 9001 : 2008 QMS CERTIFIED COMPANY

10 Pcs
TSD PRODUCTS
100% Vegan

ஆட்டா மா { சப்பாத்தி } கொழுப்பு சத்து / இனிப்பு சத்து } குறைந்த அளவு

ஆட்டா மா பூரி \ பரோட்டா ரொட்டி



சில நொடிகளில் மிக மலிவான விலையில் இலகுவாக உடன் சமைத்து உண்ணக்கூடியதும் உடல் நலத்துக்கும் உகந்ததுமான உணவு (Healthy Food) விசேடமாக நீரழிவு, இருதய நோயாளர்களுக்கும் மிகவும் உகந்த உணவாகும்.

கிடைக்கும் இடங்கள்:-

Annai Nagaa Food City ,Jaffna.
175 KKS Road Jaffna
0217390193

Annai Nagaa food city, Nallur.
343, Point Pedro Road Jaffna
0214927082

TCT (தியாகி அறக்கொடை நிலையம்)
527 Navalar Road
யாழ்ப்பாணம்
0217451895, 0777511285

Jeevan Phamacy
ஜீவன் பார்மசி சுன்னாகம்
52,New Supram maniam Road,
Bus stand, Chunnakam

நீலாம்பரி உணவகம்
742 KKS வீதி
யாழ்ப்பாணம்
0215100245

Janusha Express
397 பிரதான வீதி
(பஸ்டியன் சந்தி)
யாழ்ப்பாணம்
021 2217547

Family Super Spot
142B யாழ் வீதி
மானிப்பாய்
021 2256131

Rathy stores
174 கன்னாதிட்டி வீதி
யாழ்ப்பாணம்
0212226784

Ruba Cash and Carry
(Ruba commercial Bulding)
பலாலி வீதி உரும்பிராய்
02122431055

யாழ்ப்பாண ஏக விநியோகஸ்தர்

J.Jeeva (ஜீவா மிக்சர்)
6 பிளாச்சஸ் ஒழுங்கை
சுண்டுக்குளி யாழ்ப்பாணம்
T.P: 0212229867,
0777459876



# காளான் செய்கை மூலம் அதிக வருமானம் கிட்டும்

## விவசாயக் கண்காணிப்பு அதிகாரி திருமதி கிருபவதனி தெரிவிப்பு

அச்சுவேலி, மார்ச் 13

இளைஞர், யுவதிகள் காளான் செய்கையில் ஈடுபடுவதன் மூலம் நல்ல வருமானத்தைப் பெற்றுக்கொள்ள முடியும். குறைந்த முதலீட்டுடன் மேற்கொள்ளக்கூடிய காளான் வளர்ப்பு தொழில் முயற்சியை பகுதி நேரத் தொழில் முயற்சியாகவும் மேற்கொள்ளலாம். மாணவர்களும் காளான் வளர்ப்பில் ஈடுபட்டுத் தமது கற்றலுக்கான செலவை ஈடுசெய்து கொள்ள முடியும்.

இவ்வாறு யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்கள விவசாயக் கண்காணிப்பு அதிகாரி திருமதி சிவதீபன் கிருபவதனி தெரிவித்தார்.

காளான் செய்கையில் ஈடுபட விரும்புபவர்களுக்கு பயிற்சி அளிப்பதோடு, அவர்களுக்குப் பொருத்தமான ஊக்குவிப்பு உதவிகளை வழங்குவதற்கு திணைக்கள ரீதியான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் காளான் செய்கையில் ஈடுபட விரும்புபவர்களுக்கான முழுநாள் செயன்முறைக் கருத்தரங்கு திருநெல்வேலி விவசாயப் பண்ணை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

அங்கு காளான்செய்கை செயன்முறை அமர்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

காளான் தூய்மையான தாவர உணவு. இதில் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை. நூற்றுக் கணக்கான காளான் இனங்கள் உள்ள போதிலும், ஒரு சில வர்க்கங்களே மனிதனின் உணவுக்கு ஏற்றவையாக உள்ளன.

யாழ்.மாவட்டத்தில் பாற்காளான், சிப்பிக்காளான், அவலோன் ஆகிய மூன்று இனங்களும் காளான் வித்திகள் (வித்து) மூலமாகச் செய்கை பண்ணப்பட்டு உணவுக்குப் பயன்படுத்தப்படுகின்றன.

யாழ்.மாவட்டத்தில் காளான் பாவனை அறிமுக நிலையில் கிராம மட்டங்களில் இருந்தாலும், உணவுச் சாலைகள் மற்றும் ஹோட்டல்களில் பெருமளவில் பயன்பாட்டில் உள்ளது. யாழ்.மாவட்டத்துக்கான காளான் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு வெளி மாவட்டங்களில் இருந்து காளான் கொண்டுவரப்படுகின்றது.

யாழ்.மாவட்டத்தில் காளானுக்கு நல்ல சந்தை வாய்ப்பும் தளம்பல் இல்லாத விலையும் கிடைக்கிறது. ஒரு கிலோ காளான் 350 ரூபாவுக்கு மேல் 500 ரூபா வரையும் விலை போகின்றது.

குறைந்த முதலீட்டுடன் கூடிய வருமானத்தை நாளாந்தம் பெறக்கூடிய தொழில் காளான் வளர்ப்பு. காளான் வளர்ப்பு முயற்சியில் மாணவர்கள் பகுதி நேரமாக ஈடுபடலாம்.

காளான் உணவுப் பாவனை நகரப் புறங்களில் சாதாரணமாக உள்ளது. கிராமப் புறங்களில் குறிப்பிடத்தக்களவு பயன்பாட்டில் இல்லை. காளான் வளர்ப்பில் ஈடுபடுபவர்கள் தமது சுற்றுப்புறச் சூழலில் காளான் தொடர்பான நல்லியல்புகளை விளங்கப்படுத்துவதோடு, காளான் உணவுப் பழக்கத்தையும் அறிமுகம் செய்ய முன்வர வேண்டும்.

காளான் நோய்த்தடைத் தன்மை கொண்ட மருத்துவ உணவாகும். காளானைப் பயன்படுத்தி சூப், பொரியல், வறை, பிரட்டல் கறி, குழம்பு எனப் பல்வேறு வகையான உணவுகளையும் செய்து விருப்பத்தோடு உண்ணலாம்.

காளான் வளர்ப்பில் ஈடுபட விரும்புபவர்கள் விவசாயத் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளலாம். அவர்களுக்குப் பயிற்சி அளிப்பதோடு காளான் உற்பத்தி முயற்சியில் ஈடுபடும் போது பொருத்தமான உதவிகளும் வழங்கப்படும் எனத் தெரிவித்தார். (த-ஐ-4-11)

# மக்கள் பிரச்சினைகளில் அதிகாரிகள் பாராமுகம்

## சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு குற்றச்சாட்டு

வவுனியா,மார்ச் 13

வவுனியா மாவட்டத்தில் பெண்கள், சிறுவர்கள், பொது மக்கள் எதிர்கொள்ளும் மிக அத்தியாவசியமான பிரச்சினைகள் தொடர்பாக அரச அதிகாரிகள் உட்பட அரசியல் தலைவர்கள் பாராமுகமாகச் செயற்படுகின்றனர் என்று சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பினர் குற்றஞ் சாட்டியுள்ளனர்.




சமூகப் பிரச்சினைகள் குறித்து தம்மால் அனுப்பப்பட்ட கடிதங்கள் குறித்து அரச அதிகாரிகள் உட்பட அரசியல் தலைவர்களும் கவனம் செலுத்தவில்லை என்றும் அவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

வவுனியா கமத்தொழில் அபிவிருத்தித்திணைக்களத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியாலளர்கள் சந்திப்பிலேயே இவ்வாறு அந்த அமைப்பு தெரிவித்தது.

இதுகுறித்து மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

சிறுவர்கள் மீது துஷ்பிரயோகம், அதிகார துஷ்பிரயோகம், பெண்கள் மீதான வன்முறை, வீதி செப்பனிடுதல் போன்ற சமூகப் பிரச்சினைகளை முன் வைத்து சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பால் வவுனியா மாவட்டத்தை பிரதிநித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், வட மாகாண சபை அமைச்சர்கள், மாவட்ட அரச உயர் அதிகாரிகள் என 16 பேருக்குக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டன.

இந்தக் கடிதங்கள் குறித்து அக்கறை எடுக்காது அரச அதிகாரிகள் பாராமுகமாக செயற்படுகின்றனர். பிரதேச செயலகம், பிரதேச சபை, வைத்தியசாலை போன்ற பொதுமக்கள் சேவை நிலையங்களுக்குச் சென்று மாவட்ட உயர் அதிகாரிகளைச் சந்திக்கச் சென்ற போதும் அவர்களைச் சந்திக்க முடியாமல் திருப்பி அனுப்பி வைக்கப்பட்ட சம்பவங்களும் நடை பெற்றன.

பட்டதாரிகளாகச் சென்று அரச சேவையில் ஈடுபடும் பட்டதாரிகள்கூட, பொது மக்களுடைய பிரச்சினையில் கவனம் செலுத்தாமல் இருப்பது கவலைக்குரியது. வேலை கிடைத்ததும் இவர்கள் இவற்றை எல்லாம் மறந்து செயற்படுகின்றனர். - என்று தெரிவிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பின் வவுனியா மாவட்ட இணைத்தலைவர்கள் டொன் போஸ்கோ, பு.சந்திரபத்மன், சு.ஜெகதீஸ்வரன் (விசு) செயற்குழு உறுப்பினர் க.அருந்தவராஜா (மேழிக்குமரன்) மற்றும் மாவட்ட இணைத்தலைவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ற-ஐ-21)

## மகளிர் விவகார அமைச்சால் குறுந்திரைப்படம் வெளியீடு

யாழ்ப்பாணம், மார்ச் 13

வடமாகாண சுகாதார, சுதேச மருத்துவ சமூகசேவைகளும் புனர்வாழ்வும், நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் மற்றும் மகளிர் விவகார அமைச்சு, வடமாகாணத்தில் சிறுவர் மற்றும் பெண்கள் எதிர்நோக்கும் சமூகப் பிரச்சினைகள் தொடர்பான சமூக விழிப்புணர்வு குறுந்திரைப் படங்களைத் தயாரித்துள்ளது.

மகளிர் விவகாரப் பிரிவு சுகாதார அமைச்சால் குறுந்திரைப்படம் தயாரித்தல் போட்டி நாடளாவிய ரீதியில் நடத்தப்பட்டது. அதில் வெற்றி பெற்று முதல் மூன்று இடங்களைப் பிடித்தசாந்தி, அவஸ்தை, வினவு ஆகிய மூன்று திரைப்படங்களையும், மகளிர் விவகார அமைச்சால் தயாரிக்கப்பட்ட குறுந் திரைப்படங்களான கெடு, காவு, வடு ஆகிய மூன்று திரைப்படங்களையும் உள்ளடக்கி இறுவட்டாக வெளியிடப்பட்டுள்ளன.

தற்காலத்தில் பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு நடைபெறும் துஷ்பிரயோகம், வன்முறை, இளவயதுக் கர்ப்பம், பாலியல் தொந்தரவு, வெளிநாடு செல்லும் பெண்களின் நிலை, கடனடிப்படைத் திட்டத்தின் மூலம் குடும்பங்களில் ஏற்படும் பாதிப்புப் போன்றவற்றை மக்களுக்குத் தெளிவுபடுத்தும் முகமாக இந்தக் குறுந்திரைப்படங்கள் வெளியிடப்பட்டுள்ளன என்று மகளிர் விவகார அமைச்சு தெரிவித்துள்ளது. (ற-ஐ-ரி)



சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தினர் வேள்ட் விஷன் நிறுவனத்தினருடன் இணைந்து தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளில் சுற்றுப்புறச் சூழல் மற்றும் குடிதண்ணீர் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வுப் பயிற்சிகளை மாணவர்களுக்கு நடத்தி வருகின்றனர். (ற-ஐ-9)

# மதுப் பாவனையால் குடும்பஸ்தர் குருதிக் கசிவு ஏற்பட்டு உயிரிழப்பு

சாவகச்சேரி, மார்ச் 13

அளவுக்கு அதிகமான மதுப் பாவனையால் 55 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவர் குடலில் குருதிக் கசிவு ஏற்பட்டு உயிரிழந்தார்.

கைதடியைச் சேர்ந்த குறித்த குடும்பஸ்தர், மூல வியாதியால் பாதிக்கப்பட்டதோடு, ஐந்து நாள்களாகத் தொடர்ந்து அவருக்குக் குருதிக்கசிவு ஏற்பட்டிருந்தது. அதனால் உணவருந்த முடியாத நிலை ஏற்பட்டதோடு திடீரென மலத்துடன் குருதி வெளியேறியுள்ளது. அதையடுத்து கடந்த வியாழக்கிழமை காலை 6.30மணிக்கு சாவகச்சேரிவைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டபோது வழியில் அவர் உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பாக சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்தனர். சாவகச்சேரி வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி மூலமாக உடற்கூற்றுப் பரிசோதனை நடத்தப்பட்டது.

உடற்கூற்றுப் பரிசோதனையின் போது அளவுக்கு அதிகமான குருதி வெளியேறியதாலும், குடற்பகுதியில் குருதிக்கசிவு ஏற்பட்டதாலும், சாவு நிகழ்ந்துள்ளதென அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

அளவுக்கு அதிகமான மதுப் பாவனை, குடலில் பாதிப்பை ஏற்படுத்தி குருதிக்கசிவை ஏற்படுத்தியுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார். விசாரணைகளின் பின்னர்சடலம்உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது (ற-ஐ-4-9)

# மங்கையர்க்கரசியின் மறைவு ஓர் அத்தியாயத்தின் முடிவு

## வடக்கு முதலமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 13

திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கத்தின் மறைவு, தமிழ் அரசியல் சரித்திரத்தில் ஓர்அத்தியாயத்தின் முடிவாகும்.- இவ்வாறுவடக்குமாகாணமுதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் விடுத்துள்ள அனுதாபச் செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மறைந்த எதிர்க்கட்சித் தலைவரும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகமுமாகிய அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் அன்புத் துணைவியாரும், தமிழரசுக் கட்சியின் மகளிர் அமைப்பின் செயலாளரும், தமிழ் அரசியலில் மங்கையரின் பங்கை மாண் புறச் செய்தவருமான திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கத்தின் மறைவுச் செய்தி கேட்டு அதிர்ச்சியும் மனவேதனையும் அடைந்தேன்.

1954 ஆம் ஆண்டு இளம் அரசியல்வாதியாக இருந்த அமிர்தலிங்கத்தைக்கைப்பிடித்த காலம் தொட்டு, அவர் தனது கணவரின் அரசியல் செயற்பாடுகளில் இரண்டறக் கலந்த ஒரு பெருந்தகையாக இருந்தவர். 1961 ஆம் ஆண்டில் நடைபெற்ற சத்தியாக்கிரகத்தில் கணவருடன் முன்னின்று பங்குபற்றியமைக்காக கைது செய்யப்பட்டு 6 மாத காலம் பனாகொட இராணுவ முகாமில் தடுத்து வைக்கப் பட்டிருந்தவர். அவரது கருத்தாளம் மிக்க பேச்சுக்களும், கனிவான குரலில் பாடுகின்ற பாட்டுக்களும் தமிழ் மக்கள் மத்தியிலே இன உணர்வையும், அரசியல் விழிப்புணர்வையும் பிரகாசிக்கச் செய்வதற்கு பெரிதும் உதவின. கணவரின் அரசியல் நடவடிக்கைக்கு என்றும் துணை போகின்ற ஒரு துணைவியாக உயர்விலும் தாழ்விலும் அவருடன் வாழ்ந்த ஒரு சிறந்த பெண்மணி அவர்.

கணவரின் திடீர் இறப்புக்குப் பின்பும் அந்த இறப்புக்கு காரணமாக இருந்தவர்களை பழிவாங்க வேண்டும் என்று ஒரு போதும் எண்ணியவரல்ல. கணவரது இறப்புக்குப் பின்பு இந்த நாட்டை விட்டுச் சென்றிருந்தாலும், அவருடைய எண்ணங்கள் நாட்டினதும் தமிழ் மக்களினதும் மேன்மையை நோக்கியதாகவே இருந்தன.

அவரது மறைவு தமிழ் அரசியல் சரித்திரத்தில் ஓர் அத்தியாயத்தின் முடிவாகும். திருமதி மங்கையர்க்கரசி பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கும், உற்றார் உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அவரின் ஆத்மாசாந்தியடையப் பிரார்த்திக்கின்றேன்.- என்றுள்ளது. (த-ஐ-5)

# 7,205 மெ.தொன் நெல் அறுவடை; 284 மெ. தொன்னே கொள்வனவு

## முள்ளியவளை விவசாயிகள் விசனம்

முல்லைத்தீவு,மார்ச் 13

முல்லைத்தீவு, முள்ளியவளை பிரதேசத்தில் கடந்த காலபோகத்தின்போது 7ஆயிரத்து 205 மெற்றிக்தொன் நெல் அறுவடை செய்யப்பட்டது. ஆயினும் 284 மெற்றிக் தொன் நெல்லை மட்டுமே நெல் சந்தைப்படுத்தும் சபையினர் கொள்வனவு செய்துள்ளனர். 6ஆயிரத்து 921மெற்றிக் தொன் நெல் தற்போதும் தேங்கியுள்ளது. - இவ்வாறு முள்ளியவளை விவசாயிகள் கவலை வெளியிட்டனர்.

நெல்லைக் களஞ்சியப்படுத்தி வைப்பதற்குப் போதிய வசதி இன்மையாலும், உரிய விலைக்கு நெல்லைச் சந்தைப்படுத்த முடியாமல் இருப்பதாலும், இளம் சந்ததியினர் விவசாயத்தில் ஈடுபடுவதைத் தவிக்கும் நிலை ஏற்படுகின்றது என்று தெரிவிக்கின்றனர் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்.

முள்ளியவளை கமநல சேவை நிலையத்தின் கீழ் 937 விவசாயிகள் மூவாயிரத்து 431 ஏக்கரில் 2015-2016 காலபோக நெற்செய்கையில் ஈடுபட்டனர். ஆயினும் முள்ளியவளைப் பிரதேசத்தில் போதிய நெற் களஞ்சிய சாலை வசதி இன்மையால் 142 விவசாயிகளிடமிருந்து மட்டுமே நெல் சந்தைப்படுத்தும் சபையினரால் 2 லட்சத்து 84 ஆயிரம் கிலோ நெல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

இது குறித்துக் கருத்துத் தெரிவித்த முள்ளியவளை கமக்கார அமைப்பினர்-

ஒரு ஏக்கரில் நெற்செய்கையில் ஈடுபடும்போது சராசரியாக 70 கிலோ கொண்ட 30 மூடைகள் நெல்லை அறுவடை செய்ய முடியும். விவசாயிகளின் நெற்பயிர்ப் பராமரிப்பைப் பொறுத்து பலருக்கு இதனை விட கூடுதலான விளைச்சலும் கிடைக்கும். உரிய பராமரிப்பு இல்லாவிடில், இதனைவிட சிலருக்கு குறைந்தளவு விளைச்சலும் கிடைக்கக் கூடும். ஆனால் சராசரியாக 30 மூடைகள் விளைச்சல் கிடைக்கும். அதாவது ஏக்கருக்கு 2 ஆயிரத்து நூறு கிலோ நெல் கிடைக்கும்.

இதன் அடிப்படையில் முள்ளியவளை பிரதேசத்தைச் சேர்ந்த விவசாயிகள் 2015-2016 காலபோகத்தின் போது சுமார் 7 ஆயிரத்து 205 மெற்றிக் தொன் நெல்லை அறுவடை செய்துள்ளனர். அவற்றில் 284 மெற்றிக் தொன் நெல்லை மட்டுமே நெல் சந்தைப்படுத்தும் சபையினர் கொள்வனவு செய்துள்ளனர்.

இதன்படி ஒரு விவசாயிடமிருந்து ஒரு ஏக்கருக்கும் குறைவான விளைச்சல் நெல்லையே நெல் சந்தைப்படுத்தும் சபையினர் கொள்வனவு செய்கின்றனர். எமது விவசாயிகளிடம் 6 ஆயிரத்து 921மெற்றிக் தொன் நெல் தேங்கியுள்ளது.

நாடளாவிய ரீதியில் ஒரு விவசாயிடமிருந்து ஆகக் கூடுதலாக 2 ஆயிரம் கிலோ நெல் கொள்வனவு செய்யப்படும் என வரையறைசெய்யப்பட்டுள்ளபோதிலும், எமது பிரதேசத்தில் உரிய களஞ்சிய வசதி இல்லாத காரணத்தால் 765 விவசாயிகள் ஒரு கிலோ நெல்லைக் கூட நெல் சந்தைப்படுத்தும் சபையின் நியாய விலைக்கு வழங்க முடியாது தவிக்கின்றனர்.

> “ஒரு விவசாயிடமிருந்து ஒரு ஏக்கருக்கும் குறைவான விளைச்சல் நெல்லையே நெல் சந்தைப்படுத்தும் சபையினர் கொள்வனவு செய்கின்றனர். எமது விவசாயிகளிடம் 6 ஆயிரத்து 921 மெற்றிக் தொன் நெல் தேங்கியுள்ளது. சந்தை வாய்ப்புகள் இல்லாத காரணத்தால் இளம் சந்ததியினர் விவசாயத்தில் ஈடுபடுவதைத் தவிர்த்து வருகின்றனர்.”

அத்துடன்எமதுபிரதேசத்தில்ஆயிரம் மெற்றிக் தொன் நெல்லை இருப்பு வைக்கக் கூடிய நெல் சந்தைப்படுத்தும் சபைக்குரிய 55வருடங்கள்பழைமை வாய்ந்த உறுதியான இரண்டு கட்டடத் தொகுதிகள் ஒரே வளாகத்தில் அமைந்துள்ளன.

ஒரு கட்டடத் தொகுதியினுள் கடந்த வருடம் கொள்வனவு செய்யப்பட்ட நெல் இன்னமும் இருப்பில் இருக்கும் காரணத்தாலும்,மற்றைய கட்டடத் தொகுதியை மாவட்ட செயலகத்தினர் எதிர் காலத்தில் பெரும் இடர் ஒன்று மாவட்டத்தில் ஏற்பட்டால்மக்களுக்கு வழங்குவதற்கான அத்தியாவசிய பொருள்களைக் களஞ்சியப்படுத்தி விநியோகிப்பதற்கான மையமாகத் தமது பொறுப்பில் வைத்துள்ளமையாலும் தமது நெல்லைச் சந்தைப்படுத்த முடியாதுள்ளது- என்றனர்.

இதுகுறித்து முள்ளியவளை கமநல சேவை நிலைய கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆர்.சுகந்தனுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, குறித்த நிலையத்தின்கீழ் பற்றுச் சீட்டைப் பெற்று உரவகைகளை பெற்றுக் கொண்டதன் அடிப்படையிலும், ஏனைய பதிவுகள் மூலமும், 937 விவசாயிகள் மொத்தம் 3 ஆயிரத்து 431 ஏக்கர் நிலப்பரப்பில் நெற்செய்கையில் ஈடுபட்டதை அவர் உறுதிப்படுத்தினார்.

முள்ளியவளைப் பிரதேசத்தில் போதிய நெல் களஞ்சிய சாலைகள் நிர்மாணிக்கப்படாமை பெரிய குறைபாடாக உள்ளது என்றும், இறுதியாக தமது முயற்சியில் முள்ளியவளையில் அமைந்துள்ள கரைதுறைப்பற்று ப.நோ.கூ.சங்க களஞ்சிய சாலையைப் பெற்றுக் கொண்டோம் என்றும் தெரிவித்தார்.

மாதாந்த வாடகையாக மூவாயிரம் ரூபா கோரப்பட்ட போதிலும், மாகாண சபைஉறுப்பினர் அதில் தலையிட்டு சங்கத்தின் தலைவர், பொது முகாமையாளர் ஆகியோருடன்தொடர்புகொண்டு களஞ்சிய சாலையை எந்தவித வாடகையுமின்றி இலவசமாக நல்லெண்ண அடிப்படையில் பெற்றுத் தந் துள்ளார்.

இதன் மூலம் 92 விவசாயிகளிடமிருந்து சுமார் 184 மெற்றிக் தொன் நெல்லை கொள்வனவு செய்யக்கூடியதாக இருந்தது. சந்தை வாய்ப்புகள் இல்லாத காரணத்தால் இளம் சந்ததியினர் விவசாயத்தில் ஈடுபடுவதைத் தவிர்த்து வருகின்றனர்.

இதனைப் போக்கி இளம் சமூகத்தினர் விவசாயத்தில் ஈடுபடுவதைத் தூண்டும் முகமாக விவசாயிகளுக்கு ஏற்படும் குறைகளை முதலில் நிவர்த்தி செய்ய வேண்டும். இதன் மூலமே விவசாயத்தின் மீது அவர்களின் மனங்களில் நம்பிக்கையும் -ஆர்வமும் ஏற்படும் என்றும் குறிப்பிட்டார்.

(ற-ஐ-21,102)

# பெண் தலைமைக் குடும்பங்கள் கிளிநொச்சி மாவட்டத்தில் 7,061

## அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தகவல்

கிளிநொச்சி, மார்ச் 13

பெண்களைத் தலைமைத்துவமாக கொண்டு 7 ஆயிரத்து 61 குடும்பங்களும், மாற்றுத் திறனாளிகளாக ஆயிரத்து 460 பேரும் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ளனர் என்று கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.



சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் இடம்பெற்ற கிளிநொச்சி மாவட்ட மகளிர் தின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

எமது மாவட்டத்தில் 7ஆயிரத்து 61 பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்கள் இருப்பது மிகவும் கவலைக்குரிய விடயம். கடந்த காலத்தில் இடம்பெற்ற போரில் அதிகளவான பெண்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்தோடு எமது மாவட்டத்தில் ஆயிரத்து 460 மாற்றுத் திறனாளிகள் இருக்கின்றனர். அவர்களுக்கு வாழ்வாதாரங்களை வழங்கி அவர்களின் வாழ்க்கையை முன்னேற்ற வேண்டும்.

எமது நாட்டில் பெண்களுக்கான தனியான அமைச்சு, சங்கங்கள், குழுக்கள், அரச உத்தியோகத்தர்கள் என இருக்கின்றனர். இது வரவேற்கத்தக்கது. நாம் வருடா வருடம் இவ்வாறான நிகழ்வுகளைக் கொண்டாடுவதன் மூலம் பெண்களுக்கெதிரான வன்முறைகள் மற்றும் அநீதிகளைக் குறைக்க முடியும். இவற்றுக்கு ஆண்களும் ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும்- என்றார்.

நேற்றுக் காலை 9.30 மணிக்கு கிளிநொச்சி காக்கா கடைச் சந்தியில் ஆரம்பமான பெண்கள் தினத்தைக் கொண்டாடும் முகமான நடைபவனி கிளிநொச்சி கூட்டுறவு மண்டபம் வரை சென்றடைந்து நிகழ் வுகள் ஆரம்பமாகின.

இந்த நிகழ்வில் வெற்றிக் கேடயங்களும், பரிசில்களும் வழங்கப்பட்டதுடன் வாழ்வாதார உதவிகளும் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில் மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், மேலதிக அரச அதிபர் சத்தியசீலன், மகளிர் அமைப்புக்களின் அதிகாரிகள், துறைசார் உத்தியோகத்தர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ற-ஐ-21,ரி3)

# தேசிய இளைஞர் முகாமுக்கு கிளிநொச்சியிலிருந்து 60 பேர்

கிளிநொச்சி, மார்ச் 13

தேசிய கொள்கை மற்றும் பொருளாதார நடவடிக்கை அமைச்சின் அனுசரணையுடன் தேசிய இளைஞர் சேவை மன்றத்தால் நடத்தப்படும் யொவுன்புர எனும் இளைஞர் முகாமில் கிளிநொச்சி இளைஞர் கழகங்களைச் சேர்ந்த 60 இளைஞர்கள் கலந்து கொள்ளவுள்ளனர் என்று கிளிநொச்சி மாவட்ட இளைஞர் சேவை மன்ற உதவி பணிப்பாளர் நா. குகேந்திரா தெரிவித்துள்ளார்.

குறித்த நிகழ்வில் கலந்து கொள்ளும்இளைஞர்களுக்கான விளக்கம் அளிக்கும் நிகழ்வின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தேசிய கொள்கை மற்றும் பொருளாதார நடவடிக்கை அமைச்சின் அனுசரணையுடன்தேசிய இளைஞர் சேவை மன்றத்தால் நடத்தப்படும் யொவுன்புர எனும் இளைஞர் முகாம், எதிர்வரும் 30 ஆம் திகதி தொடக்கம் ஏப்ரல் மாதம் 4 ஆம்திகதிவரைதம்புள்ள சிகிரியா கிதிஸ்ச விமான நிலையத்துக்கு அருகில் இடம் பெறவுள்ளது.

இதில் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள இளைஞர் கழகங்களைச் சேர்ந்த 60 இளைஞர் கழக வீரர்கள் கலந்துகொள்ளவுள்ளனர். அத்தோடு நாடு முழுவதிலும் இருந்தும் 4 ஆயிரத்து 900 இளைஞர்கள் கலந்து கொள்ளவுள்ளதுடன், வெளிநாட்டு இளைஞர்கள் 100 பேர் கலந்து கொள்வர். குறித்த நிகழ்வில் மொத்தமாக 5 ஆயிரம் இளைஞர், யுவதிகள் கலந்துகொள்ளவுள்ளனர்- என்றார். (த-ஐ-ரி3)

# கூட்டமும் கருத்தரங்கும்

யாழ்ப்பாணம், மார்ச் 13

வடமராட்சி லயன்ஸ் கழக அங்கத்தவர்களுக்கான கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு நெல்லியடி செவிப்புலனற்றோர் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

அத்துடன் வடமராட்சி லயன்ஸ்கழகமும், கொழும்பு கொட்டாஞ்சேனை லயன்ஸ் கழகமும் இணைந்து இன்று காலை9மணிதொடக்கம் 12 மணி வரை தேவரையாளி இந்துக் கல்லூரியில் பிரதேச மாணவர்களது நன்மை கருதி கற்கை வழிகாட்டிக் கருத்தரங்கை நடத்துவதற்கு வடமராட்சி லயன்ஸ் கழகத்தால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது என்று செயலாளர் எஸ்.சிவரஞ்சன் அறிவித்துள்ளார். (ற-ஐ-35)

# கிழக்குப் பல்கலை மாணவர் வகுப்பு புறக்கணிப்புக்குத் தீர்மானம்

கொழும்பு, மார்ச் 13

கிழக்குப்பல்கலைக்கழகசித்த மருத்துவ பீட திருகோணமலை வளாகத்தின் வகுப்புப் புறக்கணிப்பு நடத்தவுள்ளதாக சித்த மருத்துவ பீட மாணவர்கள் அறிவித்துள்ளனர். சித்த மருத்துவ பீட மாணவர்கள் தாக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நீதி கிடைக்கும்வரை புறக்கணிப்பு நடத்தப்படும் என்று வளாக முதல்வருக்கும் ஏனைய அதிகாரி களுக்கும் கடிதம் அனுப்பியுள்ளனர்.

தொடர்ச்சியாக தமக்கு ஏற்படுத்தப்படும் அச்சுறுத்தல்கள் மற்றும் தாக்குதல்கள் தொடர்பாக நீதி கிடைக்கும் வரை இந்தப் புறக்கணிப்புத் தொடரும் என்றும் மாணவர்கள் தெரிவித்துள்ளனர். (ற-ஐ-5)

# வேறு திட்டங்களால் தாமதமாகிறது கிட்டுப் பூங்காவின் புனர்நிர்மாணம்

யாழ்ப்பாணம், மார்ச் 13

கிட்டுப் பூங்கா (சங்கிலியன்) 5 வருடங்கள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் புனர்நிர்மாணம் செய்யப்படவுள்ளது என்று, வடக்கு மாகாண விவசாய அமைச்சால் தெரிவிக்கப்பட்டு ஒரு வருடம் கடந்துள்ள நிலையிலும், இன்னமும் அதற்குரிய வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்படவில்லை.

இந்தப் புனரமைப்பு நடவடிக்கைகள் எப்போது ஆரம்பிக் கப்படும் என்பது தொடர்பில், தொடர்புடைய அதிகாரிகளைக் கேட்ட போது, தமக்கு அது குறித்துத் தெரியாது என்று பதிலளித்தனர்.

யாழ். முத்திரைச் சந்தைப் பகுதியில் கிட்டுப் பூங்கா அமைந்துள்ளது. யாழ்.மாநகர சபைக்குச் சொந்தமான இந்தப் பூங்காவை, 5 ஆண்டுகள் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ்புனரமைப்புச் செய்வதற்கு வடக்கு மாகாண விவசாய அமைச்சு நடவடிக்கை எடுத்திருந்தது.

பனையிலுள்ள காற்றாலை மின் உற்பத்தி நிறுவனங்களின் சமூகப் பொறுப்புக்காக வழங்கப்படும் நிதியில் இந்தப் புனரமைப்பு வேலைத் திட்டம் மேற்கொள்வதற்கு, வடக்கு மாகாண விவசாய அமைச்சுக்கும் - யாழ்.மாநகர சபைக்கும் இடையில் கடந்த வருடம் மார்ச் மாதம் ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட் டிருந்தது. இது தொடர்பில் வடக்கு மாகாண விவசாய அமைச்சரால், மாகாண சபைக்கு உடனடியாகத் தெரியப்படுத்தப்படவில்லை.

வடக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா மாகாண சபையில் இந்த விடயம் தொடர்பில் கேள்வி எழுப்பிய போதே, அமைச்சர் பொ.ஐங்கரநேசன் ஒப்பந்தம் தொடர்பான விவரங்களைச் சபையில் சமர்ப்பித்தார்.

யாழ்.மாநகர சபைக்குச் சொந்தமான கிட்டுப் பூங்காவை ஐந்து ஆண்டுகால அபிவிருத்தித் திட்டத்துக்காக வடக்கு மாகாண விவசாய அமைச்சிடம் கையளிக்க வேண்டும்.

> இந்தப் புனரமைப்பு வேலைத் திட்டம் மேற்கொள்வதற்கு, வடக்கு மாகாண விவசாய அமைச்சுக்கும் - யாழ். மாநகர சபைக்கும் இடையில் கடந்த வருடம் மார்ச் மாதம் ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டிருந்தது.

இந்த ஒப்பந்தத்தின்படி ஐந்து வருடங்கள் அபிவிருத்தியின் பின்னர் வடக்கு மாகாண விவசாய அமைச்சு, யாழ்.மாநகர சபைக்கு சங்கிலியன் பூங்காவை மீளவும் கையளிக்கும்.

விவசாய அமைச்சு பூங்கா அபிவிருத்திக்கு கால நீடிப்பு தேவை என்று கருதினால் பிறிதொரு ஒப்பந்தம் ஊடாக கால நீடிப்பைப் பெற முடியும். சங்கிலியன் பூங்காவுக்கான அபிவிருத்தி திட்ட முன்மொழிவுகள் விவசாய அமைச்சினால் தயாரிக்கப்பட்டு, மாநகர சபையின் கட்டளைச் சட்டத்துக்கு அமைவாக அங்கீகாரம் பெறப் படும். பூங்கா அபிவிருத்தித் திட்டங்கள் அனைத்தையும் விவசாய அமைச்சு செயற்படுத்தும்.

ஐந்து வருடங்களிலும் பூங்காவின் பராமரிப்புப் பணி யாழ்.மாநகர சபைக்கு உரியதாகும். ஐந்து வருடங்களுக்குள் பூங்காவில் நிகழ்வுகளை நடத்துவதற்கான அனுமதியை வடக்கு மாகாண விவசாய அமைச்சு வழங்கும்.

ஐந்து வருடங்களுக்குமான பூங்காவின் பொதுமக்கள் பாவனைக் கட்டணத்தை வடக்கு மாகாண விவசாய அமைச்சே தீர்மானிக்கும். கட்டணம் அறவிடும் உரிமை யாழ்.மாநகர சபைக்கு உரியதாகும் என்ற அடிப்படையில் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இந்த விடயம் தொடர்பாக கடந்த செப்ரெம்பர் மாதம் யாழ்.மாநகர சபை ஆணையாளரை, 'உதயன்' தொடர்பு கொண்டு கேட்ட போது, நல்லூர் திருவிழா காரணமாக பூங்கா புனரமைப்பில் தாமதம் ஏற்பட்டுள்ளது என்று தெரிவித்திருந்தார்.

தற்போது அவரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது, பூங்கா புனரமைப்பு நடவடிக்கைகள் விவசாய அமைச்சால் முன்னெடுக்கப்படுகின்றது. மேலதிக விடயங்களை வடக்கு மாகாண விவசாய அமைச்சிடம் கேட்டுக் கொள்ளுங்கள் என்று பதிலளித்தார்.

இந்த விடயம் தொடர்பாக வடக்கு மாகாண விவசாய அமைச்சுச் செயலகத்தை தொடர்பு கொண்டு கேட்டபோது, வேறு பல திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. அதனால் பூங்கா புனரமைப்பு நடவடிக்கைகள் இன்னமும் ஆரம்பிக்கப்படவில்லை என்று தெரிவிக்கப் பட்டது.

(ற-ஐ-5,ரி5)

## ஒருவழிப் பாதைத் திட்டத்தில் மக்கள் நலன் கருதித் திருத்தம்

### பருத்தித்துறை நகரசபைச் செயலாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 13

பருத்தித்துறை நகரில் நடைமுறைப்படுத்தப்பட்ட ஒரு வழிப் பாதைநடைமுறையில், பொதுமக்களின் நன்மை கருத்தி சில திருத்தங்கள் மேற்கொள்ளப்பட் டுள்ளன என்று பருத்தித்துறை நகர சபைச் செயலாளர் பு.ரமேஸ்வரன் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பொதுமக்கள் பாதுகாப்புக் குழுக் கூட்டத்தின் ஊடாக நடைமுறைப்படுத்தப்பட்ட ஒருவழிப் பாதைத் திட்டத்தில், தற்போது பொதுமக்களின் கருத்துக்களுக்கு அமைவாக திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இது தொடர்பாக பருத்தித்துறை உதவிப் பொலிஸ்மா அதிபர், பொலிஸ்நிலைய போக்குவரத்து பொறுப்பதிகாரி ஆகியோருடன் கலந்துரையாடியதன் அடிப்படையில், பருத்தித்துறை துறைமுகத்திலிருந்து யாழ்.நோக்கிச் செல்லும் பிரதான வீதியில் மகாத்மா காந்தியின் சிலை அமைந்துள்ள சந்தி முதல் நவீன சந்தையின் நுழை வாசல் வரையில் பரீட் சார்த்தமாக செயற்படுத்தப்பட்ட ஒருவழிபோக்குவரத்துத் திட்டம், எதிர்வரும் செவ்வாய்க்கிழமைமுதல்நிறுத்தப்படும்.

ஆனால், பருத்தித்துறை நவீன சந்தை கட்டடத் தொகுதிக்கு முன்னுள்ள பாதையும், மீன்சந்தை வீதியும் தொடர்ந்து ஒரு வழிப் பாதைகளாகவே இயங்கும்.

அத்துடன்மாணவர்களின்நன்மை கருதி பருத்தித்துறை நகர சபைக்குச் சொந்தமான கல்லூரி வீதி, தபம்பசிட்டிவீதி, நாகலிங்க முதலியார் வீதிகளில் அமைந்துள்ள பாடசாலைகளின் முன்பாக பாதசாரிகள் கடவைகள் நகரசபையால் அமைக்கப்படவுள்ளன.

யாழ். தும்பளை சிவப்பிரகாச வித்தியாலயம், யாழ்.தம்பசிட்டி மெ.மி.த.க.பாடசாலை என்பவற்றின்முன்பாக பாதசாரிகள் கடவை அமைக்கப்பட வேண்டும்என்றகோரிக்கை வடமாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களத்துக்கு அனுப்பப் பட்டுள்ளது- என்றார்.(ற-ஐ-ரி5)

## கசிப்பு உற்பத்தி செய்தவருக்கு 2 வருடங்கள் சிறைத்தண்டனை

சாவகச்சேரி, மார்ச் 13

கசிப்பு மற்றும் கோடா கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தும் உபகரணங்களைவைத்திருந்தகொடிகாமத்தைச் சேர்ந்த நபரொருவருக்கு சாவகச்சேரி நீதிமன்று, நேற்றுமுன்தினம் இரண்டு வருடங்கள் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளது

கொடிகாமம் பொலிஸார் கடந்த 23 ஆம் திகதி, கொடிகாமம் பருத்தித்துறை வீதியில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட குறித்த நபரை கைது செய்தனர். அவரை மறுநாள் சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தியிருந்தனர்.

நீதிமன்றம் குறித்த நபரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டது.

இந்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது கசிப்புவைத்திருந்த குற்றத்துக்காக ஒருவருடச்சிறைத்தண்டனையும் , கோடா மற்றும் உபகரணங்கள் வைத்திருந்த குற்றத்துக்காக மேலும் ஒரு வருடச் சிறைத் தண்டனையும் விதித்து சிறைத் தண்டனையை ஒன்றன் பின் ஒன்றாக அனுபவிக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டார். (கு-ஐ-9)

## கிராம அலுவலர் கடத்தலுக்கு காதல் விவகாரமே காரணம்

### சந்தேக நபர்களுக்குப் பிணை

சாவகச்சேரி, மார்ச் 13

முறைப்பாட்டாளருக்கும், சந்தேக நபர்களில் ஒருவருக்கும் இருந்த காதல் விவகாரமே கடத்தலுக்குக் காரணம் என்று நீதிமன்றில் கூறுப்பட்டதையடுத்து வழக்கின் சந்தேக நபர்கள் நால்வர் பிணையிலும், ஐந்தாவது சந்தேகநபர் வழக்கிலிருந்தும் விடுவிக்கப்பட்டனர்.

தென்மராட்சிப் பிரதேசத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய கடமைக்குச்சென்ற இளம்பெண் கிராம அலுவலர் கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கு கடந்த புதன்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

சந்தேகநபர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகளால் சமர்ப்பிக்கப்பட்ட ஒலிப்பதிவு செய்யப்பட்ட ஒலிநாடாவைச் இயக்கி உரையாடலைக் கேட்ட நீதிவான் வழக்கின் முதலாம், இரண்டாம், மூன்றாம், நான்காம் சந்தேகநபர்களை தலா 2 லட்சம் ரூபா பெறுமதியான இரு ஆள்பிணையிலும், ஐந்தாவது சந்தேகநபரை வழக்கிலிருந்து விடுவிக்குமாறும் கட்டளையிட்டார்.

கடந்த ஜனவரி மாதம் இருபதாம் திகதி தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த இளம் பெண் கிராம அலுவலர் தனது சகோதரனுடன் கடமைக்குச் சென்ற வேளை, அலுவலகத்தை அண்டிய பகுதியில் வைத்து இலக்கம் மறைக்கப்பட்ட ஹைஏஸ் வாகனத்தில் வந்தவர்களால் வழிமறிக்கப்பட்டுக் கடத்தப்பட்டார். தடுக்க முற்பட்ட கிராம அலுவலரின் சகோதரன் தாக்கப்பட்டார்.

இதனை அவதானித்த அந்தப் பகுதி இளைஞர்கள் வாகனத்தைப் பின்தொடர்ந்து சென்றனர். முள்ளிப் பகுதியில் வைத்து இலக்கத் தகட்டை மறைத்திருந்த துணியை நீக்கி விட்டு தொடர்ந்து பயணித்தனர். வாகனத்தின் இலக்கத் தகட்டை அவதானித்த ஒருவர் கொடிகாமம் பொலிஸாருக்குத் தகவல் கொடுத்தார்.

அதையடுத்து பொலிஸார் தீவிர தேடுதல் நடத்தியபோது, இரு மணி நேரம் கழித்து முல்லைத்தீவு, புதுக்குடியிருப்புப் பகுதியில் குறித்த வாகனம் செல்வதை அவதானித்த அந்தப் பகுதி பொலிஸார் மயங்கிய நிலையில் இருந்த கிராம அலுவலரை வாகனத்திலிருந்து மீட்டு புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் சேர்ப்பித்தனர்.

வாகனத்தில் பயணித்த மூவரையும் கைது செய்து அன்றைய தினமே கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

மறுநாள் சாவகச்சேரி நீதிமன்றில் அவர்களை முற்படுத்தியபோது மூவரையும் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்ட நீதிவான், அடையாள அணிவகுப்பு நடத்தவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

கிராம அலுவலர் கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பாகப் பொலிஸார் மேலும் இருவரைக் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தினர். அவர்களையும் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டு அடையாள அணிவகுப்பில் இணைக்குமாறு பொலிஸாருக்கு நீதிவான் உத்தரவிட்டார்.

குறித்த தினத்தில் கடத்தப்பட்ட போது தாக்குதலுக்கு இலக்காகி பற்களை இழந்த கிராம அலுவலரின் சகோதரன் நீதிமன்றுக்கு வருகை தராததால் பிறிதொரு தினத்தில் அடையாள அணிவகுப்பை நடத்த உத்தரவிடப்பட்டது.

அடுத்த தவணையில் இடம்பெற்ற அடையாள அணிவகுப்பில் கிராம அலுவலரின் கடத்தலில் பங்குபற்றிய மூவர் அடையாளம் காட்டப்பட்டதையடுத்து, தொடர்ந்து ஐந்து பேரையும் விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது சந்தேக நபர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் பொலிஸார் குற்றப் பத்திரத்தில் குறிப்பிட்டது போன்று இவர்கள் இனந்தெரியாதவர்களல்ல எனவும், பல ஆண்டுகளாக வழக்கின் சந்தேகநபர்களில் ஒருவரும், பெண் கிராம அலுவலரும் காதலர்களாக இருந்ததை உறுதிப்படுத்தும் வகையில் இருவரும் தொலைபேசியில் நடத்திய உரையாடல் அடங்கிய ஒலிப்பதிவு நாடாவை நீதிமன்றில் சான்றுப் பொருளாகச் சமர்ப்பித்தனர்.

அதனைச் இயக்கி உரையாடலைக் கேட்ட நீதிவான் வழக்கின் முதலாம், இரண்டாம், மூன்றாம், நான்காம் சந்தேக நபர்களை தலா ஒரு லட்சம் ரூபா பெறுமதியான இரு ஆள் பிணையில் செல்லவும், ஐந் தாவது சந்தேக நபரை வழக்கி லிருந்து விடுவிக்குமாறும் கட்டளையிட்டார்.

(கு-ஐ-4,9)

# Pearson Edexcel Higher Education Forum 2016

Pearson Education, the largest awarding body in the UK, organized a Higher Education forum themed "Higher Education Trends and the Role of Non-State Institutions" which was held on 3 March 2016 at Jaic Hilton Hotel, Colombo. Hon. Mohan Lal Grero, the State Minister of Higher Education graced the forum as the Chief Guest and it was attended by nearly 50 Heads of Centres and Heads of Faculties.

Many internationally recognized Universities approve BTEC HND students for first year or advanced entry onto the second and third years of degree programs including many universities in the UK, USA, Australia, New Zealand, Canada and many other destinations. The new BTEC subjects and syllabuses available from year 2016 were also introduced at this forum.




**Pearson Higher Education Forum - 2016**

**From Left to Right (1st Row):-** *Shenuka Fernando :- Regional Development Manager - Pearson, Dr. Harsha Alles:- Chairman-Gateway Group, Dr. Dayan Rajapakse: Chairman/Managing Director - ESFOT Group, Eranga Weeramanthri - Chief Executive Officer - Western College, Prof. Chithra Weddikkara:- Chairperson-Colombo School of Construction and Technology, Premila Paulraj:- Regional Director Asia - Pearson, Hon. Mohan Lal Grero:- State Minister of Higher Education, David Crowther: Director of International Products and Global Partnerships, Pearson Qualifications International, UK, Keith Davies: Country Director- British Council, Suriya Bibile:- Territory Manager-Pearson, Prof. Kshanika Hirimburegama: Dean Academic Affairs, BCAS Campus, Nizam Razzaq: Chairman BMS, Abdur Rahuman:- Chairman BCAS Campus, Prof. N. Rajkumar:- Dean Faculty of Engineering Sciences, CINEC Maritime Campus.*


**From Left to Right (2nd Row):-** *Dr. Samanthika Lokugamage:- Consultant ACTA, Kate Lowe: Directress- ASPIRE, AT Swamipillai:- Institute of Informatic Studies Jafna,Ben Gunaratne:- Director-Colombo School of Construction and Technology, Kamanie Jayalath:- General Manager/Head of Training and Development-SLT, Sherryn Yaseen:- Chief Executive Officer-ACHE, Maneka Gunaratne:- Director-Colombo School of Construction and Technology*

**Our Partners**

ALWAYS LEARNING PEARSON



# சிறுவிளம்பரங்கள்



## விற்பனைக்கு



### விற்பனைக்கு

A50 கேம்பிறிச் கார் மற்றும் அல்சேசன், யேர்மன் செப்பட் நாய் மற்றும் ரியூசனுக்குத் தேவையான வாங்கு, மேசைகளும் விற்பனைக்கு உள்ளன.

**077 303 9754**

### வீடு விற்பனைக்கு

இல. 267, கொழும்புத்துறை வீதி, கணக்கர் சந்திக்கு அருகில் அமைந்துள்ள ஒரு பரப்புக் காணியுடன் சகல வசதிகளும் அடங்கிய வீடு விற்பனைக்குண்டு.

**077 742 0240**

### காணி விற்பனைக்கு

மூளாய் மானிப்பாய் வீதியில் (மூளாய் அரசடி சந்திக்கருகில்) குமரன்புலம் என்னும் பெயர் உடைய 16 பரப்பு உறுதிக் காணி விற்பனைக்கு உள்ளது.

**தொடர்பு: 077 613 3144**

### காணி விற்பனை

யாழ் பஸ் நிலையத்தில் இருந்து 50மீ.தூரத்தில் முனீஸ்வரன் வீதியில் யாழ் அஞ்சல் அலுவலகம், வீரசிங்கம் மண்டபம் ஆகியவற்றுக்கு அண்மையாக வர்த்தக நடவடிக்கைகள் மேற்கொள்ளக்கூடிய கடைத் தொகுதிகளைக் கொண்ட 3½பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தரகர்கள் தேவையில்லை.

**தொடர்பு : 075 044 0712, 077 984 5854**

### நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

45 நாள் நிரம்பிய தடுப்பூசிபோடப்பட்ட ஜேர்மன் சப்போட் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.

**077 892 4932**

### காணி விற்பனைக்கு

பருத்தித்துறை, உபயகதிர்காம வீதியில் 4 பரப்புக் காணி (சதுரக்காணி) கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு.

**077 712 4688**

### காணியுடன் வீடு விற்பனைக்கு உண்டு

சாவகச்சேரி A9 வீதி, பழைய பொலிஸ் நிலையத்துக்கு அருகில் ஒன்பது அறைகள் (3 இணைந்த குளியலறை) சமையலறை, பொது குளியலறைகளுடன் கூடிய 4 பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்குண்டு.

**077 738 5999**

### வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், தட்டாதெரு சந்திக்கு அருகில் நல்ல வீடு விற்பனைக்கு.
விலை : 90லட்சம்

**தொடர்பு : 077 905 0274**

### தென்னந்தோட்டம் விற்பனைக்கு

பளைக்கும், தர்மக் கேணிக்கும் இடையில் உள்ள 20 ஏக்கர் தென்னந்தோட்டம் விற்பனைக்கு உண்டு.

**072 525 4133**
**0047 970 29322 - நோர்வே**

## தேவை





### தேவை

தெகிவளையில் உள்ள கட்டட நிர்மாணப் பணியில் வேலை செய்வதற்கு அனுபவமுள்ள மேசன் பாஸ், டைல் பாஸ் PAINTERS மற்றும் உதவியாளர்கள் தேவை.தங்குமிடம் உண்டு அழைக்கவும்

**தொடர்பு: 077 736 8327**

### பணிப்பெண் தேவை

வெள்ளவத்தையில் கௌரவமான, சிறிய குடும்பமொன்றுடன் தங்கியிருத்தல் வேண்டும். சமையல், வீட்டுவேலை, பாடசாலைக்கு கூட்டிச் செல்லுதல் போன்ற பணிகள் அடங்கும்.

**தொடர்பு: 077 565 1122**

### தேவை 077 776 3148

வெள்ளவத்தையில் உள்ள எமது Construction நிறுவனத்திற்கு Accountant cleark (பெண்) தேவை. சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.

hrmanager@civimec.com

### விற்பனைப் பிரதிநிதி தேவை

எமது நிறுவனத்திற்கு விற்பனைப் பிரதிநிதி தேவை

**072 233 2450, 077 9491 015**

### வேலையாள்கள் தேவை

கிளிநொச்சியில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள உயர்தர அசைவ உணவகத்திற்கு சகலவிதமான வேலையாள்களும் தேவை.

**077 747 4111**

### அறை பராமரிப்பாளர் தேவை

யாழ்.நகரில் இயங்கும் சிறிய விடுதி ஒன்றுக்கு அறை பராமரிப்பாளர் ஆண், பெண் தேவை.

**தொடர்பு : 076 840 0928**

### தேவை

வெள்ளவத்தையில் உள்ள எமது CONSTRUCTION நிறுவனத்திற்கு பெண் ACCOUNT TRAINEE மற்றும் COMPUTER OPERATORS தேவை.
சம்பளம் 20,000/= வரை வழங்கப்படும்.

hrmanager@civimec.com **தொடர்பு: 077 776 3148**

### காணி தேவை

யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, மாங்குளம், மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா போன்ற பிரதேசங்களில் பிரதான வீதியில் 1 - 2 ஏக்கர் காணி விடுமுறை/ சுற்றுலா விடுதிக்கு தேவை.

**தொடர்பு: 077 298 5079**

### தேவை

யாழ் நகரில் உள்ள பலசரக்கு வியாபாரக் கடைக்கு சிட்டை எழுதுநர் தேவை. (கணினி அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை ( ஆண்)

**077 392 1662**

### வேலையாள்கள் தேவை

சாவகச்சேரியில் அமைந்துள்ள தையல் நிலையத்திற்கு தையல் துறையில் அனுபவமுள்ள/அனுபவமற்ற பெண் வேலையாள்கள் தேவை.

**தொடர்பு : 076 650 0521**

### ரெயிலர் தேவை

கேட்டின் தைப்பதில் அனுபவமுள்ள பெண்கள் சுயவிவரக் கோவையுடன் நேரில் வரவும்.

**ஜெஸிமாஸ்**
**306, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.**
**077 749 0282**

### தேவை

JCB ஒப்பரேட்டர் தேவை. தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் விரும்பத்தக்கது.

**077 314 4756**

## ஏனையவை

### IELTS UK KU Education

MBA(London) Qualified Trainer Call: 0777302882
Visit: http://edu.kugroup.info/ielts
0777-302882 (A,G&L) IELTS Centre@KU
தனிப்பட்ட முறையில்,உங்கள் நேர வசதிக்கேற்ப கற்கக்கூடிய,அதிக அளவிலான சிறந்த பெறுபேறுகளை யாழ்மாவட்டத்தில் வழங்கிவரும் ஒரே முன்னணி நிறுவனம்.IELTS Life Skills-A1-B1
K.U Education,No 626 1/1,First Floor,K.K.S Rd,Jaffna.

### விஷேட பல் வைத்திய சேவை

- பல் முக சீராக்கல் (Consultant Orthodontist)
- முக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்

- மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
- ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல் நிரந்தரமாக பற்களைப்
- பொருத்துதல் (Crown & Bridges, Implants)
- வேர்முறை சிகிச்சை (Root Canal Filling)
- நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
- பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

**சன்றைஸ் மெடி கிளினிக்**
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 559 8006 (லதா)

**றோயல் மெடிக்கல் சென்ரர்**
454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்சினி)

### தனியார் வகுப்புக்கள்

கிளிநொச்சியில், தரம் 6-11 வரையான மாணவர்களுக்கு **கணிதம், விஞ்ஞானம் வீட்டிற்கு** வந்து கற்பிக்கப்படும்

**தொடர்பு: 077 026 1966**

### VACANCY

எமது நிறுவனத்துக்கு
1. Receptionist - (Male / Female)
2. Computer Instractor (Trainee) (Male/ Female)
3. Computer Typist (Trainee) (Male / Female)

விரும்புவோர் கீழ் உள்ள முகவரிக்கு தமது சுயவிவரக் கோவையை 25.03.2016 இற்கு முன்னர் அனுப்பவும்.

**IMS**
Institute of Micro Systems
Computer Training Center
No.110, Jaffna Road, Manipay

### பரிசுத்த ஆவிக்கு செபம்

எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நானடைய வழிகாட்டும் பரிசுத்த ஆவியே உமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக. உமது அருட்கொடைகளின் மூலம் என்னுள் ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்குத் தீங்கு செய்தோரையும் நான் மன்னிக்க அருள் புரிபவரே. என் வாழ்வில் எச்சந் தர்ப்பத்திலும் எனக்கு உற்ற துணையான உமக்கு இச்சிறிய செபத்தின் மூலம் நீர் செய்யும் சகலத்துக்கும் நன்றி கூறுகிறேன். என் தேவைகள் எவ்வ ளவு முக்கியமாயிருப்பினும் என் றென்றும் உம்மிலிருந்து விலகாமல் என்றும் உம்மில் நிலைத்திருப்பேனென உறுதி கூறுகிறேன். நானும் என்னால் நேசிக்கப்படும் அனை வரும் என் றென்றும் உமது முடிவிலா மகிமையில் பங்குபெற வேண்டுகிறேன்.

- ஆமென்

### மணமகன் தேவை

1988, 5' 6 ½", விசாகம் 3, பாவம் 14 , செவ்வாய்க் குற்றம் இல்லை. MSc (IT), Asst.Lecturer

**071 514 0950**

### தேவை

அரியாலை கிழக்குப் பகுதியில் உள்ள 150 பரப்பு தென்னந்தோட்டத்தினை முழுநேரமாக பராமரிக்கக் கூடியவர்கள் தேவை. குடும்பமாக தங்கி இருப்பதற்கான வீட்டு வசதி, மின்சார வசதி யாவும் உண்டு. ஊதியம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**077 235 9560**

### வேலைவாய்ப்பு

யாழ் மாநகரில் இயங்கிவரும் பிரபல உதிரிப்பாக விற்பனை நிலையங்களிற்கு முன் அனுபவம் வாய்ந்த மற்றும் பயிற்சிநிலை விற்பனையாளர்கள் தேவை. ஊதியம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**077 235 9560.**

### வேலைவாய்ப்பு

திருநெல்வேலியில் அமைந்துள்ள பல்வைத்திய நிலையத்துக்கு Receptionist, Assistant வேலைகளுக்குப் பணியாளர்கள் தேவை.

T.P: 021 221 2599 , 077 234 6034
Unique Dental Care, 561 Palaly Road, Thirunelvely, Jaffna.

### வேலைவாய்ப்பு

1. வெல்டர்
2. லேத் மென்
3. பழகுநர்

**077 376 0594**

### மணமகள் தேவை

யாழ் இந்து, 1988, சுவாதி நட்சத்திரம், செவ்வாய் தோஷம் அற்ற, கிரகபாவம் 6 உடைய, கொழும்பில் கணக்காளராக தொழில் புரியும் 6 அடி உயர மணமகனுக்கு மணமகள் தேவை.

**தொடர்புகளுக்கு: 077 764 0155**
senthangoo@gmail.com

### கணக்காளர் தேவை

யாழ்நகரில் உள்ள தனியார் வைத்தியசாலைக்கு தகைமையுள்ள பெண் கணக்காளர் தேவை.(Qualified Accountant) (முன் அனுபவம் உள்ளோர் விரும்பத்தக்கது) தகைமையுடையோர் சுயவிவரக்கோவையுடன் புதன்கிழமை 16.03.2016 காலை 09 மணிக்கு 514/18 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு நேரில் வருகை தரவும்.

**பணிப்பாளர்.**

### வேலையாள்கள் தேவை

அரிசி ஆலையில் வேலை செய்வதற்கு ஆண், பெண் இருபாலாரும் தேவை. சாப்பாடு, தங்குமிட வசதிகள் உண்டு.

**இராசம் அரிசி ஆலை, சுன்னாகம்**

### ஓட்டோ தேவை

நல்ல நிலையிலுள்ள 4 ஸ்டோக்பஜாஜ் ஓட்டோ உடன் தேவை. விற்க உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.

**076 623 4263, 077 618 3885**

### வேலையாள் தேவை

கண்ணாடி வியாபாரத்தில் அனுபவமுள்ளவர்கள் பழக விரும்புபவர்கள் தேவை. சம்பளம்: 20 000 (பழக விரும்புபவர்கள்)

**த. குமாரசாமி அன் சன்ஸ்**
**252, கே.கே.எஸ். வீதி,**
**யாழ்ப்பாணம்.**



# பேரம்ப

# மணி

# இன்று (1

## தன்னடக்கம் கொண்ட கொடையாளர்




திரு. E.S.P.நாகரத்தினம் அவர்களின் மணிவிழா மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதிலும் அவரது மணிவிழாவிற்கு தலைமை ஏற்பதிலும் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். மனிதநேயம் எவ்வாறு மக்களிடம் வளர்க்கப்படலாம் என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்கும் ஒரு பெருந்தகை இவராகும். காரைநகர்க் கிராமத்தில் பிறந்து ஒரு வியாபாரியாக தோற்றம்பெற்ற இவரது வாழ்க்கை இன்று தேசிய ரீதியாகவும் சர்வதேச ரீதியாகவும் மக்களால் பேசக் கூடியவாறு தோற்றம் பெற்றதை எவராலும் பாராட்டப்படாமல் இருக்கமுடியாது. பணத்தை தமக்கெனச் சேமிக்காமல் எப்படி ஊர் மக்கள் பயன்பெற மாற்றலாம் என்பதே அவரது வாழ்க்கையின் இலட்சியமாகும். கல்விப்பணி, சமூகப்பணி, அறப்பணி என்ற பல்வேறு கோணங்களில் அவரது சேவையானது பரந்து, விரிந்து கிடப்பதனைக் காண்கின்ற வேளையில் அவருக்கான ஆளுமையின் வளர்ச்சியினை வியக்காமல் இருக்கமுடியாது.

கொடையால் புகழ் பெற்ற திரு.நாகரத்தினம் அவர்கள் காரைநகர் உட்பட யாழ்ப்பாணத்திலுள்ள பல கோயில்களின் விருத்திக்காக வருடாந்தம் பெருமளவு பணத்தை வழங்குவதைக் காண்கின்றோம். அதேபோல் கல்விப் பணிக்கென அவர் வருடாந்தம் பெருமளவு பணத்தினை ஒதுக்கி, ஏழை மாணவர்களுக்கு மாதாந்தம் இலட்சக்கணக்கான பணத்தை அன்பளிப்பாக வழங்கி வருகின்றார். பாடசாலைகள் தொடங்கி பல்கலைக்கழகம் வரை அவரது கல்விக்கான கொடை பரந்து விரிந்து கிடப்பதைக் காணமுடிகின்றது. இதேபோல் அவரது சமூகப் பணியையும் பாராட்டாமல் இருக்க முடியாது. லயன்ஸ் கழகத்தில் இணைந்து மருத்துவப் பணிக்கென எடுத்துவரும் நடவடிக்கைகள் அவரின் சமூகப்பணியைக் காட்டுவனவாகும். இதே போன்று பல நூலகங்களின் கட்டிட வளர்ச்சிக்கும் நூல்களின் அதிகரிப்பிற்கும் அவர் ஆற்றி வரும் பணிகளைக் காண்கின்ற வேளையில் அவரது சமூக மேம்பாட்டுச் சிந்தனையின் ஆழத்தைப் புரிந்து கொள்ள முடிகின்றது. மொத்தத்தில் அவரது பல்பரிமாணம் கொண்ட பணிகள் சமூகத்தால் என்றும் மதிக்கப்படும் காத்திரமான பணிகள் என மகிழ்வதுடன், அவர் இப்பணிகளை ஆற்ற நல்ல உடலாரோக்கியத்தையும், திடமான சிந்தனையையும் இறைவன் அவருக்கு வழங்க வேண்டுமென இறைஞ்சி, அவர் தனது குடும்பத் தாருடன் பல்லாண்டு சீருடன் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

**பேராசிரியர் க. தேவராஜா தலைவர், வணிகத்துறையாழ். பல்கலைக்கழகம்**

## வானுயர்ந்த பெருமையாளன்




கல்விக் கொடையாளர், பொன்மனச் செம்மல் E.S.P நாகரட்ணம் அவர்களின் மணி விழா நிகழ்விற்காக வெளியிடப் படும் நாகரத்தின மாலை என்னும் நூலுக்கும், பத்திரிகைச் சிறப்பு மலர்களுக்கும் வாழ்த்துரை வழங்கக் கிடைத்த சந்தர்ப்பத்துக்காக மகிழ்ச்சி அடைகின்றேன்.

கடந்த 60 ஆண்டு கால வாழ்க்கை வயதில் 30 ஆண்டு காலம் பொதுப்பணியில் எவரும் எட்டிப்பிடிக்க முடியாத அளவிற்கு காலத்தால் அழியாத, கள்வரால் களவு எடுத்துச் செல்லமுடியாத கல்வியை மையமாக வைத்து ஆற்றிய கொடைகளும், சேவைகளும் ஐயா அவர்களை வானம் அளவு நிறையக் கூடிய புகழுக்கும், பெருமைக்கும் இட்டுச் சென்றிருக் கின்றது.

காரைநகரில் வாரிவளவின் உயர்பண்பும், விழுமியமும் உள்ள குடும்பத்தில் பிறந்து, யாழ்குடா நாட்டில் கல்விப் புலத்தவர்கள் மனதிலும், மக்களின் மனதிலும் ஆழப்பதிந்தவர். துணிவும், முயற்சியும் கொண்ட நுளீ அவர்கள் யாழ் குடாநாட்டின் வர்த்தகப் பெருமகனின் வரிசைப்படுத்தலில் முதல் தரத்தில் வைத்துப் போற்றப்படுபவர். கடந்த ஒரு மாதமாக வலம்புரிப் பத்திரிகை ஊடாக, ஐயா அவர்களின் மணி விழா வாழ்த்தினை, மீட்டுப்பார்த்துச் சிந்திக்க முடியும். இலங்கையின் அரச நிர்வாகத்தின் உயர் மட்டத்தில் இருந்து, அடிமட்டம் வரை E.S.P நாகரத்தினம் அவர்களின் தன்னிகர் அற்ற பொதுச் சேவையினை உணர்ந்து பல இடங்களில் மதிப்பளித்த தன்மைகள் பெருமையளிக்கும் விடயமாகும். மணிவிழாக் காணும் நாயகன் நூற்றாண்டு விழாவும் காண இறைவன் அருள் வேண்டி, வாழ்த்தி நிற்கின்றேன்.

**சி. மாணிக்கராசா - செயலாளர்மணிவிழாச்சபை**
**பிரதிக்கல்விப்பணிப்பாளர்யாழ்ப்பாணக்கல்வி வலயம்.**

## ஆசிச்செய்தி



உன்மீது நீ அன்பு கூர்வது போல
உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு
கூர்வாயாக (மாற்: 12:31)

உலக ஜீவராசிகள் அனைத்தையும் ஒன்றித்து இணைத்து வைத்திருப்பது அன்பு என்கிற அதிசய மருந்தே. தாழ்ந்தவரையும் உயர்ந்தவரையும், ஏழைகளையும் செல்வந்தரையும் மற்றொன்றோடு இணைப்பது இந்த அன்பிற்கே உரித்தான உயரிய இலக்கணமாகும்.

மனிதர்களான எம்மை எந்தவித வேறுபாடுமின்றி இணைத்து வைக்கக்கூடியது இந்த அன்பே. இந்த அன்பு இல்லையேல் ஒன்றும் இல்லை என்ற வெறுமை நிலையை அடைந்து விடுகின்றது மனித குலம். அந்த வகையில் அன்பினால் உந்தப்பட்டு மனித குலத்தை உயர்த்தி வைப்பதுதான் எம்முன் இருக்கும் இன்றைய சவால். தன்னை மையப்படுத்தி வாழாது மற்றவர் வாழ்வை நோக்காகக் கொண்டு வாழ்வதே உயர்ந்த வாழ்வு. பிறர் வாழ்வை உயர்த்த சமூக சேவைகள் வழியாக, மனிதநேய செயற்பாடுகள் வழியாக, தாராள உதவிகள் வழியாக சேவை செய்யும் திருவாளர் E.S.P நாகரத்தினம், மணிவிழா நாயகன் அவர்களை வாழ்த்தி தொடர்ந்தும் வாழ்வினால் பணி செய்ய வாழ்த்தி ஆசித்து நிற்கின்றேன்.

**மேதகு ஜஸ்ரின் பேர்னாட் ஞானப்பிரகாசம**
**யாழ். மறைமாவட்ட ஆயரின்**

## ஆசிச்செய்தி

அனைவராலும் பேரன்புடன் E.S.P என்று அழைக்கப்படும் திரு.பேரம்பலம் நாகரத்தினம் அவர்கள் சிறுவயது முதலே எமது அன்புக்கும் பண்புக்கும் உரியவராவார். ஆலயத்திற்கு எப்பொழுதும் தூய வெள்ளைநிற வேட்டியுடன் வருவார். சமயப் பணிகளையும் சமூகப்பணிகளையும் மிகுந்த ஆர்வத்துடன் முன்நின்று செய்வார். அவரது அறுபது ஆண்டு பூர்த்தி விழாவை காரைநகரில் கொண்டாடுவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன்

பணிசெய்து கிடப்பது என் கடன் எனத் தணியாத திறனுடையோன் தரும மிகுந்தோன்
மணிகளில் ஒளி மிகுந்த நாகரத்தினப் பெயரோன் அணி செய்வதன் முன்னோர் முதலெழுத்து மூன்றும் (E.S.P)
வணிகரில் உயர்ந்தோன் வாக்கும் செயலும் ஒன்றாகத் துணிகரமாகத் தொடரும் தூய உள்ளத்தோன்
மணிவிழாக் கண்டோன் மானுட வாழ்வில் கணிதமாகக் கொண்ட அகவை ஓர் அறுபதாகத்
துணைவியுடன் இணைந்து இளம்பிறைநுதல் ஆணி ஆனை முகத்தான் ஐங்கரன் அருள்பெற்று வாழ்க
திரு.திருமதி E.S.P. நாகரத்தினம் குடும்பத்தினர் எல்லா நலன்களும் பெற்று நீடுழி வாழ மணற்காடு கும்பநாயகி முத்துமாரியம்மன் அருள் கிடைக்கப் பிரார்த்தித்து, பரிபூரண ஆசிகளுடன்

**சிவஸ்ரீ நா. ஞானசம்பந்தக் குருக்கள் மணற்காடு முத்துமாரியம்மன் தேவஸ்தானம், காரைநகர்.**

## செஞ்சொற்செல்வரின் ஆசிச்செய்தி



அறிவும் அடக்கமும் அன்பும் உடனே
பிறியா நகர்மன்னும் பேரரு ளாளன்
குறியுங் குணமுங் குரைகழல் நீங்கா
நெறியறி வார்க்கிது நீர்த்தொனி யாமே
- திருமந்திரம்

நாடியவர்க்கெல்லாம் நல்லன செய்யும் தொழிலதிபர் E.S.P நாகரத்தினம் அவர்களின் மணி விழாக் குறித்து வாழ்த்துவதில் மிகவும் ஆனந்தமடைகிறேன். காரைநகர் மண்பெற்ற கல்விக்காருணியனின் உதவியை நாடாத பாடசாலைகள் இல்லை. கோவில்கள், சமூக நிறுவனங்கள் அவற்றின் வளர்ச்சிக்கும் இன்முகத்துடன் கொடுக்கும் கொடை வள்ளலாக எம்முன் வாழும் இப்பெருந்தகை, சகல சிறப்புகளுடனும் நிறைவாக வாழ எல்லாம் வல்ல துர்க்காதேவியை வேண்டிப் பிரார்த்திக்கிறேன்

ஈரநெஞ்சுடைய தொழிலதிபர் காரைநகர் எந்தக் கோவிலின் சுபகாரியத்தை ஆரம்பித்து வைப்பதற்கு இப்பெருமகனை அனைவரும் அழைப்பது வழக்கமாகி விட்டது. சிரித்தமுகமும், நிறைந்த சரீரமும் சிந்தை நிறைந்த பக்தியும் கொண்ட மணிவிழா நாயகன் மனைவி, பிள்ளைகள் குடும்பத்துடன் சீரும் சிறப்புடனும் பல்லாண்டு வாழ வாழ்த்தி அமைகின்றேன்

**கலாநிதி ஆறுதிருமுருகன்**
**தலைவர், ஸ்ரீதுர்க்கா தேவி**
**தேவஸ்தானம்,தெல்லிப்பழை**

## ஏழை மாணவர்களின் உதவிக்கரம்



பொன்மனச்செம்மல்,மனித நேய ஈகையாளன்,கல்விக் காருண்யன் எனும் கௌரவ பட்டங்களை பெற்ற திருவாளர் E.S.P நாகரத்தினம் அவர்கள் சமூகத்திற்கு ஆற்றிய பணிகள் அளப்பரியன.தனது வியாபாரத் தொழிலில் கிடைக்கும் இலாபத்தில் ஒரு கணிசமான பகுதியை வருடந்தோறும் சமூகப் பணிகளுக்கென வழங்கி வருகின்றார். இவர் தனது உதவிகளில் பெரும் பகுதியினை கல்விப்பணிகளிற்கென செலவிட்டுள்ளார். வறிய மாணவர்களது கற்றலுக்கான உதவிகளையும், பாடசாலைகளினது விளையாட்டுத் துறை மேம்பாட்டிற்கான உதவிகள் எனப் பலதரப்பட்ட உதவிகளை எமது மாணவர்களது கல்வி மேம்பாட்டிற்கென வழங்கியுள்ளார்யாழ். கல்வி வலயத்தினது கல்வி மேம்பாட்டுச் செயற்பாடுகளிற்கு அவர் வழங்கிய உதவிகள் யாழ்.வலயத்தினது கல்வி வளர்ச்சிக்கு உறுதுணையாக அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். யாழ். கல்வி வலயத்தினது ஆசிரியர்கள் கௌரவிப்பு மற்றும் மாணவர்களது கௌரவிப்பு நிகழ்வுகளிற்கு இவர் வழங்கிய உதவிகள் எமது ஆசிரியர்களையும், மாணவர்களையும் உற்சாகப்படுத்தும் வகையில் அமைந்திருந்தது.கல்விப் பணியோடு பல்வேறு அறப்பணிகளையும் சமூகப்பணிகளையும் ஆற்றிவரும் திருவாளர் E.S.P நாகரத்தினம் அவர்கள் தனது தொழிற்றுறையில் மேலும் வளர்ச்சி பெற வாழ்த்துவதுடன் வடக்கு மாகாணத்தில் கல்வி கற்கும் மாணவர்களது கல்வி வளர்ச்சிக்கு இவரது உதவிகள் தொடர்ந்து கிடைக்க வேண்டுகின்றேன்.

**செ. உதயகுமார்-**
**மாகாணக்கல்விப் பணிப்பாளர் வடக்கு மாகாணம்.**

## பொன்மனச் செம்மல் பேரம்பலம் நாகரத்தி

மனிதருள் மாணிக்கம் எங்கள் தமிழ்மண் பெற்றெடுத்த தவப்புதல்வன் ஈ.எஸ்.பி. என எல்லோராலும் செல்லமாக அழைக்கப்படும் பேரம்பலம் நாகரத்தினம் அவர்களின் 60 ஆவது வயதுப் பூர்த்தியை முன்னிட்டு, 2016.03.13 அன்று வெகுவிமரிசையாக எடுக்கப்படவுள்ள மணிவிழாவில் மங்களகரமாக வெளியிட்டு வைக்கப்படவுள்ள நாகரத்தின மாலை என்னும் காலத்தால் அழியாத ஆவணத்திற்கு மணிவிழா நாயகனின் சொந்தமண்ணான காரைநகரின் மகிமை, அவரின் பெற்றோரின் புகழ்பூத்த நேர்மையான வாழ்வு, நாகரத்தினம் ஐயாவின் இளமைக்கால கல்வியும் முயற்சியும் அதனுடன் இணைந்த துணிச்சலுடன் கூடிய செயற்பாடுகள் போன்றனவற்றையும் பொருளாதாரக் கட்டமைப்பில் அவரின் படிப்படியான வளர்ச்சியும் அதனூடாக பெற்ற வருமானத்தின் பயனாக தனது குடும்ப உறுப்பினர்களை மேம்படுத்தியது போன்று தமிழ்மண் தன்னிகர் இல்லா தலைவர்களை எதிர்காலத்தில் பெறவேண்டும் என்பதற்காக சிறப்பான திட்டமிட்ட வகையில் சமூக மேம்பாட்டுக்கான திட்டங்களை நடைமுறைப்படுத்தி வாழ்ந்தவர்களும் இனி வாழப்போகிறவர்களுக்கும் பாடமான வாழ்வியல் நெறிமுறை கொண்ட ஈ.எஸ்.பி.நாகரத்தினம் அவர்களின் வாழ்க்கைத் தடத்தினை எழுதக் கிடைத்த சந்தர்ப்பம் மிகப்பெரும் பேறாகும்.

சிறப்பாக சொல்லக்கூடியதாக காரைநகரின் வடபாகத்தில் அமைந்த கசூரினா பீச் உலகத்தரம் வாய்ந்த குளியலுடன் சேர்ந்த பொழுதுபோக்கு மையமாக அமைந்து நிறைந்த வருமானம் கொடுக்கும் மையமாக உள்ளமை இலங்கையிலும் சகல நாடுகளிலும் இவ்வூரின் பெயர் கூறிக் கதைக்க காரணமாக உள்ளதெனலாம்.

மணிவிழா நாயகன் பேரம்பலம் நாகரத்தினம் அவர்களின் பெற்றோர்கள் காரைநகரைச் சொந்த இடமாகக் கொண்டு வசித்தவர்கள். இராமு-சண்முகம்- பேரம்பலமும், பேரம்பலம் மாணிக்கம் அவர்களும் வாரிவளவு கற்பக விநாயகரை நோக்கியிருந்த அருந்தவத்தினால் அருமருந்தென்ன பிள்ளையாக பிள்ளையாரால் நாகரத்தினம் எனும் நாயகன் காரைநகர் மண்ணுக்கும் தமிழ் நல்லுலகுக்கும் உயர் புகழுக்குரியவனாக வாழ்வான் என்ற இறைவனின் செய்தியை உளமார பெற்றோர்கள் அறிந்திராமல் இருந்திருக்கமாட்டார்கள். ஏனெனில் அவ்வாறே வளர்த்து சமூக மனிதனாக்கியது தனிப்பெருமை பெற்றோர்க்கு எனலாம்.

E.S.P அவர்கள் பெற்றோரின் வழிகாட்டலை சிறுவயது முதல் மிகமிகப் பக்குவமாக ஏற்று வாழ்ந்தவர். அதனையொட்டி இன்றும் வாழ்ந்து மற்றவர்கள் பின்பற்றி வாழக்கூடிய உயர்விழுமியப் பண்பு கொண்ட உத்தமராக விளங்குபவர் நாகரத்தினம் ஐயா அவர்கள். இவர் சண்முகம் பேரம்பலம் அவர்களின் நான்காவது புதல்வனாக 01.01.1956 இல் பிறந்தவர். இவர் தனது ஆரம்பக் கல்வியினை காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரியின் ஆரம்ப பாடசாலையில் (கோவிந்தன் பாடசாலை) கற்றார். தரம் 03 வரை குறித்த பாடசாலையில் கல்வி கற்று வந்த நாகரத்தினம் ஐயா அவர்கள் யாழ்ப்பாணத்தில் வர்த்தக மளிகைக்கடை நடத்தி வந்த தந்தையாரின் கடைக்கு உதவி செய்வதற்காக யாழ்ப்பாணத்திற்கு காரைநகர் கோவிந்தன் பாடசாலையில் இருந்து மாற்றப்பட்டார். யாழ்ப்பாணத்தின் வேங்கடேஸ்வரப் பெருமாள் கோவில் வாசலில் அமைந்துள்ள இன்றைய சன்மார்க்க மகா வித்தியாலயம் என்ற பெயருடைய பாடசாலையில் கல்விக்காக சேர்க்கப்பட்டார். கல்வியில் ஆர்வமும் நல்லொழுக்கமும் கொண்ட மாணவனாகத் திகழ்ந்த நாகரத்தினம் அவர்கள் அதிபர் ஆசிரியர்களால் மிகவும் விரும்பப்பட்ட மாணவனாக விளங்கினார். ஆகவேதான் தந்தையின் தொழிலுக்கு ஆன உதவி செய்து கொண்டு கல்வி கற்றாலும் சிறப்பான ஆற்றல் கொண்டவராக விளங்கியதனால் இன்று மிகப்பெரும் தொழில் அதிபராக வர அன்றைய கல்வியை அவர் இறுகப்பற்றியதை அறியமுடிகின்றது. யாழ். சன்மார்க்க மகா வித்தியாலயத்தில் நாகரத்தினம் அவர்கள் வகுப்பு 7 வரை கல்விகற்று முடித்தார். தனது 12 ஆவது வயதில், அசாத்திய துணிச்சலுடனும் முயற்சியுடனும் படிப்பை நிறுத்தி தந்தையின் வியாபாரத் தொழிலுக்குத் தோள் கொடுத்து துணையாகச் செயற்பட்டார். புத்தகக் கல்வியைவிட அனுபவக்கல்வி ஒருவனை சிறப்பாக வழிநடத்த உதவும் என மகாத்மாகாந்தியும் உலகம் போற்றும் உத்தம விஞ்ஞானி அப்துல் கலாம் அவர்களும் கூறிய வாக்கிற்கிணங்க மணிவிழாநாயகன் அவர்கள் புத்தகக் கல்வியுடன் அனுபவக் கல்வியையும் பெற்றதனால் இன்று சிறப்பான அறிவு, முயற்சி, அனுபவம்,விழுமியம்,கௌரவம் கொண்ட தொழில் அதிபராகவும் தர்மத்தின் வழி நின்று வியாபாரம் செய்யும் உத்தமர் என பலராலும் போற்றப்படுகின்றார்.

12 வயதில் தந்தையின் கடைக்குச் சென்ற நாகரத்தினம் அவர்கள் முதலாளியின் மகன்தானே என மெத்தைக் கதிரையில் இருக்கவிடவில்லை. முயற்சியே உன் உயர்ச்சிக்கு வழி எனக் கற்றுக்கொள் என பேரம்பலம் ஐயா அவர்கள் உரக்கச் சொன்னதை மறந்து செயற்பட ஐயா அவர்கள் முயற்சிக்கவில்லை. தந்தையின் வியாபார நிலையத்திற்கு வரும் பழைய போத்தலைக் கழுவிக் காயவைத்து அதில் பரல்களில் வரும் நல்லெண்ணெயை நிரப்பி அடைத்து 12 போத்தல்கள் அடுக்கக் கூடிய Horliks பெட்டிகளில் அடுக்குவதும் அதனை தோளில் சுமந்து சென்று ஏனைய கடைக்காரர்களுக்கு விற்பதும் இன்றைய முதற்தர கோடீஸ்வர வர்த்தகர் E.S.P.நாகரத்தினம் ஐயா அவர்களின் அன்றைய வேலையாகும். வியாபாரத்தையும் அதன் கஷ்டத்தையும், வரவு செலவுகளையும் கற்றுக்கொள்ளும் ஆரம்பக் கல்வியாக அதனை விருப்புடன் ஏற்று பல ஆண்டுகள் செய்துள்ளார். இதனை இன்றைய இளைஞர்களுக்காக மனந் திறந்து பகிரங்கப்படுத்துவதில் சந்தோசம் கொள்ளும் ஒரு வரலாற்று நாயகனாக விளங்குகிறார்.

இ.ச.பேரம்பலம் கடைக்கு யாழ்ப்பாண உற்பத்திப் பொருட்களை வாங்கி கொழும்புக்கு கொண்டு செல்லவரும் கொழும்பு முஸ்லிம் வியாபாரிகள், இளவயதினரான மணிவிழா நாயகன் மிகுந்த பிரயாசை யுடன் நல்லெண்ணெய் தொழிலில் படும் கஷ்டத்தை அவதானித்துள்ளனர். மற்றவர் கருத்துக்கு மதிப்புக் கொடுத்துப் பழகும் நாகரத்தினத்துக்கு ஏற்ற தொழில் முயற்சிக்கான வழிகாட்டலையும் கருத்தையும் எடுத்துக் கூறின். அவரும் சிரத்தையுடன் ஏற்று அதற்கு முயற்சி எடுப்பதாகக் கூறியது அறியப்படக் கூடியதாகவுள்ளது.

இவரது தொழிலின் ஆரம்பத்தில் HERO சைக்கிள் 750 ரூபாவுக்கும் ASIA சைக்கிள் 975 ரூபாவுக்கும் விற்றதோடு ஒரு தடவையில் 10 சைக்கிள்களுக்கு மேல் வாங்காது விற்பனையில் நட்டமாவதை அனுபவ அறிவால் கற்றுக்கொண்டு ஒரு துவிச்சக்கரவண்டிக்கு கிடைக்கும் ரூபா 50 திருப்தியுடன் உழைத்து இன்றைய நிலைக்கு உயர்ந்த வரலாற்றுக்குரியவர் E.S.P.நாகரத்தினம் அவர்கள்.

தந்தையாரின் விருப்பப்படி நாகரத்தினம் ஐயா அவர்களின் இல்லற வாழ்வு அவரது 25 ஆவது வயதில் அமைக்கப்பட்டது. காரைநகர் இடைப்பிட்டியில் உயர்வான பண்புகளுடன் வாழ்ந்துவந்த ஆறுமுகம் அவர்களின் மகள் தங்கமலர் என்பவருக்கும் E.S.P. நாகரத்தினம் அவர்களுக்கும் 1981 ஆம் ஆண்டு முறைப்படி திருமணம் நடைபெற்றது.

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மார்ச்.13

யாழ்ப்பாணம் முகாமையாளர் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் வடக்கு மாகாண பொருளாதார வளர்ச்சி பற்றியதான கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக் கிழமை மாலை 4.30 மணியளவில் நல்லூர் பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது என்று சம்மேளனத்தின் ஒருங்கிணைப்பாளர் வி.நிரஞ்சன் தெரிவித்துள்ளார்.

இந்தக் கலந்துரையாடல் நிகழ்வின் வளவாளராக இந்தியத்துணைத்தூதுவர் ஆ.நடராஜன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றவுள்ளார். (ற-ஐ-ரி2)

.....................

## பங்குனித் திங்கள் உற்சவம்

சுன்னாகம் மயிலணி முத்துமாரியம்மன் ஆலயத்தில் நாளை திங்கட்கிழமை முதல் பங்குனி மாதத்தின் ஐந்து திங்கட்கிழமைகளிலும் விசேட அபிசேகம், பூசை, உற்சவம் ஆகியவை சிறப்பாக நடைபெறும் என ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ நா.சிவசங்கரக்குருக்கள் தெரிவித்துள்ளார். (ற-ஐ-ரி)

நீர்கொழும்பு
மொடேன் சிற்றி இன் - (விருந்தினர் விடுதி)
426, பிரதான வீதி, நீர்கொழும்பு

*குறுகிய தூரத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து வரும் பஸ் நிறுத்தம்.
*15 நிமிட ஓட்டத்தில் விமான நிலையம்
*அதிவேக பாதை மூலம் 30 நிமிடங்களில் கொழும்பு நகருக்கு.
*வசதியான குளிரூட்டப்பட்ட அறைகள், இணைப்பு குளியல் அறை சுடுநீர் வசதியுடன்.
*மிக நடுத்தரமான கட்டணம்
*பஸ் நிறுத்தத்தில் இருந்தும் விமான நிலையத்திற்கும் தேவையான போக்குவரத்து ஒழுங்கு செய்து தரப்படும்.

031 223 3967, 078 450 6917

கருமை தோற்றம் கொண்டவர்களுக்கு
ஓர் அற்புதமான செய்தி
(2 Weeks Result)

ஆண், பெண் இருபாலாருக்கும் உகந்தது 2 வாரத்தில் நல்ல அழகான மேனியுடன் தோற்றமளிக்க France நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட

Herbal Whitening Cream

Cream விலை 2500/-, 5500/-

+முகப்பரு +கண் கருவளையம் +முகச் சுருக்கம் +உதடு கறுப்பு +முதுகு கழுத்து கறுப்பு +கை கறுப்பு மற்றும் முகம் தாடைகளில் உள்ள தேவையற்ற உரோமங்களை அகற்றும் கிறீம் விற்பனைக்கு உண்டு. (வெளி மாவட்டங்களுக்கு நேரடியாக விநியோகிக்கப்படும்.)

ஆச்சரியம் கரும்புள்ளிகளை 10 நாள்களில் அகற்றும் Magic Peel எங்களிடம் உண்டு

எங்களிடம் Day, Night, Body Cream, Face Pack, Body Pack உண்டு

இங்கு Facial செய்யப்படும் 1 Settingயில் அற்புதமான வித்தியாசம்

(Rasult இல்லையேல் Money Back)

மேலும் உடல் எடை, மார்பு கூட்டும் குறைக்கும் குளிசை, டொனிக், பாம்மா, தலைமுடி வளரச்செய்யும் ஆயுர்வேத எண்ணெய் விற்பனைக்குண்டு. (69668)(15,17,20)

T.P : 077 210 6155

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

வருடாந்த பொதுக்கூட்டம் - 2016

எமது சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் (27.03.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கல்லூரியின் குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அனைத்துப் பெற்றோர்களும், தெரிவு செய்யப்பட்ட பழைய மாணவர் பிரதிநிதிகளும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ம.அருள்குமரன்
(செயலாளர்)

ஐ.தயானந்தராஜா
(தலைவர்)

குறிப்பு: சங்கத்தின் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்கறிக்கையைப் பார்வையிட விரும்பும் சங்கத்தின் அங்கத்தவர்கள் 21.03.2016 முதல் பாடசாலை நேரத்தில் அலுவலகத்தில் தொடர்பு கொண்டு பார்வையிடலாம்.

SB TRAVELS & TOURS (PVT) LTD

SPECIAL AIR FARES
0% NET FARE

| | | | |
|---|---|---|---|
| CHENNAI | 21,300/- | LONDON | 94,300/- |
| MADURAI | 17,000/- | TORONTO | 155,100/- |
| TRICHI | 27,400/- | MALDIVES | 24,100/- |
| BOMBAY | 30,100/- | PARIS | 88,300/- |
| BENGALURE | 30,900/- | NEWYORK | 118,800/- |
| KOCHI | 25,600/- | MELBOURNE | 92,800/- |
| DELHI | 39,400/- | CANTON | 68,900/- |
| MALAYSIA | 33,400/- | PERTH | 93,900/- |
| SINGAPORE | 33,800/- | NARITA | 73,800/- |
| BANGKOK | 31,800/- | AUCKLAND | 129,300/- |
| ONEWAY: CHENNAI - 12,500/- | | SYDNEY | 104,800/- |

DUBAI -15,900/-, DOHA -19,800/-, SHARJAH -15,900/-

*Condition Apply

VISA CARD ACCEPTED.

குழுவாக டிக்கட் பெறுபவர்களுக்கு 5% கட்டணக்கழிவு

IATA ACCREDITED AGENT

எதிர்பாராத மிகக்குறைந்த அதிக கட்டணக்கழிவுடன் டிக்கட்டுகளும், விசா ஏற்பாடு உட்பட அனைத்தும் ஒரே இடத்தில் சிறப்பாக செய்து கொள்ள இன்றே அழையுங்கள்:

0771083480,81,82,83 | 0766911080, 81, 82,83

0212229555 / 0212228555

Call us on : 0094 112540540 / Mobile: 0094 771083480/81

e-mail : bookings@sbairfares.com

No324, ALUTHMAWATHA ROAD, COLOMBO-15. TEL-011 2540280
No: 132, SRI KATHERASAN STREET, COLOMBO 13. TEL -011 2333322
NO:216, KASTHURIYAR ROAD, JAFFNA. TEL-021 2229555

E-mail: sbtravels99@yahoo.com Contact for Travel Insurence

காணி தேவை

யாழ்ப்பாணம், சாவகச்சேரி மற்றும் நுணாவில் பகுதியில் தண்ணீர் மற்றும் மின்சார வசதியுடன் ஆறு(06) பரப்புக் காணி குத்தகைக்கு தேவை.

தொடர்பு: 077 025 6640

தேவை

யாழ்ப்பாணம், நல்லூரில் அமைந்துள்ள திருமண அழைப்பிதழ்களின் காட்சியறை ஒன்றிற்கு தகைமையுள்ள பெண் பணியாளர் ஒருவர் தேவை.

தொடர்பு: 077 025 6640

CERTIFICATE COURSE IN WEB ENGINEERING

மாதமொன்றுக்கு ரூபா 80,000க்கு கூடிய சம்பளத்தினை பெற்றுக்கொள்ள நீங்களும் விருப்பமா?

வெப்தளம் அமைத்தல் ஆரம்பத்தில் இருந்து சரளமாக, முழுவதுமாக சிங்களம் மற்றும் ஆங்கிலத்தில்

7 நாட்களில்

அறிமுகப்படுத்தும் ஒருநாள் செயலமர்வு ஒவ்வொரு சனிக்கிழமையும்

ஒருநாள் செயலமர்வுக்கு கலந்துகொள்ளும் எல்லோருக்கும் பெறுமதியான சான்றிதழ் வழங்கப்படுவதுடன் அன்றைய தினம் பகல் உணவும் வழங்கப்படும். செயலமர்வுக் கட்டணம் ரூபா. 1750 மட்டும்.

செயலமர்வில் பங்குகொள்ளும் எல்லோருக்கும்,
- பெறுமதியான சான்றிதழ்
- வெப்தளம் அமைத்தல் தொடர்பான ஆரம்ப அறிவு
- பெறுமதியான கணனி இரகசியங்கள் பல.

உங்களுடைய ஆசனங்களை ஒதுக்கிகொள்வதற்கு இன்றே அழைக்கவும்

Blooming Buds International E Campus
No. 388/2/1, Baseline Road, Dematagoda, Colombo.
www.bloomingbudsecampus.com
Hot Line - 0715669641
0112 677 641 / 0113 054 641

கேள்விப்பத்திர அறிவித்தல்
மக்கள் வங்கி

சுத்திகரிப்பு சேவைகளுக்கான
கேள்விப்பத்திரம் கோரல்.

மக்கள் வங்கியின் யாழ் பிராந்தியத்தைச் சேர்ந்த யாழ். ஸ்ரான்லி வீதி, காங்கேசன்துறை, யாழ்.பிரதான வீதி, ஊர்காவற்றுறை, நெல்லியடி, அச்சுவேலி, சங்கானை, சுன்னாகம், சாவகச்சேரி, வல்வெட்டித்துறை, யாழ்.பல்கலைக்கழகம், யாழ். கன்னாதிட்டி, பருத்தித்துறை ஆகிய கிளைகளிலும் யாழ். நாவலர் வீதி, மானிப்பாய், மல்லாகம், உரும்பிராய், புத்தூர், பண்டத்தரிப்பு, கோப்பாய், அளவெட்டி, கொடிகாமம், கைதடி, உடுப்பிட்டி, திருநெல்வேலி, கல்வியங்காடு, இணுவில், புலோலி ஆகிய சேவை நிலையங்களிலும், யாழ்.பிராந்திய தலைமைக் காரியாலயத்திலும் சுத்திகரிப்பு சேவைகளுக்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட சேவை வழங்குநர்களிடம் முத்திரை இடப்பட்ட விலைகள் கோரப்படுகின்றன.

மீளச் செலுத்தப்படாத 1000 ரூபா கேள்விப்பத்திர எழுத்தாவணக் கட்டணம் செலுத்துவதன் மூலம் 2016 சித்திரை 05ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப 3.00 மணி வரை எந்தவொரு வார நாளிலும் மு.ப 9.00 – பி.ப 4.00 மணி வரை பின்வரும் கைச்சாத்திடுவோரிடம் கேள்விப்பத்திர விவரங்களைப் பெறலாம். வாங்க முன்பு கேள்விப்பத்திர ஆவணங்களை பரிசோதித்துப் பார்க்குமாறு கோருவோர் கேட்கப்படுவதோடு ஆவணங்களை விலைக்கு வாங்கிய பின்பு எக் காரணம் கொண்டும் குறிப்பிட்ட கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது.

குறிப்பிட்ட கிளைகள் மற்றும் சேவை நிலையங்களின் முகாமையாளர்களோடு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு நேரத்தை ஒதுக்கி அந்தந்த கட்டட வளாகங்களைப் பரிசோதிக்குமாறு கோருவோர் கேட்கப்படுகின்றனர்.

2016 சித்திரை 15ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப 2.00மணிக்கு அல்லது முன்பு கிடைக்கப்பெறுமாறு எல்லா முத்திரையிடப்பட்ட விலைக்கோரல்களும் பின்வருபவரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

பிராந்திய முகாமையாளர்,
பிராந்திய தலைமைக் காரியாலயம்,
இல: 82, கன்னாதிட்டி சந்தி,யாழ்ப்பாணம்.

Fax : 021-2222602
E-mail : jafrho@peoplesbank.lk
தொலைபேசி இல : 021-2222601 / 0212228602




திருமறைக் கலாமன்றம்
தயாரித்து வழங்கும்
தவக்கால ஆற்றுகை

வேள்வித் திருமகன்

( திருப்பாடுகளின் காட்சி )

காலம் : மார்ச் 17, 18, 19, 20 - 2016
( வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு )
- நான்கு நாள்களுக்கு -

நேரம் : மாலை 6.45 மணி
( வெள்ளிக்கிழமை மட்டும் மாலை 7.30 மணி )

இடம் : திருமறைக் கலாமன்ற அரங்கு


பார்வையாளர்கள் ஆசனங்களுக்கான பதிவுகளை
யாழ். திருமறைக் கலாமன்ற அலுவலகத்தில் மேற்கொள்ளலாம்

இறைமகனின் பாடுகளின் பயணத்தில் இணைந்திட அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
T.P. : 021 222 2393

-திருமறைக் கலாமன்றம்

## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம் 10 . 10 . 1939

மறைவு 14 . 02 . 2013

அமரர் **கந்தவனம் சின்னையா சண்முகலிங்கம்**

(ஓய்வுபெற்ற உபஅதிபர்)

அப்பா ! ஆயிரம் உறவுகள் எமக்கு இருந்தாலும்
உங்கள் ஒருவருக்கு ஈடாகுமா ?
ஆண்டுகள் பல ஆனாலும் உங்கள் நினைவுகள் எம்
உயிர் உள்ள வரை எம்மை விட்டு அகலாது
நித்தம் உங்களை நினைத்து
கண்ணீர் சிந்துகின்றோம்
மீண்டும் ஒரு பிறப்பெடுத்து வாருங்கள் அப்பா
எம்மிடமே.......

(69145) (14,18,20)

கைதடி நுணாவில்,
சாவகச்சேரி.

உங்கள் நினைவுடன்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

## சாரதிகளுக்கு அபராதம்

சாவகச்சேரி, மார்ச் 13

அனுமதிப்பத்திர மின்றி மகேந்திரா கப் ரக வாகனத்தில் மணல் ஏற்றிச் சென்ற சாரதி யொருவருக்கு 30 ஆயிரம் ரூபாவும், வழித்தட அனுமதிப்பத்திர மின்றி பயணிகளை ஏற்றிச் சென்ற வாகனச் சாரதியொருவருக்கு 25 ஆயிரம் ரூபாவும் சாவகச்சேரி நீதிம ன்றில் அபராதமாக விதிக்கப்பட்டன.

கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோதுமேற் குறித்த அபராதங்கள் விதிக்கப்பட்டன.

அத்துடன் காப்புறுதிப் பத்திரமின்றி வாகனம் செலுத்திய மற்றொரு சாரதியொருவருக்கு 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. நி-ஐ-9

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்





அமரர் வடிவேலு
**சிவசுப்பிரமணியம்**

தோற்றம் 1944.06.15 மறைவு 2016.02.10

அமரர் வடிவேலு
**பராசக்திராசா**

தோற்றம் 1949.10.26 மறைவு 2016.01.23

எமது குடும்பத் தலைவர்களின் மரணச் செய்தி கேட்டு எமது இல்லத்துக்கு வருகை தந்தும், தொலைபேசி, மின்னஞ்சல் மூலமும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு இன்று (13.03.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் எமது இல்லத்தில் அன்னார்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நடைபெறும்.

உடையார்வளவு, இடைக்காடு,
அச்சுவேலி.

(8910)(1,18,20)

**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்

## திருமதி தவமணி வைகுந்தவாசன்

(கோவளம் - காரைநகர்)



யாழ்ப்பாணம், நல்லூர் கைலாசபிள்ளையார் கோயிலடியைப் பிறப் பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தவமணி வைகுந்த வாசன் (ஓய்வு பெற்ற உத்தியோகத்தர் - விவசாய திணைக்களம் திருநெல்வேலி) கடந்த 10.03.2016 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி - செல்வமலர் தம்பதி யினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சிவசம்பு - வள்ளியம்மை தம்பதியினரின் அன்பு மருமகளும் வைகுந்தவாசனின் அன்பு மனைவி யும், கிருபாலினி (Pharmacist-UK), கிருசாந்தன் (Civil Engineer Maga Engineering (pvt)Ltd), லலிதாம்பிகா (மருத்துவ பீடம் 4ஆம் வருட மாணவி யாழ்ப்பாணம்), கிருசாந்தி (பொறியியல் பீடம் 3 ஆம் வருட மாணவி பேராதனைப்பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ரஜீபனின்(Civil Engineer - UK) பாசமிகு மாமியாரும் கங்காதேவி, திருஞானசம்பந்தர், ஞானதேவி, ராசகுமாரி ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.03.2016) ஞாயிற்றுக் கிழமை காலை 07.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தோற்றம் 09.05.1953

மறைவு 10.03.2016

இல. 09,
கைலாச பிள்ளையார் கோவில்
வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

தகவல்:
வைகுந்தவாசன் (சிறி) - கணவர்
வே.கந்தையாபிள்ளை
அன் சன்ஸ் மருந்துக்கடை
யாழ்ப்பாணம்.

T.P No: **021 321 9422, 021 221 9043**

# கொடுக்கல் வாங்கலுக்கு அப்பாற்பட்ட உறவு

**சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில்களுக்கு நாம் வலுவூட்டினோம்.**
**200,000 தொழில் முயற்சிகள் நாளைய பொருளாதார மையங்களாகின்றன.**

இந்த நாட்டிலுள்ள கைத்தொழில் முயற்சிகளில் கிட்டத்தட்ட 60 சதவீதமானவை சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் (SME) ஆகும். இவையே தேசிய பொருளாதாரத்தின் முதுகெலும்பாக விளங்குகின்றன. ஆகவேதான், வளர்ச்சியை நோக்கமாகக் கொண்ட எமது புதிய நிதித் தீர்வுத் திட்டங்களில் அநேகமானவை இத் துறையில் பிரத்தியேக கவனத்தைச் செலுத்துகின்றன.

சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் துறையில் நாம் ரூ. 500 பில்லியனுக்கு மேற்பட்ட தொகையை முதலீடு செய்துள்ளோம். ஏனெனில், கொடுக்கல் வாங்கல்களுக்கு அப்பாற்பட்ட வங்கிச் சேவையில் நாம் நம்பிக்கை வைத்திருக்கிறோம்.



AA-(lka)
ஹற்றன் நஷனல் வங்கி, இலங்கை மத்திய வங்கியினால் உரிமம் அளிக்கப்பட்டு, மேற்பார்வை செய்யப்படும் ஒரு வர்த்தக வங்கி. Hatton National Bank PLC – PQ 82

HNB
உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி

# பச்சைப் பொய் சொல்கிறார் பொன்சேகா பதறுகின்றார் முன்னாள் அமைச்சர் பசில்

கொழும்பு, மார்ச் 13

முன்னாள் இராணுவத் தளபதியும், தற்போதைய அமைச்சருமான சரத் பொன்சேகா நாடாளுமன்றத்தில் வெளியிட்ட தகவல்கள் அப்பட்டமான பச்சைப் பொய் என்று மறுத்திருக்கிறார் முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ச.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது–

2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ச தாம் வெற்றி பெறுவதற்காக விடுதலைப் புலிகளுக்குப் பணம் கொடுத்தார் என நான் ஒருபோதும் சரத் பொன்சேகாவிடம் கூறவில்லை. அரசியல் இலாபம் தேடும் வகையில் அவரது குற்றச்சாட்டுக்கள் அமைந்திருக்கின்றன.



பொன்சேகா நாடாளுமன்றத்தில் கூறிய குற்றச்சாட்டுக்கள் உண்மைக்குப்புறம்பானவை. அவை முற்றிலும் பொய்யானவை. அவர் கூறுவது போன்று எந்தவொரு சம்பவமும் இடம்பெறவில்லை. அத்துடன், விடுதலைப் புலிகளுக்குப் பணம் கொடுத்ததாகவும், அதனை நான் பொன்சேகாவிடம்கூறியதாகவும் சொல்லப்படுகின்ற கதை அப்பட்டமான பொய். அவ்வாறு எதனையும் அவரிடம் நான் கூறவில்லை.

சரத் பொன்சேகா இந்தக் குற்றச்சாட்டுக்களைச் சொந்தமாகக் கூறவில்லை. நீண்டகால இலக்கு ஒன்றைக் குறி வைத்து மேற்கொள்ளப்படும் அரசியல் வேட்டையாடல் நடவடிக்கையாகவே இதனைக் கருதவேண்டும்.

புலிகளிடமிருந்து மீட்கப்பட்ட தங்கத்தை மீண்டும் மக்களிடம் கையளிக்கும் நடவடிக்கைக்கும் எனக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை என்பதால், அது பற்றிய மேலதிக தகவல்கள் எனக்குத் தெரியாது.

மகிந்த ராஜபக்ச அரசின் அமைச்சராக இருந்தேன் என்ற வகையில், கூட்டுப் பொறுப்பின் அடிப்படையில், பொன்சேகாவின் குற்றச்சாட்டை மறுக்கின்றேன்– என்றார். (ஞ-ஐ-5)










BAJAJ
Pulsar POWER!
Pulsar
கனவு நனவாக
விசேட விலைக்கழிவு
Pulsar 135 LS
Pulsar 150 UG 4.5
பழைய விலை
265,000/=
புதிய விலை
260,000/=
பழைய விலை
305,000/=
புதிய விலை
296,000/=


Godrej
LOCKING SOLUTIONS AND SYSTEMS
ALL 5 LEVELS OF SECURITY
1897
பாதுகாப்புத் தீர்வுகளும் முறைகளும்
நிலையானது நீடித்துழைப்பது
1 வருட உத்தரவாதம்
Godrej-Navtal Padlock
Godrej-dual Access Padlock
Godrej-Antique Brass Round Lock-with Key
Godrej-kadi Tala -200mm Tex.brown
Godrej-lyra 2 Combi-pack Antique Brass
Godrej-lyra 7 Antique Brass
Godrej-Brass Round Look
410/- ரூபாவிலிருந்து
கீழ்வரும் அபான்ஸ் காட்சியறைகளில் பெற்றுக்கொள்ளமுடியும்
யாழ்ப்பாணம்: 021 2220981, சுன்னாகம்: 021 2240440, நெல்லியடி: 021 2264934,
கிளிநொச்சி: 021 2285411, சாவகச்சேரி: 021 2270005, சங்கானை: 021 2250106,
முள்ளியவளை: 077 1092102
*நிபந்தனைகளுக்கு உட்பட்டது
உங்களுக்கு பெறுமதி வாய்ந்தவற்றை எந்நேரமும்
காத்திடும் கொட்ரிஜ் லொக்ஸ்
Abans


TVS
வாங்குவோர் வெல்வோர்
உயர் விசேடத்துவங்களை தேடிச் செல்லும் உங்களுக்காக
TVS இடமிருந்து விசேட பரிசுகள்
உயர் விசேடத்துவம், நேர்த்தியான
வடிவமைப்பு மற்றும் ஒப்பற்ற நம்பிக்கையை
கொண்டு மெருகேற்றப்பட்ட
TVS உற்பத்திளை கொள்வனவு செய்யுங்கள்,
வியக்க வைக்கும் பல பரிசுகளை வெல்லுங்கள்
Jupiter
1 சூப்பர் பரிசு
ரூ. 500,000/-
2 TVS metro 5
3 கையடக்க தொலைபேசிகள் 100
நவீன தொழில்நுட்பம்/ உயர் சக்தி/ எரிபொருள் சிக்கனம்/
கவர்ச்சியான தோற்றம்/ ஒப்பற்ற நம்பிக்கை
• மேலதிக விபரங்களை அருகிலுள்ள TVS விற்பனை முகவரிடம் பெற்றுக்கொள்ளுங்கள்
• 2016 பெப்ரவரி 20ம் திகதியிலிருந்து ஏப்பிரல் 30ம் திகதி வரை மட்டுமே
• சீட்டிழுப்பு 2016 மே மாதம் 06 திகதி இடம்பெறும்
நிபந்தனைகளுக்கு உட்பட்டது
WP/GT/4533
TVS
0114 600 500

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தமிழ் மகளிரின் வாழ்வியல் வதங்கிச் சுருங்காதிருக்க...

வடக்கு-கிழக்கில் எண்பத்தொன்பது ஆயிரத்துக்கும் அதிகமான குடும்பங்களின் தலைமைப் பொறுப்பை, பெண்களே ஏற்றுக் கொள்ள வேண்டிய கட்டாயம் மேலுயர்ந்துள்ளது. அதனைத் தவிர்க்க வேறு வழிதுறை எதுவும் தெரியாத நிலையே உயர்ந்துள்ளது.

வடக்கு மாகாண சபையின் புள்ளிவிவரங்கள் மூலம் இந்தத் தகவல் உறுதியாகி உள்ளது.

இது குறித்து வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் விலாவாரியாக, விளக்கம் துலக்கத்துடன் எடுத்துரைத்துள்ளார்.

இராணுவப் பிரசன்னம் மிகக் கூடுதலாக உள்ள பகுதிகளில் வசிக்கும் பெண்கள், மிகக் குறிப்பாகக் கணவரை இழந்தவர்கள், கடும் பாதிப்புக்கு ஆளாகி உள்ளனர் என்பதை அவர் ஆழமாகவும், நீளமாகவும் விவரித்துள்ளார்.

இப்போதெல்லாம் திக்கற்ற பெண்களுக்கு உதவுவது போன்று, பல "நாடகங்களை" அரங்கேற்றி, இறுதியில் வன்முறைகளைக் கட்டவிழ்த்து விடும் போக்கு மலிந்து வருகிறது.

வடக்கு மாகாண சபையின் சுகாதார மற்றும் மகளிர் விவகார அமைச்சு மேற்கொண்ட ஆய்வுகளில், பெண்களுக்கான உரிமைகளும் உடனடித் தேவைகளும் ஓரளவில் கண்டறியப்பட் டுள்ளதாகவும், முதலமைச்சர் விலாவாரியாக விளம்பியுள்ளார்.

அதேவேளை --

கொலை மற்றும் வன்புணர்வால் பாதிப்புற்ற பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு நீதி வழங்க வேண்டும். அதன் பொருட்டு, உடனடியாகவும் - உறுதியாகவும் நடவடிக்கை எடுத்தாக வேண்டும் என்று பிரதமரிடம் கோரியுள்ளது, பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கான வலையமைப்பு.

மேற்கண்ட பின்னடைவுகள், பாதுகாப்பு இன்மைகளின் மத்தியிலும், போரின் பின்னதான தேவைகள் குறித்த முழுமையான ஆய்வை மேற்கொள்ள வேண்டியது தவிர்க்க முடியாத தேவை என்பதை கொழும்பு அரசு எப்போது கண் திறந்து முழு வடிவத்தைப் பார்க்கப்போகிறது என்பதற்கான வழிமுறை எதுவும் புலப்படவில்லையே!

போர் இடர் மற்றும் இயற்கை இடர்களால், மிகப்பெரிய அளவில், முதலில் பெரியளவு பாதிப்புறுபவர்கள், சிறார்களும் பெண்களுமே ஆவர்.

போர் முடிவுற்று ஆண்டுகள் ஆறு பூர்த்தியாகிய போதிலும் --

பாதிப்புற்ற தமிழ்ப் பெண்களுக்கான நலனோம்புப் பணிகள் குறித்து உரிய கவனம் செலுத்தப்படவில்லை.

வெறும் மேடைப்பேச்சும், புள்ளிவிவர அட்டவணையும் பாதிக்கப்பட்டவர்களுக்கு எந்த வகையிலும் கை கொடுக்க மாட்டா.

ஓர் இனத்தின் மேம்பாடு, அந்த இனம் சார்ந்த பெண்களின் உண்மையான மேம்பாட்டைக் கொண்டே வகுக்கத் தக்கது.

நாள்கள் ஒவ்வொன்றும் மகளிர் மேம்பாட்டுக்கானவை என நாம் எப்போது கருதுகிறோமோ, அதனை நாடிச் செயற்படுகிறோமோ, அப்போதுதான் அவர்களுக்கான பாதுகாப்பும், அதனூடு சமூக முன்னேற்றமும் உகந்த நிலைக்கு உயர வாய்ப்பும் கிட்டும்.

இல்லையேல், தமிழர் வாழ்வியல் வதங்கிச் சுருங்கிவிடும். அது குறித்து ஆழ்ந்து சிந்திப்பது இனி எப்போது....?

# உள்ளூராட்சித் தேர்தலும் இன்றைய அரசியல் சூழ்நிலையும்

லங்காதீப பத்திரிகையிலிருந்து
வீ.எஸ்.ரீ

சுதந்திரக் கட்சியின் மகிந்த அணியினர் மற்றும் அவர்களுடன்இணைந்து செயற்படும் சிறுகட்சிகள் தமது எதிர்கால அரசியல் நிலைப்பாடு குறித்து, குறிப்பாக எதிர்வரவுள்ள உள்ளூராட்சித் தேர்தல் குறித்து குழப்பத்தில் ஆழ்ந்துள்ளனர். ஐ.ம.சுதந்திர முன்னணியிலிருந்து வெளியேறித் தனியான கட்சியொன்றை ஆரம்பிக்கவுள்ளதாகக் கூறிவந்த அந்தச் சிறுகட்சிகளின் தலைவர்கள், கூட்டு எதிரணி என்ற பெயரில் ஆறு சிறிய கட்சிகளில் ஒன்றின் சின்னத்தில் உள்ளூராட்சித் தேர்தல்களில் போட்டியிட இருப்பதாகத் தெரிவித்துள்ளனர். மகஜன எக்சத் பெரமுன, தேசிய சுதந்திர முன்னணி, ஜனநாயக இடதுசாரி முன்னணி, பிவிதுரு ஹெல உறுமய, கம்யூனிஸ்ட் கட்சி, மற்றும் லங்கா சமசமாஜக் கட்சி என்பவையே அந்தச் சிறுகட்சிகளாகும்.

இந்தச் சிறுகட்சிகள் மகிந்த தரப்புடன் இணைந்து தனிக்கட்சியமைத்துப் போட்டியிட்டாலும் சரி, இல்லையேல் ஆறு சிறுகட்சிகளும் ஒன்றிணைந்து ஒரு கட்சியின் சின்னத்தில் போட்டியிட்டாலும் சரி, ஐ.தே.கட்சி தவிர்ந்த ஏனைய கட்சிகளின் வாக்குகள் பிளவுபடுமாதலால், அதனால் லாபமடையப் போவது நிச்சயம் ஐ.தே.கட்சியேதான். சுதந்திரக் கட்சியின் மைத்திரிபால அணி, மகிந்த அணி, ஜே.வி.பி என்பவை தனித்தனியே போட்டியிடக்கூடும். அதேவேளை சரத் பொன்சேகாவின் ஜனநாயகக் கட்சி, ஐ.தே.கட்சியுடன் இணைந்து போட்டியிடக்கூடும். மொத்தத்தில் இந்த நிலை ஐ.தே.கட்சி உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரத்தை இலேசாகக் கைப்பற்ற வழி வகுக்கும்.

> "அண்மையில் ஜனாதிபதி மைத்திரிபால, மகிந்தவுக்கு ஆதரவான சுதந்திரக் கட்சியின் தொகுதி அமைப்பாளர்கள் பலரை அவர்களது பதவி களிலிருந்து நீக்கி விட்டுத் தமக்கு ஆதரவான புதியவர்களைத் தொகுதி அமைப்பாளர்களாக நியமித்திருந்தார்."

இதனை மகிந்த மற்றும் மைத்திரிபால தரப்புக்கள் நன்கறியுமாயினும், இவ்விரு தரப்புக்களும் இணைந்து தேர்தலைச் சந்திக்கும்வாய்ப்புஏற்படப்போவதில்லை.


### அரசியலுக்குள் இழுத்து வரப்பட்ட மகிந்த

மகிந்த தரப்பின் சிறுகட்சிகள் மகிந்தவின் தலைமைத்துவத்தைப் புறக்கணித்துத் தனித்துப் போட்டியிட்டால் மக்கள் ஆதரவைப் பெறஇயலாது என்பதாலேயே 'மகிந்தவுடன் எழுவோம்' எனக்கூறி அரசியலில் இருந்து ஓய்வுபெற எண்ணிய மகிந்தவை மீண்டும் அரசியலுக்குள் இழுத்து விட்டுள்ளனர். அதேவேளை, தமது ஆட்சிக் காலத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஊழல் மோசடிகளுக்கு எதிராக மைத்திரி அரசு விசாரணைகளை ஆரம்பித்திருப்பதால், தமது பாதுகாப்புக்காகத் தம்மைச் சுற்றி அரசியல் சக்தியொன்றை உருவாக்கி வைத்துக் கொள்ளும் தேவை மகிந்தவுக்கும் ஏற்பட்டுள்ளது. அதேவேளை புதிய அரசுக்கு எதிராக மகிந்தவுடன் கை கோர்த்துள்ள சுதந்திரக் கட்சிப் பிரமுகர்களில் பலரும் ஊழல் குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாகி உள்ளவர்களாகையால், அவர்களும் மகிந்தவுடன் இணைந்திருந்தாலே அரசியலில் தமது இருப்பை நிலை நிறுத்தலாம் என்ற நிலைப்பாடு நிலவுகிறது. அதேவேளை மைத்திரிபாலவுக்கும், மற்றும் ராஜபக்ச அரசை வீழ்த்த உதவிய, தற்போது மைத்திரி அரசில் பதவிகளை வகிக்கும் தரப்பினருக்கும், மகிந்த ராஜபக்ச ஏதாவது விதத்தில் மீண்டும் அதிகாரத்தைக் கைப்பற்றி விடக்கூடுமோ என்ற அச்சம் மனதுக்குள் உண்டு. அவ்வாறான மாற்றம் ஏற்படுமானால் தத்தமது அரசியல் எதிர்காலம் அஸ்தமித்துப் போய் விடுமென அவர்கள் எண்ணுவதில் தவறேதும் கிடையாது. மகிந்த பதவி யில் இருந்தவேளை தனக்கு எதிரானவர்களை எவ்விதம் பழி வாங்கினார் என்பதை அவர்கள் நன்கறிந்துள்ளனர். தாம் ஜனாதிபதித் தேர்தலில் தோற்றிருப்பின் ஆறடி ஆழத்தில் நிலத்தில் புதைக்கப்பட்டிருப்பேன் என மைத்திரிபால தேர்தல் வெற்றியை அடுத்துத் தெரிவித்திருந்தமை இதற்கு நல்லதோர் உதாரணமாகும்.

அண்மையில் ஜனாதிபதி மைத்திரிபால, மகிந்தவுக்கு ஆதரவான சுதந்திரக் கட்சியின் தொகுதி அமைப்பாளர்கள் பலரை அவர்களது பதவிகளிலிருந்து நீக்கி விட்டுத் தமக்கு ஆதரவான புதியவர்களைத் தொகுதி அமைப்பாளர்களாக நியமித்திருந்தார். பதவி நீக்கம் செய்யப்பட்ட தொகுதி அமைப்பாளர்கள் புதிய கட்சியொன்றை ஆரம்பிக்குமாறு மகிந்தவை வற்புறுத்தி வருகின்றனர். அதேவேளை முன்னர் மகிந்தவுடன் இணைந்து செயற்பட்ட டிலான் பெரேரா, எஸ்.பி.திஸநாயக்க, லக்ஸ்மன் யாப்பா அபேவர்தன போன்ற பிரபல அரசியல்வாதிகள் மைத்திரிபால தரப்புக்காகக் கடும் அக்கறையுடன் செயற்பட ஆரம்பித்துள்ளனர். இது இலங்கை அரசியலில் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு குழப்பமும் சிக்கலும் நிலவி வருவதையே வெளிக்காட்டி நிற்கிறது.

### குற்றவாளிகளுக்கு எதிராக உறுதியான நடவடிக்கை

இந்த விதத்தில் சுதந்திரக்கட்சியிலும், ஐ.ம.சு.கூட்டணியிலும் மைத்திரிபால தமது இருப்பை உறுதிப்படுத்தி வரும் நிலையில், மகிந்தவின் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் உறவினர்கள் மீதான ஊழல் மோசடிக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலும் துரித மான, கடுமையான சட்ட நட





வடிக்கைகளை மெதுமெதுவாக இறுக்கப்படுத்தி வருகிறார்.

மைத்திரிபாலவின் இத்தகைய நடவடிக்கைகள் குறித்து மகிந்த தரப்பிலுள்ள சிறுகட்சிகள் மகிழ்ச்சியடையக்கூடும். ஐ.ம.சு.கூட்டணியில் தமக்கு உரிய இடம் கிடைக்காது என்பதை அவர்கள் அறிந்திருப்பதாலும், தனித்துத் தேர்தலைச் சந்திக்கும் சக்தி அவர்களுக்கு இல்லாததாலும், மகிந்த சுதந்திரக்கட்சியிலிருந்து வெளியேறி, சுதந்திரக்கட்சி பிளவுபடுவது தமக்கு லாபகரமானது என அவர்கள் நம்புகின்றனர்.

பொது எதிரணியெனத் தம்மைக் கூறிக்கொள்ளும் தரப்பினர் தம்மை நாடாளுமன்றத்தில் தனியான தரப்பாக ஏற்றுக்கொள்ள வேண்டுமெனக் கோருவது, அவர்களுக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் கருத்து நிலைப்பாட்டை உக்கிரம் அடைய வைக்கக் காரணமாகலாம். அது ஐ.தே.கட்சிக்கு வாய்ப்பான ஒன்றானதால் எதிர்காலத்தில் ஐ.தே.கட்சி அந்தத் தரப்பினரது கோரிக்கைக்கு ஆதரவு அளிக்க, முன்வரக்கூடும்.

அதேவேளை மகிந்தவின் சகோதரர்களான கோதாபயவும், பஸிலும் கூட புதிய கட்சியொன்று ஆரம்பிக்கப்பட வேண்டுமென்ற கருத்தையே வெளிப்படுத்தி வருகின்றனர். மகிந்தவின் ஆதரவாளர் தரப்பு புதிய கட்சியொன்றை

> ஐ.ம.சு.கூட்டணியில் இருந்து விலகி தேர்தலை எதிர்கொள்ளும் சுதந்திரக் கட்சிப் பிரமுகர்களுக்கே பெருமளவில் வாக்குகள் கிட்ட வாய்ப்பு ஏற்படும். ஆயினும் சிறுகட்சிகளது செயலர்களின் தீர்மானம் அந்த விடயத்தில் செல்வாக்குச் செலுத்த வேண்டி நேரிடும்.

ஆரம்பித்தால், அதன் தலைமைத்துவம் மகிந்தவுக்கோ, அல்லது மகிந்த தரப்பு, சுதந்திரக் கட்சிக்காரர்களுக்கோதான் கிட்ட வாய்ப்புண்டு. அவ்வாறன்றி, குறித்த ஆறு சிறிய கட்சிகளில் ஒன்றின் சின்னத்தில் போட்டியிட நேர்ந்தால், ஐ.ம.சு. கூட்டணியில் இருந்து விலகி தேர்தலை எதிர்கொள்ளும் சுதந்திரக் கட்சிப் பிரமுகர்களுக்கே பெருமளவில் வாக்குகள் கிட்ட வாய்ப்பு ஏற்படும். ஆயினும் சிறுகட்சிகளது செயலர்களின் தீர்மானம் அந்த விடயத்தில் செல்வாக்குச் செலுத்த வேண்டி நேரிடும்.

இத்தகையதொரு பின்னணியில் புதிய கட்சியொன்று உருவாகுமானால், சுதந்திரக் கட்சியிலிருந்து வெளியேறிப் போட்டியிடும் தரப்பினருக்கே வெற்றி வாய்ப்புக் கிட்ட இடமுண்டு. ஆனால் தற்போதுள்ள தேர்தல் நடைமுறையின் கீழேயே தேர்தல் இடம்பெறுமானால், சிறு கட்சிகளின் வேட்பாளர்களுக்கும் சுதந்திரக் கட்சி ஆதரவாளர்களது விருப்பு வாக்குகள் மூலம் தெரிவாக வாய்ப்புக் கிட்ட இடமுண்டு. அதனால் சிறுகட்சிகள் பழைய தேர்தல் நடைமுறையின் கீழேயே தேர்தல் நடைபெறுவதை விரும்புவார்கள். தற்போது பொது எதிரணிகூட பழைய தேர்தல் முறைமையின் கீழேயே உள்ளூராட்சித் தேர்தல் உடனடியாக நடத்தப்பட வேண்டுமென வற்புறுத்தி வருகிறது.

சுதந்திரக் கட்சி இரு தரப்புக்களாகப் பிளவுபட்டால், ஐ.தே.கட்சி தொடர்பாக எந்த விதத்தில் நடந்துகொள்ள வேண்டுமென்ற சிக்கலை மைத்திரிபால அணி எதிர்கொள்ள நேரிடும்.

**ஐ.தே.கவுக்கு சாதகமான நிலை**

ஐ.தே.கட்சிக்கு எதிராகத் தமது தரப்பு வேட்பாளர்களைத் தேர்தலில் நிறுத்தாது தவிர்த்துக் கொள்ள மைத்திரிபால அணியால் இயலாது. அதேவேளை தமது அரசின் பங்காளர்கள் என்ற விதத்தில் ஐ.தே.கட்சி வேட்பாளர்களுக்கு எதிரான பரப்புரைகளையும் மைத்திரிபால தரப்பால் முன்னெடுக்க இயலாது.

மொத்தத்தில் தற்போதைய அரசியல் குழப்பச் சூழ்நிலையில், உள்ளூராட்சித் தேர்தலில் ஐ.தே.கட்சிக்கே பெருமளவில் வெற்றி வாய்ப்பு உள்ளதாகக் கணிப்பிடுவதில் தவறேதும் இல்லை.

## கர்ப்பிணிகளுக்கான போசாக்குத் திட்டம் உரியவர்களைச் சென்றடைகின்றதா?

அரசின்வரவு–செலவுத்திட்டத்தில்உள்வாங்கப்பட்ட கர்ப்பிணிகளுக்கான போசாக்கு நலத்திட்டம் வரவேற்கக்கூடிய விடயம்.

எனினும் இந்தத் திட்டம் கர்ப்பிணிகளுக்கு உரிய முறையில் சென்றடைகிறதா? என்பது தெரியவில்லை. பத்து மாதங்கள் கருவைச் சுமக்கும் கர்ப்பிணிகளுக்கு வெறும் 3 மாதங்களுக்கு மட்டுமே இந்த 2 ஆயிரம் ரூபா உணவு முத்திரை வழங்கப்படுகிறது. அதனைப் பெறுவதற்குக் கர்ப்பிணிகள் கிராம சேவகர், பிரதேச செயலர், குடும்ப நலத்தாதி, பிரிவு சுகாதார வைத்திய அதிகாரி எனப் பலரது கையொப்பங்களைப் பெறுவதற்கு ஒரு மாதம் வரை அலைந்து திரிய வேண்டும். அப்பாடா... முத்திரை கிடைத்து விட்டது என்று பெருமூச்சு விட்டு அங்கிருந்து பல நோக்குக் கூட்டுறவுக்குச் சங்கத்துக்குச் சென்றால், அங்கு முத்திரைக்குரிய பொருள்கள் இல்லை எனத் திருப்பி அனுப்பப்படுகின்றனர்.

இத்தனைக்கும் காலத் தாழ்த்தி வழங்கப்படும் இந்த முத்திரைக்குரிய உணவுப் பொருள்களைப் பெறுவதற்கிடையில் கர்ப்பிணிகள் கர்ப்ப காலத்தை தாண்டிக் குழந்தைப் பேற்றுக்கும் சென்றுவிடுவர். கர்ப்பிணிகளுக்கு 10 மாதங்களுக்கும் சேர்த்து 20,000 ரூபாபெறுமதியான உணவுப் பொருள்கள் மாதாந்தம் 2 ஆயிரம் வீதம் வழங்கப்படும் என அரசு அறவித்திருந்தது. ஆனால் வெறும் 3 மாதங்களுக்குரிய முத்திரையாக 6,000 ஆயிரம் ரூபா பெறுமதியான முத்திரைகளே வழங்கப்படுகின்றன. இது தொடர்பில் யாரிடம் நாம் கேட்பது?

அண்மையில் எனக்கு வழங்கப்பட்ட முத்திரையை உடுவில், மல்வம் பகுதியிலுள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்குக் கொண்டு சென்றபோது, அங்கிருந்த முகாமையாளரால் முத்திரைக்கு உரிய சில பொருள்கள் மட்டும் தரப்பட்டு மீதி சங்கத்தில் இல்லை. பிறிதொரு நாளில் வந்து வாங்குமாறு கூறப்பட்டது.

ஆனாலும் அன்று வழங்கப்பட்டிருந்த உணவுப் பெருள்கள் அனைத்தும் பழுதானவை. காலாவதியானவை. சத்துணவுக்காக வழங்கப்பட்ட முட்டைகள் 10 பழுதடைந்து மஞ்சள் கருவுக்குப் பதிலாகக் கறுப்புக்கருதான் இருந்தது. அந்தளவுக்கு முட்டை பழுதடைந்து விட்டது. முட்டையைச் சங்கத்தில் வைத்து உடைத்தா பார்க்க முடியும்; என்ன செய்ய? அனைத்தையும் இறுதியில் மண்ணுக்குள் வெட்டிப்புதைக்கத்தான் முடிந்தது.

இவ்வாறு கர்ப்பிணிகளுக்கு வழங்கப்படும் உணவுகளே பழுதடைந்திருந்தால், அவர்களின் சுகாதாரம், போசாக்கு, குழந்தையின் பாதுகாப்பு எங்கு செல்கிறது. அதிகாரிகள் இதனைக் கவனிப்பார்களா?

**பாதிக்கப்பட்ட கர்ப்பிணி**
**மானிப்பாய்.**


## குற்றம்குறை கூறாதிருப்போம்

ஒருவர் மீது ஒருவர் குற்றச்சாட்டுக்களை முன்வைப்பது மனிதகுலத்துக்கு பழக்கப்பட்ட செயற்பாடாக உள்ளது. அரசியல் வாதிகள், ஆன்மிகவாதிகள், ஆசிரியர்கள், மாணவர்கள், உழைப்பாளிகள், எனஅனைத்துத்தரப்பினரும்,வெள்ளைச்சேலையில் கருப்பு புள்ளிதேடும் பழக்கத்துக்குள்ளானவர்கள் தான். இன்பதுன்ப நிகழ்வுகளில், ஆடை துணிமணிகளில் விருந்துபசாரங்களில், ஆலய வழிபாடுகளிலும், சொட்டை நொட்டையும், குறையும் குற்றமும் கண்டுபிடிக்காமல் விடமாட்டார்கள். இவர்கள் கண்டுபிடிப்பு களில் பங்குத்தந்தையர்களும் தப்பிய தில்லை. தவக்காலத் தில் எம்மை நாம் கேட்க வேண் டிய பிரதானமான கேள்வி அடுத்தவர்களை குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாக்கலாமா? கேலி பேசலாமா? சபிக்கலாமா? தீர்ப்பிட லாமா?

உங்கள் கண்ணில் இருக்கும் மரக் கட் டையை பார்க்காமல் உங்கள் சகோதரர் அல்லது சகோதரியின் கண்ணில் இருக்கும் துரும்பை நீங்கள் கூர்ந்து கவனிப்பதேன் (மத்:–7:3–5) என்று வேதவசனம் கூறுகின்றது. எமக்குள் இருக்கின்ற குற்றம் குறைகளை எண்ணிப் பாராது அடுத்தவர்களை நிந்தனை செய்வது சரியாகுமா? தவக்காலத்தில் நாம் செய்யும் நற்காரியங்களில் ஒன்றாக இத்தீய செயலை விட்டு விடுவோம். தவக்காலத்தில் மட்டுமல்ல, நாம் இந்தப் புவியில் வாழும் காலம் வரை விட்டுவிடுவோம் ஆண்டவர் இயேசுவின்வார்த்தைகளைமனதில்வைத்துதவக்காலத்தின் வார்த்தைகளை மனதில் வைத்து தவக் காலத்தின் பயனை முழுமையாக பெற்றுக்கொள்வோம்




*ந.மரியநாயகம், கொழும்புத்துறை*



# தமிழர்கள் கையாலாகாதவர்களா?

வந்தியத்தேவர்

எவ்வளவு செய்தும் தமிழர்களின் இதயத்தை வெல்லமுடியவில்லையே என்று குமுறிக் கொண்டிருக்கிறார் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச. சட்டி சுட்டதடா கை விட்டதடா என்ற நிலையில் தமிழர்கள் தன்னைக் கைவிட்டு விட்டதாக இன்று புலம்பும் அவர், தான் தமிழர்களை விரட்டியடித்ததை மறந்து விட்டார். கடந்த பத்து வருட ஆட்சியில் அவர் தன்னை ஒரு ஜனநாயக அரசியல் தலைவராக முன்னெடுக்க விரும்பாதது அவர் விட்ட பெரிய தவறு. அவர் அரசுக் கட்டில் ஏறத் தமிழர்களே அதாவது விடுதலைப்புலிகளே காரண கர்த்தாக்களாக இருந்தார்கள் என்ற உண்மையைப் புறந்தள்ளி, சிங்கள இனவாதிகளின் ஆதரவே தன்னை இலங்கையின் தலைமைப் பதவியில் இருத்தியது என்ற கருத்துடன், அவர்களுக்கு உரமூட்டி வளர்ப்பதே தனது எதிர்காலச் சர்வாதிகாரக் கனவுக்கு உகந்தது எனக்கொண்டு இன்றும்கூட இனவாதத் தீயை வளர்க்கும் ஒரு மந்திரவாதியாகவே செயற்பட்டுக் கொண்டிருக்கிறார் மகிந்த. தமிழர்களின் இதயத்தை வெல்ல முடியாமல் போனோமே என்று வருந்திக் கொண்டிருப்பது முடவன் கொம்புத்தேன் எடுக்க முடியாது போனதே என்று கவலைப்படுவது போன்றதே.

பல்வேறு அபிவிருத்தித்திட்டங்களை முன்னெடுத்தபோதிலும், வடக்கு கிழக்கு மக்களின் இதயங்களை வென்றெடுக்க முடியாது போய்விட்டது என்கிறார். இதிலிருந்து ஓர் உண்மையை அவர் புரிந்து கொள்ளவேண்டும். அபிவிருத்தி என்ற மாயமானைக், காட்டி உரிமைக்காகப் போராடும் ஓர் இனத்தை விலைக்கு வாங்கி விட முடியாது என்பதுதான் அது.

### தமிழர்களுக்கு எதைச் செய்தார் மகிந்த?

தமிழ் மக்களுக்காக எவ்வளவோ செய்தேன் என்கிறார் மகிந்த. உண்மைதான், தமிழ் மக்களுக்கு எதிராக அவர்களை இல்லாதொழிப்பதற்காக அவர் செய்தது எவ்வளவோ காரியங்கள். தமிழர்களின் வரலாற்றில் மறுக்கமுடியாத, மறக்க முடியாதவைகள் அவை. படைகளின் உதவியுடனும் ஒட்டுக்குழுக்களின் அனுசரணையுடனும் மட்டுமன்றி இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளின் உதவியுடனும்கூடத்தமிழினத்தின் அழிவுக்கான செயற்பாடுகளை முன்னெடுத்தவர் அவர், முள்ளிவாய்க்காலுடன் தமிழர்களின் கதையையே முடித்து வைக்கக் கங்கணம் கட்டிக்கொண்டு களத்தில் இறங்கிய அவர் இந்தக் கொடுமைகள் மூலம் தமிழ் மக்களின் இதயங்களை வென்றுவிட முடியும் என்று நினைத்தது எவ்வளவு பெரிய முட்டாள்தனம்.

போரை முடிவுக்குக் கொண்டு வந்து வடக்கு கிழக்கு மக்களுக்கு சுதந்திரத்தை வழங்கினோம் என்கிறார். பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்களைப் போரில் கொன்றொழித்து, தொடர்ந்தும் அடக்குமுறைக்குள் அகப்பட்டு சீரழிய வைத்ததை அவர்களுக்கு வழங்கிய சுதந்திரம் என்கிறாரா? தமிழ் மக்களும் இந்த நாட்டுப் பிரசைகள். அவர்களும் சிங்கள மக்களைப் போன்று அனைத்து உரிமைகளையும் பெற்றவர்களாக இங்கு சுதந்திரமாக வாழும் உரிமையுடன் இருத்தல் நியாயமானதே என்பதைப் புரிந்துகொண்டு, நீதியின் வழியில் நடக்க விரும்பாத, முன்வராத பேரினவாதிகளின் தலைமகனாகத் தன்னை இணங்காட்டி வந்த மகிந்தவால் தமிழர்களின் இதயங்களை வெல்ல முடியாது போனமை ஒன்றும் ஆச்சரியத்துக்குரியதல்ல. வடபகுதியில் அபிவிருத்திகளை முன்னெடுத்ததாகக் கூறுகின்றார். வீதி விஸ்தரிப்பைத் தவிர பெரிதாக என்ன செய்துவிட்டார்? அதுகூட அவர் வந்து செல்லவும், படையினர் துரித பயணங்களை மேற்கொள்ளவும் எடுத்த நடவடிக்கைகளே தவிர வேறொன்றுமல்ல. தென் பகுதியில் இருந்து வந்த வர்த்தகர்களும் போதைவஸ்து வியாபாரிகளும் மட்டுமே இதில் லாபம் கண்டவர்கள். இவற்றால் தமிழர்கள் என்ன பெரிய நன்மையைக் கண்டுள்ளனர்.

தமிழ் இனத்துக்கு எதிராக, அவர்களை இல்லாதொழிக்கத் திட்டமிட்டுக் காய்களை நகர்த்திய அவர், இப்போது எவ்வளவோ செய்தும் தமிழர்களின் இதயத்தை வெல்லமுடியாமல் போனதே என்று வருந்துகிறார். தமிழர்கள் என்ன தங்களை அழிக்க முனைந்து நிற்கும் இனவாதிகளை இதயத்தில் இருத்தி வைத்துத் துதிபாடும் ஒரு கையாலாகாத இனமா?

> “படைகளின் உதவியுடனும் ஒட்டுக்குழுக்களின் அனுசரணையுடனும் மட்டுமன்றி, இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளின் உதவியுடனும் கூடத் தமிழினத்தின் அழிவுக்கான செயற்பாடுகளை முன்னெடுத்தவர் அவர்.”



சூரியகாந்தி





# வடக்கின் தங்கம்:

## நடுவில கொஞ்சம் பக்கத்தைக் காணோம்!

ஸூடோ ஸ்வாமி

தென்னிலங்கை பிரதேசத்தில் புதையல் தோண்டுவதற்கு முயற்சித்த பிரகிருதிகள் கைதாகுவது பற்றிய செய்திகளை அடிக்கடி காணக் கூடியதாக இருக்கிறது.

முன்னைய கால மன்னர்கள் புதைத்து வைத்த பொக்கிசங்களைச் செவிவழிக் கதைகள் மூலம் அறிந்துகொள்ளும் நபர்கள், விசேட பூசை வேண்டுதல்களுடன் அவற்றைத் தமதாக்குவதற்குக் காரியத்தில் இறங்கி விடுவதுண்டு. வவுனியாவில் புதையல் தோண்டுவதற்கு உடந்தையாகவிருந்த வவுனியா பொலிஸ் அத்தியட்சகர் ஒருவர் விளக்க மறியலுக்குள் வைக்கப்பட்ட செய்தி சற்று முக்கியமானது. புதையல் தோண்டி வெற்றியளித்ததைப் பற்றி செய்தி வருகிறதோ இல்லையோ, புதையல் தோண்ட முயற்சி செய்து மாட்டிக்கொள்வோர் இருக்கத்தான் செய்கிறார்கள். கூடவே இத்தகைய கைங்கரியங்களில் சாவு கொடுப்புகளும் நடந்தேறுவதுண்டு. கடந்த ஆண்டு நவம்பர் மாதத்தில் யாழ். வடமராட்சி மணற்காட்டு பிரதேசத்தில் 600 கிலோ கிராம் தங்கப் புதையல் இருப்பதாகக் கூறி புதையல் தோண்ட புறப்பட்டவர்கள் கைதானதும் பின்னர் நீதிமன்ற உத்தரவின் பேரில் புதையல் தோண்டும் விவகாரம் முன்னெடுக் கப்பட்டதும் நமக்கு அருகே நடந்தேறி முடிந்த ஒன்று. ஆனால், எந்தப் புதையலும் கிடைக்கவில்லை என்பது அபத்தம்.



## நாடாளுமன்றிலும் தங்கம்

கடந்த புதன்கிழமை இடம் பெற்ற நாடாளுமன்ற அமர்விலும் தங்கப் புதையல் பற்றிய விவகாரம் சூடு பிடித்திருந்தது. அது மேற்சொன்ன புதையல்களுடன் சில பல ஒற்றுமைகளையும் வேற்றுமைகளையும் கொண்டிருக்கிறது. அந்தத் தங்கப் புதையல் எங்கிருந்து வந்ததெனில் இறுதிப் போரின்போது இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்டதான வடக்கு மக்களிடமிருந்துதான். அந்த மக்களின் சேமிப்பே அது. கடந்த புதன்கிழமை நாடாளுமன்றம் கூடியபோது பிரதமரிடம் கேள்வி கேட்கும் நேரத்தில் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவுமான அனுர குமார திசாநாயக்காவும் அதே கட்சியின் நளிந்த ஜயதிஸ்ஸ நாடாளுமன்ற உறுப்பினரும் கேள்வி எழுப்பியதை அடுத்து தங்கப் புதையல் சம்பந்தமான தரவுகள் கிண்டி கிளறப்பட்டுள்ளன.

மேற்படி இருவரின் கேள்விகளுக்குப் பதிலளித்து உரை நிகழ்த்திய பிரதமர், இறுதிப் போர்க் காலத்தில் கைப்பற்றப்பட்ட தங்கம் பற்றிய தரவுகளை வெளிக்கொணர்ந்தார். இராணுவத்தினர் வளையல்கள், கைச் சங்கிலிகள், கழுத்துமாலைகள், தோடுகள் மற்றும் ஏனைய வகைகள் உள்ளடங்கலாக 150 கிலோகிராம் தங்க ஆபரணங்களை கைப்பற்றியிருந்தனர். இதில் சுமார் 31 கிலோ கிராம் எடையுள்ள ரூபா. 131,084,751 பெறுமதியான தங்கம் மத்திய வங்கியிடம் கையளிக்கப்பட்டிருந்தது. மேற்படி ஆபரணங்கள், இலங்கை இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையினரால் மதிப்பீடு செய்யப்பட்டு 2010 செப்ரெம்பர் மாதத்துக்கும் 2012 ஜனவரி மாதத்துக்கும் இடையில் 28 தடவைகளில் மத்தியவங்கியிடம் கையளிக்கப்பட்டது.

## உரியவர்களிடம் கையளிக்கப்பட்டது

மகிந்த ராஜபக்ச ஜனாதிபதியாக விளங்கிய காலப்பகுதியில் மக்களிடமிருந்து மீட்கப்பட்ட தங்கத்தில் ஒரு தொகுதி பெரு விமரிசையாக மக்களிடம் மீளக்கையளிக்கப்பட்டது. இதன் முதல் நிகழ்வு கிளிநொச்சியில் நடைபெற்றிருந்தது. 2014ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் நடைபெற்ற நிகழ்வில் 25 பேருக்கு முதலிலும் பின்னர் அதே ஆண்டில் ஜனாதிபதி தேர்தலுக்குச் சற்று முன்னதாக நவம்பர் மாதத்தில் நகை உரிமையாளர்களாக அடையாளம் காணப்பட்ட வட பிரதேச மக்களை அலரிமாளிகைக்கு வரவழைத்தும் நகைகள் திருப்பி வழங்கப்பட்டன. இவ்வாறு மொத்தமாக 2,377 சட்டபூர்வ உரித்தாளர்களுக்கு இராணுவத்தினரால் தங்கப் பொருள்கள் மீளக்கையளிக்கப்பட்டன.

## முரண்படும் தரவுகள்


மக்களிடம் மீளக் கையளிக்கப்பட்ட தங்கம் மற்றும் ஆபரணங்கள் தொடர்பில் பாதுகாப்பு அமைச்சின் தரவுகளுக்கும் இராணுவத்தினரின் தரவுகளுக்குமிடையில் முரண்பாடு நிலவுவதாக பிரதமர் அறிவித்திருக்கிறார்.

## எங்கேயோ இடிக்கிறது!

இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்ட மொத்த நகை மற்றும் ஆபரணப் பொருள்களின் நிறை 150 கிலோ கிராம். அதில் 80 கிலோ கிராம் இராணுவத்தினரால் உரியவர்களுக்கு கையளிக்கப்பட்டிருக் கிறது. ஏறக்குறைய 30 கிலோ கிராம் மத்திய வங்கியிடம் கையளிக்கப்பட்டிருக்கிறது. அப்படி எனில் மிகுதி 40 கிலோ கிராம் தங்கத்துக்கு நடந்த கதி தொடர்பில் தெளிவுபடுத்துமாறு அனுரகுமார திசாநாயக்கா கோரிக்கை விடுத்திருக்கிறார். வடக்கு மக்களுக்குச் சொந்தமான தங்கம், போர் நிறைவடைந்து 6 வருடங்களாகியும் மீளக்கையளிக்கப்படாதமை அநீதி என்று சுட்டிக்காட்டிய எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடா, குறித்த தங்க ஆபரணங்களைத் திருப்பி ஒப்படைப்பதற்கு அரசு விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

## உரிமையாளர்களை இனங்காண்பதில் சிக்கல்

தங்க ஆபரணங்களுக்கான சட்டபூர்வ உரிமையாளரை கண்டறிவதில் உள்ள சிக்கல்களைத் தவிர்ப்பதற்கு தமிழீழ வைப்பகத்தினரால் வழங்கப்பட்ட சான்றுகளை ஏற்றுக்கொள்வது தொடர்பிலும் ஆராயப்பட்டது. எனினும் போரின் இறுதிக் கட்டத்தில் உயிரை மட்டுமே கையில் பிடித்துக்கொண்டு ஓடிய அந்த மக்களிடம் இத்தகைய சான்றுகளை எதிர்பார்ப்பது நிச்சயமற்ற தன்மையைக் கொண்டிருக்கிறது. நாடாளுமன்ற குழுவொன்றை நிறுவி தங்க ஆபரணங்களை மீளக் கையளிக்கவும் கணக்கில் வராத தங்கம் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளவும் பிரதமர் உறுதியளித்திருக்கிறார். வடக்கில் மீட்ட தங்க ஆபரணங்களை அரசுக்கு கிடைத்த புதையலாக கொண்டு அரச கஜானாவை நிரப்புவதைத் தவிர்த்து முடிந்த அளவில் உரிமையாளர்களிடம் விரைந்து ஒப்படைக்கப்படவேண்டும் என்பது நல்லாட்சி-அரசிடமிருந்து தமிழர்களின் எதிர்பார்ப்பு.



மக்களிடம் மீளக் கையளிக்கப்பட்ட தங்கம் மற்றும் ஆபரணங்கள் தொடர்பில் பாதுகாப்பு அமைச்சின் தரவுகளுக்கும் இராணு வத்தினரின் தரவுகளுக்குமிடையில் முரண பாடு நிலவுவதாக பிரதமர் அறிவித்திருக்கிறார். எங்கேயோ இடிக்கிறது!

# மறக்கமுடியுமா மக்களால்! மனதை வெல்ல முடியுமா மகிந்தவால்?



அலெக்ஸ் பரந்தாமன்

**அழுகிற பிள்ளைக்கு நிலாக்காட்டி சோறு ஊட்டிவிடுவது போன்று அவலப்பட்டு நிற்கும் தமிழ் மக்களுக்கு அற்பசொற்ப சலுகைகளை வழங்குவதன் மூலம் அவர்களின் மனங்களை வென்றெடுக்க முடியாது.**

“பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்த போதிலும் என்னால் வடக்குக் கிழக்கு மக்களின் மனங்க ளை வெல்ல முடியவில்லை” இவ்வாறு கவலைப்படுவது போன்ற தோரணையோடு தனது கவலையை வெளியிட்டுள்ளார் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது மைத்திரிபால சிறிசேனவுடன் போட்டியிட்டுத் தோல்வியைத் தழுவிக் கொண்ட பின், அம்பாந்தோட்டையில் உள்ள தனது வீட்டை நோக்கிச் சென்றவர், தனக்காக அங்கு காத்திருந்த தன் ஆதரவாளர்கள் மற்றும் விசுவாசிகள் முன்பாகக் கூறிய வார்த்தைகள் “தமிழ் மக்கள் என்னைத் தோற்கடித்துவிட்டார்கள்” என்பதாகும்.

மேற்கூறப்பட்ட வார்த்தைகளானது தேர்தல் தோல்வியினால் ஏற்பட்ட அவரது உச்ச விரக்தியின் வெளிப்பாடாகக் கொள்ளலாம். அதேசமயம் அன்று தேர்தலில் தோற்றுப் போனதற்கு தமிழ்மக்கள்தான் காரணமென்பதை, அவர்களின் மனங்களை வெல்ல முடியாமல் போனதே என்பதை ஒத்துக் கொள்கிறார் என்றும் கொள்ளலாம்.

இனிவரும் காலங்களில் தமிழ் மக் களின் மனங்களை வெல்வது என்பது மகிந்த ராஜபக்சவால் முடியக் கூடிய விடயமா?

தவிர, தமிழ் மக்களை வெல்லக் கூடியதான ஆற்றல், ஆளுமை என்பன தென்னிலங்கையில் உள்ள எந்தச் சிங்கள அரசியல்வாதியிடம் உள்ளது?

விடுதலைப்புலிகளை அழிக்கும் போர்வையில் வன்னிப் பெருநிலப் பரப்பின் மீது தொடுக்கப்பட்ட போரின் நிமித்தம் ஏற்பட்ட விளைவுகளை மகிந்த மறந்திருக்கலாம், ஆனால் தமிழ் மக்கள்?

இனவாத நோக்குடன் தனது படை களின் கனரக ஆயுதங்கள் மூலம் ஈவிரக்கமின்றிப்படுகொலை செய்த கைங்கரியத்தைத் தமிழ் மக்களால் எப்படி மறக்க முடியும்?

போரின் இறுதிக்கட்டத்தில் முள்ளிவாய்க்காலில் சரணடைந்த அல்லது பிடிக்கப்பட்ட பெண் போராளிகளைத் தனது படையினர் மூலம் அம்மணப்படுத்தி... அவமானப்படுத்திய நிகழ்வுகளைச் சனல் 4 காணொலியில் இந்த உலகம் பார்த்துத் தலைகுனிந்ததை மகிந்த மறந்திருக்கலாம். ஆனால் தமிழ் மக்கள்...?

மறக்கமுடியாத; இன்னமும் மன்னிக்க முடியாத காரியங்களைத் தனது கட்டளைகள் மூலம் நடப்பித்து விட்டு, இன்று தமிழ் மக்களின் பிரதேசத்தில் நின்று கொண்டு, தமிழ்மக்களின் முன்பாகத் தமிழ் மக்களின் மனங்களை வெல்ல முடியவில்லை... எனக் கூறும் மகிந்த ராஜபக்சவின் அரசியல் தனத்துக்கு வேறு என்னதான் வரைவிலக்கணம் உரைக்க முடியும்?

போர்மூலம் தமிழ்மக்கள் மீதான படுகொலைகளைப் புரிந்தவர் உயிர் எஞ்சியவர்களின் மிகுதி வாழ்வாதாரத்தையும் சிதைத்து விட்டு, வீதிகளுக்குக் காப்பெற் அமைத்ததன் மூலமும், வானுயர கட்டடங்களை நிறுவி, வணிக நோக்கத்துக்காக இதனைத் திறந்து விட்டதன் மூலமும், தென்பகுதி மக்களை உல்லாசப் பயணிகளாக வடபகுதிக்கு அனுப்பி, ஊர்சுற்றிப்பார்க்க விட்டதன் மூலமும் தமிழர் மனங்களை வென்றெடுக்க முடியுமா?

மக்களின் மனங்களை வெல்வதற்கு மனம் என்ன ஓட்டப்போட்டி வைத்து நடத்துகின்ற பந்தயத்திடலா?

இப்படிப் பலதரப்பட்ட கேள்விகளுக்கு விடைதேடும் படலத்தைக் கிளப்பிவிட்டிருக்கின்றன மகிந்த கூறிய வார்த்தைகள்.

அத்தோடு, மகிந்த எந்த இடத்தில் நின்று இந்த வார்த்தைகளைக் கூறியிருக்கின்றார் என்பதையும் கவனத்தில் கொள்ளல் வேண்டும்.

இலங்கையின் மலை நாட்டுப்பகுதியில் உள்ள தமிழ் மக்கள் பரந்து வாழும் வட்டவளை ரொசல்ல கிளிஸ்ன் எனும் தோட்டத்தில் ஸ்ரீ கணேசர் ஆலயத்துக்கான அடிக்கல் நடும் விழாவில் கலந்து கொண்டபோதே இவ்வாறு கூறியிருக்கின்றார்.

தமிழர்கள் மத்தியில் இப்படிக் கூறுவதன் மூலம் ஓர் அனுதாபத்தைத் தேடிக் கொள்ள முடியும் என்ற எண்ணப்பாட்டுடன் அவர் பேசி இருந்தாலும், அதே வார்த்தையைத் தனது சொந்த ஊரான அம்பாந்தோட்டையிலோ அன்றி பௌத்த சிங்கள மக்கள் செறிந்து வாழும் அனுராதபுரத்திலோ கூறியிருப்பாராயின், அங்குள்ள மக்கள் இவரை ஒரு மாதிரியாகத்தான் பார்த்து ஒதுங்கியிருப்பார்கள்.

உண்மையில் முன்னாள் மகிந்த ராஜபக்ச தமிழ் மக்களின் மனங்களை வென்றுதான் நிற்கின்றாரா?

எப்படி இவரால் வெல்ல முடியும்! கடந்து போன காலங்களை மகிந்த மறந்திருக்கலாம். தமிழ் மக்களால் மறக்க முடியுமா...?

மகிந்த மட்டுமல்ல, மைத்திரிபால சிறிசேனவோடு இனி வரும் நாள்களில் இலங்கையை ஆளப்போகும் அரசியல்வாதிகளாலும் தமிழ் மக்களின் மனங்களை வெல்வது என்பது முடியாத காரியம்.

அழுகிற பிள்ளைக்கு நிலாக்காட்டி சோறு ஊட்டிவிடுவது போன்று அவலப்பட்டு நிற்கும் தமிழ் மக்களுக்கு அற்பசொற்ப சலுகைகளை வழங்குவதன் மூலம் அவர்களின் மனங்களை வென்றெடுக்க முடியாது.

அப்படி அவர்களின் மனதை வென்று, அவர்கள் மனதில் இடம் பிடிக்க வேண்டும்... என்ற எண்ணம் முன்னைய பின்னைய அரசியல்வாதிகளிடம் இருந்திருக்குமானால், போர் முடிவுற்று ஏழு வருடங்கள் நிறைவுறும் இந்த வேளைக்குள், அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட்டிருக்கவேண்டும், வலி.வடக்கு மக்களை அவர்களது சொந்த இடத்தில் மீளக் குடியமர்த்தியிருக்கவேண்டும். பலாலி விமானத் தளத்துக்கான காணிச் சுவீகரிப்பை நிறுத்தி மயிலிட்டி மற்றும் தையிட்டி வாழ் கடற்றொழிலாளர்களை அவர்களது பரம்பரைக் கடலில் மீன்பிடிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்க வேண்டும். குடாநாட்டில் அன்றாடம் நிகழ்ந்து கொண்டிருக்கும் சமூக விரோத, கலாசார சீரழிவுகளைச் சட்டத்தின் காவலர்கள் எனக் கூறப்படும் பொலிஸ் மூலம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருக்க வேண்டும் .

மக்களின் மனங்களை வெல்வதற்கு மேற்கூறப்பட்ட விடயங்களில் இங்கே ஏதாவது ஒன்று உருப்படியாக, உறுதியான உண்மைத் தன்மையுடன் நடத்தி முடிக்கப்பட்டிருக்கிறதா?

மக்களிடம் வாக்குப்பிச்சை வாங்குவதற்காக பௌத்த சிங்களப் பேரினவாதக் கருத்துக்களைத் தூவும் இனவாதிகள் இருக்கும்வரை இங்கே தமிழர் மனங்களை மட்டுமல்ல, எந்தவொரு சிறுபான்மை இனங்களின் மனங்களை வெல்வது என்பது சாத்தியமில்லை.

பௌத்த சிங்களப் பேரினவாத அரசியல்வாதிகள் பரம்பரைக்குச் சுமந்து கொண்டு திரியும் பழிபாவ மூடைகள் கொஞ்சம் நஞ்சமல்ல. இந்தப் பழிபாவங்களை நீக்குவதற்கு எவ்வித பரிகாரத்தில் ஈடுபட்டாலும் அவ்வ நீங்கப் போவதில்லை.

தமிழர் மனங்களை வெல் வதற்கு மகிந்தவைப்போன்ற இனவாத அரசி யல் சக்திகளுக்கு முதலில் மனமாற்றம் தேவை. அந்த மனமாற்றத்தைக் கொண்டு வருவது யார் என்பதுதான் இப்போதையகேள்வி. சிந்திக்கத் தலைப்படும் சிங்கள மக்கள் தான் இதற்கான பதிலைக் கூறவேண்டும்.

# சமநிலையற்ற சனத் தொகை

## உலக நாடுகளில் இது பெரும் பிரச்சினை



> உலக மக்கள் தொகையில் நான்கில் ஒரு பகுதியினரின் வயது 10 முதல் 24 வரை. வளர்ந்துவரும் நாடுகளில் பெரும் பகுதியினர் இளைஞர்கள் என்று ஐக்கிய நாடுகளின் மக்கள் எண்ணிக்கை நிதி அமைப்பு தெரிவித்திருக்கிறது. இளைஞர்களின் எண்ணிக்கை அதிகரிப்பால் வேறு எந்த நாட்டையும்விட அதிக அளவில் பாதிக்கப்பட்டிருக்கும் நாடு இந்தியாதான் என்கிறது அந்தப் புள்ளிவிவரம்.

சோமினி சென்குப்தா

மக்கள் தொகை விடயத்தில் உலக வரலாற்றில் இது வரை பதிவாகாத வகையில் சமமற்ற ஒரு சூழல் தற்போது நிலவுகிறது. பணக்கார நாடுகளில் வயது முதிர்ந்தவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும் நிலையில், பொருளாதார அடிப்படையில் பின்தங்கிய நாடுகளில் இளம் வயதினர் அதிகமாக இருக்கிறார்கள்.

வயது முதிர்ந்த சமூகத்தின் சவால்கள் குறித்து நிறையப் பேசப்பட்டு விட்டன. ஆனால், இளைஞர்களின் எண்ணிக்கை என்பது உலகப் பொருளாதாரத்தில் அழுத்தம் தருவதுடன், அரசியல் ரீதியான பிரச்சினைகளை அதிகரிப்பதாகவும், பெரிய அளவிலான குடியேற்றங்களுக்கு வழி வகுப்பதாகவும், திருமணம் முதல் இணையப் பயன்பாடு வரையிலான பல்வேறு விடயங்களில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்துவதாகவும் இருக்கிறது. நமது காலத்தின் மிக முக்கியமான நீதிக் கதையாக இது அமைந்துவிடலாம்: இளைஞர்கள் விடயத்தில் கவனம் செலுத்துங்கள்; இல்லையெனில், உங்கள் வயோதிப காலத்தில் அவர்கள் தொந்தரவு தருவார்கள்.

### இலங்கையும் இளைஞர்களும்

உலக மக்கள் தொகையில் நான்கில் ஒரு பகுதியினரின் வயது 10 முதல் 24 வரை. வளர்ந்துவரும் நாடுகளில் பெரும் பகுதியினர் இளைஞர்கள் என்று ஐக்கிய நாடுகளின் மக்கள் எண்ணிக்கை நிதி அமைப்பு தெரிவித்திருக்கிறது. இளைஞர்களின் எண்ணிக்கை அதிகரிப்பால் வேறு எந்த நாட்டையும்விட அதிக அளவில் பாதிக்கப்பட்டிருக்கும் நாடு இந்தியாதான் என்கிறது அந்தப் புள்ளிவிவரம். ஒவ்வொரு மாதமும், அங்கு லட்சக்கணக்கானோர் 18 வயதை எட்டுகிறார்கள். வேலை தேடுவது, வாக்காளராகத் தன்னைப் பதிவுசெய்து கொள்வது என்று முக்கியமான பல விடயங்கள் நிகழ்வது இந்த வயதில் தான். 15 முதல் 34 வயது வரையிலான இந்தியர்களின் எண்ணிக்கை, 42.2 கோடி. இதே வயதுள்ள அமெரிக்கா, கனடா, பிரிட்டன் ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்களின் கூட்டுத் தொகைக்கு ஏறத்தாழ சமமான எண்ணிக்கை இது.

இன்றைக்கு உலக அளவில், இதற்கு முந்தைய எந்தத் தலைமுறையையும்விட உலகத்துடனான தொடர்பில் அதிக ஆர்வத்தை இந்தத் தலைமுறையினர் காட்டுகிறார்கள். லட்சக்கணக்கான இளைஞர்கள் கிராமப் புறங்களிலிருந்து நகரங்களுக்கும், நகரங்களிலிருந்து வெளிநாடுகளுக்கும் செல்ல விரும்புகிறார்கள். அங்கு அவர்களின் வரவு விரும்பப்படுவதில்லை என்பது கவனிக்கத் தக்க விடயம்.

### அதிக எண்ணிக்கையும் ஆபத்தும்

சில வாரங்களுக்கு முன்பு வட இந்தியாவின் வளமான மாநிலமான ஹரியானாவில் குறிப்பிட்ட சாதியினர் நடத்திய போராட்டங்கள் அந்த மாநிலத்தையே ஸ்தம்பிக்க வைத்தன. நிலச் சுவான்தார்கள் நிறைந்த அந்த சாதியைச்சேர்ந்தவர்களின் வாரிசுகள் விவசாயத்தைத் தொடர விரும்பவில்லை; தங்கள் பெற்றோர் சொல்லும் வேலைகளிலும் சேர விரும்பவில்லை. எனவே, அரசுப் பணிகளில் சாதி அடிப்படையிலான இடஒதுக்கீடு கேட்டு அந்த சமூகத்தினர் வீதிகளில் இறங்கிப் போராடினர்.

உலக அளவில் இளம் ஊழியர்கள் பாதுகாப்பற்ற சூழலில் இருக்கிறார்கள். ஐந்து இளைஞர்களில் இருவர் வேலையில் இல்லை அல்லது வறுமையிலிருந்து விடுபட வழிவகுக்காத, மிகக் குறைந்த சம்பளம் கொண்ட வேலைகளில் இருக்கிறார்கள் என்கிறது சர்வதேசத் தொழிலாளர் அமைப்புவெளியிட்டிருக்கும் அறிக்கை. வளரும் நாடுகளில் பல இளைஞர்கள் நிரந்தரமற்ற வேலைகளில் இருக்கிறார்கள். குறைவான சம்பளத்துடன், சட்ட ரீதியான பாதுகாப்பற்ற நிலையில் இருக்கிறார்கள். பெண்களின் நிலை இன்னும் மோசம்.

ஐரோப்பா முழுவதும், வேலைவாய்ப்பின்மை 25%ஆக இருக்கிறது. இதற்கு அந்த நாடுகளின் பொருளாதாரத் தேக்க நிலை மட்டும் காரணமல்ல. இருக்கும் வேலைகளில் சேர்வதற்குத் தகுதியில்லாத இளைஞர்களின் எண்ணிக்கை அங்கு அதிகம். அகதிகளின் வருகைக்கு எதிரான மனப்பான்மை ஐரோப்பா முழுவதும் பரவியிருப்பதற்கான காரணத்தை இது விளக்கும்.

### சில நன்மைகள்

உலக மக்கள்தொகை தொடர்பான சில தரவுகளைப் பார்க்கும்போது, நாம் சரியான திசையில் செல்கிறோம் என்ற எண்ணமும் வருகிறது. நமது குழந்தைகளின் இறப்பு விகிதம் குறைந்திருக்கிறது. நமது தாத்தா, பாட்டிகள் அதிக ஆண்டுகள் உயிர் வாழ்கிறார்கள். பெண்கள் குறைந்த எண்ணிக்கையிலான குழந்தைகளைப் பெற்றுக்கொள்கிறார்கள். வளரும் நாடுகளில் தொடக்கப் பள்ளிகளில் சேரும் குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது.

எனினும், இவற்றின் பயன் ஒரேமாதிரியானதாக இல்லை. பிரதம் எனப்படும் தொண்டு நிறுவனம் சமீபத்தில் நடத்திய ஆய்வின்படி, இந்தியாவின் பள்ளிகளில் 5ஆம் வகுப்பு படிக்கும் குழந்தைகளில் பாதிப் பேரால், 2ஆம் வகுப்புப் பாடப் புத்தகங்களைக்கூடப் படிக்க முடியவில்லை. பல குழந்தைகளுக்குக் கழித்தல் கணக்கு தெரியவில்லை. அவர்கள் பள்ளிகளில் இருக்கிறார்கள். ஆனால், அதிகம் கற்றுக்கொள்வதில்லை.

### சமநிலையின் அவசியம்

உலகளாவிய வயதில் இருக்கும் வேறுபாடு, அகதிகள் குடியேற்றம் காரணமாக மக்கள்தொகை அடிப்படையில் பிரச்சினையை ஏற்படுத்தும் என்கிறார் பிரஸ்ஸல்ஸின் எர்ஸ்டெ குழும வங்கியின் ஆய்வு மற்றும் வளர்ச்சித் துறைத் தலைவர் ரெய்னர் முன்ஸ். வயதானவர்கள் அதிகமாகவும் தொழிலாளர் சக்தி குறைவாகவும் இருக்கும் சமூகத்துக்கும், இளைஞர்கள் அதிக அளவில் இருக்கும் சமூகங்களுக்கும் இடையிலான சமநிலை சரியான முறையில் கையாளப்பட்டால் அது பயன்தரும் என்று அவர் கூறியிருக்கிறார்.

எனினும், ஐரோப்பிய அரசியல் தலைவர்கள் பலர் இதற்கு நேர்மாறான நிலைப்பாட்டில் இருக்கிறார்கள். அகதிகளுக்குக் கிடைக்கும் நிதியாதாரங்கள் அவர்களின் சொந்த நாடுகளுக்கு அனுப்பிவைக்கப்படுகின்றன என்று ஐரோப்பா கருதுவதால், ஐரோப்பாவுக்கு அகதிகள் வர வேண்டாம் என்று ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைவர் டொனால்ட் டஸ்க் கூறியிருக்கிறார். உண்மையில், ஏழை நாடுகள் வளம் பெற்று, அந்த நாடுகளின் இளைஞர்கள் நல்ல கல்வியறிவு பெற்றால், அவர்கள் வெளிநாடுகளுக்கு இடம்பெயரும் வாய்ப்பு அதிகரிக்கும்.

ஹரியானா மாநிலத்தில் 1,000 ஆண்களுக்கு 879 பெண்கள் என்ற விகிதத்திலேயே மக்கள்தொகை அமைந்திருக்கிறது. பெண் குழந்தைகள் தொடர்பான தவறான கருத்தே இதற்குக் காரணம். தொழில்நுட்பம் வளர்ந்துவரும் சூழலில், வருமானம் அதிகரித்துவரும் குடும்பங்களில், கருவிலிருப்பது ஆணா, பெண்ணா என்று சட்டவிரோதமாகக் கண்டறிந்து, பெண் சிசுவாக இருக்கும்பட்சத்தில் அதை அழித்துவிடும் சம்பவங்கள் நடக்கின்றன. இளைஞர்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதால், பிற மாநிலங்களிலிருந்து மணப் பெண்களை இறக்குமதி செய்ய வேண்டிய தேவை இருக்கிறது.

எனவே, சமகாலத்தின் நீதிக் கதை இப்படி இருக்கலாம்: உங்கள் மகள் களது விடயத்தில் அக்கறை காட்டுங்கள். இல்லையென்றால் உங்கள் எதிர் காலத்தில் பாதிப்பு ஏற்பட்டுவிடும்!

# ஆணுக்கு பெண்ணும் சமமானவளே.....!

கீர்த்தி



எவ்வாறான உரிமைகள் பெண்களுக்குக் கிடைத்தாலும் வன்முறைகள் தொடர்ந்த வண்ணமே உள்ளன. உலகத்தில் ஒவ்வொரு 2.5 நிமிடத்துக்கும் ஒரு பெண் உலகில் ஏதோ ஒரு மூலையில் பலாத்காரப்படுத்தப்படுகிறாள். இலங்கையில் ஒவ்வொரு 90 நிமிடத்துக்கு ஒருமுறை வன்முறைக்கு ஆளாகின்றாள் என்று ஆய்வுகள் குறிப்பிடுகின்றன.

உலக இயக்கத்தின் மையம், சக்தி பெண்களேயாவர். கோள்களின் இயக்கத்துக்கு எவ்வாறு சூரியன் முக்கியமோ; சூரியன் இன்றி எவ்வாறு இந்த அண்டசராசரமும் இயங்காதோ அவ்வாறே இந்த பூலோகத்தின் இயக்கத்துக்குப் பெண்களே முக்கியமானவர்களாவர். பெண்கள் இல்லாத ஓர் உலகத்தைக் கற்பனையே செய்து பார்க்க முடியாது. அவ்வாறு இருப்பின் இந்த உலகம் ஒரு ஜடமாகவே இருக்கும்.

சர்வதேச மகளிர் தினம். உலகம் முழுவதும் மகளிரால் கொண்டாடப்படும் நாள். இது பெண்களுக்கு சர்வதேச ரீதியாக அங்கீகாரம் வழங்கிய நாள். முதல் முறையாக அமெரிக்காவில் 1909 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதி அமெரிக்க சமவுடைமைக் கட்சியால் மேற்கொள்ளப்பட்டது. பின்னர் 1910 ஆம் ஆண்டு டென்மார்க் தலைநகர் கோபன்ஹேகனில் சர்வதேச மகளிர் மாநாடு நடைபெற்றது. இதையடுத்து 1975 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபை மார்ச் 08 ஐ சர்வதேச மகளிர் தினமாக அறிவித்தது. ஓகஸ்ட் 29 உலகப் பெண் சமத்துவ தினம். இது ஆணுக்குப் பெண் சமம் எனும் கோட்பாட்டின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது.

உலகத்தில் ஆணுக்குப் பெண்சமம். அனைத்து உரிமைகளும் பெண்களுக்கு வழங்கப்பட்டதாகக் கூறப்பட்டாலும் அது முழுமையாக வழங்கப்படவில்லை. ஆனால் ஈழத்தில் புலிகளின் ஆட்சி நிலவியபோது அனைத்து உரிமைகளும் ஆணுக்கு நிகராக பெண்ணுக்கும் வழங்கப்பட்டது. ஆணைவிட பெண்ணுக்கு ஆற்றல் குறைவு எனும் கருத்தை மாற்றி ஈழப்பெண்கள் களமுனையிலே சமராடி பெண்ணின் ஆற்றலை உலகுக்குப் பறைசாற்றினர்.

ஈழத்தில் எமது மண் ஆக்கிரமிக்கப்பட்டு இருந்ததையும் பெண்கள் கற்பழிக்கப்படுவதையும் பொறுக்காது களமாடப் புறப்பட்ட பல வீரப்பெண்களில் காவியமான முதல் பெண் 2ஆம் லெப் மாலதி. ஈழவிடுதலையோடு பெண்ணியத்தின் விடுதலைக்காகவும் ஆயுதம் தரித்து 1987 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 10 ஆம் திகதி நடுராத்திரியில் தமிழ்ப் பெண்களுக்கு அநீதி இழைத்த இந்திய இராணுவத்தை கோப்பாய் கிரேசர் வீதியில் இடைமறித்துத் தாக்கி அந்தப் போரில் இனத்தின் விதையானாள். தமிழ்ப் பெண்களின் வீரத்தையும் பெண்களால் எல்லாம் முடியும். ஆணுக்கு எந்த விதத்திலும் பெண்கள் சளைத்தவர்கள் அல்ல என்பதை நிரூபித்துக் காண்பித்தாள். பெண் விடுதலைக்காக பலர் குரல் கொடுத்தா லும் பாரதியே முக் கியமானவர். பாரதியின் கனவு நனவானது. பாரதி கண்ட புதுமைப் பெண்கள் உலகை ஆள்கின்றார்கள். மாதர்க்குண்டு சுதந்திரம் அன்றுநின் பெண் சுதந்திரத்துக்காகச் செயற்பட்டாள். ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால் அறிவிலோங்கி இவ் வையகம் தழைக்குமாம் என்று ஆண், பெண் சமத்துவத்தைக் கூறினார். நிமிர்ந்த நன்னடை யும் நேர்கொண்ட பார்வையும், நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும், நிமிர்ந்த ஞானச் செருக்கும் பெண் பெற்றிட பாரதி வேண்டினார். அவை அனைத்தையும் ஈழத்தில், தமிழ்ப் பெண்களில் காணலாம்.

உலக வாழ்க்கையின் நுட்பங்கள் தேறவும், ஓதுபற்பல நூல்வகை கற்கவும், இலகு சீருடை நாற்றிசை நாடுகள் யாவும் சென்று புதுமை கொணர்ந்திங்கே திலக வானுறுதலார் தங்கள் பாரத தேசம் ஓங்க உழைத்திடல் வேண்டுமாம்; விலகி வீட்டிலோர் பொந்தில் வளர்வதை வீரப் பெண்கள் விரைவில் ஒழிப்பராம் என்றார் பாரதி.

சாத்திரங்கள் பற்பல கற்பராம்; சவுகரியங்கள் பல பல செய்வராம்; மூத்த பொய்மைகள் யாவும் அழிப்பராம்; மூடக் கட்டுக்கள் யாவும் தகர்ப்பராம்; காத்து மானிடர் செய்கையனைத்தையும் கடவுளர்க்கினிதாகச் சமைப்பராம்; ஏந்தி ஆண் மக்கள் போற்றிட வாழ்வராம்; இளைய நங்கையின் எண்ணங்கள் கேட்டீரோ; போன்ற கவிதைகளிலிருந்து தற்போதைய நிலையை நோக்கின் பாரதியின் கனவுகள் நனவானது எனலாம். மேலும் பாரதி பட்டங்கள் ஆளவும் சட்டங்கள் செய்யவும், வேதங்கள் படைக்கவும் நீதிகள் செய்யவும், வற்புறுத்திப் பெண்ணைக் கட்டிக்கொடுக்கும் வழக்கத்தைத் தள்ளி மிதித்திடுவோம், காதலனொருவனைக் கைபிடித்து அவள் காரியம் யாவிலும் கைகொடுக்கவேண்டும் எனவும் விரும்பினார்.

இந்து மதமானது ஏனைய மதங்களைப் போலன்றி பெண்களுக்கு அனைத்து உரிமைகள், சுதந்திரங்கள், சமத்துவம் என்பவற்றைக் கொடுத்திருந்தாலும் ஆண்கள் அடக்கி ஆண்டார்கள் என்றே கூறவேண்டும். இன்னும் சொல்லப்போனால் ஆண்களைவிட பெண்களுக்கே மதிப்பளித்து உமையொருபாகனாக அர்த்தநாரீஸ்வரராக இருப்பதன் மூலம் ஆண், பெண் சமத்துவத்தை இந்துமதம் கூறியுள்ளது.

கற்புநெறியானது பெண்களுக்கு மட்டும் உரித்தானது போல் கூறப்படுகின்றது. கற்பு என்பது பெண்களுக்கு மட்டும் அன்றி ஆண்களுக்கும் தேவை. இதைப் பாரதி கற்பு நிலையென்று சொல்ல வந்தார். இரு கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம் என்றார். மணிமேகலையிலே கோவலன் மாதவியைத் தேடிச் செல்கின்றான். அவனுக்குக் கற்புநெறி தேவையில்லை. அவனுக்கு தீ மிதிக்கும் தேவையும் இல்லை, ஆனால் சீதைக்கு மட்டும் கற்புப் பரிசோதனை தேவையா? பெண்களைக் குறைகூறும் சமுதாயம், இருசாராருக்கும் கற்புநெறியை பொதுவாகக் கூறவேண்டும். பெண்கள் மட்டும் கண்ணகியாக, சீதையாக இருக்க வேண்டும், ஆண்கள் கோவலனாக இருக்கலாம் என்ற மனோநிலை மாறவேண்டும்.

பாரதி பெண்களுக்காகக் கோரிய அத்தனையும் தேவையானவையே. ஆனால் ஆண்களைப் போன்று பெண்கள் தாமும் எல்லாம் செய்தல் வேண்டும் என்று நினைப்பது நிச்சயம் உலக அழிவை ஏற்படுத்தும் விடயமாகும். உலகின் சக்தியாகிய பெண்கள் புகைத்தல், மது பாவனை, உள்ளடங்கலாக அனைத்துக் கேவலமான வேலைகளிலும் ஈடுபட்டு வருவதானது நாகரிகமாக மாறி எமது தமிழ்ப் பெண்களிலும் அது தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த நிலை ஏற்பட்டால் 2000, 2001, 2012, 2022 இல் உலகம் அழியும் எனக்கூறுவதால் அழியாத உலகம் நிச்சயம் அழியும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை. எவ்வாறான உரிமைகள் பெண்களுக்குக் கிடைத்தாலும் வன்முறைகள் தொடர்ந்த வண்ணமே உள்ளன. உலகத்தில் ஒவ்வொரு 2.5 நிமிடத்துக்கும் ஒரு பெண் உலகில் ஏதோ ஒரு மூலையில் பலாத்காரப்படுத்தப்படுகிறாள். இலங்கையில் ஒவ்வொரு 90 நிமிடத்துக்கு ஒருமுறை வன்முறைக்கு ஆளாகின்றாள் என்று ஆய்வுகள் குறிப்பிடுகின்றன.

ஆணுக்கு நிகரான அனைத்து உரிமை, சுதந்திரம், சமத்துவம் என்பவை பெண்களுக்குத் தேவை. எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே அவை நல்லவையாவதும் தீயவையாவதும் அன்னை வளர்ப்பினிலே என்ற கவியரசரின் வரிகள் தாயின் பொறுப்பை உணர்த்துகின்றது. ஒவ்வொரு பிள்ளையையும் நற்குணம் படைத்த நற்பிரசையாக வளர்த்துச் சமூகத்தில் விட தாயாலேயே முடியும். இந்த உலகத்தில் சிறுவர் துஷ்பிரயோகம் ஒவ்வொரு நொடியும் இடம்பெறுகின்றது. இலங்கையில் நாளொன்றுக்கு 3 சிறுவர்கள் துஷ்பிரயோகத்தக்கு உள்ளாகின்றனர். உலகில் 53 வீத மான சிறுவர்கள் ஏதாவது ஒரு துன்புறுத்தலுக்கு ஆளாவதுடன் இதில் சிறுமிகளைவிட சிறுவர்களே அதிகம் பாதிப்படைகின்றனர். 5-12 வயது வரையானவர்களே அதிகமான பாதிப்புக்கு உள்ளாகின்றனர். இதைப் பெண்கள் நன்குணர்ந்து பெண்களுடைய உரிமை, சுதந்திரம் என்பவற்றை எவ்வாறு, எவையெவற்றுக்காகப் பயன்படுத்தவேண்டும் என்று நன்றாக சிந்தித்துச் செயலாற்ற வேண்டும்.



# டிரைவர் மாப்பிள்ளை

■ மானிப்பாய் சுதன்

யாழ்ப்பாணம்–காரைநகர் வீதி வழமையான காலைப்பொழுதைத் தொடங்கியிருந்தது. பெரும்பாலான முக்கிய வீதிகள் திருத்தப்பட்டு சொகுசான வீதியாக மாற்றப்பட்டிருந்தபோதும் காரைநகரையும், யாழ்ப்பாணத்தையும் இணைக்கும் இந்த வீதி மட்டும் குண்டும் குழியுமாகவே இருக்கிறது. யார் தவறோ தெரியவில்லை? "அரசனை நம்பிப் புருசனையும் கைவிட்டது போல்" வலி. வடக்கு விடுவிப்பு, தமிழ்க் கைதிகள் என பலதை நம்பி இந்த காப்பெற் வீதி போடுபவர்களை கைவிட்டு விட்டோமோ என்று நினைக்கத் தோன்றுகிறது. அதிகரித்த வாகனப் பாவனையைத் தாங்கமுடியாது மானிப்பாய் வீதி நாளாந்தம் திணறித் திமிருகிறது. ஆனால் அதில் பயணிப்பவர்கள் பலருக்கு அது பற்றி அக்கறையில்லை. வீதி அபிவிருத்தி அதிகார சபையைத் திட்டுவதுடன் அவர்கள் சமாதானப்பட்டுக்கொள்கிறார்கள். தங்களது கடமைகளுக்காய் விரைகிறார்கள். சண்முகத்தாரும் அந்த வீதியில்தான் ஓட்டோ ஒன்றில் பயணித்துக்கொண்டிருந்தார். வழமையாகச் செல்லும் ரவியின் ஓட்டோ. ரவிக்கு சண்முகத்தாரின் குடும்ப நிலை நன்கு தெரியும். இப்போது எங்கு செல்கிறார் என்பதும் தெரியும். மூன்று பெண்களைப் பெற்ற சண்முகத்தார் நாட்டின் அசாதாரன சூழ்நிலைகளையும் தாண்டி தனது குடும்ப கஸ்டங்களையும் பாராது உழைத்த பணத்தை எல்லாம் செலவழித் துப் பெண்களைப் படிக்க வைத்த தன் பயனாக மூவரும் அரச உத்தியோகத்தில் இணைந்து கொண்டனர். பெண் உரிமையை பேச்சளவில் கொண்ட பலர் மத்தியில் ஒரு தகப்பனாய் சகல உரிமைகளையும் தனது பிள்ளைகளுக்கு கொடுத்து வளர்த்தார் சண்முகத்தார். மூத்தவளை சொந்தத்திலேயே கட்டிக் கொடுத்தார். அதிக சுமை இல்லை. அடுத்த பெண் அப்பாவின் சம்மதத்துடன் தான் விரும்பியவரைக் கைபிடித்தாள். கடைசியின் திருமணத்தை முடித்தால் தனது கடமைகளும் முடிந்துவிடும் என்ற நினைப்பில் திருமணப் பேச்சைத் தொடங்கினார் சண்முகத்தார். ஆனால் கடைக்குட்டியின் திருமணம் இழுபடத் தொடங்கியது. பெண்ணின் சாதகத் தில் சூரியனும், செவ்வாயும் சேர்ந்து உள்ளதால் அவ்வாறு இருக்கும் மாப்பிள்ளையின் சாதகம்தான் பொருந்தும் எனச் சாத்திரியார் அடித்துக்கூறிவிட்டார். பிறகென்ன, ஒரு சாதகத்தில் இருக்கும் பன்னிரண்டு பெட்டி களில் ஒரு பெட்டிக்குள் சூரியனும் செவ்வாயும் சேர்ந்திருக்கும் மாப்பிள்ளையை தேடத் தொடங்கிய சண்முகத்தார், மூன்றாவது வருடத்தில் இன்றும் ஓட்டோவில் மகளின் சாதகத்துடன் யாழ்ப்பாணப் புறோக்கரிடம்தான் போய்க்கொண்டிருக்கிறார்.

"தம்பி ரவி, என்னடா இவ்வளவு மெதுவாகப் போய்க் கொண்டிருக்கின்றாய்?" அவருக்குக் கலியாண அவசரம்.

"ரோட்டுக் கிடக்கிற கிடையில இப்படிப் போனாத்தான் சரி ஐயா! ஓட்டோக்கு இன்னும் லீசிங் கட்டி முடிக்கேல்ல. செலவு வந்தால் பிறகு கஸ்டம். லீசிங்காரன் வந்திடுவான் வீட்டுக்கு." கதைத்துக் கொண்டு வந்தவனின் காதைப் பின்னால் வந்து கொண்டிருந்த சிற்றூர்தியின் கோர்ன் சத்தம் பிளந்தது. அவசரத்துக்கு அம்புலன்ஸ்கூட இப்பிடிப் போகாது. ஓட்டோவை ஓரங்கட்டிக்கொண்டே, "தொடங்கிட்டாங்கள் சும்மா கலைபடத்" என்றான் ரவி. புழுதியைக் கிளறிய வண்ணம் முதல் மினி பஸ் அவர்களைக் கடந்தது. "இந்தாவிடு வாறன்" என்று அடுத்ததும் வேகமாக கலைபட்டு வந்ததை ஓட்டோ மிரரில் பார்த்த ரவி ஓட்டோவைப் பாதி வீதியிலேயே ஓட்டிக்கொண்டிருந்தான்.

"இவங்கள் திருந்தமாட்டாங்கள்" என்றார் சண்முகத்தார். "ஆரேன் செத்தால் அவங்களுக்கென்ன?" ஒத்துப்பாடினான் சசி.

மீண்டும் 'கோர்ன்' சத்தம் காதைக் கிழித்தது. சிவப்பு நிறத்தில் கடந்தது. மீண்டும் கண்ணை மறைக்கும் புழுதி.... "நாசமாப் போவாங்கள்" என்று மனதுக்குள் திட்டிக் கொண்டே முகத்தைச் சால்வை யால் மூடிக் கொண்டார் சண்முகத்தார்.

"ரெண்டு குறிப்பு வந்திருக்காம் எண்டு புரோக்கர் சொன்னார். பொருத்தம் பார்க்கச் சொல்லியிருக்கிறன். சரிவந்தால் உடனே முடிச்சிட வேணும். எனக்கு வயசாகிவிட்டது."

ரவியிடம் மனச் சுமையைப் பகிர்ந்துகொண்டார் சண்முகத்தார்.

"என்ன வேலையாம்?" ரவியின் கேள்வியில் விவரம் அறியும் ஆர்வம் தெரிந்தது. சண்முகத்தாரின் இளைய மகள் ரவியுடன்தான் படித்தவள். அதனால் சற்று அதிகப்படியான ஆர்வம். ரவியின் ஆர்வத்தின் உள்ளர்த்தம் சண்முகத்தாருக்குப் புரியாமலில்லை. ரவியின் குடும்பம் அவருக்கு நன்கு தெரிந்த குடும்பம்தான். ஆள் நல்லபிள்ளையும்கூட. "இவளின்ர சாதகத்துக்கு வரன் அமையிறதே கஸ்டம். பெடியன் குணமானவனாக, குடும்பம் நல்லதாக இருந்தால் முடிக்க வேண்டியதுதான். பட்டதாரியாக இல்லாட்டாலும் ஒரு நிரந்தர உத்தியோகம் இருந்தால் பரவாயில்லை " என்று அவன் உள்ளர்த்தத்தின் அடியிலேயே தீயை வைத்தார் சண்முகத்தார். "ஓம் ஐயா! அதுவும் சரிதான்" என்றான்.

"என்ர சாதகமும் உங்கட மகளின்ர சாதகம் போலத்தானாம். என்ன? எனக்கு செவ்வாய் தோசமாம். சாத்திரியார் சொன்னதென்று அம்மா சொன்னவா. நான்தான் இப்ப ஒன்றும் வேண்டாம் என்று சொல்லியிருக்கிறேன்." மெல்லச் சொல்லி வைத்தான்.

"ஏனடாப்பா? இந்த வயசில செய்யாம எப்ப செய்யப்போறாய்? காலாகாலத்தில செய்யவேண்டியதைச் செய்து போடவேணும்" என்று ஆலோசனையை இலவசமாக அவசரப்பட்டு இறக்கினார் சண்முகத்தார்.

"இப்பதான் இரண்டு மூன்று வேலைகளுக்குப் போட்டிருக்கிறேன். எப்படியும் ஒன்றாவது கிடைக்கும். வேலை கிடைச்ச பிறகு செய்வம்." சொல்லிக்கொண்டே அவன் ஓட்டோவின் வேகத்தைக் குறைத்தான். முன்னால் சனக்கூட்டமாக இருந்தது. "என்ன பிரச்சினை?" என்றபடி சண்முகத்தாரும் தலையை ஓட்டோவுக்கு வெளியே நீட்டினார்.

"ரேஸ் ஓடிக்கொண்டு வந்து அடிபட்டுட்டாங்கள்" என்று தன்பாட்டில் விளக்கம் கொடுத்தான் ரவி. "யாரைச் சாக்காட்டினாங்களோ" என்று பச்சாதாபப்பட்டார் சண்முகம். ஓட்டோவை மெல்ல ஓரமாக நிறுத்தி "என்ன நடந்ததாம்" என விசாரித்தான் ரவி.

"நாசமா போனவங்கள். போட்டிக்கு ஓடி, கரையால போய்கொண்டிருந்த மோட்டார் சைக்கிளை அடிச்சுத் தூக்கிப் போட்டாங்கள். பள்ளிக்கூடத்துக்கு பிள்ளையை ஏத்திக்கொண்டு போன மனுசன். ஒரே ரத்தம், பார்க்க உடம்பெல்லாம் நடுங்குது. பிள்ளையையும் தகப்பனையும் கடவுள்தான் காப்பாற்ற வேணும்." நடுத்தர வயதுக்காரர் ஒருவர் கோபத்தில் கொந்தளித்தார். ரவிக்கும் சண்முகத்தாருக்கும் தாங்கள் மயிரிழையில் தப்பியது போன்ற உணர்வு தாக்க, பக்கத்தில் இளைஞன் ஒருவன் . மற்றவர்களுக்கு கூறிக்கொண்டிருந்தான், "அடிச்சுப்போட்டு ஓடப்பார்த்தவங்கள். நல்ல காலம் சனம் மடக்கிப் போட்டுது. நல்ல அடி ஆக்களுக்கு." சண்முகத் தாரால் பொறுக்கமுடியவில்லை. "அவங்கள் பிழைவிட்டால் நாங்களும் பிழைவிடவேணுமே. பொலிசிட்ட ஒப்படைக்கிறதுதானே முறை. சட்டம்தான் தண்டனை கொடுக்க வேண்டும் நாங்கள் இல்லை." என்று பொங்கினார். "ஐயா சத்தம் போடாதையுங்கோ. பிறகு ஓட்டோவையும் அடிச்சு உடைச்சுப்போடுவாங்கள். பேசாம வாங்கோ. நாங்க மெதுவாகப் போவம்" என்றபடி ஓட்டோவை மீண்டும் இயக்கினார் ரவி.



(44 ஆம் பக்கம் பார்க்க)

தம்பி! நீ ஒரு பெரிய மனுசனாக வரப்போறாய். இந்தக் கைதான் உன்னை வாழவைக்கப் போகிறது. நீ பேனா எடுக்கப் புத்தகமாய் விளையப்போகுது. சனம் தேடிவரப்போகுது. கோடியாய்க் கொட்டப் போகுது. குடும்பம் சிறக்க ஒரு துணை வரப்போறாள். விஷ்ணுவாலயமான சிவந்த உனது கையால் சமுத்திரமாக வாழ்வாய் என்று ஆசி கூறியதன் பிரகாரம், புனைபெயர் மந்திரமானது.



# பூமிக்கு வாழ்வளித்த புண்ணியவான்

கே.எஸ்.சிவஞானராஜா

இலங்கை முழுவதுமாக அமைந்த பூமிசாஸ்திரப் பாடத்திட்டத்தில் அமரர் குணராசாவின், பூமி சாஸ்த்திர, புவியியல் புத்தகங்கள் அரசால் அங்கீகரிக்கப்பட்டு, ஆரம்ப வகுப்பிலிருந்து பல்கலைக்கழகம் வரை மாணவர்களும் ஆசிரியர்களும் கற்கக் கூடிய வகையில் ஏற்றுக் கொள்ளப்பட்டு, வெளியிடப் பட்டு, ஆவணப்படுத்தப்பட்டன. தெளிவான அச்சுருவில், இலகு தமிழில் யாவுமே வெளிவந்தன.

**வழிகாட்டி**

மாணவ சமுதாயத்தைப் பல தசாப்தங்களாகச் சரியான பாதையில் இட்டு, வழிநடத்திச் சென்ற, மிகச் சிறந்த கல்விமான் செங்கை ஆழியான் என்ற புனை பெயரைப் புகழாக்கிய குணராசா என்பவராவார். யான், தரம் ஆறிலிருந்து சாதாரண தரம், உயர்தரம், புகுமுகப் பரீட்சை வரை புவியியலை விருப்பத்தோடு 1972 ஆம் ஆண்டு வரை கற்பதற்கும், ஏனைய மாணவர்களை ஊக்கப்படுத்துவதற்கும் வழிகாட்டிய நூர்ல்கள் அனைத்தும் அமரர் குணராசாவின் நூல்களேயாகும்.

**சிறப்பு**

இவர் தமிழ், இலக்கியம், வரலாறு, சிறுகதை, நாவல், புவியியல், வானியல், அறிவியல், அழகியல், அரசியல், ஆன்மிகம், உலகியல், உளவியல், ஆங்கிலம் ஆகிய பரந்த கல்விப் பரப்புக்களில் மிகவும் பரீட்சயமானவர். ஆங்கிலத்திலும், சிங்களத்திலும், தமிழிலும் சமகாலத்தில் இவரது படைப்புக்கள் வெளிவந்தமை இலங்கையை உலக அரங்கில் வியக்க வைத்தது.

ஐம்பதுக்கும் மேற்பட்ட நாவல்கள், இருநூறுக்கும் மேற்பட்ட சிறுகதைகள், நூற்றுக் கணக்கான புவியியல் புத்தகங்கள், அச்சொட்டான வரலாற்று நூல்கள், ஆதாரமான ஆராய்ச்சிக் கட்டுரைகள், மொழிபெயர்ப்புக் கட்டுரைகள், ஊடக விமர்சனங்கள், பாரம்பரிய பண்பாட்டுக் கோலங்கள் என்று இது வரை எவருமே ஆற்ற முடியாத கின்னஸ் படைப்புக்களை இந்த உலகுக்கு ஈர்ந்துள்ளார். இதன் பேறாகப் பலதடவை தேசிய விருதுகள் கிடைத்துள்ளன. சாகித்திய மண்டலப் பரிசு இவருக்குப் பல தடவை நாவலுக்கும் சிறுகதைக்குமாக வழங்கப்பட்டமை இலங்கையில் முதல் வரலாறாகி விட்டது. இவரைப்போல் எழுத்துத்துறைக்குப் பணி புரிந்தவர் எவருமிலர். இவரது சொல்லாட்சி தனித்துவமானது.

**செங்கை ஆழியான்**

இவருடைய புனைபெயர் அமைந்த விதமும் அற்புதமானது. வண்ணார்பண்ணை சிவன் கோயிலில், பிரசங்க நிகழ்வைப் பார்க்கச் சென்றபோது பூசை நிகழ்வுகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. இவர் இறைவனை வணங்கிய பின்னர் திரும்பி வாசலடைந்தபோது, ஒரு முதியவர் எம்பெருமானின் தீர்த்தத்தை எடுத்துத் தருமாறு கேட்டுக் கொண்டார். எப்படித் தீர்த்த்தை எடுத்து வருவது என்று தெரியாமல், இவர் தவித்த பொழுது, முதியவரோ கையில் எடுத்து வரும்படி கூற, கோமுகியில் இருந்து கையிலே மிகவும் பத்திரமாகக் கொட்டாமல், சிந்தாமல் எடுத்து வந்து அந்த முதியவருக்குக் கொடுத்த போது, அதை வாங்கிப் பருகிய முதியவர், குணராசாவின் கையைப் பிடித்துக் கொஞ்சி, பிடித்தவாறு தம்பி! நீ ஒரு பெரிய மனுசனாக வரப்போறாய். இந்தக் கைதான் உன்னை வாழவைக்கப் போகிறது. நீ பேனா எடுக்கப் புத்தகமாய் விளையப்போகுது. சனம் தேடிவரப்போகுது. கோடியாய்க் கொட்டப் போகுது. குடும்பம் சிறக்க ஒரு துணை வரப்போறாள். விஷ்ணுவாலயமான சிவந்த உனது கையால் சமுத்திரமாக வாழ்வாய் என்று ஆசி கூறியதன் பிரகாரம், புனைபெயர் மந்திரமானது.

செங்கைசெம்மையான சிவந்தகை என்ற பொருள். ஆழியான்சமுத்திர வியாபகன் விஷ்ணு என்பது பொருள்.

ஆதலால், வண்ணார் பண்ணை சிவன் கோயிலிலே, இறைவனின் மகிமையாலே முதலாவது பட்டம், செங்கை ஆழியான் என்று பூமிக்குப் பேறாக்கப்பட்டது. இது எல்லாம் இறைவன் சித்தம்! ஆம் இந்துக்கல்லூரி வளர்த்தெடுத்த பிள்ளையாகக் கல்வியில் உயர்ந்து கொழும்பு, பேராதனை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகங்களில் உயர்பட்டங்களில் மிளிர்ந்து பட்டங்களுக்கும், பதவிகளுக்கும், கல்விக்கும், கதிரைக்கும் பெருமையளித்தார். கலாநிதிப் பட்டம் யாழ்ப்பாணத்தவர்களுக்கு மட்டுமல்ல இலங்கையர் ஒவ்வொருவருக்கும் பேறளித்தது. பலர் பட்டம் பெற்ற பின்னர் இது போதும் என்று ஒரு வட்டத்தை வரைந்து வட்டத்தைச் சுருக்கிச் சுருக்கிச் சின்ன வட்டமாக்கிக் குடும்ப வளத்தை நாகரிகமாக்கி விடுகிறார்கள். பிறகென்ன? வீட்டிலே கடைச் சாமான் முழுவதையும் கொண்டு வந்து புத்தகங்களைக் கறையான்களுக்குத் தானம் செய்கின்ற பரிதாப நிலையை இலங்கையில் காண்கின்றோம்.

ஆனால் செங்கை ஆழியானோ (கடைப்) புத்தகங்கள் அனைத்தையுமே வீட்டிலே பொக்கிஷமாக்கினார். ஆதலால் வீடு ஒரு பல்கலைக்கழகமானது. அதே போல பல்கலைக்கழகங்களும் இவருக்கு இல்லமானது. வாழ்வும் தேனாகியது.

**யன்னல்**

யன்னல் ஊடாக, கிராமத்தைப் பார்த்து வாழ்க்கையை இரசித்து அங்கே பெருகும் நெளிவு சுழிவுகளைப் படம் பிடித்தாற்போல எடுத்தியம்பி வாசகர்மட்டத்தில் தீர்வையும் பெற்றெடுத்து நாவல் நெடுந் தொடர் பலவற்றை யதார்த்தமாகப் படைத்தும் வெற்றி கொண்டார். அதேபோல யன்னல் ஊடாக வீட்டுக்குள் நடக்கும் அவஸ்தைகளை வெளியில் கொணர்ந்து விடுதலை தந்தார். அது சிறுகதைகளாயிற்று.

**நாவல்**

தீம்தரிகிடதோம், வாடைக்காற்று, இரவின் முடிவு, பிரளயம், காட்டாறு, கனவுகள் கற்பனைகள் ஆசைகள் கங்கைக் கரை ஓரம், அலைகடல் தான் ஓயாதோ, முற்றத்து ஓட்டைப்பனை, யானை, மழையில் நனைந்து வெயில் காய்ந்து, மழைக்காலம், மண்ணின் தாகம், ஜன்மபூமி, யாக குண்டம், ஆறுகால்மடம், கிடுகுவேலி, ஓ! அந்த அழகிய பழைய உலகம், காதில் கலக்கும் பெருமூச்சுக்கள்,

**ஒரு மைய வட்டங்கள்**

காவோலை, பூதத் தீவுப்புதிர்கள், கொழும்பு விடுதி, மரணங்கள் மலிந்த பூமி, போரே நீ போ, ஆகிய நாவல்களோடு பல வெளிவர இருக்கின்ற பிரதிகளாகவும் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. இவை யாவும் சமூக விழுமியங்களையும், சமுதாய சமத்துவ எழுச்சிகளையும் சொல்ல வல்லவைகளாக என்றும் உயிரோடு வாழ்கின்றன. காலம் இனியும் வாழவைக்கும்.

**ஏனையன**

கூடிழந்த நத்தைகளும் ஓடிழந்த ஆமைகளும், சற்ம்பவி, இரவு நேரப் பயணிகள், குவேனி, கடல்கோட்டை, கந்தவேல் கோட்டம், இதயமே அமைதி கொள், சித்திரா பௌர்ணமி, யாழ்ப்பாணத்து இராத்திரிகள், அக்கினிக் குஞ்சுகள், நந்திக்கடல், ஆச்சி பயணம் பகிரல், கோதையின் காதல் இவைபோன்ற படைப்புக்கள் கிராமங்களில் நுழைந்து மக்களைத் தட்டி எழுப்பின. எளிமையான நுழைபுலம்.

**இன்னும் பல**

நல்லைநகர் நூல்,ஈழத்தவர் வரலாறு, யாழ்ப்பாணக் கோட்டை வரலாறு, இருபத்து நான்கு மணி நேரம், பன்னிரண்டு மணி நேரம், மீண்டும் யாழ்ப்பாணம் எரிகிறது, தமிழர் தேசம், மறுமலர்ச்சி சிறுகதைகள், ஈழகேசரி சிறுகதைகள், முனியப்பதாசன் சிறுகதைகள், சம்பந்தர் சிறுகதைகள், கார்ட்டூன் உலகில் நான், ஈழத்து முன்னோடிச் சிறுகதைகள், மல்லிகைச் சிறுகதைகள் இவ்வாறு எண்ணற்ற படைப்புக்களுக்கு உதாரணமானார். ஆம் வானும் கனல்சொரியும், அதனால் மண்ணில் புனல் செறியும். கண்ணில் அவை குவியும்.

**பிதாமகர்**

இலங்கையிலே, எழுத்துலகின் பிதாமகர் எனப் போற்றப்படும் செங்கையாழியானின் படைப்பு இலக்கிய உலகில் பௌர்ணமியாய் நீடூழி வாழும். அமரர் தந்தை யின் (புவியியல் பேராசான்உடுவில்) ஆசீர்வாதமோடு, பல்கலைக்கழகப் பதிவாளர் பெருமையோடு, ஜனாதிபதி மைத்திரியின் அனுதாபப் பகிர்வோடு, ஊடகங்களின் பெறுமதியோடு, குடும்ப மகிமையோடு, ஸ்ரீ வில்லிபுத்தூரான் அரவணைப்போடு, எழுத்துலகம், பேராசான்கள் அஞ்சலிக்க, 28.02.2016 இல் ஓய்ந்த கரங்கள், 01.03.2016 இல் யாழ்.மண்ணில் சரித்திரமாய் வணக்கம் பெற்றது. சாந்தி பெறுவோம். ▯




## ஈர்ப்பு

அம்மாவைக் காப்பாற்றுவதற்காகப் பிச்சைக்காரனாக வாழும் ஒரு மகனின் கதைதான் இயக்குநர் சசியின் பிச்சைக்காரன். அடையாளம், மதிப்பு ஆகியவற்றைத் துறப்பதுடன், தான் எதற்காகப் பிச்சை எடுக்கிறோம் என்பதை ஒருபோதும் வெளியில் சொல்லக்கூடாது ஆகியவை இதற்கான நிபந்தனைகள்.

அம்மாவுக்காக இவற்றை ஏற்றுப் பிச்சைக்காரனாக மாறும் விஜய் ஆன்ரனிக்குத் தொழில் எதிரி, காதல், உள்ளூர் முரடர்கள் எனப் பல தடைகள். இவற்றைத் தாண்டி நினைத்ததை முடித்தாரா, அவரது அம்மா குணமடைந்தாரா?

படம் தொடங்கிய 15 நிமிடங்களுக்குள் பார்வையாளர்களை முழுமையாகத் தன்னுள் ஈர்த்துக்கொள்கிறது இயக்குநர் சசியின் திரைக் கதை. ஒரு கோடீஸ்வரன் பிச்சைக்காரனாக வாழ்வதெல்லாம் நடக்கிற கதையா என்ற கேள்வி எழாத வண்ணம் திரைக் கதையை அமைக்கிறார். கதையின் பின்புலத்தின் மீதும் கதாபாத்திரங்களின் மீதும் போதுமான நம்பகத்தன்மையை ஏற்படுத்துவதன் மூலம் இதைச் சாதிக்கிறார். பிச்சைக்காரர்கள் என்றால் அழுக்கானவர்கள், அவர்களுக் கென்று மனமோ தனித்த உலகமோ இல்லை என்ற பொதுப் பார்வையை மறுக்கும் விதத்தில் அவர்களைச் சித்திரித்திருக்கும் விதம் பாராட்டத்தக்கது.

தாய்ப் பாசத்தை மையமாகக் கொண்ட இந்தப் படத்தில் தாய்ப் பாசத்தைக் காட்டும் காட்சிகள் மிகை உணர்ச்சி இல்லாமல் அமைந்துள்ளன. ஆனால், நாயகனின் சாகசங்கள் மிகையாகவே உள்ளன. பல காட்சிகளில் விஜய் ஆன்ரனியின் உடைகளும் திரைக்கதையின் நம்பகத் தன்மையைக் கேள்விக்குள்ளாக்குகின்றன. உலகத்தில் எத்தனையோ பிச்சைக்காரர்கள் இருக்க, நமது நாயகனுக்கு மட்டும் ஏன் இவ்வளவு சோதனைகள் என்று தெரியவில்லை. முரடர்களின் பங்கும் திரைக்கதையில் சரியாகப் பொருந்தவில்லை.

எனினும் நாயகனின் உண்மை அடையாளம் தெரியாமல் பிறர் அவனுடன் உறவாடுவதைச் சித்திரித்துள்ள விதமும் கதையோடு இழையோடும் நகைச்சுவையும் சுவை கூட்டுகின்றன. வசனங்களும் முக்கியப் பங்காற்றியிருக்கின்றன. பெரியப்பாவின் பாத்திரச் சித்திரிப்பு, பணக்காரனாக இருப்பதற்காக வேதனைப்படுகிறேன் என்று விஜய் ஆன்ரனி பொலிஸ்காரரிடம் சொல்வது ஆகியவை மனதில் நிற்கின்றன. முரடர்களின் தலைவன் தனது வலது கையாக இருப்பவனை "இனிமே நீ லெஃப்ட்டுதான்" என்று சொல்லும் காட்சி, பிச்சைக்காரர்களின் உரையாடல்கள் என்று ஆங்காங்கே முத்திரை பதிக்கிறார் சசி. பிச்சைக்காரன் என்று தெரிந்தும் காதலைத் துறக்க முடியாமல் தவிக்கிறாள் காதலி. அவள் தரும் உதவியை ஏற்க மறுக்கிறான் காதலன். நான் பிச்சையாகக் கொடுத்தா இதை வாங்கிக்கிறியா? என்று அவள் பணத்தை நீட்ட, மண்டியிட்டு இரண்டு கைகளையும் ஏந்தி நிற்கும் அவனது கரங்களில் தன் முகம் புதைத்துக் காதலை அர்ப்பணிக்கும் காட்சி கவித்துவமானது.

வித்தியாசமான கதாபாத்திரத்தில் தன்னை நன்கு பொருத்திக்கொண்டுள்ளார் விஜய் ஆன்ரனி. ஆனால், சில காட்சிகளில் சலனமற்ற முகத்துடன் அவர் நிற்பது காட்சிகளின் வீரியத்தைக் குறைத்துவிடுகிறது. இசையைக் கச்சிதமாக வழங்கியிருக்கிறார்.

முதல் படம் என்று சொல்ல முடியாதபடி நடித்திருக்கிறார் நாயகி சாத்னா. பெரியப்பாவாக வரும் முத்துராமன், பிச்சைக்காரராக வரும் இயக்குநர் மூர்த்தி ஆகியோரும் நன்கு நடித்திருக்கிறார்கள்.

நேர்த்தியான திரைக்கதை, நகைச் சுவை, வசனங்கள் ஆகியவற்றால் இந்தப் பிச்சைக்காரன் ஈர்க்கிறான். நாயக பிம்பத்தை முன்னிறுத்தும் காட்சிகளைக் குறைத்து யதார்த்தத்தைக் கூட்டியிருந்தால் படம் அலாதியான அனுபவமாக அமைந்திருக்கும்.

## முழுப் பேய்க்காட்டு

கொட்டாவி விடுவதையே பிரச்சினையாகக் கொண்ட ஒருவனுக்கு அதுவே அபார சக்தியாக மாறினால் என்ன நடக்கும்? அதுதான் போக்கிரி ராஜா. அடிக்கடி பெரிதாகக் கொட்டாவி விடுவது நாயகன் ஜீவாவின் பிரச் சினை. இதனால் அவரைச் சுற்றியிருப்பவர்களுக்கும் கொட்டாவி வர, இதுவே அவரது வேலை பறிபோகக் காரணமாகிறது. அவருடைய வேலை மட்டுமன்றிக் காதலும் இதனால் பாதிக்கப்படுகிறது.

இந்தச் சூழலில் சமூக ஆர்வலர் ஹன்சிகா மோத்வானியின் அறிமுகம் கிடைக்கிறது. சாலையோரங்களில் சிறுநீர் கழித்து அசுத்தம் செய்பவர்கள் மீது தண்ணீர் அடித்துத் துரத்துதல், சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைத்திருக்க உதவுதல் ஆகிய சேவைகளில் ஈடுபட்டுவரும் ஹன்சிகாவுடன் ஜீவாவும் சேர்ந்து கொள்கிறார்.

கூலிங் கிளாஸ் குணா (சிபிராஜ்) என்னும் முரடன் மீது ஜீவா ஒருமுறை தண்ணீர் அடித்துவிடுகிறார். இதனால் அவமானமடையும் சிபி, கொலை வெறியோடு ஜீவாவைத் துரத்துகிறார். இதேநேரத்தில் ஜீவாவின் கொட்டாவி பிரச்சினை விபரீதமான வேறொரு பரிணாமம் எடுக்க, பழி வாங்க வரும் சிபி அதில் சிக்கிக்கொள்கிறார். ஜீவாவின் காதல், கொட்டாவி, சிபியின் கோபம் ஆகியவை என்ன ஆயின என்பதுதான் மீதிக் கதை. தூக்கத்தின் அறிகுறியான கொட்டாவியை வைத்து உற்சாகமான ஒரு கலகலப்பை உருவாக்கியிருக்கிறார் இயக்குநர் ராம்பிரகாஷ் ராயப்பா. திரைக்கதை முழுவதிலும் நகைச்சுவையைக் கலந்து தருவதற்கும் மெனக்கெட்டிருக்கிறார். ஆனால், நகைச்சுவை நிரம்பிய கலகலப்பான என்னும் அசத்தலான ஐடியாவை வைத்துக் கொண்டு சொதப்பலான திரைக்கதை அமைத்திருக்கிறார்.

ஜீவாவுக்குக் கொட்டாவியால் பிரச்சினை என்பதைச் சொல்லப் பல காட்சிகளை இயக்குநர் வீணடிக்கிறார். ஹன்சிகாவுக்கும் ஜீவாவுக்கும் இடையில் நெருக்கத்துக்கு முன் ஏற்படும் குழப்பத்தைச் சொல்வதற்கும் சிபியின் முரடன் முகத்தைக் காட்டுவதற்கும் அதிக நேரத்தை எடுத்துக்கொள்கிறார். கதையின் முக்கியமான புள்ளிக்கு வருவதற்குள் பார்வையாளர்களுக்குக் கொட்டாவி வர ஆரம்பித்துவிடுகிறது. கொட்டாவிப் பிரச்சினையால் ஜீவாவுக்குப் பெரிய ஆபத்து என்பதுபோலக் காட்டிவிட்டு, பிறகு அது ஒரு அபூர்வமான சக்தி என்று கதையை மாற்றுவதெல்லாம் சரியான பேய்காட்டு. ஜீவா, சிபி மோதலுக்குப் பெரும் முஸ்தீபுகளை உருவாக்கிவிட்டுக் கடைசியில் அதையும் நகைச்சுவை ஆக்கிவிடுகிறார் இயக்குநர். ஒவ்வொரு கட்டத்திலும் சுவாரசியமோ நம்பகத்தன்மையோ இல்லாமல் ஏமாற்றமளிக்கிறது போக்கிரி ராஜா. நகைச்சுவை நாயகனாக ஜீவா, சமூக சேவையில் ஈடுபடும் ஹன்சிகா, அதிரடி வில்லனாக சிபி, அவரது உதவியாளர் ராமதாஸ் என்று வலுவான கூட்டணியை வைத்துக்கொண்டு சரவெடி கொளுத்துவதற்குப் பதில் தோல்வியடைந்து நோகடிக்கிறார், இயக்குநர். சாலையோரங்களில் சிறுநீர் கழிக்கும் ஆண்களை யோசிக்கச் செய்யும் விதத்தில் அமைந்த காட்சிகளுக்காக இயக்குநரைப் பாராட்டலாம்.

இரண்டு நாயகர்கள் இணையும் படத்தில் இருவருக்குமே நடிக்க வாய்ப்பு அளிக்கக்கூடாது என்பதில் சமத்துவம் காட்டியிருக்கிறார் இயக்குநர். ஹன்சிகாவுக்கும் அதே நியாயத்தை வழங்கியிருக்கிறார். ஆனால், சிபியின் உதவியாளராக வரும் ராமதாஸ் மட்டும் எப்படியோ தப்பித்துவிட்டார். சிபிக்குக் கண் பிரச்சினை ஏற்படும்போது ராமதாஸ் போடும் ஆட்டம் திரையரங்கைக் குலுங்கவைக்கிறது.





# பலஸ்தீனமும் வலி.வடக்கும்

சந்திரசேகர ஆசாத்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியிலும், 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் பல்வேறு ஐரோப்பிய நாடுகளிலும் இடம்பெற்ற யூத எதிர்ப்பு நடவடிக்கைகள் காரணமாக ஏராளமான யூதர்கள் பிரிட்டனின் கட்டுப்பாட்டிலிருந்த பலஸ்தீன மண்ணில் குடியேற ஆரம்பித்தனர். இரண்டாவது உலக மகாயுத்தத்தின்போது ஹிட்லர் மேற்கொண்ட யூத அழிப்பு நடவடிக்கை காரணமாக ஜேர்மனியிலிருந்தும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் பெரும் தொகையான யூதர்கள் வெளியேறி பலஸ்தீனத்தில் பிரிட்டனின் ஆதரவுடன் குடியேறினர்.

1922 ஆம் ஆண்டில் பலஸ்தீனத்தில் 11 வீதமாக இருந்த யூதர் 1945 இல் 31 வீதமாக அதிகரித்தனர். இந்த நிலையில் 1941 இல் பிரிட்டனால் யூதர்களுக்குத் தனிநாடு வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது. 1947 இல் பலஸ்தீன மண்ணில் ஐக்கிய நாடுகள் சபையின் அனுசரணையுடன் இஸ்ரேல் என்ற தனிநாடு உருவாக்கப்பட்டது. இதைக் ஏற்றுக் கொள்ளாத பலஸ்தீனம் மீதும் அரபு நாடுகள் மீதும் இஸ்ரேல் போர்ப் பிரகடனம் செய்தது.

இந்தப் போர் காரணமாக இஸ்ரேல் ஐக்கிய நாடுகள் சபையால் தீர்மானிக்கப்பட்டதைவிட மேலதிகமாக 50 வீத நிலப்பரப்பைக் கைப்பற்றிக் கொண்டது. அது மட்டுமன்றி இஸ்ரேலால் ஆக்கிரமிக்கப்பட்ட பலஸ்தீனப் பகுதிகளிலிருந்த ஏழரை லட்சம் பலஸ்தீனியர்கள் வெளியேற்றப்பட்டனர்.

தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வரும் மேற்குக் கரை இஸ்ரேல் குடியேற்றங்கள் மூலமும், 1987 இல் இடம்பெற்ற போர் மூலமும் மேலும் ஆக்கிரமிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

1948 இல் வெளியேற்றப்பட்ட ஏழரை லட்சம் பலஸ்தீன மக்கள் இன்றுவரை அகதிகளாக ஜோர்தான், சிரியா, காஸா ஆகிய பகுதிகளில் பெரும் இன்னல்களைச் சுமந்து வாழ்கின்றனர். 88 வருடங்களாக அவர்களின் அகதி வாழ்வு தொடர்கிறது. பலஸ்தீன மக்கள் அனுபவிக்கும் அதே இடம்பெயர் வாழ்வின் இன்னல்களை இலங்கை வாழ் தமிழ் மக்களும் அனுபவித்து வருகின்றனர். 1983 இல் இலங்கையை விட்டு வெளியேறி இந்தியாவில் தஞ்சமடைந்த ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட தமிழ் மக்கள் இன்னும் அகதி வாழ்விலிருந்து மீட்சி பெறவில்லை. 10 லட்சத்துக்கு மேற்பட்ட தமிழர்கள் இன்னும் புலம்பெயர் நாடுகளில் வாழ்ந்து வருகின்றனர்.

அதேபோன்று உள்ளூரில் இடம் பெயர்ந்து வாழ்ந்த மக்களும் போர் முடிந்து 8 வருடங்கள் கடந்து விட்ட போதிலும் தங்கள் சொந்த மண்ணில் குடியேற அனுமதிக்கப்படாது தொடர்ந் தும் நிவாரண முகாம்களிலேயே துயரம் நிறைந்த வாழ்வை அனுபவித்து வருகின்றனர். இவர்களில் முக்கியமானவர்கள் வலி.வடக்கு மக்களும், சம்பூர் மக்களுமாவார்கள்.

1990 ஆம் ஆண்டு இடம் பெயர்ந்த வலிகாமம் வடக்கு மக்கள் உலகிலேயே பலஸ்தீன மக்களுக்கு அடுத்தபடியாக 20 வருடங்களாக நீண்ட அகதி வாழ்வை அனுபவித்து வரும் பரிதாபத்துக்குரிய மக்களாவார்கள்.

எனினும் இவர்கள் மீள்குடியமர்த்தப்பட வேண்டும் எனக் கோரிப் பல போராட்டங்களைத் தொடர்ந்து நடத்தி வருகின்றனர்.

பாதுகாப்பு அபிவிருத்தி எனக் காரணங்கள் கூறப்பட்டு அவர்களின் மீள்குடியேற்றம் தொடர்ந்து தவிர்க்கப்பட்டு வந்தது.

படையினர் பாதுகாப்பு என்ற பேரில் மக்களுக்குச் சொந்தமான காணிகளை அபகரித்துச் சுற்றுலா விடுதிகள் அமைத்தும், விளையாட்டுத் திடல்களை உருவாக்கியும், விவசாயப் பண்ணைகளை அமைத்தும் மீள்குடியமர்வைத் தடுத்து வந்தனர். இராணுவக் குடும்பங்களுக்கான குடியிருப்புக்களை அமைக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. முக்கிய மீன்பிடி மையங்களையும், கடற்படையினர் தங்கள் கட்டுப்பாட்டிலேயே வைத்திருந்தனர். அதே போன்று அபிவிருத்திக்கு என்ற பேரில் துறைமுக, விமான நிலைய விஸ்தரிப்பு, சிமெந்து தொழிற்சாலையை பிரமாண்டமான முறையில் உரு வாக்கல் என்ற பேரில் மக்களின் காணிகளை நிரந்தரமாகவே பறித்தெடுக்கவும் திட்டங்கள் வகுக்கப்பட்டன.

இப்படியான ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராகவும், மீள்குடியேற்றத்தைக் கோரியும் வலி.வடக்கு மக்கள் பல்வேறு விதமான போராட்டங்களையும் தொடர்ந்து முன்னெடுத்து வந்தனர். ஆட்சிமாற்றம் ஏற்பட்ட பின்பு ஒரு பகுதிக் காணிகள் விடுவிக்கப்பட்டு மக்கள் மீள்குடியமர அனுமதிக்கப்பட்ட போதிலும் அவர்கள் நிரந்தரமாக அங்கு குடியிருக்கும் வகையில் அடிப்படைத் தேவைகளோ, வாழ்வாதார வசதிகளோ ஏற்படுத்தப்படவில்லை.

இந்த நிலையில் பொறுமையிழந்த மக்கள் தம்மை மீள்குடியமர்த்தக் கோரி தொடர் உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர். இடம்பெயர்ந்து 32 முகாம்களில் வாழும் மக்கள் கடந்த வாரம் தொடக்கம் ஒரு முகாம் என்ற அடிப்படையில் உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தைத் தொடரவுள்ளனர். அது மட்டுமன்றி தாம் எதிர்வரும் தமிழ் சிங்களப் புத்தாண்டுக்குள் மீள்குடியேற்றப்பட நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் வெள்ளைக் கொடியுடன் போய் அங்கு குடியமரவுள்ளதாகவும் தெரிவித்துள் ளனர்.



இராணுவ உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் வெள்ளைக் கொடியுடன் உட்செல்வது எவ்வளவு உயிராபத்தான விடயம் என்பது அவர்கள் அறியாததல்ல. அப்படியிருந்தும் அவர்கள் இதற்குத் துணிந்து விட்டனரென்றால் அவர்கள் பொறுமையின் எல்லையைக் கடந்து விட்டார்கள் என்பதே அர்த்தமாகும். அதே வேளையில் அரசோ ஒரு சில பகுதிகளை விடுவித்துக் கொண்டு வேறு சில பகுதிகளை நிரந்தரமாகவே பறித்து விடும் வகையில் செயற்பட்டு வருகின்றது.

அதில் முக்கியமானவை பலாலி விமான நிலைய விஸ்தரிப்பு, காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தி என்பனவாகும். இவை இந்திய நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

தற்சமயம் விமான நிலைய விஸ்தரிப்புக்கென மயிலிட்டி வடக்கு, பலாலி மேற்கு, பலாலி வடமேற்கு, ஆகிய கிராம சேவகர் பிரிவுகளும் கட்டுவன், குரும்பசிட்டி ஆகிய கிராமங் களில் சில பகுதிகளும் கையகப்படுத்தப் படவுள்ளன. இவை 1500 குடும் பங்களுக்கு மேற்பட்ட மக்களுக்கு உரிய பரம்பரைக் காணிகளாகும். இந்தப் பகுதி சிறந்த விவசாய நிலங்களைக் கொண்டது என்பதும் முக்கிய மீன்பிடி மையத்தை உள்ளடக்கியது என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஏற்கனவே இந்த விமான நிலையம் 996 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது. இலங்கையில் உள்ள சிவில் விமான நிலையங்களில் இரண்டாவது நீளமான ஓடு பாதையைக் கொண்டது. இது இரத்மலானை சர்வதேச விமான நிலையத்தை விட 305 மீற்றர் அதிகமான நீளம் கொண்டது.

அதேவேளையில் 1984 ஆம் ஆண்டு விமான நிலையத்துக்கென 665 ஏக்கர் காணி சுவீகரிக்கப்பட்டது. இப்போதுள்ள ஓடு பாதையின் நீளம் அதிகரிக்கப்பட வேண்டுமானால் கூட இந்த மேலதிக 665 மீற்றர் போதுமானதாகும். அப்படியான நிலையிலும் மக்களின் காணிகள் அபகரிக்கப்படுகின்றன என்றால் அதற்கான காரணம் அபிவிருத்திக்கும் அப்பாற்பட்ட இனவாத ஆக்கிரமிப்பென்றே கருத வேண்டியுள்ளது. இதைச் சாதாரண எந்த ஒரு மனிதனாலும் விளங்கிக் கொள்ள முடியும்.

எவ்வாறு இஸ்ரேல் பாலஸ்தீனத்துடன் காம்ப் டேவிட் உடன்படிக்கை மூலம் சமாதானம் எட்டப்பட்டு விட்டதாகக் கூறிக் கொண்டு மேற்குக் கரையில் யூதக் குடியேற்றங்களை மேற்கொண்டு மேலும் மேலும் பலஸ்தீன மண்ணை அபகரிக்கிறதோ, அவ்வாறே நல்லிணக்கம் என ஒருபுறம் கூறிக்கொண்டு இன்றைய அரசு எமது நிலங்களை ஆக்கிரமித்து வருகிறது.

ஒரு புறம் விமான நிலைய அபிவிருத்தியின் பெயரால் ஒரு பகுதியை ஆக்கிரமிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும் போது பாதுகாப்பின் பேரிலும் காணிகளை நிரந்தரமாக சுவீகரிக்கும் ஆரம்ப முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(39 ஆம் பக்கம் பார்க்க)



# இந்த வாரம்

**13.03.2016 முதல் 19.03.2016 வரை**

## உங்களுக்கு எப்படி?

### மேடம்

பெரும்பான்மை கிரகங்கள் நற்பலன் தருவர். வளர்ச்சிப் பாதைக்கான புதிய வழி பிறக்கும். நண்பர்கள், உறவினர்கள் உங்களிடம் நல் அபிப்பிராயம் கொள்வர். பணி களை ஆர்வமுடன் மேற்கொள்வீர்கள். பணவரவு அதிகரிக்கும். வாகன பராமரிப்புச் செலவு குறையும். புத் திரர்கள், உங்கள் அறிவுரையை வேதமென ஏற்றுக்கொள்வர். நோய் தொந்தரவு குறையும். மனைவியின் எண்ணமும், செய லும் குடும்பத்துக்கு நன்மையைத்தரும். அரச உதவிபெற அனுகூலம் உண்டு. தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். பணியாளர்களுக்கு மேலதிக நேரம் மற்றும் சலுகைகள் கிடைக்கும்.பெண்கள்,மாணவர்கள் படிப்பில் முன்னேற்றம் காண்பர். தட்சிணாமூர்த்தி வழிபாடு, மங்கள வாழ்வு தரும்.

### இடபம்

சூரியன், புதன், சந்திரனால் நன்மை கிடைக்கும். பணிகளை நிதானத்துடன் நிறைவேற்றவும். உடன் பிறந்தவர்களுக்கு ஓரளவு உதவுவீர்கள். வாகனத்தில் உரிய பராமரிப்புப் பாதுகாப்பு வேண்டும். புத்திரர்கள் விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். வீண்பேச்சு பேசுபவரிடம் விலகுவது நல்லது. மனைவி உங்களிடம் கருத்து பேதம் கொள்வார். போட்டி குறைந்து தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். ஆதாய பணவரவைச் சேமிப்பீர்கள். பணியாளர்கள் சிறப்பாக பணிபுரிந்து பாராட்டு, சன்மானம் பெறுவர். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர். மாணவர்கள் படிப்பில் முன்னேற கூடுதல் பயிற்சி மேற்கொள்வர். துர்க்கை வழிபாடுதைரியத்தை வளர்க்கும்.

### கடகம்

குரு, புதன், சுக்கிரன் அனுகூல அமர்வில் உள்ளனர். உற்சாக மனதுடன் வளர்ச்சிப் பாதையில் நடை போடுவீர்கள். நற்பண்பு உள்ளவர்களின் உதவி கிடைக்கும். வீடு, வாகனத்தில் பராமரிப்புச் செலவு அதிகரிக்கும். புத்திரர்கள் கவனக் குறைவான செயலால், சிரமத்தை எதிர்கொள்ளலாம். சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் சமயோசித புத்தியால் அவற்றை சமாளிப்பீர்கள். வாழ்க்கைத் துணையால் நிறைந்த பலன் கிடைக்கும். பணியாளர்கள் நிர்வாகத்தின் சட்டதிட்டத்தை தவறாமல் பின்பற்ற வேண்டும். பெண்கள் ஆன்மிகத் தலங்களுக்கு சுற்றுலா சென்று வருவர். மாணவர்கள் படிப்பில் தேர்ச்சி பெறுவர். முருகன் வழிபாடு, நம்பிக்கை வளர்க்கும்.

### மிதுனம்

ராகு, சனீஸ்வரர், சுக்கிரன், செவ்வாய் அதிக நன்மை தருவர். வாழ்வில் முன்னேற்றம் பெற, இலட்சிய எண்ணத்துடன் பணிபுரிவீர்கள். பூர்வ புண்ணிய பலன் துணை நின்று உதவும். பேசும் வார்த்தை மங்களகரமாகும். புத்திரர்களின் ஜாதக யோகத்தினால் புதிய வீடு, வாகனம் வாங்க அனுகூலம் உண்டு. வழக்கு, விவகாரம் அணுகாத சுமுக வாழ்வு உருவாகும். குடும்பத்தில் ஒற்றுமை ஏற்படும். மனைவியின் பாசம் நெகிழ்ச்சி தரும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பெற கிடைத்த வாய்ப்பை பயன்படுத்துவீர்கள். பெண்களுக்கு தாய் வீட்டு உதவி கிடைக்கும். மாணவர்கள் பாதுகாப்பு குறைந்த இடங்களுக்கு செல்ல வேண்டாம்.சிவன் வழிபாடு, சகல நன்மையும் தரும்.

### சிங்கம்

சந்திரன் ஓரளவு நன்மை தருவார். கடினமான திட் டங்களை செயல்படுத்துவதை தவிர்த் தால், மன அமைதியைப் பாதுகாக்கலாம். தாய்வழி உறவினர்களுடன் கருத்து வேறுபாடு ஏற்படலாம். புத்திரர்கள் சேர்க்கை சகவாசம் அறிந்து, இதமாக நல்வழி நடத்தவும். உடல்நலத் துக்குச் சிறு அளவிலான மருத்துவ சிகிச்சை தேவைப் படும். மனைவியின் செயல் குறையைப் பெரிதுபடுத்தி பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் அதிக உழைப்பினால், சீரான அளவில் பணவரவு கிடைக்கும். பணியாளர்கள் பணியில் குளறுபடி வராமல் செயல்படவும். பெண்கள் சமையலறையில் மிகக் கவனமாக இருக்கவும். மாணவர்கள் பாதுகாப்பு குறைந்த இடங்களுக்கு செல்லக் கூடாது.பெருமாள் வழிபாடு, செல்வ வளம் தரும்.

### கன்னி

செவ்வாய், சனீஸ்வரர், சூரியன், புதன், கேது அளப்பரிய நன்மை தருவர். உறவினர்கள் உங்களுடன் ஒத்துழைப்பர். திட்டமிட்ட பணிகளை நிறைவேற்றுவீர்கள். புத்திரர்கள் நல்ல நண்பர்களின் உதவியால், படிப்பு செயல்திறனில் முன்னேறுவர். உடல்நலம் பலம் பெறும். மனைவியின் கருத்தை ஏற்பதால், குடும்பத்தில் ஒற்றுமையும், மகிழ்ச்சியும் நிலைத்திருக்கும். தொழில், வியாபாரத்தில் போட்டி குறைந்து வளர்ச்சி அடைவீர்கள். பணியாளர்கள் திறமையை வளர்த்து முன்னேற்றம் காண்பர். பெண்கள் வீட்டுச் செலவுக்கு சற்று திண்டாட நேரிடும். மாணவர்கள் புதிய நண்பர்களிடம் நிதானித்து பழகவும். அம்பிகை வழிபாடு, மகிழ்ச்சி தரும்.

### துலாம்

ராகு, சுக்கிரன், குரு, சந்திரனால் நன்மை உண்டாகும். பழகுபவர் களின் மனமறிந்து பேசுவீர்கள். செயல்கள் சிறப்பாக அமைந்து புகழ் தரும். வாகனங்களில் மெதுவாகச் செல்லவும். புத்திரர்களின் செயல்பாடு, அவர்களுக்கும் குடும்பத்துக்கும் வளர்ச்சியை தரும். நண்பர்களுக்கு கடனாக கொடுத்த பணம் கிடைக்கும். உடல் ஆரோக்கியம் சீராக இருக்கும். மனைவி வழி சார்ந்த உறவினர்கள் பாசம் கொள்வர். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பெற கிடைத்த வாய்ப்பை பயன்படுத்துவீர்கள், பணி யாளர்களுக்கு சலுகை கிடைக்கும். பெண்கள், பிள்ளை கள் நலனில் அக்கறை கொள்வர். மாணவர்கள் நன்றாகப் படிப்பர்.சனீஸ்வரர் வழிபாடு, சங்கடம் தீர்க்கும்.

### தனுசு

செவ்வாய், சனி, புதன், ராகு தவிர, மற்ற கிரகங்களால் நன்மை ஏற்படும். எண்ணங்களில் புதுமை நிறைந்திருக்கும். பொது இடங்களில், உங்கள் சொல்லுக்கு வரவேற்பு கிடைக்கும். உடன் பிறந்தவர்களுக்கு பண உதவி செய்வீர்கள். புதிய வீடு, வாகனம் வாங்க அனுகூலம் உண்டு. புத்திரர்களின் உடல்நலத்துக்குச் சிகிச்சை தேவைப்படலாம். மனைவியின் மனதில், உங்கள் மீதான நம்பிக்கை வளரும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பெற சீர்திருத்தங்களை மேற்கொள்வீர்கள். பெண்கள் பிறருக்காக பணப்பொறுப்பு ஏற்க வேண்டாம். மாணவர்கள் நன்றாகப் படித்துப் பாராட்டு பெறுவர்.மகாலட்சுமி வழிபாடு, ஐஸ்வரியம் தரும்.

### விருச்சிகம்

சுக்கிரன், புதன், சந்திரன் அனு கூல பலன் தருவர். உங்களை விட, உங்களைச் சார்ந்தவர்களின் எண்ணங்களை நிறைவேற்றுவதில், அக் கறை கொள்வீர்கள். உடன்பிறந்தவர்கள் பண உதவிகேட்டு வருவர். பயணங்களால் நன்மை ஏற்படும். புத்திரர்களின் படிப்பு மற்றும் உணவு விட யத்தில் கவனம் செலுத்துங்கள். கடன் வாங்கப் போட்ட திட்டங்களில், மிகுந்த கவனம் தேவை. மனைவி கருத்து ஒற்று மையுடன் நடந்து கொள்வார். தொழில், வியாபாரத்தில் சுமாரான இலாபம் கிடைக்கும். பயணங்களால் அதிக இலாபம் இராது. பெண்கள் குடும்ப ஒற்று மைக்காக மற்றவர் களை அனுசரித்து நடந்து கொள்வர். மாணவர்கள் சிறந்த தேர்ச்சி பெறுவர். பைரவர் வழிபாடு, கஷ்டம் போக்கும்.

### மகரம்


செவ்வாய், சுக்கிரன், சனீஸ்வரர் அனுகூல பலன் தருவர். பேச்சு வசீகரமாகும். சமூக நிகழ்வுகளின் போக்கை உணர்ந்து செயல்படுவீர்கள். வீடு, வாகனத்தில் அதிக வசதி செய்வீர்கள். நண்பர்களுடன் சுற்றுலா பயணத்திட்டம் உருவாகும். எதிர் மனப்பாங்கு உள்ளவர்களிடம் விலகுவது நல்லது. உடல்நிலை நன்றாக இருக்கும். மனைவி விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். தொழில், வியாபாரத் தில் வளர்ச்சியும், பணவரவும் அதிகரிக்கும். பணியாளர்கள் நிர்வாகத்தின் சட்ட திட்டத்தை மதித்து நற்பெயர் பெறுவர். பெண்களுக்கு பணவசதி தாராள அளவில் கிடைத்து சந்தோமாக இருப்பர். மாணவர்கள் படிப்பில் முன்னேற நண்பர்கள் உதவுவர்.விநாயகர் வழிபாடு, வினை தீர்க்கும்.

### மீனம்

சுக்கிரன், ராகு வியத்தகு அளவில் நன்மை வழங்குவர். ஆன்மிகத்தில் ஆர்வம் வளரும். வீட்டில் நடக்கும் சில சம்பவங்கள், புதிய படிப்பினையைத் தரும். அறிமுகம் இல்லாதவர்களுக்கு வாகனத்தில் இடம் தர வேண்டாம். புத்திரர்களின் உடல்நலத்துக்காகச் செலவிட வேண்டி வரலாம். முக்கிய பணி ஒன்று நிறைவேற, தெய்வ அருள் துணை நிற்கும். உங்களை எதிர்ப்பவர்கள் திடீரென மனம் மாறியது போல பேசி கவிழ்க்க நினைப்பர்; கவனம். மனைவியின் ஆலோசனை மனதுக்கு நம்பிக்கை தரும் பணியாளர்கள் கூடுதல் தொழில் நுட்பம் அறிந்து கொள்வர். மாணவர்கள் ஒருமுகத் தன்மையுடன் படித்து முன்னேற்றம் காண்பர். ஆஞ்சநேயர் வழிபாடு, வெற்றியளிக்கும்.

### கும்பம்

குரு, சுக்கிரன், சந்திரனால் நன்மை ஏற்படும். வாழ்வில் வளர்ச்சி பெற உதவியவர்களுக்கு நன்றி சொல்வீர்கள். பணத்தேவை அதிகரிக்கும். கடன் வாங்குவதில் நிதானம் வேண்டும். பயணங்கள் இனிய அனுபவம் தரும். புத்திரர்கள் உங்களை விட்டு விலகிச் செல்வது போல உணர்வீர்கள். பூர்வச் சொத்து மூலம் கிடைக்கும் வருமானத்தை, பிறர் அபகரிக்க வழியுண்டு; கவனம். மனைவி குடும்பத்தின் இன்ப, துன்பங்களில் பங்கு கொள்வார். பணியாளர்களுக்கு சக ஊழியர் களுடன் கருத்துவேறுபாடு ஏற்படலாம். பெண்கள் குடும்ப உறுப்பினர்களை உபசரித்து நற் பெயர் பெறுவர். மாணவர்கள் படிப்புடன் கலை களிலும் ஆர்வம் கொள்வர். சாஸ்தா வழிபாடு, சகல நன்மையும் தரும்.



# கண்களுக்கு அழகு தரும் புருவம்

முகத்துக்கு அழகு தருவது கண்கள் என்றால் அந்த கண்களுக்கு அழகைத்தருவது புருவங்கள்.
பெண்களுக்கு கண்கள் அழகாக இருந்தால் அவர்களின் அழகு இரட்டிப்பாகும்.
ஆனால், அந்தக் கண்களை நன்கு எடுத்துக்காட்டுவது புருவங்கள் தான்.
கண்கள் எப்படி பேசுமோ அது போல புருவங்களும் பேசும். பெண்களின் விழிகளை கயல் மீனுக்கு உவமிப்பதுண்டு.
சிலருக்கு புருவம் குறைவாக இருக்கும் சொல்லப்போனால் சிலருக்கு புருவங்கள் இருக்கும் இடமே தெரியாது.
அதனால் அவர்கள் வெளியே செல்லும்போது புருவங்களை வரைந்து கொண்டு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. புருவங்கள் சரியாக வளராமல் இருப்பதற்கு பல காரணங்கள் இருக்கின்றன.
அவற்றில் சில தான் உடலில் சரியான ஹார்மோன் சுரப்பிகள் சுரக்காமல் இருப்பது, போதிய ஊட்டச்சத்துக்கள் இல்லாமை மற்றும் அளவுக்கு அதிகமாக அழகு நிலையங்களுக்குச் சென்று புருவங்களை வடிவமைத்தல் காரணமாக அந்த இடத்தில் முடி வளர்ச்சி தடைப்படுகின்றது.
முகத்தின் சிறந்த அம்சங்களில் ஒன்றான புருவங்களைச் சரியாக வடிவமைப்பதே பலருக்கு பெரும் பிரச்சினையாக உள்ளது.
சாதாரண பெண்கள் கூட அழகு நிலையங்களுக்குச் சென்று புருவத்தை திருத்தியவுடன் அழகாகி விடுகின்றனர். அந்த அளவுக்கு முகத்தின் வடிவமைப்பையே மாற்றும் தன்மை புருவத்துக்கு உண்டு.
இந்தப் புருவங்களை வடிவமைக்கும் போது மிகவும் மெல்லியதாக ஷேப் செய்யாமல் சற்று திக்காக வைத்துக் கொள்ளலாம். அத்தோடு புருவங் களை த்ரேடிங் செய்ய செல்கையில் ஐபுரோ பென்சிலினால் வரைந்து கொண்டு போவது நல்லது.
ஏனென்றால் நாம் விரும்பியபடி புருவத்தை ஷேப் செய்து கொள்ளலாம். சிலருக்கு நெற்றியின் அளவைக் குறைத்துக்காட்டுவதற்கு என்ன செய்யலாம் என்று சில பெண்கள் எப்போதும் கவலையுடன் இருப்பார்கள்.
இவர்கள் தங்கள் நெற்றியின் அளவை குறைத்துக்காட்டுவதற்கு புருவத்தை அதற்கேற்றவாறு அமைத்துக்கொள்ள வேண்டும். அத்துடன் புருவத்தை ஷேப் செய்வதால் மட்டும் நெற்றியை சிறியதாகக் காட்டமுடியாது.
நெற்றியை மறைக்கும்படி முடியை முன்புறம் விட்டு ஹேர் ஸ்டைல் பண்ணலாம். பின்னர் புருவத்தை மேலே தூக்கலாகத் தெரியும் படி ஷேப் செய்து கொண்டால் நெற்றியின் அகலம் தெரியும்.
புருவமுடி உதிர்ந்து விட்டதே அல்லது எனக்கு புருவத்தில் முடி இல்லையே என கவலைப்பட வேண்டாம். விளக்கெண்ணெயை லேசாக சூடு செய்து புருவத்தில் தடவி மசாஜ் செய்தால் விரைவில் முடி முளைத்து புருவங்கள் அழகாகும்.
முகத்தின் அழகுக்கு மெருகேற்றுவது புருவமும் கண்களும் தான் ஆகையால் இதில் புருவத்தின் அளவை கூட்டவோ குறைக்கவோ செய்து முகத்துக்கு அதிக அழகு கொடுக்கு முடியும்.
வில் போன்ற புருவம் என பலரது புருவ அழகைப் புகழ்வர். ஆனால், இவ்வமைப்பு எல்லா முகத்துக்கும் பொருத்தமாக இருக்காது என்பதால் முகத்துக்குத் தக்கபடி புருவமிருப்பதே சிறப்பு.



# வாழைப்பழ பணியாரம்

### தேவையான பொருள்கள்

கோதுமை மா அரை கப்
வாழைப்பழம் 2
தேங்காய் துருவல் அரை கப்
துருவிய கருப்பட்டி இனிப்புக்கேற்ப
ஏலக்காய்தூள் ஒரு சிட்டிகை.

### செய்முறை :

கோதுமை மாவை நன்றாக கரைத்துக் கொள்ளவும். வாழைப்பழத்தைத் தோல் உரித்து நன்றாகப் பிசைந்து. அதில் துருவிய தேங்காய், துருவிய வெல்லம், ஏலத்தூள் சேர்த்து நன்றாக கலந்து அதை கரைத்த கோதுமை மாக் கலவையில் போட்டு நன்றாக கலந்து கொள்ளவும். கலவை சற்று கெட்டியாக இருக்கும் படி கரைத்து கொள்ளவும்.
குழிப்பணியார கல்லை அடுப்பில் வைத்து நன்றாக சூடானதும் மிதமான சுவாலையில் வைத்து ஒவ்வொரு குழியிலும் அரைக் கரண்டி மாவை ஊற்றி, சுற்றி சிறிது எண்ணெய் ஊற்றி வெந்ததும் திருப்பி போட்டு எடுக்கவும்.



# பருக்கள் தொல்லையா?

கண்டிப்பாக ஒவ்வொருவரும் பருக்களால் மிகுந்த கஷ்டத்தை அனுபவித்திருப்போம். இதற்காக எத்தனையோ கிறீம்களை வாங்கிப் பயன்படுத்தியிருப்போம்.
இருப்பினும் எந்த ஒரு பயனும் கிடைத்தபாடில்லை. ஆனால் நமது பாரம்பரிய இயற்கை மருத்துவ முறையான ஆயுள்வேதத்தில் பருக்கள் வராமல் இருக்கவும், வந்த பருக்கள் விரைவில் நீங்கவும் ஒருசில குறிப்புக்கள் உள்ளன.

**முகத்தைக் கழுவவும் :**
பலரும் குளிர்ந்த நீரில்தான் முகத்தைக் கழுவுவோம். ஆனால் குளிர்ந்த நீரில் முகத்தைக் கழுவினால், சருமத்தில் எண்ணெய் பசையின் சுரப்பு அதிகரித்து, அதனால் பருக்கள் வரும் என்று தெரியுமா? எனவே தினமும் 3–4 முறை வெதுவெதுப்பான நீரில் முகத்தைக் கழுவ வேண்டும்.

**தக்காளி ஜூஸ் :**
தக்காளியை அரைத்து சாறு எடுத்து, அந்த சாற்றைத் தினமும் இரவில் படுக்கும் முன் முகத்தில் தடவிக் கொண்டு தூங்கச் செல்ல வேண்டும். இப்படி அன்றாடம் பின்பற்றி வந்தால், முகம் பருக்களின்றி பொலிவோடு இருக்கும்.

**துளசி பேஸ்ட் :**
நீங்கள் பருக்களால் கஷ்டப்பட்டால், துளசி இலையை அரைத்து பேஸ்ட் செய்து, பருக்களின் மீது வைத்து உலர வைத்து கழுவ வேண்டும். இப்படி வாரம் மூன்று முறை செய்து வந்தால் நல்ல பயன் கிடைக்கும்.

**கசப்பான உணவுகள் அவசியம் :**
ஆயுள்வேத மருத்துவமானது, உணவில் கசப்பான உணவுப் பொருள்களை அதிகம் சேர்க்கச் சொல்லும். ஏனெனில் கசப்பான உணவுப் பொருள்கள் குருதியைச் சுத்தம் செய்வதோடு, சருமத்தில் எண்ணெய் சுரப்பையும் கட்டுப்படுத்தும். எனவே கசப்பான உணவுப் பொருள்களான பாகற்காயை வாரம் ஒருமுறை உணவில் சேர்ப்பதோடு, தினமும் சிறிது வேப்பிலையை உட்கொள்வது, பருக்கள் வருவதைத் தடுத்துவிடுவதோடு, உடல் ஆரோக்கியத்தையும் மேம்படுத்தும்.

## முகப்பரு - கரும் புள்ளி - தழும்புகள் நீங்க:



கோபி சந்தனம் ஒரு கரண்டி அளவு
பாதாம் பருப்பு மூன்று (நீரில் ஊற வைத்தது)
தயிர் 2 கரண்டி
எலுமிச்சை சாறு 2 கரண்டி
இவைகளை அரைத்து எடுத்து முகம், கழுத்து பகுதிகளில் பூசி ஒருமணி நேரம் கழித்து கழுவவும். இரண்டு நாள்களுக்கு ஒரு முறை செய்துவர முகப்பரு, கரும் புள்ளி, தழும்புகள் நீங்கி முகம் அழகுபெறும்.
முகத்தில் தழும்புகள் தீப்புண் தழும்புகள் மறைய : அரச மர பழுப்பு இலைகளைச் சேகரித்து எரித்து கரியாக்கி தூள் செய்து தேங்காய் எண்ணெயில் விட்டு குழப்பி வைத்துக் கொள்ளவும். இதனை இரவில் தழும்பு உள்ள இடங்களில் தடவி வர தழும்புகள் படிப்படியாக மறையும்.



# அணுக்களை தேடும் படலம்

நூறு ஆண்டுகளுக்கு முன்பு ஐன்ஸ்டைனால் கணிக்கப்பட்ட ஈர்ப்பு அலைகள் தற்போது கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. இரண்டு கருந்துளைகள் மோதிக்கொண்டு பிணைந்ததன் விளைவாக உருவான ஈர்ப்பு அலைகள் அவை. இந்த நிகழ்வில் கால–அண்டவெளியில் ஏற்பட்ட குறுக்கத்தின் ஓசை நம்மை வந்து அடைந்திருக்கிறது. ஆனால், கரும்பொருள் இருப்பதை உறுதி செய்வோமானால் அந்தக் கண்டுபிடிப்பு ஈர்ப்பு அலைகளின் கண்டு பிடிப்பை விடப் பெரியதாக இருக்கும் என்கிறார் பிரபஞ்சவியலாளர் கார்லோஸ் ஃப்ரெங்க். கரும்பொருளைக் கண்டறிவதற்காக உருவாக்கப்பட்டதிலே மிகவும் நுட்பமான உணர்மானி (detector) தெற்கு டகோட்டாவில் உள்ளது. இயற்பியலாளர் அலெக்ஸ் மர்ஃபியும் அவரது குழுவினரும் தெற்கு டகோட்டாவில் உள்ள கைவிடப்பட்ட ஒரு தங்கச் சுரங்கத்தில்தான் தங்கள் ஆய்வை மேற்கொண்டிருக்கிறார்கள். கிட்டத்தட்ட ஒரு மைல் ஆழம் கொண்டது இந்த ஆய்வுச் சுரங்கம். செனான் என்ற தனிமம் திரவ வடிவில் இந்தச் சுரங்கத்துக்குள் பிரம்மாண்டமான ஒரு தொட்டியில் வைக்கப்பட்டிருக்கிறது.

இந்த பிரபஞ்சத்தின் நிறையில் பெரும்பான்மையான அளவில் இருப்பதாகக் கருதப்படும் கரும்பொருளைக் கண்டுபிடிப்பதற்கான இவர்களது ஆய்வும் ஆய்வுக்கான தளவாடங்களும் சமீபத்தில் மேம்படுத்தப்பட்டிருக்கின்றன. ஆம், மேம்படுத்தும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக முக்கால் தொன் அளவுள்ள செனான் தொட்டியை -150 பாரன்ஹீட் அளவுக்குக் குளிர்வித்திருக்கிறார்கள்.

கரும்பொருளின் துகள் செனான் அணுவுடன் மோதுமென்றால், கண நேரத்துக்கு மட்டும் ஒளிரக்கூடிய ஒரு பளிச் ஒலி உருவாக்கக்கூடும் என்ற நம்பிக்கையில்தான் இப்படிச் செய்திருக்கிறார்கள். "கரும்பொருளை இன்னும் நாங்கள் கண்டுபிடிக்கவில்லை என்றாலும் எந்தெந்த வழிமுறைகளால் கரும்பொருளைக் கண்டறிவது சாத்தியமில்லை என்பதை ஆராய்ந்து மற்ற வழிமுறைகள் பலவற்றை நாம் கழித்துக்கட்டியிருக்கிறோம்; இதுவே ஒரு நல்ல செய்திதான்" என்கிறார் மர்ஃபி.

கரும்பொருளைக் கண்டுபிடிக்கும் நம்பிக்கையில் ஏராளமான ஆய்வுகளும் வழிமுறைகளும் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. "மிக விரைவில் ஒரு சமிக்ஞையை நாங்கள் கண்டுபிடிப்பதற்கான சாத்தியங்கள் நிறையவே இருக்கின்றன. அதைப் போலவே, இதற்கு நீண்ட காலம் பிடிக்கக்கூடிய சாத்தியமும் இருக்கவே செய்கிறது" என்கிறார்கள் ஆய்வாளர்கள். கரும்பொருள் என்றொரு விடயம் இருக்கிறது என்பது இயற்பியலாளர்களின் நம்பிக்கை. விண்மீன்கள் மீதும் விண் மீன் திரள்களின் மீதும் கரும்பொருள் செலுத்தும் ஈர்ப்பு விசையின் ஆதிக்கத்தை வானியலாளர்களால் கணிக்க முடிகிறது. இதன் அடிப்படையில்தான் கரும்பொருள் மீது நம்பிக்கை கொள்கிறார்கள். கரும்பொருளைக் கண்டறிவதில் உள்ள பிரச்சினை என்னவென்றால் அது கண்ணுக்குப் புலனாகாததோடு மட்டுமல்லாமல் நேரடியாகவோ மறைமுகமாகவோ இதுவரை அதைக் கண்டுபிடிக்க முடிந்ததே இல்லை.

மிகக் குறைவான வலுவுடன் தங்களுக்குள் ஊடாடிக்கொண்டிருக்கும் நிறைமிகுந்த அணுத்துகள்களைக் கொண்டது (Wimps weakly interacting massive particles) என்று கரும்பொருளைப் பற்றி விஞ்ஞானிகள் ஓர் உத்தேச வரையறையை உருவாக்கியிருக்கிறார்கள். இந்த அணுத்துகள்கள் எல்லாம் பெருவெடிப்பின்போது மீந்தவை என்று கருதப்படுகின்றன. எல்லாப் பருப்பொருள்களின் ஊடாகவும் எளிதில் கடந்து செல்லும் இந்த அணுத்துகள்கள் எந்தவிதமான தடத்தையும் விட்டுச் செல்வதில்லை. விதிவிலக்காக, ஈர்ப்புவிசையில் மட்டுமே கரும்பொருள் தனது தடத்தை விட்டுச் செல்லும். கரும்பொருளையும் கண்டறிந்துவிட்டோம் என்றால் அத்தோடு எல்லாம் முடிந்துவிடாது. இயற்பியலின் ஆழத்தினுள்ளே அப்படி என்னதான் இருக்கிறது என்று ஒளியைப் பாய்ச்சுவதற்கான அடிப்படையே கரும்பொருள்தான். கரும்பொருளைக் கண்டுபிடித்த பிறகுதான் இன்னும் பல விடயங்களை நாம் தேடவேண்டியிருக்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் வேண்டாம் என்கிறார் எடின்பர்க் பல்கலைக்கழகத்தின் மர்ஃபி. தெற்கு டகோட்டாவைச் சேர்ந்த விஞ்ஞானிகளின் ஆய்வகத்துக்கு லக்ஸ் (LUX Large Underground Xenon) என்று பெயர். கரும்பொருள் வேட்டையில் இவர்கள் மட்டும் ஈடுபட்டிருக்கவில்லை. ஆஸ்திரேலியாவில் விஞ்ஞானிகளின் குழு ஒன்று ஒரு தங்கச்சுரங்கத்துக்குக் கீழே உலகின் அதிநவீன கரும்பொருள் உணர்மானியை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். கரும்பொருள் இருப்பதற்கான மறைமுகமான தடயம் ஏதாவது கிடைக்குமா என்ற நம்பிக்கையில் அண்டவெளியில் உள்ள சர்வதேச விண்வெளி நிலையத்திலும் ஓர் உணர்மானியை நிறுவியிருக்கிறார்கள். நிச்சயம் இது பெரும் போட்டிதான் என்கிறார் மர்ஃபி. மற்ற ஆய்வகங்கள் துள்ளிக் குதித்து அறிவித்த ஆய்வு முடிவுகளெல்லாம் தவறானவை என்று லக்ஸ் ஆய்வகத்தின் முடிவுகள் நிராகரித்திருப்பதை அவர் சுட்டிக்காட்டுகிறார். ஆயினும், "போட்டியாளர்களில் யாரேனும் ஒருவர் கரும்பொருளின் திட்டவட்டமான, தெளிவான சமிக்ஞையைக் கண்டறிந் தாலும் நாங்கள் பெரிதும் மகிழ்ச்சி கொள்வோம்'' என்கிறார் மர்ஃபி. அடுத்த சில ஆண்டுகளில் லக்ஸில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன. அப்போது 10 தொன்கள் அளவு திரவ செனானும் லக்ஸுக்குக் கிடைக்கும். இந்த செனானைக் கொண்டு லக்ஸ் ஜெல்பின் என்ற பெயருடைய புதிய உணர்மானியாக இது உருவாகும். இந்த ஆய்வில் உள்ள தொழில்நுட்பச் சவால்கள் காரணமாக ஆய்வு முடிவுகளுக்காக நாம் 2018 வரை காத்திருக்க வேண்டும். "10 தொன்கள் திரவ செனானைப் பூமிக்குள் ஒரு மைல் ஆழத்துக்கும் கீழே பாதுகாப்பாக வைத்திருப்பது பெரும் சிரமம். விலையுயர்ந்த திரவம் என்பதால் ஏதாவது விபத்து ஏற்பட்டால் பொருளாதார ரீதியிலான இழப்போடு நின்றுவிடாது; இவ்வளவு அதிக அளவுள்ள கிரையோஜெனிக் வாயு மிகவும் ஆபத்தானது கூட. ஆகவே, எள்ளளவும் பிசகுக்கு வாய்ப்பில்லாத அமைப்பை நாம் நிறுவியாக வேண்டியிருக்கிறது" என்கிறார் மர்ஃபி. இப்படி இவர்களெல்லாம் கரும்பொருளைத் தேடிக்கொண்டிருக்க, அறிவியல் மேம்பாட்டுக்கான அமெரிக்கக் கூட்டமைப்பில் (ஏ.ஏ.ஏ.எஸ்) உள்ள ஆராய்ச்சியாளர்கள் வேறொரு மர்மமான அணுத் துகளைத் தேடிக்கொண்டிருக்கிறார்கள்; நான்காவது வகை நியூட்ரினோதான் அது. வழக்கமான நியூட்ரினோக்கள் போலல்லாமல் வலுக் குறைந்த மின்னூட்டத்தைக்கூடக் கொண்டிராத நியூட்ரினோ ரகம் இது. இந்த வகை நியூட்ரினோ தேடலில் கணிப்புகளுக்கும் அவதானிப்புகளுக்கும் இடையே எதிர்பாராத வேறுபாடு இருப்பதாக பெர்க்லியில் உள்ள கலிஃபோர்னியா பல்கலைக்கழகத்தின் காம்–பியு லுக் தெரிவித்திருக்கிறார்.



பல தசாப் தங்களாகத் தாங்கள் தேடியதை இறுதியில் கண்டறிந்துவிட்ட விஞ்ஞானிகளுக்கும் கூட இன்னும் பிரச் சினை தீர்ந்த பாடில்லை. ஒரு வகையில் நாங்க ளெல்லாம் பணி வாழ்க்கை குறித்த ஒரு சிக்கலைத் தற்போது எதிர்கொண் டிருக்கிறோம்

புதிய நியூட்ரினோக்கள் கண்டுபிடிக்கப்பட வேண்டும் என்றும், அப்படிக் கண்டுபிடிக்கப்பட்டால் பருப் பொருளுக்கும் (matter) எதிர்பொருளுக்கும் (antidmatter) இடையே உள்ள உறவைப் பற்றி விஞ்ஞானிகள் அறிந்துகொள்ள ஏதுவாக இருக்கும் என்றும் பிரபஞ்சவியலாளர் ஓல்கா மீனா ரெக் வீஹோ கூறுகிறார்.


"பல தசாப்தங்களாகத் தாங்கள் தேடியதை இறுதியில் கண்டறிந்துவிட்ட விஞ்ஞானிகளுக்கும்கூட இன்னும் பிரச்சினை தீர்ந்தபாடில்லை. ஒரு வகையில் நாங்களெல்லாம் பணி வாழ்க்கை குறித்த ஒரு சிக்கலைத் தற்போது எதிர்கொண்டிருக்கிறோம்" என்கிறார் டிம் ஏண்டீன். ஜெனீவாவில் உள்ள லார்ஜ் ஹாட்ரான் கொலைடர் என்ற அணுத்துகள் தாக்குவிப்பானில் 2012இல் ஹிக்ஸ் போஸானைக் (கடவுளின் துகள்) கண்டுபிடித்த நூற்றுக்கணக்கான விஞ்ஞானிகளில் இவரும் ஒருவர்.

"தேடுவதற்கும் கடமையாற்றுவதற்கும் எங்களுக்கு அப்போது ஒரு விடயம் இருந்தது. நாங்கள் தேடிய விடயமும் எங்களுக்குக் கிடைத்தது (அதாவது ஹிக்ஸ் போஸான்). நாங்கள் ஏதும் கண்டுபிடித்திருக்கவில்லை என்றால் எங்கள் பாடு உண்மையிலேயே திண்டாட்டமாக ஆகியிருக்கும்" என்கிறார் டிம்.

ஆஸ்டினில் உள்ள டெக்ஸாஸ் பல்கலைக்கழகத்தில் தற்போது பணிபுரியும் டிம், புதிய ஆய்வுகளுக்கான எல்லைகள் இன்னும் விரிந்திருக்கின்றன என்கிறார். "இனி ஹிக்ஸ் போஸானைத் தேடிக்கொண்டிருக்க வேண்டியதில்லை. ஹிக்ஸ் போஸானோடு எல்லாத் தேடலும் முடிவுக்கு வந்துவிடவில்லை என்பதையும் நாங்கள் அறிந்திருக்கிறோம்" என்கிறார் டிம்.

மிருசுவில் தமிழ்தாசன்

புதிய நகைச்சுவைத் தொடர் 2



# ராசியில்லாத ராசா



ஊரிலுள்ள சிலர் என்னை ஓர் அலுக் கோஸ் என்று சொல் வதைக் கேட்டிருக்கின்றேன். அவர்கள் தீர்க்கதரிசிகளோ தெரி யாது. எனக்கென்னவோ அலுக் கோஸ் வேலை எனக்குக் கச்சித மான பொருத்தம் என்றே பட்டது. அதனால்தான் அந்த வேலைக்கு விண்ணப்பம் எழுதிப் போட்டேன். ஆனாலும் அந்த வேலை எனக்குக் கிடைக்கமுன்பே ஊரவர்கள் என்னை அலுகோஸ் என ஏன் சொன்னார்கள் என்று இதுவரை யில் எனக்குத் தெரியவே தெரியாது. அதுசரி! அலுகோஸ் என்றால் சாவுத்தண்டனை நிறைவேற்றுகிற ஆள் என்று எனகுப் பிறகுதான் தெரி யும். சாவுத்தண்டனைக் கைதி யின் கழுத்தைக் பிடித்துக் கயிற்றுக்குள் கொழுவிச் சுருக் கேற்றி அவனைப் பரலோகத்துக்கு அனுப்புவது! ஐய்யய்யோ! இது ஒரு பாவமான வேலை. அது மட்டுமல்ல நான் ஒரு பலவீனப்பட் டவன். சாவுத்தண்டனைக் கைதி யானவன், நிச்சயமாக என்னை விடப் பலம் வாய்ந்தவனாகவே இருப்பான். கொலையோ கொள் ளையோ, போதை மருந்து கடத்தி யவனோ! எப்படியும் மிகப்பயங்கர மானவனாகத் தானிருப்பான். அப்படிப்பட்டவனின் கழுத்தைப் பிடித்துக் கயிற்றில் கொழுவிவிடக்கூடிய உடற்பல மும் மனத்தைரியமும் என்னி டம் இருக்கிறதா? இல்லவே யில்லை.

நான் ஒரு பயந்தாங்கொள்ளி. கைதி பலசாலியாயிருப்பான் என்றால் என்னுடைய தலை யைப் பிடித்துக் தூக்குக் கயிற் றில் மாட்டிவிட்டு அவன் தப்பி யும் விடக்கூடும். இது மிகமிக ஆபத்தான வேலை. வேண்டா மிது என்று மனத்தை மாற்றிக் கொண்டேன்.

இந்தவேளையில் நான் எதிர் பார்த்தபடி ஓர் அருமையான வேலை! எருமைகளே செய்யக் கூடிய மிக இலகுவான வேலை. மூளை தேவையில்லை. உடற்பலமும் அவ்வளவு தேவைப்படாது. கொல்லன் கம் மாலையில் துருத்தி ஆட்டுவதுதான் கிடைத்த வேலை. எனக்குப் பொருத்தமான வேலை. பாடிப்பாடி மெல்ல மெல்ல ஆட்டிக் கொண்டி ருக்கலாம்.

சம்பளமும் மெல்ல மெல்ல ஆடிப் பாடித்தான் வரும். சரி என்னவென் றாலும் வந்து தொலையட்டும். வேலை மட்டும் கஷ்டமில்லாமல் இருந்தால் சரி. எப்படியோ வேலை யொன்று தேடித்தான் விட்டேன். ஆனால் மீண்டும் ஒரு பிரச்சினை தலைவிரிகோலமாக என் முன்னே வந்து நின்று சன்னதமாடிக் கொண்டிருந்தது. பிரச்சினை யென்பது என்னுடன் ஒட்டிப்பிறந்த ஒன்று. ஒன்று போனால் ஒன்று வந்து கொண்டேயிருக்கும். பிரச்சி னைகள் தானாக வருவதுமுண்டு. நானாகத் தேடிக்கொள்வதுமுண்டு. மொத்தத்தில் நானொரு பிரச்சி னையின் வடிவம். இப்போது வேலை கிடைத்து விட்டது. அதில் பிரச்சினையில்லை. வேலைக்குப் போய்வருவதில்தான் பிரச்சினை.

தெருவீதியில் வெள்ளம் பாய்ந் தோடவில்லை. வேறெந்த வில்லங்கங்களுமில்லை. இருந் தும் போய்வருவதில் எனக்கு நிறை யக் கஷ்டங்களிருந்தன.

என்னுடைய ஊர் ஒரு பஸ் சேவையில்லாத புறம் போக்கானது. அங்கேயிருந்து பட்டினம்போவ தென்றால் சைக்கிள், அல்லது மோட் டார் சைக்கிளிலோ அல்லது வேறு ஏதாவது தனியார் வாகனங் களிலோதான் செல்ல வேண்டும். என்னிடம் ஒரு சைக்கிள்கூட இல்லை. சரி இருக்கின்றது என்று ஒரு பேச்சுக்குச் சொன்னாலும் நிலைமை இதேதான். என்னால் சைக்கிள் ஓட்ட முடியாது. என்னை விட வயதில் குறைந்த சிறிசுகளெல் லாம் மோட்டார் சைக்கிளில் சேக்கஸ் காட்டி ஓடித்திரிகின்றார்கள். ஆனால் எனக்கு இருபத்தொரு வயதாகியும் சாதாரண சைக்கிள்கூட ஓட்ட முடியவில்லை. அந்தச் சனி யனைப் பழகிவிட வேண்டுமென்று ஆசைப்பட்டேனே ஒழியக் கிடைத் தது நல்ல பூசை மட்டும்தான். சைக்கிள் ஓட்டப் பழகிய நாள்களில், அன்றொரு நாள் சரவணமுத்துச் சட்டம்பியாரின் இரண்டு கால்களுக் கிடையில் சைக்கிளின் முன் சில்லை நுழைத்து...! பாவம்! அந்த மனிதரை அடித்து மோதித் தலை குப்புறவிழுத்தி....! கடவுளே! படக் கூடாத இடத்தில் அடிபட்டு அவர் ஊரெடுபடக் கத்த வீதியில் போனவர் வந்தவர்கள் என்னைப் பார்த்துக் கத்தியதுடன் நிற்காது என்னைத் துரத்தோ துரத்தென்று ஓட ஓட விரட்ட நான் சைக்கிளையும் அப்படியே நிலத்தில் போட்டுவிட்டு ஓர் ஓட்டப் பந்தய வீரனாக ஓடி அப்போதைக்கு எப்படியோ தலை மறைவாகிக் கொண்டேன். சரவண முத்துச் சட்டம்பியாருக்குப் பொறுத்த இடத்தில் பலமான அடி. அவசரமாக அவரைக் கொண்டு போய் அவசர சிகிச்சைப் பிரிவில் வைத்து அவசரமாகச் சிகிச்சை செய்ததில் எப்படியோ தப்பி வந்து விட்டார். இது போதாதென்று நான் ஓடிப் பழகிக் கொண்டிருந்த சைக்கிள் திடீரென்று என்னுடைய கட்டுப் பாட்டை இழந்து தொலைத்து அது வீதியெங்கும் கோணல் மாணலாக ஓடித் தன்பாட்டுக்குச் சிவனே என்று நடந்து போய்க் கொண்டிருந்த செல்வ ராணியக் காவின் பின்புறத்தில் அச்சொட்டாக மோதிவிட அவள் முகம் குப்புறவிழுந்து விசர் நாய் மாதிரி ஊளையிட்டுக்கத்த, வாயெல்லாம் வெண் நுரை கக்க அவளின் பொன் மூக்குடைந்து முகமெல்லாம் சிவப்புச் சமாச்சாரம் தாராளமாகக் கொப்புள்ளிக்க நான்,



## எடதம்பி எழுந்திரடா...

பாதயோர பச்சை வடலி
புளுதி தின்று செந்நிறமாகுது
பயணிக்கும் மனித விழிகள்
மண்ணில் மூடுது.

நெடுஞ்சாலைகள் நெடுக்கீது
குறுந்தெரு குழியாகுது
குலபேதத்தால் வந்த கேவலமோ
பேரவலத்தில் எம் மக்கள்.

வாய்கிழிய வாக்குறுதியளிச்சு
வாக்குக் கேட்டு
வாசலில் நாக்குத்
தொங்கவிட்டோரே
வதைகிறது மனம் பாதை
சிதைவதால் தெரிகிறதா உமக்கு இது!
உள்ளூரில் ஆட்சி புரிந்த
நாக நாயகியே
உருக்குலைந்த ஊர்
நிலையறியாது
உமக்கென்ன சேவை

தெருவிளக்கு ஒளிரவில்லை
குடிசை வாழ்வு முடியவில்லை
தேவை எவையும் தீரவில்லை
தேவை தானா வடக்கின் வசந்தம்

ஊரின் நிலை கண்டு
உள்ளம் வலி கொண்டு
ஊனுறக்கமின்றி -
வெஞ்சிறையில் உளலுகிறேன் - என்
உறவுகளை எண்ணி

என்னினிய இளைஞர் சேனையே
படுத்துக் கிடந்தால்
பக்கத்து வீதியில் தான்
பாய் விரிக்க வேண்டிவரும்

சோம்பலை முறித்து
சுயமாய் எழுந்து சமூகத்தின்
சங்கடங்களை
சாமார்த்தியமாய் பேசி
சாதித்திவோம் விரைந்திடுவீர்
எல்லை எதுவெனப்
பார்த்திடுவோம்.



சிரிக்க சிந்திக்க சில வரிகள்

# திரும்பி வந்த அலிகேஷன்

■ கலாபூசணம் மு.மாசிலாமணி

"காக்கைக்கும் தன்குஞ்சு பொன் குஞ்சு" என்பர். இதன் நேரடி அர்த்தத்தை விளக்கவேண்டியதில்லை. மனிதர்கள் தமது உறவுகளைப் பெரும் ஆசையுடன் நேசிப்பர்.

அப்படி நேசிக்கப்படும் பொருள் உயிர் உள்ளதாகவோ அல்லது உயிர் அற்றதாகவோ இருக்கலாம். சுற்றி வளைப்பானேன்! இன்று உங்களுக்கு நான் சொல்ல வருவது மாரிமுத்து



ஆசையுடன் வளர்த்து வரும் நாய்க்குட்டியைப் பற்றிய கதை.பீதாம்பரம் பிறக்கிறாசியார் வீட்டிலை அடிக்கடி தொட்டாட்டு வேலைகள் செய்யப்போகும் மாரிமுத்துவுக்கு அங்குள்ள அல்சேஷன் நாய்போல் தானும் ஒரு நாய் வளர்க்க வேணும் என்பது சின்னச் சின்ன ஆசையல்ல; பெரிய ஆசை. மாரிமுத்து தனது நண்பன் ஊத்தைக்குமாரிடம் இந்த ஆசை பற்றிச் சொல்லி வைத்திருந்தான்.

மாரிமுத்துவின் அப்பாவித்தனத்தைப் பயன்படுத்தி ஊத்தைக்குமார் அவனுக்கு உள்ளூர் நாய்க்குட்டி ஒன்றை, மலிவான அல்சேஷன் என்று சொல்லிப் பெரும் தொகைக்கு விற்றுவிட்டான். இந்த விடயத்தைச் செல்லப்பாவிடம் சொல்லாமல் சஸ்பென்ஸ் ஆக வைத்திருந்தான் மாரிமுத்து.

தான் பிடிச்ச முயலுக்கு மூன்று கால் என நிற்கும் மாரிமுத்து, தன்ரை நாய்க்குட்டி ஓர் 'அலிகே-ன்' நாய்க்குட்டி என ஊர் முழுவதும் சொல்லித் திரிந்தான். அல்சேஷன் என அவனது நாக்கு உச்சரிக்க மறுத்து விட்டதால் அது 'அலிகே-ஷனாக' வலம் வந்தது. பிற்காலத்தில்

அந்த நாய்க்குட்டியின் அட்டகாசத்தால் ஊரார் பல அலிகேஷன்களை விதானையாரிடம் கொடுக்க, மாரிமுத்து கலங்கிப் போனார். அலிகேஷன் என்றால் ஆங்கிலத்தில் குற்றச் சாட்டு என அறியாத அப்பாவி மாரிமுத்து கடைசியில் செல்லப்பாவிடம் சரணடைந்து உண்மையைக்கூறி அலிகேஷனை எப்படி அகற்றலாம் என ஐடியாகேட்டார். செல்லப்பாவின் மனைவி பூமணியும் மாரிமுத்துவின் துயரைப் போக்க அவர்களது கலந்துரையாடலில் பங்கேற்று இறுதியில் நாய்க்குட்டியை யார் கண்ணிலும் படாதவாறு கல்லுண்டாய்வெளியில் கொண்டு போய் விட்டுவிட்டு வருவது எனத் தீர்மானம் நிறைவேற்றினர். மாரிமுத்துதான், அந்த கைங்கரியத்தைச் செய்வது எனவும் முடிவு எடுக்கப்பட்டது. செல்லப்பாவும் மாரிமுத்துவும் இணைபிரியாக் கூட்டாளிகள் என்பதால், ஊரார் தமது அலிகேஷன்களை வாபஸ் பெற்றுவிட, மாரிமுத்து தனது செல்ல நாய்க் குட்டியை நல்ல நாளாய்ப் பார்த்து அதற்குப் பிரியமான மீன்குழம்பும் சோறும் ஊட்டியபின் கல்லுண்டாய் வெளியில் விட்டு விட்டு சோகமே உருவாக வீட்டுக்குள் முடங்கி விட்டார். பல நாள்களாக செல்லப்பா வீட்டுக்கு வராததால் மாரிமுத்துவுக்கு என்ன நடந்தது என செல்லப்பாவின் மனைவி பூமணி கேட்க செல்லப்பா விசயம் அறிய மாரிமுத்து வீட்டுக்குப் போனார். அங்கு மாரிமுத்து புதுசாரம் புதுசேட் போட்டுக் கொண்டு "செல்லப்பாண்ணை வாங்கோ" என வரவேற்றார். "உங்களிட்டை வரவேணும் எண்டு வெளிக்கிட, கும்பிடப்போன தெய்வம் குறுக்கை வந்தமாதிரி வந்திட்டியள்" எண்டார்.

என்ன விசயம் எனக்கேட்க "இண்டையோடை என்ரை அலிகேஷனை அகற்றி இரண்டு கிழமையாச்சு. அதுதான் உங்களுக்கு ஒரு பாட்டி வைக்க... என்று ஏற்கனவே வாங்கி வைத்திருந்த இரண்டு போத்தல் கள்ளைக் காட்டினார். இருவரும் ஆண் பனைக் கள்ளை அனுபவிச்சுக் குடிக்க குசினிப் பக்கம் பானை சட்டி உருளும் சத்தம் கேட்க மாரிமுத்து சொன்னார் "அண்ணை கள்ளப்பூனை யின்ரை அட்டகாசம் தாங்கேலாது, எதுக்கும் பார்த்துக் கொண்டு வாறன்" எனக் குசினிக்குள் ஓடியவர் "ஐயோ அண்ணை! என்ரை அலிகேஷன் திரும்பி வந்துட்டான்" என்றார்.

## ரா[illegible]பில்லாத ராசா....

(தொ[illegible]ச்சி)

கணக்கர் கந்தையரின் வேலி பாய்ந்து உயரம் பாய்தலில் சாதனை படைத்து நீளம் பாய்தல், தடையோட்டமென்று அத்தனை நிகழ்வுகளையும் கச்சிதமாக முடித்து வெற்றிகரமாக என் வீட்டுக்குள் நுழைந்தேன். அதேவேகத்தில் வந்த அம்பலவாணியும் மின்னி மிளாசி, என் சட்டையைப் பிடித்திழுத்துச் சுமார் அரை மணி நேரமாக எனது பலவீனமான உடலில் தனி மிருதங்க ஆவர்த் தனம் செய்து விட்டுப் போனார். மூன்று நாள்களாக படுக்கையை விட்டெழுந்திருக்க முடியாத வலி.

சைக்கிள் மட்டுமல்ல எந்த விதமான வாகனங்களையும் ஓட்டப்பழகும் வேளைகளில் இதுபோன்ற விபரீதங்கள் ஏற்படுவது இயல்பானதுதானே என்று ஏகாம்பரம் வாத்தியார் வந்து நின்று சமரசம் பேசி ஓர் எரிக்சொல் ஹெய்ம் ஆகியிருந்தார். ஏகாம்பரம் வாத்தியார் ஊரில் ஒரு மரியாதையானவர். அவருடைய சொல்லை நாலுபேர் மதிப்பார்கள். அதன் காரணமாக என்னை மீண்டும் மிதிக்காமல் போய்விட்டார்கள். இது உண்மையிலேயே ஒரு தெய்வச் செயல். இருந்தும் இந்தப் பிரச்சினை இத்துடன் நின்று விடவில்லை. மீசாலைப் பலா மரத்துப் பலாக் காய்ப் பால்போல இழுபட்டுக் கொண்டிருந்தது.

இனிமேல் எந்தக் காரணம் கொண்டும் நான் சைக்கிள் பழகவோ ஓட்டவோ கூடாது. இதை மீறினால் கண்ட இடத்தில் வைத்துக் கண்டதுண்டமாக வெட்டப்படுவேன். அல்லது கண்ட இடத்தில் எனது தலை கழற்றி எடுக்கப்படும். இது மிகவும் கடுமையான உத்தரவாக ஊரவர்களால் பிரகடனப்படுத்தப்பட்டிருந்தது. இதனை மீறி நடக்க என்னுடைய உடலிலோ உள்ளத்திலோ தைரியமில்லை. அன்றைக்கே முடிவெடுத்துக் கொண்டன், இனிமேல் சைக்கிள் ஓட்டுவதில்லை என்று. வேலைக்குப் போவதற்கு மூன்று கிலோ மீற்றர் தூரம் நடக்க வேண்டும். திரும்பி வர மூன்று கிலோ மீற்றர். தினமும் ஆறு கிலோ மீற்றர் தூரத்தைக் கால்கோச்சியாக நடந்து முடிக்கவேண்டும். வேறென்ன செய்ய! வேலை வேண்டுமென்றால் நடக்கத்தான் வேண்டும். நடப்பது நடக்கட்டும்.



## தவக்காலம்

மன்னிக்கும் காலம் மக்கள்
மனம்திருந்தும் காலம்
திருந்தி வாழும் காலம் தீங்கு மறந்த காலம்
திமிர் பிடித்த மனமும் தீராப் பகையுணர்வும்
உண்மையில்லாத் தன்மையும்
ஊருடன் பகையும்
வாதுசூது நிறைந்த வக்கிர புத்தியும்
மனித நேயத்துக்கு மாறான வாழ்க்கையும்
இல்லாது வாழ்ந்து இறையருள் பெற்றிடத்
தவசுக் காலத்தில் சத்தியம் செய்வோம்


மாக்களாக அன்றி மக்களாய் வாழுங்கள்
இயேசு வின் இறைவாழ்வை
எண்ணிப் பாருங்கள்
இறையருளோடு என்றும் ஒப்புரவாகுங்கள்
செய்த பாவங்களுக்கு மனம் வருந்துங்கள்
வந்த வழியில் தடுமாற்றமிருந்தாலும்
செல்லும் பாதையில் தெரிந்து அடி வையுங்கள்
பகிர்ந்துண்டு வாழக் கற்றுக் கொள்ளுங்கள்

பாவ அறிக்கை செய்து கொள்ளுங்கள்
ஆண்டவர் மீது நம்பிக்கை வையுங்கள்
அவரது குரலுக்குச் செவி சாயுங்கள்
ஏமாற்றி வாழ்வதை விட்டொழியுங்கள்
எக்காலும் அடுத்தவரை நேசியுங்கள்
தன்னையுணர்ந்த "சகேயு"
வைப்போல்
மனந்திருந்தி மகிமை பெறுங்கள்
தம்பட்டம் அடித்து வாழோம் என்று
தவக்காலத்தில் சத்தியம் செய்யுங்கள்

பட்டம் பதவி, பணம், பொருளுக்காகப்
படுபாதகங்கள் செய்வதைத்
தவிருங்கள்
"இயேசுவே உயிர்த்தெழுதலும்
உயிருமாயிருக்கிறார்"
இந்த உண்மையை என்றும்
உணருங்கள்

*- கந்த பேரின்பம் தீவான்*

# அனான்சிக்குக் கிடைத்த அறிவுப் பானை!



முன்னொரு காலத்தில் வானுலகின் கடவுளான நியாமி பூமிக்கு வந்தார். அனான்சி எனும் ஒரு சிலந்திக்கு வித்தியாசமான பரிசு ஒன்றைக் கடவுள் கொடுத்தார். அது ஒரு அதிசயப் பானை. அந்தப் பானையில் உலகில் உள்ள ஒட்டுமொத்த அறிவும் நிரம்பிக்கிடந்தது.

தான் கொடுத்த அறிவுப் பரிசை உலகில் இருக்கும் எல்லோரிடமும் பகிர்ந்துகொள்ள வேண்டும் என்று நியாமி கடவுள் அனான்சியிடம் சொன்னார். அதற்கு அனான்சியும் ஒத்துக்கொண்டது.

அந்தப் பானை முழுவதும் அற்புதமான திறமைகளும், கருத்துகளும் நிரம்பிக் கிடந்தன. பானைக்குள்ளே பார்த்து தினமும் ஏதாவது ஒரு புதிய விடயத்தை அனான்சி கற்றுக்கொண்டது. ஆனால், அனான்சி இயல்பிலேயே மிகவும் சுயநலத்தோடும் பேராசையோடும் இருந்தது. அதனால், அதிசயப் பானை மூலம் தனக்குக் கிடைத்த அறிவை மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ள அது விரும்பவில்லை. பானையில் இருக்கும் எல்லா அறிவும் எனக்கு மட்டும்தான் சொந்தம். அதை எங்கேயாவது மறைத்து வைத்துவிடுவேன். எனக்குக் கிடைத்த அறிவை எவருடனும் பகிர்ந்துகொள்ள மாட்டேன் என்று மனதுக்குள் நினைத்துக் கொண்டது அனான்சி.

ஒரு நாள்–

அந்த அதிசய அறிவுப் பானையை ஒளித்து வைப்பதற்காக அனான்சி இடத்தைத் தேடியது. ஒரு வழியாக, ஒரு பெரிய மரத்தின் உச்சியில் உள்ள கிளையில் பானையை மறைத்து வைக்கலாம் என்று அது முடிவு செய்தது. மரத்தின் கொடிகளை ஒன்றாக்கி வலுவான ஒரு கயிறு செய்தது. அந்தக் கயிற்றால் பானையைத் தன் உடலோடு சேர்த்துக் கட்டிக்கொண்டது. அந்தப் பானையை தன் வயிற்றில் கட்டிக்கொண்டது.

பானையுடன் சேர்ந்து அது மரத்தின்மேல் மெதுவாக ஏறத் தொடங்கியது. ஆனால், பானையை வயிற்றில் வைத்துக்கொண்டு மரம் ஏறுவது அனான்சிக்கு மிகவும் கஷ்டமாக இருந்தது. ஒவ்வொரு முறையும் அது ஏறும்போதும், பானை மரத்தில் இடிப்பட்டது. அதனால், அனான்சிக்கும் அடிபட்டது. இதை மரத்துக்குக் கீழே இருந்து அனான்சியின் மகன் நீண்ட நேரமாகப் பார்த்துக் கொண்டிருந்தான்.

சிறிது நேரம் கழித்து, அனான்சியை மகன் அழைத்தான். அப்பா, நீங்கள் அந்தப் பானையை ஏன் முதுகில் கட்டிக்கொண்டு ஏறக் கூடாது? அப்படி ஏறினால் பானை மரத்தில் இடிபடாது. நீங்களும் சுலபமாக மரம் ஏறலாமே என்றான்.

அனான்சி தன் மகன் சொன்ன யோசனையை உடனே பின்பற்றியது. மகன் சொன்னதுபோல, இப்போது மரம் ஏறுவது மிகவும் சுலபமாக இருந்தது. கொஞ்ச நேரத்திலேயே அது மரத்தின் உச்சிக்குப் போய்விட்டது. ஆனாலும், அனான்சிக்கு மிகவும் கோபம்.

ஒரு சின்ன பையனுக்கு என்னைவிட அதிகமான அறிவு இருக்கே அப்படியானால் இந்த அறிவுப்பானையை வைத்திருப்பதில் என்ன பயன்? என்று மனதில் நினைத்துக் கொண்டது. நினைத்தவுடனேயே அறிவுப் பானையை மரத்தின் உச்சியிலிருந்து கீழே போட்டது அனான்சி.

கீழே விழுந்த பானை சுக்குநூறாக உடைந்தது. பானைக்குள் இருந்த அறிவு முழுவதும் பல திசைகளில் பறந்து சென்றது. உலக மக்கள் எல்லோரும் ஏதோவொருவிதத்தில் அறிவுத்துகள்கள் சிதறிக் கிடப்பதைப் பார்த்தார்கள். அந்த அறிவைச் சேகரித்து தங்கள் நண்பர்களுடனும் குடும்பத்தாரோடும் பகிர்ந்து கொண்டார்கள்.

அன்றிலிருந்து இன்றுவரை, எந்த ஒரு மனிதனும் உலகின் மொத்த அறிவையும் பெறவில்லை. அதனால்தான், உலகம் முழுவதும் மக்கள் தங்களுடைய அறிவை மற்றொருவர்களுடன் பகிர்ந்துகொள்கிறார்கள். அறிவைப் பகிர்ந்து கொள்வதால் அது பெருகவும் செய்கிறது.



எஸ். அனிருத்தன்,
தரம் - 5,
யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி.



சிவகுகன் பிருத்வி,
தரம் -1
கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை.

## எறும்புகள்

- உங்களைச்சுற்றி எப்போதும் ஓடிக்கொண்டிருக்கும் சிற் எறும்புகளைக் கவனித்திருக்கிறீர்களா? மற்ற பூச்சிகளைப் போலவே எறும்புகளுக்கும் ஆறு கால்கள்தான்.
- எறும்புகளின் கால்கள் மிகவும் வலிமையானவை. அதனால்தான் அவை மிக வேகமாக ஓடுகின்றன. எறும்புகளால் தங்களைவிட அதிகபட்சமாக ஐம்பது மடங்கு அதிமான எடையைத் தூக்க முடியும்.
- எறும்புகளுக்கு இரண்டு வயிறுகள் உள்ளன. ஒரு வயிற்றில் தங்களுக்கான உணவையும், மற்றொரு வயிற்றில் பிற எறும்புகளிடம் பகிர்ந்துகொள்வதற்கான உணவையும் வைத்துக்கொள்ளும்.
- உலகம் முழுவதும் 10,000 வகையான எறும்பு இனங்கள் உள்ளன. சில எறும்பு காலணிகளில் ஏழு லட்சத்துக்கு அதிகமான எறும்புகள்கூட வாழ்கின்றன. ஓர் எறும்பின் சராசரி ஆயுள்காலம் 45 நாள்களிலிருந்து 60 நாள்கள்தான்.



## வரலாற்றில் இன்றைய தினம்

1639 – மதகுருஜோன் ஹவார்ட் பெயரில் ஹவார்ட் கல்லூரி தொடங்கப்பட்டது.
1697 – மாயா சுதந்திர அரசாட்சியின் தலைநகர் நொய்பீடின் ஸ்பானிஷிடம் வீழ்ந்தது.
1865 – அமெரிக்க சிவில் போர்; ஆபிரிக்க அமெரிக்கர்களை படையில் பயன்படுத்த அமெ ரிக்க கொன்பிடறேற் சம்மதம் தெரிவித்தது.
1881–ரஷ்ய இரண்டாம் அலெக்ஸாண்ட் அவரது மாளிகைக்கு அருகில் வைத்து குண்டு வீசிக் கொல்லப்பட்டார்.
1897 – சந்தியோகோ ஸ்டேட் பல்கலைக்கழகம் நிறுவப்பட்டது.
1988 – உலகின் மிக நீளமான கடலுக்கடியிலான சீகென் சுரங்கப் பாதை ஜப்பான் ஆமோரி மற்றும் ஹகடேற் இடையே திறந்து வைக்கப்பட்டது.
1988 – எயிட்ஸ் நோயாளிகள் தற்கொலை செய்யும் நடவடிக்கை அதிகரிப்பு.
1988 – பிலிப்பைன்ஸ் அரசியலில் இராணுவம் தலையிடக் கூடாதென அந்த நாட்டின் ஜனாதிபதி எச்சரிக்கை.
1988 – வளைகுடாப் போரின்போது நாள் ஒன்றுக்கு 1000 ஈரானிய வீரர்கள் சாவடைவதாக ஈராக் உரிமை கோரியது.
1991 – அலஸ்காவில் எக்ஸன் வால்டெஷ் எண்ணெய்க் கசிவை துப்புரவு செய்ய ஒரு பில்லியன் அமெரிக்க டொலரை வழங்க எக்ஸன் நிறுவனம் சம்மதித்ததாக அமெரிக்க நீதித் திணைக்களம் அறிவிப்பு.
1996 – ஸ்கொட்லாந்தில் 16 ஆரம்பப் பாடசாலைப் பிள்ளைகளையும் ஒரு ஆசிரியையும் சுட்டுக்கொன்ற மதுபோதைக் கொலையாளி பின்னர் தற்கொலை செய்து கொண்டார்.

# பெண்கள் உணரும் பாதுகாப்பின்மை

பெரும்பாலும் பெண்கள் தினம், தினம் பாதுகாப்பின்மையாக உணர்வது அவர்கள் சார்ந்த விடயத்தில் தான். அவர்களது அன்றாட செயற்பாடுகளில் தான் இவர்கள் மிகவும் அச்சம் கொள்கிறார்கள். சில சமயங்களில் ஆண் அல்லது வேறு துணை இன்றி தாங்கள் செய்யும் வேலைகள் முழுமையாக வெற்றி பெறுமா? என்ற அச்சம் பெண்களிடத்தில் இருக்கிறது. பெண்களால் சிறு சிறு தோல்விகளை கூடத் தாங்கிக்கொள்ள முடிவதில்லை. நிராகரிப்பு ஏற்படும் சமயங்களில் அவர்கள் செய்யும் சிறு தவறுகள் கூட பூதாகரமாக அவர்களது கண்களுக்குத் தெரிகிறது. இதற்கான தீர்வுகள் அவர்களிடத்தில் தான் இருக்கிறது.

பெண்களே தன்னம்பிக்கையும் விடா முயற்சியும் தான் தடைகளை தகர்க்கும் ஒரே கருவி. பெண்களால் தாங்கிக் கொள்ள முடியாத விடயம் தோல்வி. பரீட்சையில் தொடங்கி, வேலை, காதல் உறவு என பெண்களால் பெரிதாய் தோல்விகளையும், நிராகரிப்புகளையும் தாங்கிக்கொள்ள முடியாது. தோல்வியில் இருந்து மனதளவில் மீண்டு வர, நண்பர்கள் மற்றும் சமூகத் தோடு இணைந்து பழக வேண் டும். இதனால் உங்கள் சில மணிநேரங்கள் உங்கள் கவலைகளை மறந்து இருக்கலாம். ஆண்களுக்கு பெண்கள் அதிகமாக தன்னம்பிக்கை ஊட்டுவார்கள். ஆனால், அவர்களிடம் அந்த நம்பிக்கை கொஞ்சம் குறைவாக தான் இருக்கும். இதிலிருந்து அவர்கள் கொஞ்சம் வெளி வர வேண்டும். சூழ்நிலைகள் கண்டு பயந்து ஓடினால் அது நம்மை துரத்திக் கொண்டு தான் வரும். எனவே, பெண்கள் உறவு வேலை சார்ந்து எந்த பிரச்சினை என்றாலும் அதை எதிர்த்து போராடும் குணம் கொள்ள வேண்டும்.



# பெண்களுக்கு எதிரான ஆண்களின் அடக்குமுறை



உலகில் பெண்கள் சந்தித்து வரும் கொடுமைகள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகின்றன. உலகம் முழுவதுமே பெண்கள் மீதான பாலியல் அத்துமீறல்களும், வன் கொடுமைகளும் அதிகரித்திருப்பதாகச் சர்வதேச ஆய்வுகள் அதிர்ச்சி தெரிவித்து இருக்கின்றன.

குழுவாகச் சேர்ந்து ஒரு பெண்ணைப் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்துவது உலகம் முழுவதுமே அதிகரித்துள்ளது என்பது ஆண்களின் வக்கிர மனதையே உணர்த்துகிறது. ஒவ்வொரு அத்துமீறலும், ஒவ்வொரு வன்முறையும் பெண்ணினத்தின் மீதான ஆண்களின் ஆணவப் போக்கையே காட்டுகிறது. பரந்து விரிந்த இந்த உலகத்தில் ஒரு பெண்ணுக்கு எங்குமே பாதுகாப்பு இல்லையா? பெண்களின் உடையணியும் பாங்கு தான் இது போன்ற பாலியல் வன்முறைகளுக்குக் காரணம் என்பது கேட்டுக் கேட்டுப் புளித்துப் போன ஒரு வசனம். பாடசாலைச் சிறுமிகளும், பச்சிளம் குழந்தைகளும் கூடச் சீரழிக்கப்படுகிறார்களே. இவர்கள் அணிந்திருக்கும் ஆடை, ஆண்களின் வக்கிரத்தைத் தூண்டும் அளவுக்கு ஆபாசமானதா? வேலைக்குச் செல்லும் பெண்களின் நிலைமை இன்னும் மோசம். மென்பொருள் நிறுவனமோ, ஆயத்த ஆடைத் தயாரிப்பு நிறுவனமோ எதுவாக இருந்தாலும் பெண்கள், உடல்களாகவே பார்க்கப்படுகிறார்கள். நீதி சொல்லும் இடத்தில் இருக்கிறவர்களும், குற்றங்களைச் சுட்டிக் காட்டுகிற பணியில் இருக்கிறவர்களும் ஆண்களின் அடக்குமுறையில் இருந்தும் அத்துமீறலில் இருந்தும் தப்பிப்பது இல்லை, அடக்கமாக இருக்க வேண்டும், தலை முதல் கால்வரை உடையணிய வேண்டும், ஆறு மணிக்கு மேல் வீட்டை விட்டு வெளியே போகக் கூடாது - இது போன்ற கட்டுப்பாடுகள் தான் பெண்களைக் காக்கும் கேடயமா? வெளியுலகம் தான் பெண்களை வதைக்கிறது என்று வீட்டுக்குள்ளேயே சிறைபட்டுக் கிடந்தாலும் குடும்ப அமைப்பு பாதுகாப்பானதாக இல்லை என்பதுதான் வேதனையின் உச்சம்.

வீடு, பாடசாலை, அலுவலகம், பொது இடம் என்று எங்குப் பார்த்தாலும் பெண்களை உருக்குலைக்கும் ஆபத்துகள் எப்போதும் தயார் நிலையிலேயே இருக்கின்றன. ஆண்கள் மனதில் காலங்காலமாக ஊறிக்கிடக்கும் ஆணாதிக்கமும், பெண்ணை ஒரு போகப் பொருளாக நினைப்பதும், ஆணுக்கு அடிமைத் தொழில் செய்வதற்கே பிறப்பெடுத்தவள் பெண் என்கிற கேவலமான எண்ணங்களுமே பெண்ணுக்கு எதிரான பாலியல் வன்முறைகளின் தோற்றுவாய். முறைப்படுத்தப்படாத சட்டங்களும் இது போன்ற கொடுமைகள் அதிகரிக்கக் காரணம். கடுமையான சட்டங்கள் இருந்தும் அவற்றைச் செயல்படுத்துவதில் ஏற்படும் காலதாமதமே போதும், குற்ற வாளிகள் அடுத்த தவறைச் செய்வதற்கு.

# உரிமை வேண்டும்

மண்ணில் பிறந்திட்ட
மனிதருக்குள்
பெண்ணென்றும்
ஆணென்றும்
பேதமில்லை பெண்ணுக்கு
நாம் அளிக்கும்
உரிமை என்ன?
பொறுமை என்னும்
இலக்கணத்தைப்
போதிக்கின்றோம்
பெண்ணுக்கு இல்லத்தில்
உரிமை வேண்டும்
பேசுதற்கும் ஏசுதற்கும்
உரிமை வேண்டும்
அன்பென்றும்
அறமென்றும் கூற
உரிமை வேண்டும்
பண்புக்கும் பயனுக்கும்
பதிலளிக்க உரிமை வேண்டும்
இல்லத்தின் தெய்வத்தைப்
போற்ற வேண்டும்
இதயத்தின் தெய்வமென
ஏற்ற வேண்டும்
இன்பத்தின் வழிகாட்டியென
வாழ்த்த வேண்டும்
துன்பம் துடைக்கும்
துணைவியென
பாராட்ட வேண்டும்
போதைதரும் கள்ளல்ல
பெண்மை இன்பம்
கண்ணாக மணியாக
ஒளிரும் பெண்கள்
கண்ணியமாய் வாழுதற்கு
உரிமை வேண்டும்
பெண்களுக்கு
எங்கும் எதிலும்
உரிமை வேண்டும்...



# வேற்றுக்கிரக வாசிகள் இருக்கின்றார்களா?

ம.பா.மகாலிங்கசிவம்



பிரபஞ்சத்தில் புத்திக்கூர்மை உள்ள வேற்றுக் கிரகவாசிகளின் நடமாட்டத்தைக் கண்டறிய உலகின் மிகப் பெரிய ரேடியோ தொலைநோக்கியை அமைக்கச் சீனா திட்டமிட்டுள்ளது. சீனாவின் தென்மேற்கிலுள்ள குயிசு மாகாணத்தில் இந்தத் தொலைநோக்கி அமைக்கப்படவுள்ளது. 500 மீற்றர் பரப்பளவுடைய 30 தொன் எடை கொண்ட இந்தத் தொலைநோக்கியில் 34 அடி நீளம் கொண்ட தகடுகள் அமைக்கப்படும். பிரபஞ்சத்தில் நடைபெறும் காட்சிகள் இந்தத் தகடுகளில் பட்டுப் பிரதிபலிப்புடன் பதிவாகும். இந்தக் காட்சிகளை வைத்து வேற்றுக்கிரகவாசிகள் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

1.2 மில்லியன் யூவான் செலவில் நிறைவேற்றப்படும் இந்தத் தொலைநோக்கியை அமைப்பதற்காக 9,000 பேர் அப்புறப்படுத்தப்பட உள்ளனர் என்பது அண்மையில் இணையத்தளங்களைக் கலக்கிய செய்தியாகும்.

வேற்றுக்கிரகவாசிகள் இருப்பதை இன்னும்விஞ்ஞானம்ஏற்றுக்கொள்ளவில்லை. அப்படியானால் இல்லாத வேற்றுக் கிரகவாசிகளைத் தேட எதற்காக இவ்வளவு பெருந்தொகைப் பணத்தைச் செலவு செய்து ஆயிரக்கணக்கான மக்களை வாழிடங்களை விட்டு அப்புறப்படுத்த வேண்டும் என்ற வினா எழுவது இயல்பானதே.

விஞ்ஞானம் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் வேற்றுக்கிரகவாசிகளின் இருப்புத் தொடர்பாக இதுவரை கிடைத்த தகவல்களில் சிலவற்றைத் தொகுத்துத் தருவதாக இந்தக் கட்டுரை உள்ளது.

இவற்றுள் காலத்தால் முற்பட்ட தகவல்களைத் தருவது எரிக் டானிக்கன் என்பவருடைய விண்மீன்களுக்குத் திரும்பி ஏகுதல் என்றும் பொருளமைந்த ஆங்கில நூலிலுள்ள தகவல்கள் ஆகும். இந்த நூலுக்கு நடந்திருக்க முடியாதவைக்குச் சான்றுகள் என்னும் உப தலைப்பையும் நூலாசிரியர் தந்துள்ளார். இந்த நூலிலுள்ள முக்கியமான விடயங்களைத் தமிழிலே கட்டுரையாக ஏ.ஜே. கனகரத்ன எழுதியுள்ளார். விண்மீன்களுக்குத் திரும்பி ஏகுதல் என்னும் தலைப்பில் அமைந்த இந்தக் கட்டுரை க.பொ.த(உ/த) தமிழ்ப் பாடத்திட்டத்தின் ஒரு பகுதியாகவும் சேர்க்கப்பட்டுள்ளது.

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் விண்மீன்களிலிருந்து அறிவு படைத்த உயிரினங்கள் பூமிக்கு வந்தன என்பதே டானிக்கனின் முக்கியமான கருத்து ஆகும். இவர்கள்தான் பின்பு சமயங்களால் தெய்வங்கள் என்று போற்றப்பட்டன என்றும் அவர் வாதிடு கின்றார். விஞ்ஞானியான ஐன்ஸ்டைன், ரஷ்யப் பேரா சிரியர் ஷ்லொவ்ஸ்கி, அமெரிக்க விண்வெளி உயிரியலாளர் கார்ல்சகான் போன்றோரும் தனது கருத்தை ஏற்றுக் கொள்வதாகவும் டானிக்கன் கூறுகின்றார். வேறு கோள்களில் வசிக்கும் இனம் இந்த உலகுக்கு வந்திருக்கக்கூடியது வெகு சாத்தியே" என்ற ரொக்கட் டின் தந்தை பேராசிரியர் ஹர்மன் ஒபேத்தின் கருத்தையும் டானிக்கன் தனது வாதத்துக்கு அரணாக முன்வைக்கின்றார்.

எரிக் டானிக்கன் தான் எழுதிய தெய்வங்களின் இரதங்கள் என்ற முதல் நூலிலும் மனித வரலாற்றில் அறிவார்ந்த வளர்ச்சி என்பது மிகக்குறுகிய காலத்தில் திடீரென ஏற்பட்டது என்றும் இந்த அறிவாற்றல் வளர்ச்சிக்கு வேறுகோள்கில் இருந்து வந்தவர்களே காரணர்களாக இருக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

நினைவுகள் அணுத்திரண்மங்களில் சேகரித்து வைக்கப்படுகின்றன என்பதை விஞ்ஞானம் இன்று நிறுவியுள்ளது. இதன்படி இயேசு நாதரின் மலைப் பிரசங்கத்தை அவரது குரலிலேயே கேட்கக் கூடிய வகையில் அதனை மீளப்பெற முடியும் என்றும் நம்பப்படுகின்றது.

இந்தக் கோட்பாட்டின் அடிப்படையில் எரிக்டானிக்கனும் வேறு கோள்களில் இருந்து அறிவு படைத்த உயிரினங்கள் எமக்குக் கற்பித்துப் போனவை அணுத் திரண்மங்களில் சேகரித்து வைக்கப்பட்டிருக்கின்றன.

இவையே காலப்போக்கில் எம்மால் மீட்கப்படுகின்றன எனக்கூறும் டானிக்கன் அச்சுக்கலை, கடிகாரம் செய்யும் கலை, மோட்டார் வண்டி, ஆகாய விமானம் என்பன ஏறுத்தாழ ஒரே காலப்பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டது என்பது தற்செயல் நிகழ்வு அல்ல என்பது அவரது வாதமாகும்.

வேற்றுக்கிரக வாசிகள் பூமிக்கு வந்துள்ளன என்பதற்கு புதைபொருள் ஆராய்ச்சியில் இருந்தும் இலக்கியங்களிலிருந்தும் சான்றுகளை டானிக்கன் முன் வைக்கிறார்.

1. புதைபொருள் சான்று

சீன புதைபொருள் அறிஞரான சீ பியூ தெயி 1938 இல் சீனாவுக்கும் திபெத்துக்கும் இடையேயுள்ள மலைப் பிரதேசத்தில் சில குகைகளின் உள்ளே வரிசை வரிசையாக புதைகுழிகளைக் கண்டுபிடித்தார். மிகவும் நொய்ந்துபோன சிறிய உடலமைப்பும் பெரிய தலை யோடுகளும் உடைய எலும்புக்கூடுகள் அந்தப் புதைகுழிகளுள் காணப்பட்டன. இவை பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டவையாக இருந்தன. குகைச் சுவர்களிலே வட்டவடிவமான தலைக் கவசங்களை உடைய உருவங்கள் வரையப்பட்டிருந்தன. இவை இன்றைய விண்வெளி வீரர்களின் உடைகளைப் போன்ற உடைகளை அணிந்தவையாகக் காணப்பட்டது. சீ பியூ தெயிக்கு ஆச்சரி யத்தை ஏற்படுத்தியது. பல ஓவியங் களிலே பறக்கும் உருவங்கள் (விமானம் போன்றவை) வரையப்பட்டிருந்தன. இவற்றின் புகைப் படங்களை டானிக்கன் தனது நூலிலே தந்துள்ளார். மேலும் நட்சத்திரங்களும், சூரியனும், சந்திரனும் வரையப்பட்டு இவை பயறு போன்ற புள்ளிகளால் தொடுக்கப்பட்டு இருந்தன. இவை கிரகங்களுக்கிடையேயான போக்குவரத்தில் இந்த உயிரினங்கள் ஈடுபட்டதைக் குறித்திருக்கலாம் என்றும் நம்பப்படுகின்றது.

இவை எல்லாவற்றையும்விட இங்கு கண்டெடுக்கப்பட்ட நீண்ட நேரம் இசைக்கும் இசைத் தட்டுப் போன்ற 716 தட்டுக்கள் மேலும் ஆச்சரியத்தைத் தருவனவாக உள்ளன. இந்தக் கல் தட்டுக்களுக்கு நடுவில் துவாரம் இருந்தது. தட்டுக்களின் நடுவிலிருந்து விளிம்பை நோக்கி சுருள்வட்டமாகச் செலுத்தப்பட்ட எழுத் துக்கள் இரட்டை வரித்தடமாகச்செல்கின்றன. இந்தத் தட்டுக்கள் எப்போது ஒரு காலத்தில் அதிக மின்னமுத்தம் வழங்கப்பட்டவையாக இருக்க வேண்டும் என்றும் அதிக கோபால்டும் வேறு உலோக வகைகளும் கலக்கப்பட்டிருந்தமையும் கண்டுபிடிக்கப்பட்டது. மின்னேற்றம் காரணமாக அதிர்வு அதிகமாக உள்ளதும் உணரப்பட்டது. பேராசிரியர் 2ஆம் லூயி 1962 இல் இந்தத் தட்டுக் களில் செதுக்கப்பட்ட எழுத்துக்களில் சில பகுதிகளின் பொருளை விளக்கினார். கல் தட்டுக்கள் கூறும் கதை மயிர்க் கூச் செறியும் ஒன்றாக இருந்ததால் இந்தக் கதையை வெளியிட வேண்டாம் என ஆராய்ச்சிக் கழகத்தால் தடுக்கப்பட்டார்.

1963 இல் பேராசிரியர் 2ஆம் லூயி ஆராய்ச்சிக் கழகத்தின் தடையையும் மீறித்தாம் வாசித்த விடயங்களை வெளியிட்டார். கல் தட்டுக்கள் சொல்லும் கதை இதுதான். எமது இனத்தவரைச் சேர்ந்த குழுவொன்று விமானக் கோளாறு காரணமாக இந்தக் கோளத் தொகுதியில் மூன்றாவது கோளில் (பூமியில்) விழுந்தது. இந்த விமானத்தில் வந்தவர்கள் அந்த மலைப் பகுதியிலே வாழ்ந்தவர்களுடன் நட்புறவு கொள்ள முனைந்தபோதிலும் அந்த மலை வாசிகள் எம்மவர்களை வேட்டையாடிக் கொன்றனர் எனத் தொடங்கும் இந்தக் கதை பின்வருமாறு முடிகிறது.

ஆண்களும்பெண்களும்பிள்ளைகளும் சூரியன் மறையும் வரைகுகைகளில் ஒளிந்து கொண்டனர். பின்னர் நாம் வெளிப்படுத்திய அடையாளத்தை நம்பி அவர்கள் நாம் சமாதான் நோக்குடன் வந்திருக்கிறோம் என்பதை உணர்ந்து கொண்டனர். இந்த மலைப் பிரதேச மக்களிடம் காணப்படும் கர்ண பரம்பரைக் கதைகளும் கல்தட்டுக்கள் சொன்ன கதையை கூறு பவையாகவே உள்ளனர். மேகங்களில் இருந்து இறங்கிய நீண்டு ஒடுங்கிய மஞ்சள் நிறத்தைக் கொண்டவர்கள் மலை வாசிகளான துரோப்பர்களாற் கொல்லப்பட்டனர். என அந்தக் கதை அமைந் துள்ளது.

இவ்வாறு ஆதாரங்களுடன் இந்தச் சம்பவம் முன்வைக்கப்பட்டாலும் பெரும்பாலான புதைபொருள் ஆராய்ச்சியாளரும் மானிடவியலாளர்களும் இதனை ஏற்றுக்கொள்ளவில்லை. இதனை ஏற்றுக்கொண்டால் இந்தப் பேரண்டத்தில் மனித இனமே மேலான அறிவு படைத்தது என்ற தமது கருத்துக்களை மாற்ற வேண்டி ஏற்படும் என்ற பயமே இதற்குக் காரணம் என டானிக்கன் கூறுகின்றது.

### ஈஸ்டர் தீவுச் சிலைகள், நக்கா சமவெளித்தரை ஓவியங்கள்

ஈஸ்டர் தீவிலுள்ள சிலைகளும் நக்கா சமவெளித் தரை ஓவியங்களும் கூட வேற்றுக்கிரக வாசிகளின் கைவரிசைகளாகவே இருக்கலாம் என டானிக்கன் குறிப்பிடுகின்றார்.

பசுபிக் பெருங்கடலில் தென்கிழக்குப் பகுதியில் உள்ளது ஈஸ்டர் தீவு ஆகும். 1722 ஆம் ஆண்டு ஈஸ்டர் தினத்தில் டச்சுக்காரர் இங்கு இறங்கியமையால் இந்தத் தீவு ஈஸ்டர் தீவு எனப் பெயர் பெற்றது. இங்கு ஒரே வடிவில் அமைந்த 887 சிலைகள் நிறுவப்பட்டுள்ளன. பெரும்பாலான சிலைகள் 12 அடி நீளமானவை. 30 அடி உயரமான சிலைகளும் உள்ளன. ஒவ்வொன்றும் 3040 தொன் எடை உள்ளவை. முழு மனித உருவங்களாக இல்லாமல் மார்பு முதல் இடுப்பு வரையான பகுதிகளைக் கொண்ட அரைச் சிலைகளாகவே இவை உள்ளன.

இவற்றின் பின்புறம் குறியீடு அல்லது சித்திர எழுத்துக்கள் செதுக்கப்பட்டுள்ளன. இத்தனை தொன் எடையுள்ள சிலைகள் எவ்வாறு செதுக்கப்பட்டுள்ள உயரமான இடத்துக்கு ஒன்றாகக் கொண்டு செல்லப்பட்டன என்பது இன்றும் மர்மமாகவே உள்ளது. வேற்றுக்கிரக வாசிகளே இவற்றைச் செய்திருக்க வேண்டும் என்று கூறுபவர்களும் உள்ளனர்.

பெருநாட்டில் உள்ள ஒரு பகுதியில் 80 கிலோமீற்றர் விஸ்தீரணமான பகுதியில் நக்காசமவெளித்தரை ஓவியங்கள் அமைந்துள்ளன.

தரை வழியால் செல்லமுடியாத இந்தப் பிரதேசத்தை வானத்திலிருந்து தான் பார்க்க முடியும்.

(தொடரும்)






அலங்கார கை அணிகலன்கள் அறிமுகமாகியுள்ளன. இவை கற்கள், முத்துகளின் வேலைப்பாட்டுடன், நாகரீக வடிவமைப்பில் உருவாக்கப்பட்டுள்ளன. இவை ஒவ்வொன்றும் 900 ரூபா தொடக்கம் 1200 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றன.



# நேற்றைய கடலுணவு விலை நிலைவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | கொடிகாமம் | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 600 | 700 | 700 | 600 | 650 |
| நண்டு | 250 | 400 | 300 | 400 | 400 | 200 | – |
| கணவாய் | 550 | 500 | 500 | 500 | 600 | 300 | – |
| பாரை | 550 | 500 | 500 | 600 | 500 | 600 | 450 |
| சுறா | 550 | 600 | 600 | 800 | 650 | – | – |
| சீலா | 250 | 450 | 400 | 450 | 450 | 500 | 350 |
| விளை | 600 | 450 | 400 | 500 | 450 | 400 | 400 |
| முரல் | 300 | 350 | 350 | 400 | 300 | 400 | 350 |
| கும்பிளா | 400 | 350 | 300 | 400 | 450 | 600 | 350 |
| கிளாக்கன் | 500 | 800 | – | – | 500 | – | – |
| ஓரா | 400 | 400 | – | – | 450 | 400 | – |
| திரளி | 250 | 300 | 200 | 200 | 300 | 200 | 250 |
| நகரை | 200 | 300 | – | 250 | 350 | – | 350 |
| சூடை | 150 | 200 | 100 | 200 | 200 | 100 | – |
| ஒட்டி | 250 | 250 | 150 | 250 | 200 | – | 200 |
| திருக்கை | 150 | 400 | 200 | 400 | 300 | 200 | 250 |
| மதனம் | 150 | 250 | 180 | 300 | 2500 | 300 | 200 |
| கொய் | 100 | 150 | 60 | 100 | 120 | 50 | – |
| பாலை | 350 | 200 | 250 | 350 | 400 | 400 | – |
| வாழை | 100 | 150 | 200 | 400 | 300 | 300 | – |

## மீதியானதை விருந்தாக்குவோம்

- உப்புமா நிறையச் செய்து சாப்பிடாமல் நிறைய மீந்துள்ளதா? அதில் உள்ள மிளகாய், கறிவேப்பிலையை நீக்கி விட்டு நன்றாக கையால் ஒரு சேர பிசைந்து அதில் சம அளவு கோதுமை மா, கொஞ்சம் காரம் மசாலா, மிளகாய்த் தூள், சேர்த்துப் பிசைந்து சிறு சிறு பூரிகளாகச் பொரித்து எடுங்கள். சுவை நன்றாக இருக்கும்.
- வெண் பொங்கல் சில சமயங்களில் மீதமாகும். கவலையே படாதீர்கள். கடுகு, உளுத்தப்பருப்பு தாளித்து, நறுக்கிய வெங்காயம், தக்காளியை அதன் தலைமேல் போட்டு, சிறிதளவு புளிக் கரைசலையும் சேர்த்துக் கொதிக்க வைத்து, கொதித்ததும் அதில் பொங்கலை சேர்த்துக் கிளறி இறக்கினால் சாம்பார் சாதம் மிகச் சுவையாய் இருக்கும்.
- ரொட்டி சில சமயங்களில் கடினத்தன்மையில் செய்து விட்டால் மீதமாகி விடும். அதனை தோசைக் கல்லில் போட்டு முறுக்கு மாதிரி மொரமொரப் பாக சுட்டெடுத்து, மிக்ஸியில் போட்டு பொடித்து வைத்துக் கொள்ளவும். இந்த மாவைப்போல ஒன்றரை மடங்கு சீனிப் பாகு போல காய்ச்சி கம்பிப்பதம் வந்ததும் அதில் பொடித்த ரொட்டித் துண்டுகளை நெய், முந்திரி, ஏலத்தூள் சேர்த்து சுருளக் கிளறி இறக்கவும். ஆறியதும் துண்டுகள் போட்டு கொடுங்கள். இது என்ன அருமையான பலகாரமாக இருக்கிறதே என்று கேட்பார்கள்.



# நேற்றைய மரக்கறி விலை நிலைவரம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 30 | 40 | 40 | 40 | 40 | 40 | 20 | 30 |
| கத்தரி | 100 | 80 | 90–120 | 100 | 80 | 100 | 90 | 60 |
| கரட் | 100 | 120 | 80–140 | 100 | 120 | 160 | 120 | 130 |
| மரவள்ளி | 60 | 50 | 40 | 40 | 40 | 60 | 35 | 40 |
| பயிற்றை | 80 | 80 | 60 | 60 | 60 | 60 | 40 | 80 |
| பாகல் | 200 | 120 | 80 | 120 | 120 | 120 | 120 | 100 |
| கருணைக்கிழங்கு | 70 | 80 | 80 | 60 | 60 | 120 | 50 | 50 |
| பெ.வெங்காயம் | 70 | 80 | 80 | 80 | 70 | 80 | 65 | 60 |
| சி.வெங்காயம் | 50 | 60 | 50 | 60 | 60 | 90 | 70 | 60 |
| பூசணி | 60 | 40 | 40 | 50 | 40 | 60 | 35 | 40 |
| தக்காளி | 30 | 40 | 30 | 50 | 30 | 40 | 25 | 25 |
| வாழைக்காய் | 60 | 50 | 40 | 50 | 40 | 40 | 35 | 30 |
| கீரை | 40 | 50 | 30 | 20 | 30 | 30 | 15 | 20 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 30 | 35 | 20 | 30 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 140 | 160 | 160 | 140 | 120 | 200 | 150 | 160 |
| புடோல் | 50 | 60 | 50 | 40 | 50 | 60 | 30 | 60 |
| கோவா | 50 | 60 | 50 | 40 | 40 | 60 | 30 | 45 |
| வெண்டி | 60 | 50 | 50 | 60 | 80 | 80 | 65 | 60 |
| போஞ்சி | 100 | 120 | 80 | 140 | 120 | 120 | 40 | 100 |
| லீக்ஸ் | 100 | 120 | 100 | 140 | 120 | 160 | 80 | 100 |
| தேங்காய் | 50 | 40 | 50 | 40–50 | 40 | 40 | 20–40 | 30 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 80 | 80 | 70 | 80 | 65 | 120 |
| தேசிக்காய் | 150 | 160 | 100 | 60 | 60 | 40 | 100 | 80 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 20 | 15 | 20 | 20 | 08 |
| கறிமிளகாய் | 100 | 120 | 100 | 120 | 140 | 160 | 100 | 100 |
| இராசவள்ளி | 150 | 140 | 140 | 120 | 140 | 140 | 100 | 80 |
| முருங்கைக்காய் | 400 | 400 | 300 | 250 | 400 | 400 | 300 | 250 |
| பனங்கிழங்கு | 05 | 02.50 | 05 | 02 | 05 | – | 03 | 03 |

## நாளை

பங்குனி -01
திங்கட்கிழமை 14.03.2016
தீதி: ஷஷ்ஷ மா.06.52 வரை
நட்சத்திரம்: கார்த்திகை
பி.ப.02.52 வரை
ராகுகாலம்: 07.51-09.21 வரை
சுபநேரம்: 12.21-01.51 வரை
ஷஷ்ஷ விரதம்




# உருளைக்கிழங்கு போண்டா

### தேவையானவை:

உருளைக்கிழங்கு - 300கிராம்
கோதுமை மாவு - 100 கிராம்
கடலை மா - 100 கிராம்
மிளகாய்த்தூள் - 1 தேக்கரண்டி
வெங்காயம் - 2
பச்சை மிளகாய் - 8
எலுமிச்சம் பழம் - 1
உப்பு, எண்ணெய் - தேவையான அளவு

### செய்முறை:

- உருளைக்கிழங்கை வேக வைத்து தோலை உரித்து வைத்துக் கொள்ளவும்.
- வெங்காயம், பச்சை மிளகாய் ஆகியவற்றை சிறு துண்டுகளாக நறுக்கிக் கொள்ளவும்.
- சட்டியில் இரண்டு மேசைக் கரண்டி எண்ணெய் விட்டு காய்ந்தவுடன் வெங்காயம், பச்சை மிளகாயை போட்டு வதக்கவும்.
- மஞ்சள் தூள், உப்பு சேர்த்துக் கொள்ளவும்.
- பின்னர் உருளைக்கிழங்கை மசித்து சட்டியில் போட்டு கிளறி, எலுமிச்சை சாறு சேர்த்துக் கிளறி இறக்கவும்.
- உருளைக்கிழங்கை நன்கு கிளறி தேவையான அளவு உருண்டைகளாக உருட்டிக் கொள்ளவும்.
- அதன்பிறகு, கடலை மா, கோதுமை மா, மிளகாய்த்தூள், உப்பு சேர்த்து கரைத்து அதில் முக்கி எண்ணெயில் பொன்னிறத்தில் பொரித்து எடுக்கவும்.



## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:** புதிய விடயங்களை ஆர்வத்துடன் அறிந்து கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும். எதிர்பார்த்த சுப செய்தி வந்து சேரும். இஷ்ட தெய்வ வழிபாடு செய்வீர்கள்.

**இடபம்:** அக்கம் பக்கத்தினருடன் கருத்து வேறுபாடு ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் குறைபாடுகளை, உடனடியாகச் சரிசெய்யவும். மிதமான வருமானம் கிடைக்கும். வாகனத்தில் மித வேகம் பின்பற்றவும்.

**மிதுனம்:** விருப்பம் விரைவில் நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி மூலம் ஆதாயம் காண்பீர்கள். நண்பரிடம் கொடுத்த பணம் கிடைக்கும். குடும்பத்தில் ஒற்றுமை நிலைக்கும்.

**கடகம்:** தவறைத் திருத்திக் கொள்ள முயல்வீர்கள். குடும்பத்தினரின் ஒத்துழைப்புக் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் போட்டி குறையும். பணவரவு திருப்திகரமாகும். இளமைக் கால இனிய நினைவுகளில் மகிழ்வீர்கள்.

**சிங்கம்:** தடை விலகி வளர்ச்சி உண்டாகும். தொழில், வியாபார வளர்ச்சியால், புதிய சாதனை படைப்பீர்கள். பணவரவு அதிகரிக்கும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சி நடத்தத் திட்டமிடுவீர்கள்.

**கன்னி:** குடும்ப விடயத்தைப் பிறரிடம் பேச வேண்டாம். விடாமுயற்சியால் வியாபாரத்தில் வருமானம் சீராகும். பெண்கள் வீட்டுச் செலவில் சிக்கனம் பின்பற்றுவது நல்லது. வெளியூர் பயணம் பயனறிந்து மேற்கொள்ளவும்.

**துலாம்:** சிறு செயலையும் நேர்த்தியுடன் செய்வீர்கள். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சியால் இலாபம் கூடும். பணக்கடன் செலுத்துவீர்கள். குடும்ப விவகாரத்தில் சுமுகத் தீர்வு கிடைக்கும்.

**விருச்சிகம்:** சமூகத்தில் மதிப்பு உயரும். தொழில், வியாபாரம் செழிக்க கிடைத்த வாய்ப்பை பயன்படுத்துவீர்கள். எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். இயன்ற அளவில் தர்மச் செலவு செய்வீர்கள்.

**தனுசு:** குடும்பத்தில் வாக்குவாதம் செய்ய வேண்டாம். தொழில், வியாபாரத்தில் வரவை விடச் செலவு அதிகரிக்கும். கண்களின் பாதுகாப்பில் தகுந்த கவனம் வேண்டும். பெண்கள் பிள்ளைகளின் நலனில் அக்கறை கொள்வர்.

**மகரம்:** உறவினர் உதவி கேட்டுத் தொந்தரவு செய்வர். தொழில், வியாபாரத்தில் பணவரவு அதிகரிக்கும். ஒவ்வாத உணவு உண்ண வேண்டாம். மாணவர்கள் அக்கறையுடன் படிப்பர்.

**கும்பம்:** எதிர்கால நலனில் அக்கறை கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் இலாபம் படிப்படியாக உயரும். சுப விடயத்தில் முன்னேற்றம் உண்டாகும். உறவினர் இல்ல நிகழ்ச்சியில் பங்கேற்பீர்கள்.

**மீனம்:** குடும்பத்தில் ஒற்றுமை உண்டாக்க முயல்வீர்கள். தொழில், வியாபாரத்தில் உழைப்புக்கேற்ப ஆதாயம் கிடைக்கும். எவருக்காகவும் பணப்பொறுப்பு ஏற்க வேண்டாம். சீரான ஓய்வு உடல்நலம் காக்க உதவும்.




## பிரச்சினைகள் தீர

பேசித் தீருங்கள்.
பேசியே வளர்க்காதீர்கள்.
உரியவர்களிடம் சொல்லுங்கள்.
ஊரெல்லாம் சொல்லாதீர்கள்.
நடப்பதைப் பாருங்கள்.
நடந்ததைக் கிளறாதீர்கள்.
உறுதி காட்டுங்கள்.
பிடிவாதம் காட்டாதீர்கள்.
விவரங்கள் சொல்லுங்கள்.
வீண்வார்த்தை சொல்லாதீர்கள்.
தீர்வை விரும்புங்கள்.
தர்க்கம் விரும்பாதீர்கள்.
விவாதம் செய்யுங்கள்.
விவகாரம் செய்யாதீர்கள்.
விளக்கம் பெறுங்கள்.
விரோதம் பெறாதீர்கள்.
பரிசீலனை செய்யுங்கள்.
பணிந்து போகாதீர்கள்.
சங்கடமாய் இருந்தாலும்
சத்தியமே பேசுங்கள்.
செல்வாக்கு இருந்தாலும்
சரியானதைச் செய்யுங்கள்.
எதிர்த் தரப்பும் பேசட்டும்.
என்னவென்று கேளுங்கள்.
எவ்வளவு சீக்கிரம்
தீர்வு வரும் பாருங்கள்.
நேரம் வீணாகாமல்
விரைவாக முடியுங்கள்.
தானாய்த்தான் முடியுமென்றால்
வேறு வேலை பாருங்கள்.
எவரோடும் பகையில்லை
என்பது போல் வாழுங்கள்.
எவர் இல்லையென்றால்நான்என்ன?
எண்ணியதை அடையுங்கள்.!!!!!!!!

படித்ததில் பிடித்தது

# பலஸ்தீனமும் வலி.வடக்கும்

(29 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவற்றில் முக்கியமானவை, கீரிமலையில் தேவாலயத்துக்குச் சொந்தமான 4 பரப்புக் காணியும், சுழிபுரம் திருவடிநிலையில் பொதுமக்களுக்குச் சொந்தமான 20 ஏக்கர் காணிகளுமாகும். கடற்படையினருக்காக இந்தக் காணிகளைச் சுவீகரிக்கும் முயற்சிகள் கடந்த அரசின் காலத்தில் இடம்பெற்ற போதிலும், மக்களின் எதிர்ப்புக் காரணமாக அந்த முயற்சிகள் கைவிடப்பட்டன. தற்சமயம் மீண்டும் அவற்றை அளவீடு செய்து ஆக்கிரமிக்கும் நிலை தோன்றியுள்ளது.

கடலை நிரப்பி காங்கேசன்துறை துறைமுகத்தை அபிவிருத்தி செய்யக் கூடிய நில, கடல் அமைப்பு இருந்த போதிலும் மக்களின் காணிகளை அபகரிக்கவே திட்டங்கள் மேற்கொள்ளப்படுவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இன்னொருபுறம், வலி.வடக்குக்கு வெளியேயும் பொதுமக்களின் காணிகளை அபகரிக்கும் வகையிலான செயற்பாடுகள் ஆரம்பமாகியுள்ளன. கிளிநொச்சியில் 88 ஏக்கர் காணிகளை இராணுவத்துக்கு ஒதுக்க அளவீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. முல்லைத்தீவின் மீனவக் குடியேற்றங்கள் என்ற பேரில் சிங்களக் குடியேற்றம் அமைக்க எடுத்த முயற்சி மக்கள் போராட்டங்களால் தடுத்து நிறுத்தப்பட்டது. இதுபோன்றே பூநகரி, கேப்பாப்பிலவு, முள்ளிக்குளம், சிலாவத்துறை, மறிச்சுக்கட்டி ஆகிய பகுதிகளிலும் காணி அபகரிப்பு நடவடிக்கைகள் தொடர்கின்றன.

பலஸ்தீன மக்கள் தமது மண் அபகரிக்கப்படுவதற்கு எதிராகப் பல்வேறு விதமான போராட்டங்களை நடத்தி வருகின்றனர். பலஸ்தீன விடுதலை இயக்கம் சமாதான உடன்படிக்கையில் கட்டுண்டு செயலிழந்து போயுள்ள நிலையில், ஹமாஸ் இயக்கம் தொடர்ந்து ஆயுதப் போராட்டத்தை நடத்தி வருகிறது. அதே வேளையில் மக்கள் சிறுவர், பெண்கள் உட்படக் கிளர்ந்தெழுந்து கல்லெறிப் போராட்டம், கத்திக் குத்தி போராட்டம் போன்ற பல்வேறு வடிவங்களிலான போராட்டங்களை நடத்தி வருகின்றனர். 67 வருடங்களுக்கு முன்பு அங்கு ஓடத் தொடங்கிய இரத்த ஆறு இன்னமும் வற்றாமலே ஓடிக் கொண்டிருக்கிறது.

இதேபோன்று, வலி.வடக்கு மக்களும் கவனவீர்ப்புப் போராட்டம்,.சத்தியாக்கிரகம், நீதிமன்ற வழக்கு எனப் பல்வேறு வடிவங்களில் தமது மண்ணை மீட்பதற்கான போராட்டத்தை நடத்தி வந்தனர். அச்சுறுத்தல்கள், வன்முறைத்தாக்குதல்கள், கழிவு ஒயில் வீசுதல் எனப் பல்வேறு வழிகளில் இந்தப் போராட்டங்களை முறியடிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அவர்கள் போராட்டத்தைக் கைவிடவில்லை. இப்போது இது உணவுத் தவிர்ப்புப் போராட்டமாக பரிணமித்துள்ளது.

இதன் அடுத்த கட்டம்தான் வெள்ளைக் கொடிகளுடன் போய் தங்கள் சொந்தக் காணிகளில் குடியமர்வது. சமாதானத்தின் பேரால் எவ்வாறு பலஸ்தீன மக்கள் ஏமாற்றப்பட்டனரோ, அவ்வாறு தமிழ் மக்கள் நல்லிணக்கத்தின் பேரால் ஏமாற்றப்படுவதை என்றுமே தமிழ் மக்கள் தலைகுனிந்து ஏற்றுக் கொள்ளப்போவதில்லை என்பது மட்டும் நிச்சயம்.






**Lakschumi** @lakschumi 11m
@ Baashhu தனக்கு சுதந்திரமும் தனித்தன்மையும் வேணும்ன்னு நினைக்கற
பெண்கள் அடுத்தவங்க வந்து போராடும்வரை காத்திருப்ப தில்லை @ Anithaj



**பனித்துளி** @mymindvoice 55m
நாம் நம்பாதவர்களெல்லாம்
எம்மளவில் நல்லவர்களே...
நம்பிக்கைத் துரோகத்தை தவிர்த்து விட்டால்!!

## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | | 4 | | | | 3 | | 9 |
| | | | | | | | 1 | |
| | 3 | | 6 | 8 | | | | |
| | 5 | | | | | | | |
| 2 | | | | | | 7 | | |
| 1 | | 8 | | 9 | | | | |
| | | | 3 | | 7 | | | |
| | 9 | | | | | | | 5 |
| 7 | | | | | | 2 | | 6 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 4 | 6 | 2 | 3 | 9 | 8 | 7 | 1 |
| 2 | 7 | 9 | 1 | 5 | 8 | 6 | 4 | 3 |
| 8 | 3 | 1 | 7 | 4 | 6 | 2 | 5 | 9 |
| 1 | 2 | 3 | 5 | 8 | 4 | 9 | 6 | 7 |
| 4 | 9 | 7 | 3 | 6 | 1 | 5 | 8 | 2 |
| 6 | 8 | 5 | 9 | 7 | 2 | 1 | 3 | 4 |
| 3 | 6 | 2 | 8 | 1 | 7 | 4 | 9 | 5 |
| 7 | 1 | 8 | 4 | 9 | 5 | 3 | 2 | 6 |
| 9 | 5 | 4 | 6 | 2 | 3 | 7 | 1 | 8 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரேகோலத்தைஏற்படுத்தவேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்)

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன்பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது.


2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## ஐ.பி.எல். தொடருக்கான திகதிகள் அறிவிப்பு

vivo IPL

நடப்பு வருடத்துக்கான ஐ.பி.எல். தொடருக்கான திகதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன. 8 அணிகள் பங்கேற்கும் 9ஆவது ஐ.பி.எல். தொடர் ஏப்ரல் 9ஆம் திகதி முதல் மே 29ஆம் திகதி வரை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மும்பை வான்கடே மைதானத்தில் ஏப்ரல் 9ஆம் திகதி நடைபெறும் முதலாவது ஆட்டத்தில் நடப்பு சம்பியன் மும்பை இந்தியன்ஸ் அணியும், டோனி தலைமையிலான ரைசிங் புனே சூப்பர் ஜெயின்ட்ஸ் அணியும் மோதுகின்றன. இறுதி ஆட்டமும் மும்பையிலேயே நடக்க இருக்கிறது. மொத்தம் 60 ஆட்டங்கள் மொகாலி, டெல்லி, மும்பை, நாக்பூர், புனே, பெங்களூர், ஐதராபாத், கொல்கத்தா, ராஜ்கோட், ராய்ப்பூர் ஆகிய 10 நகரங்களில் நடைபெற இருக்கின்றது. சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்குத் தடை விதிக்கப்பட்டிருப்பதால் முதல்முறையாக சென்னையில் எந்த ஆட்டமும் நடத்தப்படவில்லை.



# இலங்கை கிரிக்கெட்டில் தளம்பல்





இலங்கை ரி-20 அணிச் சேர்க்கையைப் பொறுத்த மட்டில் தளம்பல் நிலையென்பது தொடர்ந்தும் இருந்துகொண்டே இருக்கிறது. தற்பொழுது ரி-20 உலகக் கிண்ணத் தொடருக்கான அணியிலும், அந்த அணியைத் தெரிவுசெய்ய தெரிவுக் குழுவிலும் இந்தத் தளம்பல் நிலைமை தொடர்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. இதற்குப் பிரதான காரணம் மலிங்கவின் உடற்தகுதிதான். கடந்த பல காலமாக மலிங்க சிறப்பான உடற்தகுதியில் இல்லை என்பது அனைவரும் அறிந்ததே. இந்த நிலையில் அவர் ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் கலந்துகொள்வாரா? மாட்டாரா? என்பது இன்று வரை தெளிவாகவில்லை.

முழங்காலில் சத்திர சிகிச்சை மேற்கொண்டு தொடர்ச்சியாக பல மாதங்கள் ஓய்வில் இருந்தார் மலிங்க. நீண்ட இடைவேளையின் பின்னர் அவர் ஆசியக் கிண்ணத் தொடரில் களமிறங்கினார். மலிங்க களமிறங்கியது ஐக்கிய அரபு இராச்சியத்துக்கு எதிரான ஆட்டத்தில்தான். இந்த ஆட்டத்தில் களமிறங்கும் பொழுது மலிங்கவுக்கு உடல்தகுதியென்பது நூறு வீதம் எட்டப்படவில்லை. ஏற்கனவே மலிங்கவின் வலது முழங்காலில் காயம் இருந்திருந்த நிலையில், அரபு இராச்சியத்துக்கு எதிரான ஆட்டத்தில் அவரது இடது முழங்காலிலும் காயம் ஏற்பட்டது. இதனால் ஆசியக்கிண்ணத் தொடரில், இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் அணிகளுக்கு எதிரான ஆட்டங்களில் மலிங்க கலந்துகொள்ளவில்லை. இந்த மூன்று ஆட்டங்களிலும் இலங்கை தோல்வியடைந்து நாடு திரும்பியது. உண்மையில் அரபு இராச்சியத்துக்கு எதிரான ஆட்டத்துக்கு மலிங்க அவசியமில்லை. இப்படி இருக்கையில் ஏன் அவர் முழு உடல்தகுதி இல்லாத நிலையில் களமிறங்கினார் என்பது அவருக்கு மட்டுமே வெளிச்சம்.



ஆசியக்கிண்ணத் தொடரின் தோல்வியின் பின்னர் ஒரு இரவில் இலங்கைக் கிரிக்கெட்டில் பல மாற்றங் கள் செய்யப்பட்டுள்ளன. தெரிவுக்குழு புதிதாக மாற்றியமைக்கப்பட்டு தலைமைப் பதவியில் இருந்து மலிங்க நீக்கப்பட்டு மத்தியூஸ் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். மலிங்கவை நீக்கியது சிறந்த ஒரு முடிவு என்றே சொல்ல வேண்டும். ஏனெனில் தலைவர் யார் என்பது ஏனைய வீரர்களுக்குத் தெளிவாக இருக்க வேண்டும். தலைவர் தொடரில் கலந்துகொள்வதில் சந்தேகம் என்றால் ஏனைய வீரர்களது தயார்ப்படுத்தல்கள் சீராக இடம்பெறாது. மொத்தத்தில் தலைமைத்துவம் சரியான ஒருவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஆனால் மலிங்கவுக்கு ஏற்ற மாற்று வீரர் யார்?. ராஜித ஏன் தொடர்ந்தும் புறக்கணிக்கப்பட்டுள்ளார்? டில்சான் எதற்காக நீடிக்கிறார்? டிக்வெலவை ஆரம்ப வீரராக ஏன் பரிசீலிக்கவில்லை? ஆரம்ப வீரராக சந்திமல் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் மத்திய வரிசையின் பலமாகக் கருதப்படுபவர் யார்? உலகக் கிண்ணத் தொடரொன்றுக்காகப் பயணமாகியுள்ள நிலையில் குறித்த ஒரு தொடருக்காக மட்டும்தான் தலைமைப் பொறுப்பை ஏற்க ஒப்புக்கொண்டதாக மத்தியூஸ் வெளிப்படுத்தியதன் அவசியம் என்ன? தெரிவுக் குழுவின் உறுப்பினராக பெயர் குறிப்பிடப்பட்ட நிலையில், குறுகிய காலத்துக்குத்தான் குறித்த பதவியை ஏற்றதாக சங்கா தெரிவித்துள்ள கருத்தில், அணியின் நலன் எங்கே பிரதிபலிக்கிறது?

எல்லாவற்றையும் விட ரி-20 உலகக்கிண்ணத் தொடருக்கான அணியும், தெரிவுக்குழுவும் மாற்றியமைக்கப்பட்டமை பலராலும் வரவேற்கப்படுகின்ற போதிலும், ஏன் இந்த முடிவு ஒரு இரவில் செய்யப்பட்டது. அதாவது ரி-20 உலகக்கிண்ணத் தொடருக்கான அணியை மாற்றியமைக்கும் இறுதித் திகதியாக கடந்த 8ஆம் திகதி கொடுக்கப்பட்டிருந்தது. ஆசியக் கிண்ணத் தொடரில் இலங்கையின் இறுதி ஆட்டம் 4ஆம் திகதி நடைபெற்றது. தெரிவுக்குழு 5ஆம் திகதி மாற்றப்பட்டிருந்தால் 6ஆம் 7ஆம் திகதிகளில் நன்கு பரிசீலித்து அணியொன்றை அறிவித்திருக்கலாம். இவ்வாறிருக்கையில் 7ஆம் திகதி நள்ளிரவு தெரிவுக்குழு மாற்றப்பட்டு 8ஆம் திகதியாகிய இறுதி நாளில் அணி மாற்றியமைக்கப்பட்டது ஏன்? இரண்டு மணித்தியாலங்களில் எடுக்கும் முடிவுக்கும் இரண்டு நாட்களில் எடுக்கும் முடிவுக்கும் நிறைய வேறுபாடுகள் உண்டல்லவா?

# மிகக் குறுகிய காலத்தில் வடக்கு, கிழக்கு மாகாண மக்களுக்கான 65,000 வீட்டுத்திட்டம்



## 65,000 வீடுகள்:-

சர்வதேச நியமங்களுக்கு அமைவான, சூழல் மற்றும் சமூக அங்கீகாரத்துடன் கூடிய வசதியான இவ்வீடுகள் உலகின் பெயர்பெற்ற முன்னணி நிறுவனத்தின் ஊடாக மிகக் குறுகிய கால எல்லையில் இவ் அமைச்சின் மூலம் வடக்கு, கிழக்கு மாகாண மக்களின் தேவை கருதி நிர்மாணிக்கப்படவுள்ளது.

## அமைப்பு:-

வசிப்பிட அறை, சமையலறை, தனியான கழிவறை மற்றும் இரு அறைகளுடன் கூடிய 550 சதுரஅடி கொண்ட வீடுகள்.

## வசதிகள்:-

- சூரியக்கல மின்சார வசதி.
- கட்டில்கள் உட்பட வீட்டுத் தளபாடங்கள்.
- தொலைக்காட்சி, வாயு அடுப்பு, வலைப்பின்னல் தொடர்பு (Wifi)
- குழாய் நீர்க்கிணறு.
- சூழல் வெப்பத்தைவிட 3-5 பாகை செல்சியஸ் குறைவான சௌகரியமான வசிப்பிட சூழல் கொண்ட வீடுகள்.

## அழைப்பு:-

ஒஸ்கா ஒழுங்கை, செல்வபுரம், பலாலி வீதி உரும்பிராய் தெற்கு கோப்பாயில் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் இவ்வீடமைப்புத் திட்டத்தின் மாதிரி வீட்டினை பார்வையிட அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சு

# உள்ளூராட்சித் தேர்தல் எப்போது? சபையில் மூண்டது பெரும் சர்ச்சை

கொழும்பு, மார்ச் 13

உள்ளூராட்சி சபைத் தேர்தலை உடனடியாக நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பொது எதிரணியும், மக்கள் விடுதலை முன்னணியும் அரசை வலியுறுத்தியுள்ளன. எனினும், எல்லை நிர்ணயப் பணிகள் பூர்த்தியாகும் வரை தேர்தலுக்கான அறிவிப்பை விடுக்க முடியாது என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

அதையடுத்து ஆளும் கட்சியினருக்கும், மகிந்த ஆதரவு அணி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கிடையில் சபையில் கடும் தர்க்கம் ஏற்பட்டது.

நாடாளுமன்றம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு பிரதிச் சபாநாயகர் திலங்க சுமதிபால தலைமையில் கூடியது.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் சம்பந்தமாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன கடந்த நாடாளுமன்ற அமர்வின்போது எழுப்பியிருந்த கேள்விகளுக்கு பதிலளிக்கும் வகையிலேயே பிரதமர் நேற்று இந்த அறிவிப்பை விடுத்தார்.

### சர்ச்சையைக் கிளப்பிய தினேஷ்

எல்லை நிர்ணயப் பணிகளில் ஏற்பட்டுள்ள குளறுபடிகளைப் பட்டியலிட்டுக் காட்டிப் பேசிய பிரதமர், எல்லை நிர்ணயம் குறித்த முறைப்பாடுகளை விசாரிக்கும் குழுவின் இறுதி அறிக்கை கிடைத்த பின்னரே தேர்தல் அறிவிப்பை விடுக்க முடியும் என்றும் கூறினார். தேர்தல் நடத்துவதை இழுத்தடிக்கும் நோக்கம் அரசுக்கு இல்லை என்றும், எல்லை நிர்ணயப் பணிகள் முழுமை பெறாது, தேர்தலை நடத்துவது ஏற்புடைய நடவடிக்கை அல்ல என்றும் விரிவானதொரு விளக்கத்தை வழங்கினார்.

பிரதமர் கருத்து வெளியிட்ட பின்னர், ஒழுங்குப் பிரச்சினையொன்றை எழுப்பிய தினேஷ் குணவர்த்தன, சர்ச்சைக்கு தொடக்கப் புள்ளி வைத்தார். பிரதிச் சபாநாயகரே, பிரதமர் கூறும் குழுவின் கால எல்லை தொடர்ச்சியாக நீடிக்கப் படுகின்றது. இது தேர்தலை இழுத்தடிப்பதற்கான ஓர் உத்தியாகும்.

உள்ளூராட்சிச் சபைகள் தான் ஜனநாயகத்தின் அடித்தளம். மக்களுடன் நேரடியாகத் தொடர்புபட்டவை. ஆகவே, உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் விவகாரத்தில் இழுத்தடிப்பு விளையாட்டு வேண்டாம். எதிர்வரும் மார்ச் 31 ஆம் திகதி தேர்தல் அறிவிப்பை விடுப்பதற்குரிய சுதந்திரத்தைத் தேர்தல் ஆணைக் குழுவுக்கு வழங்குங்கள். தேர்தலை நடத்தாது இருப்பது ஜனநாயக விரோதச் செயலாகும் என்று சுட்டிக்காட்டினார் தினேஷ் குணவர்த்தன.

### மக்கள் பிரதிநிதிகள் இல்லாது திண்டாட்டம்

தினேஷ் குணவர்த்தனவின் கருத்துக்கு வலுச் சேர்க்கும் வகையில் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுர குமார திஸாநாயக்கவும் அதிரடியான கருத்துக்களை முன்வைத்தார்.

உள்ளூராட்சிச் சபைகளின் பதவிக் காலம் 2015 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்தது.

இந்த மார்ச் 31 வந்தால், ஒரு வருடமாகின்றது. இந்த நிலையில், மக்கள் பிரதிநிதிகள் இல்லாமல் அதிகாரிகளாலேயே சபைகள் இயக்கப்படுகின்றன. அதனால், கிராம மட்டத்தில் இருக்கும் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாமல் உள்ளது. மின்குமிழ் பொருத்துதல், வீதி எனப் பல பிரச்சினைகளைப் பட்டியலிட்டுக் காட்டலாம்.

புதிய அரசமைப்பு பற்றி பேசப்படுகின்றது. இதன்போது தேர்தல் திருத்தமும் உள்ளடக்கப்படும். ஆகவே தற்போதுள்ள முறையில் மாற்றம் வரலாம். ஆகவே, இழுத்தடிப்புச் செய்யாது, பழைய முறையில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்தவும். புதிய அரசமைப்பின்போது பொதுவானதொரு தேர்தல் முறையைக் கொண்டு வரலாம். எனவே, இது விடயத்தில் அரசியல் சூது செய்யாமல் தேர்தலை நடத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம். உட்கட்சிப் பிரச்சினை தீரும்வரை காத்து இருக்காதீர்கள் - என்றார் அனுரகுமார.

### சூடான பைசல் முஸ்தபா

இதனால் சற்று ஆத்திரமடைந்தார் உள்ளூராட்சி அமைச்சர் பைசல் முஸ்தபா. தேர்தலை உடனடியாக நடத்த முடியாதுள்ளதற்கான காரணத்தையும் அவர் விவரித்தார்.

தேர்தலை விரைந்து நடத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே நானும் இருக்கின்றேன். எனினும், எல்லை நிர்ணயப் பணிகள் கடந்த காலத்தில் குளிரூட்டப்பட்ட அறையில் இருந்து கொண்டே நடத்தப்பட்டுள்ளன. எல்லை நிர்ணயப் பணிகள் சரியான முறையில் இடம்பெறவில்லை. இதனால் 2 ஆயிரம் முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டன. ஆகவே, பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குக் கால அவகாசம் தேவை. இது கட்சி சார்ந்த பிரச்சினை இல்லை - என்றார்.

### குறுக்கீடு செய்த பிரதமர்

தேர்தலை நடத்தினால் ஐக்கிய தேசியக் கட்சிக்குத்தான் வெற்றி கிடைக்கும். ஆகவே, உங்களைவிட எங்களுக்குத்தான் தேர்தல் முக்கியம். எனினும், எல்லை நிர்ணயத்தில் பிரச்சினைகள் இருப்பதால்தான் சிக்கல் நிலை உருவாகியது. முன்னர் எல்லை நிர்ணயப் பணியில் ஈடுபட்ட அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும். பசில் ராஜபக்சவின் தேவைக்கேற்பத்தான் பணிகள் இடம்பெற்றுள்ளன.

எமக்கு கட்சிக்குப் பிரச்சினை இல்லை. பொது எதிரணி எனக் கூறிக்கொள்பவர்களுக்குத் தான் பிரச்சினை இருக்கின்றது. எப்படிப் போட்டியிடப் போகின்றீர்கள், கூட்டமைப் பிலா? அல்லது தனித்தா? இதை முதலில் சொல்லுங்கள், என்று கூறிவிட்டுப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அமர்ந்தார்.

இதன் பின்னர் பிரதமருக்கு பதிலடி கொடுக்கும் வகையில் வாசுதேவ நாணயக்கார கருத்து வெளியிட்டார். இவ்வாறு நீண்டநேரம் இந்த விவகாரம் தொடர்பில் சபையில் சூடான வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றன. (ற-ஜ-5)




LADIES 1ST
புதுமைப் பெண்களுக்காக

வாழ்வின் வழமையான பழைமைகளைத் தாண்டி உலகை வென்றெடுக்கும் ஆற்றல் கொண்டவர்கள் பெண்கள் என்பது சம்பத் வங்கிக்குத் தெரியும். அதனால் தான் வாழ்க்கை சவால்களை எதிர்கொண்டு பயணிக்கும் உங்களுக்காகவே சம்பத் வங்கி லேடிஸ் 1st கணக்கை அறிமுகப்படுத்தியுள்ளது. நீங்கள் முன்வைக்கும் ஒவ்வொரு காலடிக்கும் இன்றும் நாளையும் எதிர்காலத்திலும் லேடிஸ் 1st கணக்கு உங்களுக்கு உறுதுணையாக இருக்கும் என நாம் நம்புகின்றோம்.

• சேமிப்புத் தொகைக்கு மேலதிக வட்டி • குறைந்த வட்டி வீதத்தில் வீடமைப்பு, வாகன மற்றும் தனிநபர் கடன்கள்
• 5 வருடங்கள் வரையான முதலீட்டுத் திட்டம் • டெபிட் மற்றும் கடனட்டைகளுக்கு விசேட சலுகைகள் • காப்புறுதி வசதி • சம்பள முற்பணம்

Like us on facebook.com/Sampathbankplc

சம்பத் வங்கி
எதிர்காலத்தின் முன்னோடிகள்


Sampath Bank Fitch Ratings A+(lka) 0112 30 30 50 www.sampath.lk

# நீரிழிவு ஓர் பேரழிவு!

மருத்துவர் எம்.அரவிந்தன்

1. நீரிழிவானது இன்று ஒரு பெரிய அச்சுறுத்தலாக உருவெடுத்து வருகிறது. இது பற்றிய உங்கள் கருத்து என்ன?

நீரிழிவானது இன்று உலகளாவிய ரீதியில் ஒரு பெரிய பிரச்சினையாக உருவெடுத்து வருகின்றது. இதன் தாக்கத்தை வளர்ச்சியடைந்த நாடுகளில் மாத்திரமல்லாது இலங்கை போன்ற வளர்முக நாடுகளிலும் காணக் கூடியதாகவுள்ளது. அண்மையில் கொழும்பு மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி, ஏறக்குறைய 23 சதவீதமானோர் நீரிழிவினால் அல்லது நீரிழிவுக்கு முந்திய நிலையினால் Pre Diabetes பாதிக்கப்பட்டுள்ளனர். தவறான உணவுப் பழக்க வழக்கங்கள் மற்றும் உடற்பயிற்சியற்ற வாழ்க்கைமுறை Sedentary Life Style என்பவையே இதற்குக் காரணமாகும்.





2. நீரிழிவானது உலகளாவிய ரீதியில் பெருகுவதற்கு Panolemic தவறானவாழ்க்கை முறைகள் பிரதான காரணமென்று குறிப்பிட்டிருந்தீர்கள். இதுபற்றி சிறிது விரிவாகக் கூறுங்கள்?

எமது வாழ்க்கை முறையானது இன்று சிறிது சிறிதாக மாறி வருவதைக் காணக் கூடியதாகவுள்ளது. துரித (Fast Food) மற்றும் மேலைத்தேய உணவுகளை இலகுவாகப் பெற்றுக்கொள்ளக் கூடிய வசதியானது இன்று உலகமயமாதலின் Globalization மூலம் எமக்குக் கிட்டியுள்ளது. இயந்திரமயமான வாழ்க்கை முறை காரணமாக உடற்பயிற்சி செய்வதற்கு நேரமற்றுப் போனமையும் இதற்குக் காரணமாகும்.

3. நீரிழிவு நோயானது எவ்வாறு வெளிக்காட்டப்படுகிறது.

நீரிழிவு வகை 2 (Type 2 Diabetes) ஆனது அதிகளவு சிறுநீர் கழித்தல், அதிக தண்ணீர்த்தாகம், அதிக பசி மற்றும் கணிசமான உடல் நிறைக்குறைவு





என்பவற்றுடனோ இவ்வாறான அறிகுறிகள் இன்றியோ வெளிக்காட்டப் பட நேரிடலாம். எமது பிராந்திய (தென்னாசிய) மக்களில் நீரிழிவு ஏற்படுவதற்கான அபாயம் Risk மிக அதிகமாகும். எனவே இளவயதிலேயே நீரிழிவு நோய் ஏற்படும் வாய்ப்பு ஏற்படுகின்றது.




4. நீரிழிவு நோயாளருக்கு நீங்கள் கூறும் அறிவுரைகள் யாவை?

நீரிழிவு நோயாளரொருவர் வைத்தியரிடம் கலந்தாலோசிக்கும் நேரம் உண்மையில் மிகக் குறைவாகும். எனவே நீரிழிவு நோயாளியொருவர் தனது நோய் பற்றி மிகுந்த அக்கறையுடன் செயற்பட வேண்டியது மிக அவசியமாகும்.

இவ்வாறு செயற்படுவதற்கு மிகுந்த பொறுப்புணர்வும் அர்ப்பணிப்பும் அவசியமாகும். ஆரோக்கியமான உணவுப் பழக்கங்கள் மற்றும் தின சரி உடற்பயிற்சி என்பவற்றைக் கடைப்பிடிப்பதன் மூலம் நீரிழிவைக்கட்டுப்பாட்டினுள் வைத்திருக்க முடியும். வைத்திய ஆலோசனைக்கேற்ப மருந்துகளை கிரமமாக எடுக்க வேண்டியதும் மிக அவசிய மாகும். குறித்த காலத்துக்கு ஒரு முறை வைத்திய ஆலோசனைப்படி குருதியிலுள்ள குளுக்கோஸின் அளவு, கொழுப்பின் அளவு என்பவற்றைப் பரிசோதித்து அறிந்து கொள்வதும் மிக அவசியமாகும்.

5. நீரிழிவு நோய் பற்றி எமது மக்களிடையே சில தப்பபிப்பிராயங்கள் உள்ளன. இது பற்றிச் சிறிது கூறுங்கள்?

முதலாவதாக மெற்போமின் Metformin மருந்து பற்றிய பிழையான கருத்தொன்றுள்ளது. இந்த மருந்தானது சிறு நீரகப் பாதிப்பை ஏற்படுத்துமென்ற பிழையான எண்ணக் கருவொன்று எம்மவர்களிடையே காணப்படுகின்றது. உண்மையில் இந்த மருந்தானது, உலகளாவிய ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட முதற்தர First line நீரிழிவு மருந்தாகும். இந்த மருந்தானது சிறுநீரகம் பாதிப்படைவதை உண்மையில் தடுக்கின்றது. எந்தவொரு நீரிழிவு நோயாளியினதும் சிறுநீரகத் தொழிற்பாடானது வைத்தியர்களினால் குறிப்பிட்ட காலத்துக்கு ஒரு முறை பரிசோதிக்கப்படுகின்றது. குறிப்பிட்ட ஒரு நிலைக்கு மேல் சிறுநீரகப் பாதிப்பு இருந்தால் மட்டுமே மெற்போமின் மருந்தின் அளவானது குறைக்கப்படுகிறது/ நிறுத்தப்படுகின்றது.

இரண்டாவதாக உணவுப் பழக்கவழக்கங்கள், வாழ்க்கை நடைமுறைகள் தொடர்பிலும் பல பிழையான கருத்துக்கள் எம்மிடையே உள்ளன. உதாரணமாக சிவப்புக் குத்தரிசி நல்லது என்பதால் எவ்வளவும் உண்ணலாம் என நினைக்கிறார்கள். உண்மையில் எடுக்கும் உணவின் அளவுப் பிரமாணமும் Glycaemic load மிக முக்கிய மானதாகும்.

6. நீரிழிவினால் ஏற்படும் நீண்ட காலப்பாதிப்புக்களைப் பற்றிக் கூறுங்கள்?

நீரிழிவு நோயினால் பிரதானமாக சிறு குருதிக் குழாய்களைத் தாக்கும் பாதிப்புக்களும் Micro vascular diseases பெரிய குருதிக் குழாய்களைப் பாதிக்கும் பிரச்சினைகளும் Macro Vascular diseases ஏற் படுகின்றன.

ஆரோக்கியமான வாழ்க்கை முறையைப் பின்பற்றுவதனாலும் சிறந்த முறையில் குருதியிலுள்ள குளுக்கோஸ் அளவு குருதியமுக்கம் மற்றும் கொழுப்பின் அளவு என்பவற்றைப் பேணுவதன் மூலமும் இவ்வாறான பிரச்சினைகளை Complications தவிர்க்க/தடுக்க முடியும்.

7. கர்ப்பகாலத்தில் ஏற்படும் நீரிழிவு பற்றிச் சிறிது கூறுங்கள்?

எமது மக்களைப் பொறுத்த வரையில் நீரிழிவு ஏற்படும் சாத்தியமானது அதிகமென்பதால் அனைத்துக் கர்ப்பிணிப் பெண்களையும் ஆரம்பத்திலேயே நீரிழிவுப் பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டியது அவசியமாகும். Universal Screening கர்ப்பகாலத்தின் ஆரம்பப் பகுதியில் நீரிழிவு இருப்பதாகக் கண்டறியப்பட்டால் அதனை Overt diabetes ஏற்கனவே உள்ள அறியப்படாத நீரிழிவு என அழைக்கலாம். அனைத்துக் கர்ப்பிணிப் பெண்களும் 22-24 ஆம் கர்ப்ப வாரத்தில் OGTT என அழைக்கப்படும் குளுக்கோஸ் உட்கொண்டு சீனிமட்டம் பார்க்கும் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவது அவசியமாகும். இதன்போது நீரிழிவு கண்டறியப்பட்டால் பிரசவத்தின் போதான நீரிழிவு Gestational Diabetes என்று அழைக்கப்படும். கர்ப்பகாலத்தில் நீரிழிவு நோயின் கட்டுப்பாட்டு இலக்குகள் வேறுபாடானவை. Metformin தவிர்ந்த எந்தவொரு குளிகையையும் பயன்படுத்த முடியாது. அநேகமான நேரங்களில் இன்சுலின் ஊசியின் பாவனையும் தேவைப்பட நேரிடுகிறது.

8. இறுதியாக நீரிழிவு நோயைக்கட்டுப்படுத்த எடுக்கப்படும் செயற் றிட்டங்கள் பற்றிக் கூறுங்கள்?

சுகாதார அமைச்சானது பலவகையான செயற்றிட்டங்களை இலங்கை முழுவதும் மேற்கொண்டு வருகின்றது. ஆரோக்கியமான சிறுவர் உலகத்தைக் கட்டியெழுப்புவதன் மூலம் வளமான எதிர்கால சந்ததியொன்றை உருவாக்கமுடியும். இலங்கை அகஞ்சுரக்கும் தொகுதியியல் நிபுணர்களின் கல்லூரியின் ஒரு பிரிவான இலங்கை நீரிழிவுப் பேரவையானது (Srilanka Diabes Federation) பலதரப்பட்ட ஆக்கபூர்வமான செயற்றிட்டங்களை ஆரம்பித்து நடைமுறைப்படுத்தி வருகின்றது. எமது யாழ். போதனா வைத்தியசாலையின் நீரிழிவு சிகிச்சை நிலையமும், பலவகையான சமூக செயற்றிட்டங்களை மேற்கொள்வதன் மூலம் பொதுமக்கள் மத்தியில் நீரிழிவு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றது.

நீரிழிவு அகஞ்சுரக்கும் தொகுதியியல்
சிறப்பு வைத்திய நிபுணர்,
யாழ்.போதனா வைத்தியசாலை.

# டிரைவர் மாப்பிள்ளை...

(26 ஆம் பக்கத் தொடர்ச்சி)

"எல்லாம் காலப்பிழை." புறுபுறுத்தார் சண்முகம். ஓட்டோ மெதுவாக நகர நகர கூடி நின்றவர்கள் ஓட்டுநருக்கு இட்ட சாபங்கள் ஆயுள் முழுக்க போதுமானதாக காதில் விழுந்து கொண்டிருந்தது.

அடிபட்ட இடத்தை பார்க்க மனமில்லாமல் முகத்தை மற்றைய பக்கம் திருப்பிக் கொண்டார் சண்முகத்தார். ஓட்டோ சடுதியாக நிற்க ஓட்டம் நிற்க என்னவென்று பார்த்தார். இரண்டு கைகளையும் நீட்டியபடி ஒருவர் ஓட்டோவின் முன்னே மறித்துக் கொண்டிருந்தார்.

ரவி 'என்ன?' என்றான்.

விபத்துக்குள்ளான பஸ்ஸில் வந்திருந்த அந்த நபர், தன்னையும் ஓட்டோவில் ஏற்றிக்கொள்ளச் சொல்லிக் கேட்டார். "பிள்ளை ஆஸ்பத்திரியில. சாப்பாடு கொண்டு போகவேணும். பிந்தினால் உள்ள விடமாட்டாங்கள்" என்றார். "அதுக்கென்ன வாங்கோ"என்று அழைத்தார் சண்முகத்தார். "இவங்களால எத்தனை பேருக்கு கரைச்சல் பாருங்கோ?" தன் பங்குக்கு மினிபஸ் ஓட்டுநரை வைதார். "நான் நேற்றும் இந்த பஸ்ஸிலதான் வந்தனான். டிரைவர் சின்னப் பெடியன்தான். ஆனாலும் பொறுப்பா ஆறுதலாக ஓடினவன். இன்றைக்கு ஏறுனதில இருந்து உயிரைக் கையில பிடிச்சுக் கொண்டுதான் இருக்க வேண்டியிருந்தது. பார்சலை திறந்தாத்தான் தெரியும். உள்ளுக்குக் குழம்பெல்லாம் ஊத்துப்பட்டிருக்கும்." ஓட்டோவில் ஏறிய புதியவர் தன் பங்குக்கு அர்ச்சித்தார். அவரது கதையைக் கேட்ட சண்முகத்தாரின் சிந்தனை எங்கெங்கெல்லாமோ ஓடியது.

"ஐயா! இடம் வந்திட்டுது நீங்க இறங்கி அலுவலப் பாருங்கோ. நான் அண்ணையை ஆஸ்பத்திரியடியில இறக்கி விட்டிட்டு வாறன்" என்று ரவி கூவிய போதுதான் சுயநினைவுக்கு வந்தார். கடவுளைக் கும்பிட்டவாறே இதாவது சரிவர வேணும் என்று நினைத்தவாறு புறோக்கரின் வீட்டினுள் அடியெடுத்து வைத்தார். "வாங்கோ! வாங்கோ! உங்களைத்தான் பார்த்துக் கொண்டிருக்கிறன்" புறோக்கர் வெகு விமரிசையாக வரவேற்றார். விபத்தைப் பற்றிக் கூறியவாறே குறிப்புக்களை வேண்டி மேலோட்டமாகப் பார்த்தார் சண்முகம். மூன்று வருடங்களில் ஓரளவு பொருத்தம் பார்க்கும் அளவுக்கு வளர்ந்திருந்தார்.

முதல் பார்த்த சாதகத்தைக் காட்டி "இது பொருந்தாது" என்றார் புறோக்கர்.

"என்ன வேலை?"

"இது ஒரு ரீச்சர் பெடியன். மகளும் ரீச்சர்தானே பரவா யில்லை என்று பார்த்தன். பொருத்தமில்லை சரி மற் றையதையும் பாருங்கோ. அது பொருந்தும்."

புறோக்கர் சொன்ன வாக்கு மெய்யாக, எண்பது வீதப் பொருத்தம் இருந்தது. சண்முகத்தாருக்கு நல்ல சந்தோசம். "இது நல்ல பொருத்தம்"என்றவாறே "என்ன வேலை?" என்றார்.

"குணமான பெடியன். ஏ.எல் படிச்சிருக்கிறான். நிரந்தர உத்தியோகம். பஸ் டிரைவராக இருக்கிறான். குடும்பமும் பிரச்சினை இல்லாதது...."புறோக்கர் சொல்லிக் கோண்டே போனார். சண்முகத்தாருக்குச் சப்பென்றாகி விட்டது. கடந்து வந்த விபத்தின் நினைவுகளில் இருந்து அவர் முற்றாக விடுபட்டிருக்கவில்லை. திடீரென ஒரு முடிவுக்கு வந்தவராய், "தம்பி! இனி பிள்ளைக்கு ஒரு வரனும் பார்க்க வேண்டாம். நான் பிறகு வாறன்" என்று சொல்லிவிட்டு வெளியில் வந்தார். ஓட்டோவுடன் ரவி காத்திருந்தான். ஓட்டோவை இயக்கியவாறே ஆர்வத்துடன் "என்ன மாதிரி? எல்லாம் சரியோ?" என்றான். "சரிவராதடா தம்பி."

"ஏன் சாதகம் பொருத்தமில்லையோ?"

"சாதகம் நல்ல பொருத்தம், ஆனால் பெடியன் டிரைவர்."

"ஓ.... படிப்பு பிரச்சினையோ? வேலை பிரச்சினையோ?"

"படிப்பும் பிரச்சினை இல்லை வேலையும் அரசாங்கத்துலதான். ஆனால் காலையில் எத்தனை பேரின்ட சாபங்களைச் சுமக்க வேணுமோ தெரியாது. காலையில பார்த்தனாங்கள்தானே! அதுதான் வேண்டாம் என்டிட்டன்."

"எல்லாரும் அந்த டிரைவர் மாதிரி இருக்கமாட்டினம்தானே ஐயா! ஒருத்தர் ரெண்டுபேர் செய்யிறத்துக்காக எல்லாரையும் என்னெண்டு குற்றம் சொல்லுறது?"

"அந்த ஒரு சிலரில இவனும் இருந்திட்டா என்ன செய்யிறது?"

சண்முகத்தாரின் தீர்மானமான பதிலைக் கேட்ட பின் அமைதியானான் ரவி. அவரும் அமைதியானார். யோசனையில் வீடு வந்தது கூடத் தெரியாது இருந்தவரை "ஐயா! வீட்டுக்கு வந்தாச்சு. இறங்குங்கோ!" என்ற ரவியின் குரலில் நித்திரையில் இருந்து முழித்தது போல் ஓட்டோவில் இருந்து இறங்கினார்.

கடைசி மகள் வாசலுக்கு ஓடி வந்தாள். அவள் பார்வை ரவியை வருடிய பின் தன்னிடம் திரும்புவதை உணர்ந்தார் சண்முகத்தார்.

"நான் வாறன் ஐயா" என்றபடி முகத்தைத் திருப்பிக் கொண்டான் ரவி.

## சொற்சிலம்பம் - போட்டி இல: 411

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | ■ | 4 | | 5 |
| 6 | | ■ | 7 | 8 | | ■ | |
| | ■ | 9 | | | ■ | 10 | |
| 11 | 12 | | | ■ | 13 | | ■ |
| 14 | | | ■ | 15 | | | 16 |
| | ■ | 17 | 18 | | | ■ | |
| ■ | 19 | | | | ■ | 20 | |
| 21 | | | ■ | | | | |

அனுப்புபவர் பெயர்:......................................................

பூரணமான தபால் விலாசம்: ..............................................

.......................................................................

கையொப்பம்:..............................................................

— — — — — — — — — — — — — — — —

### இடமிருந்து வலம்

1.கௌரவம்
4. பலருக்கும் பெருமை ஆசை இதற்கு
6. ஊத்தை பட்ட அடையாளம்
7. சாதகமான சூழல்
9. பாரமான தன்மை
10. கடல் கொந்தளித்தால் இதனால் ஆபத்து
11. மஞ்சள் நிறப் பருப்பு வகை
13. சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமர்
14. பருத்த முறுக்குக் கயிறு
15. உறுதியான உலோகம்
17. பதி வைக்கப்பட்ட நாற்று
19. மூப்புற்றுப் பழுத்தல்
20. கணிதத்தில் ஒரு குறியீடு
21. நல்லது
22. வெறும் வாய்வீச்சுக்காரன்

### மேலிருந்து கீழ்

1. மேன்மையான தன்மை
2. வரி
3. உலகம்
4. கணவன்
5. மாத்திரை
8. தீய திட்டம்
9. கை பிடி
10. அருமையானது என்பதைக் குறிக்கும்
12. ஒரு திசையின் சுருக்கம்
13. நிகழும்
15. வழமையான பண்பு
16. ஒரு பாம்பின் ரகம்
18. ஓர் உத்தரவுச் சொல்
19. பின் அல்ல
20. கூட்டல் குறி

வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வது டன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடை களை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 409 இற்கான சரியான விடைகள் வருமாறு:-

### இடமிருந்து வலம்

(1) காமுகன் (4)மதகு (7)சுகம் (8)சீதனம் (9) தபுதாரன் (11)குலை (12)மிக (13)கட (14)சோரம் போதல் (16) தியாகம் (18)தம் (19)தேசம் (20)தக (22)வினை (23)வரன்முறை

### மேலிருந்து கீழ்

(1)காசு (2)முகதலை (3)கம்பு (4)மதன் (5)தன (6)கும்பிடல் (8)சீரகம் (10) தாமிரம் (11)குந்திதேவி(13)கதம் (14)சோகம் (15) போதகன் (17)யாசனை (20)தர (21)உறை

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1.வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3.உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 409இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:-

**1 ஆம் பரிசு**
யே.டான்சி,
இல. 83/1 கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

**2 ஆம் பரிசு**
எம்.சி.என்.எம் டினுசா,
இல. 249, முதலாம் குறுக்குத் தெரு,
அன்னை இல்ல வீதி,
உப்புக்குளம், மன்னார்.

**3 ஆம் பரிசு**
த.சக்திவேல்,
புலோலி மத்தி, கல்லூரி வீதி,
பருத்தித்துறை.

**4 ஆம் பரிசு**
து.துஷ்யந்தன்
உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய்

**5 ஆம் பரிசு**
ச.சந்திரன்,
தோப்புக்காடு,
காரைநகர்.

### பாராட்டுப் பெறுவோர்

பா.பாலேஸ்வரன்
இல.67, கிருஷ்ணா நகர்,
முழங்காவில்

சி.சிவலோகநாதன்,
மாலியாவத்தை,
சங்கானை.

திருமதி சி.பராசக்தி,
சிவன்கோவில் தெற்கு வீதி,
சாவகச்சேரி.

சொற்சிலம்பம் போட்டி
இல.411
பூர்த்தி செய்யப்பட்ட
கூப்பன்கள்
நியூ உதயன் பப்ளிக்கேஷன்
(பிறைவேற்)லிமிட்டெட்,
இலக்கம் 361, கஸ்தூரியார்
வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு
எதிர்வரும் புதன்கிழமைக்கு
அடுத்து வரும்
புதன்கிழமைக்கு முன்னர்.
(23.03.2016 ஆம் திகதிக்கு
முன்னர்) கிடைக்கத்
தக்கதாகத் தபாலட்டையில்
ஒட்டி அனுப்பி
வைக்கப்படவேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இல.411இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 27.03.2016 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொண்டு வெற்றியீட்டுவோருக்கான பரிசுக் காசோலைகள் வெற்றி பெற்றோரால் கொடுக்கப்படும் விலாசத்துக்கே அனுப்பி வைக்கப்படும். சரியான தபால் விலாசம் கொடுக்கப்படாமையால் சில சமயம் காசோலைகள் உரிய வெற்றியாளரைச் சென்றடையாமை அவதானிக்கப்பட்டுள்ளது. போட்டியில் கலந்து கொள்வோர் தத்தமது சரியான, முழுமையான தபால் விலாசத்தையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**சொற்சிலம்பம் போட்டி 409 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக் கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.**

"பொன் மனச்செம்மல்"

# பலம் நாகரத்தினம் (E.S.P)

## அவர்களின்

# ணிவிழா சிறப்பிதழ்

## (13.03.2016) ஞாயிற்றுக்கிழமை

## ரத்தினம் அவர்களின் வாழ்க்கைத் தடம்

1984 ஆம் ஆண்டு கஜமுகன் அவர்கள் பிறந்தார். வாரிவளவுக் குடும்பப் பாங்குகளுடன் வளர்ந்த கஜமுகன் அவர்கள் தாய் தந்தையரின் வழிகாட்டலில் வளர்ந்து ஆரம்பக்கல்வியை பொஸ்கோ வித்தியாலயத்திலும் பம்பலப்பிட்டி இந்துவிலும் கனடா நாட்டில் உயர்கல்வியைப் பெற்று அதன்பின்னர் கனடா நாட்டில் மின் இலத்திரனியல் பொறியியல் நெறியைக் கற்று அத்துறையில் உயரிய பட்டங்களைப் பெற்றது மாத்திரமன்றி அதேநாட்டில் தொழில் பெற்று வாழ்ந்து வருகின்றார்.

1986 ஆம் ஆண்டு கமலேசன் அவர்கள் பிறந்தார். உயர் பண்புடனும் விழுமியங்களுடனும் வளர்க்கப்பட்ட அவர் தாய் தந்தையர் வழிகாட்டலில் சென்ஜோன்ஸ் கல்லூரியிலும் உயர் கல்வி வரை கற்றார். கணக்கியல் கற்கையில் உயர் பட்டங்களைப் பெறுவதற்காக அவுஸ்திரேலியா நாட்டுக்குச் சென்ற கமலேசன் உரிய படிப்பை முடித்து பட்டங்களைப் பெற்றதுடன் குறித்த நாட்டில் கற்றலுக்கு ஏற்ற தொழிலையும் புரிந்து வருகின்றார்.

1988 ஆம் ஆண்டு மணிவிழாநாயகன் தம்பதியினருக்கு கமலநாதன் அவர்கள் பிறந்தார்கள். தாய் தந்தையர் வழிகாட்டலில் உரிய உயர் கல்வியை சென்ஜோன் கல்லூரியில் கற்றதுடன் வாழ்க்கை வழிமுறைகளையும கற்றுக்கொண்டார். நில அளவையியல் துறையில் (QS) மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் உயர் பட்டத்தைப் பெற்றுக்கொண்ட கமலநாதன் அவர்கள்ஓமான் நாட்டிற்குச் சென்று நில அளவையாளராக பணியாற்றி வருகின்றார்.

E.S.P.நாகத்தினம் தம்பதியினரின் ஐந்தாவது மகனாக கமலரூபன் அவர்கள் 1990 ஆம் ஆண்டு பிறந்தார். காரைநகர் வாரிவளவு குடும்பத்தின் உயர் பண்புகளுடன் வளர்த்தெடுக்கப்பட்ட கமலரூபன் அவர்கள் கொழும்பு பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பு முடித்து வெளிவாரியாக சட்டத்துறை கற்று சட்டத் துறையில் பட்டம் பெற்று தற்போது அத்துறையின் பயிற்சி பெற்று வருகின்றார்.இஸ்லாமிய வேத நூல் குர்ரானும் சைவ சமய சிவஆகமங்களும் கிறிஸ்தவ பைபிளும் வழிகாட்டுவது போன்று E.S.P.நாகரத்தினம் ஐயாவும் தம் வாழ்வில் செய்யப்படும் தொழிலுக்கு ஊடாக கிடைக்கும் வருமானத்தின் ஒரு வீதத்தையாவது பொதுப் பணிக்கு செலவிட வேண்டும் என்ற எக்காலமும் மாற்றப்படாத கொள்கையுடன் செயற்படுவது என்ற எண்ணமானது இலட்சம் மக்களின் ஒருவருக்கே ஏற்படும் என விஞ்ஞான ரீதியான ஆய்வுகள் சுட்டி நிற்கின்றன. கடந்த 30 வருடங்களாக E.S.P.நாகரட்ணம் ஐயா பொதுப்பணி வேலைத்திட்டங்களை சிறுகச் சிறுக ஆரம்பித்தார். கடந்த 15 வருடங்களாக திட்டமிட்ட வகையிலும் ஒழுங்குபடுத்தப்பட்ட வகையிலும் ஐயா அவர்களின் பொதுப்பணி விரிவுபட்டு சென்றிருப்பதை கணக்காய்வாளர் திரு. வெற்றிவேலாயுதம் அவர்களின் கணக்கறிக்கைகளுக்கு ஊடாக அவதானிக்கக் கூடியதாக உள்ளது.கார்வண்ணன் கண்ணனுக்கு கர்ணன் போல் கறையின்றி தவிர்க்கும் மக்களுக்கு E.S.P. அவர்கள் இன்று வரை செயற்பட்டு வந்துள்ளார். நல்லூர் ஆலய வீதியில் அமைந்துள்ள மணியோசை என்னும் கொடை ஆலயத்திற்குச் சென்று வாசலில் தொங்கு விடப்பட்டுள்ள மனுநீதி கண்ட சோழ மன்னனின் வாயில் மணிபோன்ற மணியை யார் போய் ஒலிக்கச் செய்தாலும் பூமகளின் தன்மையை ஒத்த மணிவிழா நாயகனின் துணைவியார் தங்கமலர் அக்கா வருவார். அண்ணையை காண வேண்டும் என்றால் இருக்கோ வருவார் என்று முகமலர்ச்சியுடன் கூறுவார். அண்ணை வரும் போது கூடவே அக்காவும் பால் கோப்பி தட்டுடன் வருவார். இது அவர்கள் வாரிவளவின் பண்பாட்டுக் கோலம். உதவி நாடி செல்லும் எவருக்கும் இருவரும் எதனையும் இல்லை என்று கூறியதே இல்லை. ஆனால் தங்களால் இயன்றதை அன்றையதினம் ஓம் என்று கூறினால் என்றும் அந்த நாவின் சொல்லை மீறிய வரலாறு இல்லை எனலாம். அத்தகைய பண்பு குடும்ப உறுப்பினர் அனைவரிடமும் வளர்ப்பதில் ஆர்வம் கொண்டவராக E.S.P. ஐயா செயற்பட்டு வருகின்றார்.

அத்தகைய யாழ்ப்பாண ஒட்டுமொத்த கல்வி சமூகம், கொடை வள்ளல், பண்பாளன். மற்றவர்களுக்குபாடமாக சீரிய வாழ்வு வாழ்பவர் என்ற அடிப்படையில் கீழ்வரும்(12) பன்னிரண்டு கௌரவப்பட்டங்களை வழங்கி இருப்பதில் இருந்து E.S.P. அவர்களின் சேவையின் உன்னதத்தை எவரும் எட்டமுடியாத பலத்தை இறைவன் அவருக்கு அளித்திருப்பதனை உணரமுடியும்.அந்த வகையில் அவருக்கு வழங்கப்பட்டுள்ள கௌரவப்பட்டங்கள் ஒவ்வொன்றும் அவ்ரின் சேவையின் மகத்துவத்தை மற்றும் மனதின் தன்மையை வெளிக்காட்டி நிற்பதை அவதானிக்கலாம்.

| | | |
|---|---|---|
| பொன்மனச்செம்மல் | - | யாழ்/ சன்மார்க்க ம.வி. கல்விச்சமூகம் |
| மனிதநேயாகையாளன் | - | இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் |
| கல்விக்காருணயன் | - | யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி சமூகம். |
| கல்விக்கதிரவன் | - | யாழ்/பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயகல்விச் சமூகம் |
| ஈகைக்காவலன் | | |
| இறைபணி வேந்தர் | - | சைவசமய அருள்மொழி மன்றம் கோப்பாய் |
| சமூகமாமணி | - | பேராசிரியர் கனகசபாபதி நாகேஸ்வரன் மணிவிழாக்குரு |
| சைவப்புரவலர் | - | அகில இலங்கை சைவப்புரவலர் சங்கம் |
| ஈகையார் திலகம் | - | மூளாய் இந்து இளைஞர் மன்றம் |
| தேசபுத்திர | - | முன்னாள் மேதகு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ (இந்து பௌத்த கலாசார அமைப்பு ஊடாக) |
| சமூக திலகம் | - | யாழ். கொட்டடி சனசமூக நிலைய சமூகம். |
| சமூக நலஜோதி | - | வட்டு இந்து வாலிபர் சங்கம். |

மேற்காட்டப்பட்ட கௌரவப்பட்டங்கள் ஆனது பட்டங்களைப் பெற்று எமது இலங்கைத் திரு நாட்டில் மிகப்பெரிய. தர்மத்தின் வழி தொழில் செய்யும் தொழில் அதிபராக விளங்கும் பேரம்பலம் நாகரத்தினம் அவர்கள் மனிதருள் மாணிக்கமாக விளங்கியதற்கு வழங்கிய பட்டங்களாக எண்ணி போற்றப்படவேண்டும். பூசிக்கப்பட வேண்டும்.



### பூமழை பொழிய வாழி

வைகறை வாழ்த்திட நல்லறம் செழித்திட
வானவ தேவரும் பூமழை பொழிந்திட
அன்பு அறம் பண்பு எனும் நற்குணம் விளங்கிய
மேலோன்
அகவை அறுபதில் கால்பதிக்கும்
பெருமதிப்பிற்குரிய திரு.ஈ.எஸ்.பி. நாகரத்தினம் ஐயா அவர்கள

ஆண்டுகள் நூறு வாழ்வெனும் தேரில்
பாரெல்லாம் போற்றிட
வலம்வர வேண்டும் என்று
வாயார பல்லாண்டு வாழ வாழ்த்தி நிற்கின்றோம்
வாழ்க வளமுடன் ஐயா....

**திசைவீரசிங்கம் ஜெயராஜசிங்கம்**
**பிராந்திய முகாமையாளர் NDB வங்கி**





பெருமையிற் பணிந்திடும் பெரியோன்
பொன்சேரிலங்கைச் சிரமெனவே வரும்
புண்ணியமோங்கிடும் யாழ்ப்பாணத்தில்
கன்னல் செறிவாழை கமுகு புடைசூழ்
களனிதுன்னும் காரைநகர்ப் பதியில்
தன்னிகரில்லாதத் தலைவற் பெருந்தகையாய்
மண்ணிற் றோன்றிய
மனிதருள் மாணிக்கம் எனும் தெய்வப் புதல்வன் வாழி!

விவரணம் மிகையென விளம்பார் எவரும்.
வார்த்தையில் அடங்கா வள்ளலாய்
போற்றுறவும். புகழவுமுரிய புனிதனாய்
கண்ணிய புருஷனாய் கருணைமிகு
காருண்ய சீலனாய் தன்னலமற்ற சேவை
தரும் உயர்திரு நாகரத்தினம் வாழ்க!

வர்த்தகத்துறை செய்த தவமாய், மனிதகுலம் செய்த வரமாய்
தமக்கென வாழா பிறர்க்கென முயலும்
குலக்கொழுந்தாய் நிந்தனில் நிமிர்ந்தார்
உயர்வினில் உயர்வாய். உலகுயர் மேன்மையில் மேலாய்
மேதினிபோற்ற மேம்பட்டார் வாழி!

நெற்கதிர் முற்றினால் நிலம் வணங்கும்
பழக்குலை முற்றினால் கொடி தாழும்
மழைமுகில் கனத்தால் மண்சேரும்
மனிதர்கள் மேலுற்றால் மனமுவப்பர்
மற்றோரை மதிக்கின்ற மாண்பைய
மாதவர் நாகரத்தினா வாழ்க!

நண்பர்கள் கூட்டம் நவையறு நதியாம்
அன்பர்கள் சேனை அலகில் மலையாம்
கற்றவர் பேரவை கவினுறு கடலாம்
உற்றார் ஊரார் ஊற்றுப் பெருக்காம்
பெற்ற பெருங்கு பெருக்கிடு காற்றாம்
மாநிலம் போற்றிட வாழியவே!

**வீ.தயாபாலன்**
**யாழ்.இந்துக்கல்லூரி.**

**திரு.ஞா.திருக்கேதீஸ்வரன்**
**யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி.**

காரைநகர் தந்திட்ட கல்விக்காருண்யன் நாகரத்தினம்
குடும்ப நலத்துடன் நீடூழி வாழ்க.
'கல்விக்கு உயிர் கொடுத்தவர்கள் என்றும் மரணித்ததில்லை"



அரிது அரிது மானிடராதல் அரிது என்பது ஔவையார் வாக்கு அந்த வகையில் மானிடராக பிறந்த ஒவ்வொருவரும் தாம் பிறந்த மானிடத்திலே வாழ்ந்து கொண்டிருக்கும் போது மானிடத்திற்கு என்ன செய்தார்கள் என்று எண்ணும் போது திரு. E.S.P. நாகரத்தினம் அவர்கள் வித்தியாசமானவராகவே காணப் படுகிறார். இந்த உலகிலே சுயநலம் மேலோங்கி காணப்படுகின்ற போது பொதுநலத்தை நாடி செல்கின்றவர். இன்றைய மணிவிழா நாயகர். நான் அறிந்தவகையில் யார் என்ன போய் கேட்டாலும் இல்லை என்று சொல்லாமல் மனம் கோணாமல் இன்முகத்துடன் அள்ளிக் கொடுப்பவர். அவருடைய செல்வம் என்றும் வற்றாத சமுத்திரம். கொக்குவில் இந்துக் கல்லூரியின் சில தேவைகள் இவரூடாக பூர்த்தி செய்யப்பட்டது. இதற்கு நானும் ஒரு இணைப் பாளராக இருந்ததையிட்டு மகிழ்வடைகின்றேன். திரு. E.S.P நாகரத்தினம் அவர்கள் சமூககலாசார தேவைகளுக்கும் மற்றும் முன்பள்ளிகள். இடை நிலைப்பள்ளிகள். உயர்தர கல்விச் சாலைகள். ஏழைநலிவுற் றோரின் மருத்துவத் தேவைகளுக்கு அள்ளிக்கொடுத்த பெருந் தகை. இவருடைய இரண்டுகைகளும் கொடுத்து சிவந்த கைகள். அவர் ஒருகையால் கொடுப்பது மறுகைக்கு தெரியாது.

எனவே உயர்திரு E.S.P நாகரத்தினம் அவர்களது குடும்பத்தின் ரும் இம்மானிலத்திலே மேலோங்கி வாழ்ந்து இருப் பார்கள். இவரின் நற்காரியங்கள் என்றும் பொன்னெழுத்துக் களால பொறிக்கப்பட்டவையாகும்.

நாகரத்தினம் அவர்கள் நலமுடனும் வழமுடனும் இம்மானிடம் இருக்கும் வரை வாழவேண்டும் என வாழ்த்தி அவர்கள் சேவை களை பாராட்டி நிற்கின்றேன்.

**இ.நகுலன்(சமாதான நீதவான்)**
**(இ.செல்வநாதன்) கொக்குவில்**

### வர்த்தகத் துறையின் முத்திரை



மணிவிழா நாயகன் பேரம்பலம் நாகரத்தினம் அவர்களிற்கு யாழ்ப்பாண கைத்தொழில் மன்றத்தின் தலைவர் என்றரீதியிலும் சுமார் 2 தசாப்தங்களாக அவரை அறிந்து பழகியவன் என்ற ரீதியிலும் வாழ்த்துரை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.அண்ணன் நாகரத்தினம் அவர்கள் எமது வட பகுதியில் வர்த்தகத்துறையில் தனக்கென ஒரு முத்திரை பதித்தவர். அனைத்து வர்த்தகர்களாலும் E.S.P. என அன்பாக அழைக்கப்படும் இவர் யாழ்ப்பாண வர்த்தக சமூகத்திற்கு பெருமை சேர்க்கும் வகையில் கண்ணியமானது காத்திரமானதுமான பங்களிப்பை வழங்கியவர் வழங்கி வருபவர். மிகப்பெரும் தொழிலதிப ரான இவர் தற்பெருமை இன்றி மிக எளிமையாகவே தன்னை அடை யாளப்படுத்திக்கொள்வார். திரு. E.S.P நாகரத்தினம் அவர்கள் மேலும் மேலும் எமது வர்த்தக உலகில் சாதனைகள் படைத்து. அவரது அன்பான குடும்பத்தாருடன் நித்திய புன்னகையுடன் இன்று போல் என்றும் வாழ தெய்வங்கள் சித்திகள் வழங்கி வாழ்த்துரைக்கட்டும்!

**வை.கு. விக்னேஸ்தலைவர்.**
**யாழ்ப்பாண கைத்தொழில் மன்றம்.**

### மனிதத்துவம் நிறைந்த உத்தமர்

யாழ்ப்பாண மண் பல சேவையாளர்களைக் கண்டுள்ளது. குறிப்பாக மிக இக்கட்டான கடந்து போன யுத்த காலத்திலும் தற்போதும் கல்விப்பணி. சமூகப்பணி. சமயப்பணியாற்றி நிற்பவர்களில் உயர்திரு. E.S.P நாகரத்தினம் ஐயா அவர்கள் முதன்மையானவர். இவருடைய அர்ப்பண சேவையைப் பாராட்டி யாழ்ப்பாணம் தேசிய கல்வியிற் கல்லூரி சமூகம் கல்விக்காருண்யன் என்ற கௌரவப் பட்டம் வழங்கியது.ஒரு முன்மாதிரி சைவபாரம்பரியத்தின் உறைவிடமா்க உயர்திரு. E.S.P நாகரத்தினம் ஐயா அவர்கள் செயலாற்றி வருகின்றார். ஏழை மாணவர்களுக்கு தொடர்ச்சியான கல்வியளிக்கும் செயற்றிட்டத்தைக் கடந்த முப்பது வருடங்களாக மேற் கொண்டுள்ளார். பாடசாலை மாணவர்கள். பல்கலைக்கழக மாணவர்கள். தேசிய கல்வியியற் கல்லூரி மாணவர்கள். ஆசிரிய கலாசாலை. தொழில் நுட்பக் கல்லூரி. கைதடி நவீல்ட் மாணவர்கள் என வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்பவர களுக்கு கல்வி ஒளி கிடைக்க வழிகாட்டிவரும் செம்மல் ஐயா அவர்கள். எமது கல்லூரி ஆரம்பித்த காலத்திலிருந்து விளையாட்டு விழாவை நடத்த அனுசரணை வழங்கி வருகின்றார். அவருடைய உயர்ந்த சேவை மனப்பான்மை. மனிதத்துவம். அர்ப்பணிப்பு ஓர் முன்மாதிரியாகும். அவருடைய சேவை தொடரவும் நல்வாழ்வு வாழவும் இறையருள் துணை நிற்பதாக.

**சதாசிவம் அமிர்தலிங்கம், பீடாதிபதி, யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி,**

### தேடிச் சென்று உதவும் உத்தமர்




கல்விப் புலத்தில் சாதனை படைத்த மாணவர்களை கௌரவிக்கும் பொருட்டு பரிசளிப்பு விழாக்களை பாடசாலைகளில் நடத்துவது ஒரு வழமையான நிகழ்வாகும். இது போல வலயம். மாகாணம் என்ற ரீதியில் மாணவர் கௌரவிப்புக்கள், பரிசளிப்பு விழாக்கள் நடைபெற்று வருகின்றன. இந்த வகையில் கடந்த காலங்களில் தமிழ்மொழித்தினப் போட்டி நிகழ்வுகளில் பல்வேறு நிலைகளில் சாதனை படைத்த மாணவர்களை கௌரவித்து வெகுமதியும் வழங்கி வந்திருந்தோம். இதற்கான நிதியுதவிகளை நாடி நாலும் எனது சக அலுவலர்களும் பலரிடத்தும் சென்றிருந்தோம். எதிர்பார்த்த பலன் கிட்டவில்லை. இவ்வேளை திரு ஈ.எஸ்.பி.நாகரத்தினம் ஐயா அவர்களைப் பற்றி அன்பர் ஒருவர் எமக்குத் தெரிவித்திருந்தார். திரு.நாகரத்தினம் ஐயா அவர்கள் எனக்கு முன்னரே அறிமுகமானவரல்லர். அவரது நிறுவனத் திற்குச் சென்று எம்மை அறிமுகப்படுத்தி வந்த நோக்கத்தையும் தெரிவித்தோம். நல்ல நோக்கம். நல்லதைச் செய்யுங்கள் என ஆசீர்வதித்ததுடன் எவ்வளவு எதிர்பார்க்கின்றீர்கள்? என்றார். நாமும் மாணவர்களுக்கான ஊக்குவிப்புக்களை மட்டும் வழங்குங்கள்.

ஏனைய விழா ஏற்பாடுகளை நாம் கவனித்துக்கொள்கிறோம் எனக் கூறினோம். விழாவை நடத்திவிட்டு பற்றுச்சீட்டை அனுப்பி வையுங்கள் என்றார்.விழா சிறப்பாக நடைபெற்றது. விழாவிற்கு வருகை தந்ததுடன் மாணவர்களை வாழ்த்தியும் சென்றார். தொடர்ந்து சில ஆண்டுகள் இவ்வுதவியை வழங்கி வந்தார். இவரின் பெருந்தன்மையை பலரும் பலவிடத்தும் எடுத்துக்கூறியமையும் எனது அனுபவத்தில் பெற்றுள்ளேன்.கல்விக்கொடை என்பது ஏழை மாணவர்களுக்கு கிடைத்த வரப்பிரசாதம். திரு.நாகரத்தினம் ஐயா அவர்கள் மாணவர்களை கைகாட்டி அழைப்பதில்லை. அவர்கள் வாழும் இடத்திற்கே சென்று அவர்களுக்கு தோள் கொடுத்து உதவி வருகின்றார். கடந்த ஒரு தசாப்தத்திற்கு மேலாக இவரைச் சார்ந்துதான் தனிப்பட்ட கல்விக் கொடைகள் இடம்பெற்றுள்ளன. நான் அவரை காணும்போதெல்லாம் உடலைக் கட்டுடன் வைத்துக்கொள்ளுங்கள் என்பேன். அவரும் சிறு புன்முறுவலுடன் அதைச் செவிமடுப்பார். காலவோட்டத்தில் அவர் உடல் தளர்வடையலாம். ஆனால் அவரின் உயர்ந்த உள்ளம் வளர்ந்து கொண்டே செல்கின்றது. இதுதான் அவரின் கொடையின் சிறப்பாக வும் அமைந்துள்ளது. அவர் ஆற்றிவரும் கல்வித் தர்மம் என்றும் அவரைத் தலைகாக்கும். தர்மம் உள்ளவரை அவர் நிலைத்திருக்கவேண்டுமென வாழ்த்துகின்றேன.

**ஆ.ராஜேந்திரன் ஓய்வுநிலை மாகாணக் கல்விப் பணிப்பாளர், வடக்கு மாகாணம்**

# இயேசு இறை அரசை அறிவிக்கவே அன்றாடம் உழைத்தார் அதற்காகவே அனைத்தையும் – தம் உயிரையுமே அர்ப்பணித்தார்

அருட்திரு. ரூபன் மரியாம்பிள்ளை
*ஊடக விரிவுரையாளர் – யாழ் பல்கலைக்கழகம்*



இறந்த இயேசு உயிர்த்து இன்றும் உலகில் உயிர் வாழ்கின்றார். மனித வாழ்வின் எல்லா நிலைகளிலும் அவர் இன்றும் பிரசன்னமாக உயிர் வாழ்வது ஓர் இரகசியம் ஆகும். இயேசுவைப் பின்செல்லும் அழைப்பை பெற்ற எல்லோரும் இயேசுவின் வாழ்வில் பங்கெடுக்க அழைக்கப்படுகின்றனர். அவரது வாழ்வையும், இறப்பையும், தம்முடையதாக்க வேண்டப்படுகின்றனர். இயேசுவின் வாழ்வைப் பின்பற்ற விரும்புவோர் அவரது பாதைகளில் நடக்க முற்படுகின்றனர். அவர்கள் தம் வாழ்வை மகிழ்விலும் கொண்டாட்டத்திலும் எப்போதும் நகர்த்திக் கொண்டிருக்க விரும்ப மாட்டார்கள். இயேசுவின் பாதையில் தமது கால்களையும் பதித்து மனித இனத்திற்காக பணி புரிந்து கொண்டிருக்கவே விரும்புவர். இன்னும் சிறப்பாக, மனித சமுதாயத்தில் வருத்தத்தில், நோயில், வேதனையில், தேவையில் இருப்போர் மத்தியில் அவர்கள் அன்புப் பணியாற்றவே விரும்புவர். மனித உரிமைகள் மறுக்கப்பட்டு, மனிதாபிமானம் இழக்கப்பட்டு , அன்றாடம் மனிதத்தை இழந்து கொண்டிருக்கும் மனிதர்களுக்காக, அவர்களின் தேவைகளுக்காக, அவர்களின் உரிமைகளுக்காக, அவர்களின் பாதுகாப்புக்காக, உயிரை இழக்கின்ற வரையில் அர்ப்பணம் செய்யவும், அயராது உழைக்கவும் ஆயத்தமாக இருப்பர். தமது சுய விருப்பில், மனித இனத்தின் மேல் கொண்ட அன்பால், அவர்களுக்கு ஏதோவொரு வகையில் பணி புரிய வேண்டும் என்ற உந்துதலால், தம்மை அன்றாடம் அர்ப்பணித்துக் கொண்டே இருப்பர். மனிதர்களின் எல்லா நிலைகளிலும், எல்லா நிகழ்வுகளிலும்,திரும்பவும் திரும்பவும் இந்த அர்ப்பணத்தைப் புதுப்பித்து தம் வாழ்வை மற்றவர்களுக்காக, அவர்களின் வாழ்வு நல்ல நிலைக்கு மாற வேண்டும் என்பதற்காக தம் வாழ்வை மாற்றிக் கொண்டே இருப்பர்.

மற்றவர்களின் வாழ்வை மாற்றுவதற்காக தாம் நடத்தும் போராட்டத்தில், அவர்கள் இயேசுவைப் போல் சித்திரவதைக்கு உட்பட்டு சிலுவையில் அறையப்படுவர். அனைத்தையும் இழந்து தனிமையில் சிலுவையில் தொங்குவர்.

**மனித வரலாற்றில் நீதிக்கான தேடல்களும் எப்போதும் வெற்றி அடைந்ததாக காண முடியாது**

மனித வரலாற்றில் நீதிக்கான தேடல்களும், சுதந்திரத்துக்கான செயற்பாடுகளும் எப்போதும், எல்லா இடத்திலும் வெற்றி அடைந்ததாகக் காண முடியாது. நிறைய வேத சாட்சிகளை, நிறைய அர்ப்பணிப்பாளர் களை, நிறையத் தோல்வியடைந்தவர்களை, தொடர்ந்து வெல்வோம் என்ற நீண்ட நம்பிக்கையில் காத்திருப்போரையே இங்கு காணக் கூடியதாக இருக்கிறது. வெல்லுவோம், வாழ்வோம் , பெற்றுக் கொள்ளுவோம் , கிடைக்கும் என்ற பலவித நம்பிக்கைகளை, நம்பிக்கையே இல்லாத போதும் மனதுகளில் ஏற்படுத்தி அன்றாடம் நீதியையும் சுதந்திரத்தையும் மனித உரிமையையும் தேடிக் காத்துக் கொண்டிருப்போரையே காண முடிகிறது. இவர்களின் நீண்ட நம்பிக்கை யேசுவின் பாடுகளிலும் உயிர்ப்பின் வெற்றியிலுமேயே முழுமை அடைய வேண்டும். அடக்குபவர்களும் அநியாயம் செய்பவர்களும் என்றும் தமது செயற்பாடுகளை நகர்த்திக் கொண்டே இருக்கின்றனர்.

இவர்களுடனான போராட்டத்தில் வெற்றி கிடைக்கும் என்பது, கடவுள் வெற்றியைப் பெற்றுத் தருவார் என்ற நம்பிக்கையிலேயே அமைந்துள்ளது. கடவுள் இறுதி வெற்றி ஒன்றை, இறை அரசில் அன்பிலும் மகிழ்விலும் வாழ்கின்ற ஒரு வெற்றி ஒன்றை உறுதி செய்கிறார். இருப்பினும், கடவுள் மனித வாழ்வில் சிலுவையையும் வேதனையையும் அனுமதிக்கிறார். அதன் வழி துன்பத்தையும் துயரத்தையும் ஏற்று, அவற்றின் ஊடாக தமது வாழ்வைப் புதுமைப்படுத்தவும், புனிதப்படுத்தவும் அழைப்பு விட்டுக் கொண்டே இருக்கிறார்.

**சிலுவையும் வேதனையும் துன்ப துயரங்களும் இன்று முடியும் விடயங்கள் அல்ல**

ஒவ்வொரு மனிதர் வாழ்விலும் அன்றாடம் நிகழும் நிகழ்வுகளாகி, அவை, இன்றில் இருந்து நாளைக்கும், இந்த ஆண்டில் இருந்து அடுத்த ஆண்டுக்கும், இந்த நுற்றாண்டில் இருந்து அடுத்த நுற்றாண்டுக்கும் தொடரவே செய்யும். ஆயிரக்கணக்கான மக்கள், உலகெங்கும் ஒவ்வொரு ஆண்டும் மற்றவர்களை வெற்றி கொள்ள வேண்டும் என்ற செயற்பாட்டில் சிக்குப்பட்டு இறந்து கொண்டே இருக்கின்றனர். ஆயிரக்கணக்கானவர்கள், ஒவ்வொரு ஆண்டும் தமது மனித இனத்தின் துணையைப் பெற முடியாமல், உதவியைப் பெற முடியாமல் , உறுதுணையைப் பெற முடியாமல் இறந்து கொண்டே இருக்கின்றார்கள். ஆயிரக்கணக்கானவர்கள், வாழ்வின் அடிப்படை வசதிகளைப் பெற முடியாமல் ஏக்கத்திலும் ஏமாற்றத்திலும் வாழ்ந்து கொண்டே இருக்கின்றார்கள். தமது அர்ப்பணத்தையும், ஆன்மிகத்தையும் அன்றாடம் வாழ்ந்தும் தியாகங்கள் பலவற்றை செய்தும் தமது நிலையை மாற்ற முடியாமல் துடித்துக் கொண்டு இருக்கின்றார்கள்.தமது விசுவாச அழைப்பாலும், மற்றவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற விருப்பாலும், இறைத் திட்டத்தை ஏற்று நிறைவேற்ற வேண்டும் என்ற ஆர்வத்தாலும், வாழ்ந்து கொண்டு இருப்போர் ஏராளம் பேர்.நற்செய்தி ஏடுகள் இவர்களின் வாழ்வை இவ்வாறு பதிந்து வைத்திருக்கிறது. சிலர் ஏளனங்களுக்கும், கசை அடிகளுக்கும் ஆளாகினர். விலங்கிடப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். சிலர் கல் எறிபட்டனர். இரண்டாக அறுக்கப்பட்டனர். வாளுக்கு இரையாகி மடிந்தனர். செம் மறியின் தோலையும் வெள்ளாட்டுத் தோலையும் போர்த்திக்கொண்டு அலைந்து திரிந்தனர். வறுமை உற்று வாடினார். துன்புறுத்தப்பட்டனர். கொடுமைக்கு உள்ளாகினர். அவர்களை ஏற்க இந்த உலகுக்குத் தகுதி இல்லாமல் போயிற்று. மலைகளிலும், குகைகளிலும், நில வெடிப்புக்களிலும், பாலை வெளிகளிலும் அவர்கள் அலைந்து திரிந்தார்கள். இவர்கள் அனைவரும் தமது நம்பிக்கையினாலேயே நற்சான்று பெற்றார்கள். ஆயினும் கடவுள் வாக்களித்ததை அவர்கள் பெறவில்லை. (எபேசியர் 11 : 36 - 39) ஏராளமான அர்ப்பணவாதிகளும் ஒரு நல்ல காரணத்துக்காக , ஏழைகளின் உரிமைகளுக்காக உழைக்கிறார்கள்.

> **“ உயிர்த்த இயேசு இன்றும் மனித வாழ்வின் அன்றாட நிகழ்வுகளில், மனித வாழ்வின் அடிப்படை வரலாற்றில் நிஜமாக வாழ்கிறார். அவர் இன்றும் என்றும் சரித்திரத்தில் வாழும் ஒருவர். உலக மனித வரலாற்றோடு உயிர்த்த இயேசு இன்றும், என்றும் வாழ்வார். உயிர்த்த இயேசு ஒவ்வொரு மனிதரின் வாழ்விலும், அவர்களின் அன்றாட அசைவுகள், அனுபவங் கள் அனைத்திலும், ஒவ்வொரு சமூக மாற்றத்திலும், அவற்றின் அடிப்படை நிகழ்வுகள் அனைத்திலும், உயிர் வாழ்ந்து கொண்டே இருக்கிறார். ”**

அவர்களில் அநேகமானவர்கள் மறைவான வகையில் பணியாற்றுகிறார்கள். இவர்கள் எல்லோரும் யேசுவின் சிலுவையில் இருந்து வேதனையையும், துன்பத்தையும் பகிர்ந்து கொள்கிறார்கள். இவர்கள் எல்லோரும் கடின அனுபவங்களையும், நம்பிக்கையில்லா வேளைகளில் நம்பிக்கையையும் கொண்டு வாழ்க்கையில் தமக்கும், தம்மவர்களுக்கும் கிடைக்காதவற்றையும், தாமும் தம்மவர்களும் காணாதவற்றையும், விரும்பியும், நம்பியும் உழைத்துக் கொண்டு இருக்கின்றனர். இவர்கள் மனித வாழ்வின் கடினமான அனுபவங்களை, கைவிடப்பட்ட நிலைமைகளை அனுபவிக்க அழைக்கப்படுகின்றனர். தந்தையே உம்மால்கூடும், இந்தத் துன்பக்கலம் என்னை விட்டு அகலட்டும் என தந்தையை வேண்டிய யேசுவின் அனுபவ உணர்வுகளை பல தடவைகள் பகிர்ந்து கொள்கிறார்கள். இருப்பினும் அவர்கள் கடவுளை மறந்து விடுவதில்லை. அவர்கள் தம்மை முழுமையாக கடவுளுக்கு அர்ப்பணித்து கடவுளில் முழுமையான நம்பிக்கை வைத்து, தமது உள்ளார்ந்த அனுபவத்திலும், யேசு இன்றும் எம்மோடு வாழ்கிறார் என்ற அந்த உண்மையிலும் நம்பிக்கை கொண்டு வாழ்கிறார்கள். கடவுளால் வெற்றி கிடைக்கும் என்று நம்பி வாழ்கிறார்கள்.

கடவுள் அவர்களின் அனைத்துத் தேடல்களுக்கும் அனைத்துத் தேவைகளுக்கும் அர்த்தம் கொடுப்பவராக இருக்கிறார்.

**இயேசுவின் இறப்பு வெற்றி கிடைக்கும் என்ற நம்பிக்கையைத் தருகிறது**

இயேசுவின் இறப்பில், தாமும் இறந்து மனிதருக்காக அன்றாடம் தம்மையும் அர்ப்பணிக்க விரும்பும் இவர்களுக்கு சரித்திரத்தில் கடவுள் வெற்றி கிடைக்கும் என்ற நம்பிக்கையைத் தருகிறார். இயேசுவின் உயிர்ப்பு, நீண்ட காலத்தின் முன் நடந்து முடிந்த ஒரு வெறும் சரித்திர நிகழ்வு மட்டும் அல்ல. அது ஒரு புதிய யுகத்தின், புதிய வானத்தினதும் புதிய பூமியினதும், ஒரு ஆரம்பத்தின் பதிவு. இயேசுவின் உயிர்ப்பு, மனித வாழ்வின் ஒவ்வொரு வெற்றிக்கும் வரைவிலக்கணம் தருகிறது. அது மனித இறப்பினால் வரையறை செய்யப்படாத ஒன்று. அது மனித இறப்பின் பின்னரும், ஒருவரின் பெயராக, புகழாகப் பணியாகப் பங்களிப்பாகத் தொடரும் ஒன்று. அப்படியானால் அது ஒரு நிஜமான நிகழ்கால நிகழ்வு, மனித சரித்திரத்தில் திரும்பவும் திரும்பவும் மாறுபட்ட மனிதர்களில், அவர்களின் வாழ்வில், பணியில், பங்களிப்பில், நடைபெறும் நிகழ்வு. இது ஒரு முடிவே அற்ற நிகழ்கால நிகழ்வு.

உயிர்த்த இயேசு இன்றும் மனித வாழ்வின் அன்றாட நிகழ்வுகளில், மனித வாழ்வின் அடிப்படை வரலாற்றில் நிஜமாக வாழ்கிறார், அவர் இன்றும், என்றும் சரித்திரத்தில் வாழும் ஒருவர். உலக மனித வரலாற்றோடு உயிர்த்த இயேசு இன்றும், என்றும் வாழ்வார். உயிர்த்த இயேசு ஒவ்வொரு மனிதரின் வாழ்விலும், அவர்களின் அன்றாட அசைவுகள் அனுபவங்கள் அனைத்திலும், ஒவ்வொரு சமூக மாற்றத்திலும், அவற்றின் அடிப்படை நிகழ்வுகள் அனைத்திலும், உயிர் வாழ்ந்து கொண்டே இருக்கிறார்.உயிர்த்த இயேசு என்றும் உயிர் வாழும் ஒருவர். வரலாற்றில் வரலாறாகி என்றுமே உலக மனிதர்களின் வாழ்வில் வலம் வந்து கொண்டிருக்கும் ஒருவர்.இயேசுவின் உயிர்ப்பு ஓர் இறை அரசின் அறிவிப்பு. ஆனால் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படாத ஓர் அறிவிப்பு. ஆனால் அதுதான் இயேசுவின் வாழ்வின் உறுதியான முடிவு. மனிதர்களைப் பய முறுத்தும் அனைத்துப் பயங்களையும் தகர்த்தெறிய வேண்டும். மனிதர்களைச் சவாலுக்கு உள்ளாக்கும் அனைத்துச் சர்ச்சைகளையும், சண்டைகளையும் வென்று சாதனை படைக்க வேண்டும். மனித வாழ்வை மகத்தான ஒரு வாழ்வாக்க வேண்டும். அப்போதுதான், மனித வாழ்வு முழுமையாக மாற்றப்பட்டு முழுமையான மனிதத்தையும், முழுமையான நிறைவையும் பெறும். முழுமையான அன்பையும், முழுமையான ஆன்மிகத்தையும் பெறும்.

மனிதர்களிடம் இருக்கின்ற இறைவனை வெறுக்கக் கூடிய தன்மையினால் கடவுள் தோற்றுப் போய்விடவில்லை. இறை அரசை நிறுவுகின்ற தனது பணியை மனிதர்களின் இந்த வெறுக்கும் தன்மையினால் கடவுள் கைவிடவில்லை. இந்த இறை அரசு எல்லோரையும் அணைக்கின்ற எல்லோரையும் இணைக்கின்ற, ஒப்புரவை உருவாக்குகின்ற, நீதியை ஆட்சி செய்யப் பண்ணுகின்ற, சகோதரத்துவத்தை தழைக்கச் செய்கின்ற, ஓர் இறை அரசு. இயேசுவின் உயிர்ப்பினால் ஏற்கனவே இருந்த பழைய உலகத்திலே ஒரு புதிய வானமும் புதிய பூமியும் தோன்றியது. இந்தப் புதிய வானமும், புதிய பூமியும் புளிப்பு மாப் போன்று அனைத்தையும் புதியதாக்கி, புனிதமாக்கி மனிதனைப் பாவத்துக்கும் அநீதிக்கும் எதிராக வளர வைத்தது. கத்தோலிக்கத் திருச்சபை, இயேசு எம்மோடு என்றும் உயிர் வாழ்கிறார் என்ற அந்த இயேசுவின் உண்மையான பிரசன்னத்தை, உயிர்த்த இயேசுவின் தரிசனத்தில் வாழ்ந்து கொண்டும், அனுபவித்துக் கொண்டும், அன்றாடம் அறிவித்துக் கொண்டும் இருக்க வேண்டும்.



நாவற்குழி மத்திய மகா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட மாணவர்களுக்கு யாழ். நுழைவாயில் லயன்ஸ் கழகத்தால் காலணிகள் வழங்கப்பட்டன. வடபகுதிக்கான லயன்ஸ் ஆளுநர் கிறிஸ்ரி நாணயக்கார காலணிகளை வழங்கி வைத்தார். (ஜ-135)



மல்லாகம் மக்கள் மன்றத்தால் தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு மல்லாகம் ஸ்ரீ பாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் பாரம்பரிய விளையாட்டுக்கள் நடத்தப் பட்டன. (ஜ)






ஆனைக்கோட்டை பாலசுப் பிரமணிய வித்தியாலயத்தின் மைதானப் புனரமைப்பு பெயர் பலகைத் திரைநீக்கமும், வரு டாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியும் அண்மையில் நடைபெற்றன. நிகழ்வில் சண் டிலிப்பாய் பிரதேச செயலக கணக்காளர் ம.சிவகுமார், விரிவுரையாளர் திருமதி பி.சிவ குமார் ஆகியோர் விருந்தினர் களாகக் கலந்து கொண்டனர்.



வன்னேரிக்குளம் மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்லமெய்வன்மைப்போட்டி அண்மையில் இடம்பெற்றது. (ஜ)



சங்கானை நிகரை ஞான வைரவர் ஆல யத்தின் வருடாந்த அலங்காரத் திருவிழாக் காட்சி. (ஜ-29)





கொக்குவில் மேற்கு சி.சி. த.க பாடசாலையின் வரு டாந்த இல்லமெய்வன்மைப் போட்டி அண்மையில் இடம் பெற்றது. (ஜ)





வரணி வடக்கு சைவப்பிரகாச வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி அண் மையில் இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தி னராக ஓய்வு பெற்ற அதிபர் ப.இராசரத்தினம் கலந்து கொண்டார். (ஜ-122)







மன்னார் கல்வி வலயத்துக்குட்பட்ட ஆரம்பக் கல்வி மாணவர்களுக்கான கணித பாட முகாம் மன்னார் சென்.சேவியர் ஆங்கிலப் பாட சாலை யில் அண்மையில் நடைபெற்றது. (ஜ)





வயாவிளான் மத்திய கல்லூரியின் மாணவத் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் விழா அண்மையில் இடம் பெற்றது. பிரதம விருந்தினராக தெல்லிப்பழைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் மா.ஆனந்தக்குமார் கலந்து கொண்டார். (ஜ)





நானாட்டான் பிரதேச செயலர் பிரிவுக்குட்ட அச்சங்குளம் கிராமத்தைச் சேர்ந்த வாசிப்புக் (கண்) குறைபாடுகள் கொண்ட 50 பேருக்கு வடமாகாண சபை உறுப்பினர் வைத்திய கலாநிதி ஜீ.குணசீலன் மூக்குக் கண்ணாடிகளை வழங்கினார். (ஐ-56)



வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தால், அளவெட்டி அருணாசலம் வித்தியாலய மாணவர்கள் 6 பேருக்கும், வட்டு. இந்துக்கல்லூரி மாணவி ஒருவருக்குமாக 7 சைக்கிள்கள், வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்க தலைமைக் காரியாலத்தில் வைத்து சங்க போசகரும், ஓய்வு பெற்ற மின்சார சபைப் பொறியியலாளருமான வி.வேலுப்பிள்ளை மற்றும் ஓய்வு பெற்ற சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அதிபர் திருமதி வேலுப்பிள்ளை ஆகியோரால் கையளிக்கபட்டன. (ஜ)



கிளிநொச்சி, செல்வாநகரைச் சேர்ந்த பெண் தலைமைத்துவக் குடும்பத்தைச் சேர்ந்த வனசுதர் அன்னலட்சுமி என்பவருக்கு வட்டுக் கோட்டை இந்து வாலிபர் சங்கத்தால் வாழ்வாதார உதவி வழங்கப்பட்டது. (ஜ)





முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்புக் கோட்டத்தில் உள்ள மூங்கிலாறு ஆரம்பப் பாடசாலையின் இல்ல மெய்வன்மைப்போட்டி அண்மையில் நடைபெற்றது. பிரதம விருந்தினராக வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் கலந்து கொண்டு மாணவர்களுக்குப் பரிசில்களை வழங்கினார். (ஜ)





மானிப்பாய், கட்டுடை சைவவித்தியாசாலையில் புதிதாக அமைக்கப்பட்ட இரண்டு மாடிக்கட்டடத்தை வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் திறந்து வைத்தார்.(ஜ)



லண்டனைத் தலைமையகமாகக் கொண்ட பாக்கியம் அறக்கட்டளை நிறுவனத்தால், வவுனியா, நொச்சிமோட்டை கனிஷ்ட உயர்தர பாடசாலையில் கல்வி கற்கும் வறிய குடும்பங்களைச் சேர்ந்த சுமார் ஐம்பது மாணவர்களுக்கு பெறுமதி மிக்க பாடசாலைப் புத்தகப்பைகள் இலவசமாக வழங்கி வைக்கப்பட்டன. நிகழ்வில் பாக்கியம் அறக்கட்டளை அமைப்புச் சார்பாக ந.பாலசுந்தரம், திருமதி லோகேஸ்வரன், செல்வி.தனுஸ்டிகா ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (ஐ-422)



வட மாகாணசபை உறுப்பினர் எம்.பி.நடராஜ், பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் இருந்து இலுப்பைக்குளம், நேரியகுளம் சென்மேரிஸ் சனசமூக நிலையத்திற்கு சமையல் பாத்திரங்கள் வழங்கினார். (ஐ-402)



தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவில் நீண்ட காலம் கிராம அலுவலராகக் கடமையாற்றி இளைப்பாறிய க.வாமதேவனுக்கு, மட்டுவில் சாந்தநாயகி கல்விச் சமூகத்தினர் அண்மையில் சேவைநலன் பாராட்டு விழாவை நடத்தினர். பாடசாலை அதிபர் திருமதி ஜெ.தேவேஸ்வரன் கிராம அலுவலருக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். (ஐ-9)





யாழ்.நவக்கிரி அ.மி.த.க பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி பாடசாலை மைதானத்தில் பாடசாலை அதிபர் திரு.த.ராதாகிருஷ்ணமூர்த்தி தலைமையில் அண்மையில் நடைபெற்றது. பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் க.சர்வேஸ்வரன் கலந்து கொண்டார். (ஐ)



மாணவர்களது கல்விமேம்பாட்டுக்காக வட மாகாண அமைச்சர் பா..டெனிஸ்வரன், பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதியில் இருந்து கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மாணவனுக்கு சைக்கிள் ஒன்றைத் தனது யாழ். அலுவலகத்தில் வைத்து வழங்கினார். (ஐ)



வாசிப்பதில் கண் குறைபாடுகளைக் கொண்டவர்களுக்கு வடமாகாண சபை உறுப்பினர் வைத்தியர் ஜீ.குணசீலன் இலவசமாக மூக்குக்கண்ணாடிகளை வழங்கி வைத்தார். நானாட்டான் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சுமார் 100 இற்கும் மேற்பட்டவர்களுக்கு குறித்த மூக்குக்கண்ணாடிகள் இலவசமாக வழங்கப்பட்டன. (ஐ)



தீவக கல்வி வலயத்தைச் சேர்ந்த எழுவைதீவு முருகவேள் வித்தியாலய இல்ல மெய்வன்மைத் திறனாய்வுப் போட்டிகள் அண்மையில் நடைபெற்ற போது வெற்றி பெற்ற மாணவர்களுக்கு விருந்தினர்களால் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. (ஐ-9)



கொழும்புத்துறை, வசந்தபுரம் கிராமத்திலுள்ள யாகப்பர் ஆலயம் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு யாழ்.ஆயர் மேதகு யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையால் அபிசேகம் செய்யப்பட்டுத் திறந்து வைக்கப்பட்டது. (ஐ-135)



வவுனியா வடக்கு மன்னகுளம் தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெற்ற வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி பாடசாலையின் அதிபர் ஜெ.செந்தில்நாதன் தலைமையில் கடந்த வாரம் நடைபெற்றது. (ஐ)




வவுனியா நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலய ஆரம்பப்பிரிவு மாணவர்களின் இல்ல மெய்வன்மைப் போட்டி பாடசாலை அதிபர் தலைமையில் இடம்பெற்றது. பிரதம விருந்தினராக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன், சிறப்பு விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் எம்.பி.நடராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ-9)

நீர்வேலி தெற்கு ஞான வைரவர் ஆலயத்தின் வருடாந்தத் திருவிழாவின் இறுதியில் வைரவப்பெருமான் வீதி வலம் வந்தார். (ஐ-17)



## கண்ணீர் அஞ்சலி



வைத்திய கலாநிதி

**M.N.சிறிஸ்கந்தராஜா**

(MBBS, MCOG, FCOG(SL)

11.03.2016 அன்று சிவபமடைந்த எமது முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலை மகப்பேற்று பெண் நோயியல் வைத்திய நிபுணர் அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திப்பதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்

மலர்வு 14.12.1954 உதிர்வு 11.03.2016

பணிப்பாளர், வைத்தியர்கள், தாதிய உத்தியோகத்தர்கள், அலுவலக உத்தியோகத்தர்கள் மற்றும் அனைத்து ஊழியர்கள்
மாவட்ட பொது வைத்தியசாலை முல்லைத்தீவு.

(69778) (12.13.18.19)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 20 . 07 . 1950



மறைவு 12 . 02 . 2016

அமரர்

**சின்னத்தம்பி சித்திரவடிவேல்**

சிரேஸ்ட போதனாசிரியர் - தொலைக்கல்வி
ஓய்வு பெற்ற கோட்டக்கல்விப்பணிப்பாளர் - கோப்பாய்

தொண்ணூறாம் ஆண்டில் / தொடங்கிய தொலைக்கல்விப் பயணத்தில் எண்ணிலடங்கா தடைகள் தாண்டி எம்மை நல்லாசிரியர்களாய் நற்சேவையாளராய் உருவாக்கிட உம்மையே முழுதாய் அர்ப்பணித்து மகிழ்ந்தீர்...
இன்று நாம் ஆசிரியர்களாக, அதிபர்களாக, அதற்குமேலாக... எம் நற்பணியால் என்றும் உங்களை மாண்புற அஞ்சலிப்போம்.

தொடர்புகளுக்கு:
077 6179 000

ஆசிரிய மாணவர்கள் (1990)
பிராந்திய தொலைக்கல்வி நிலையம்
வட இந்து மகளிர் கல்லூரி - பருத்தித்துறை

(க/29902)(5-17)

## 31 ஆவது ஆண்டு நினைவஞ்சலியும் 45 ஆவது பிறந்த நாளும்



அமரர் துரைசிங்கம்

**சரவணன்துரை**

(அச்சுவேலி மத்தியகல்லூரி மாணவன்)

தாயின் மடியில்
27.04.1971

ஆண்டவன் அடியில்
13.03.1985

சொல்லுக்கினிய சுவையாய் வாழ்வின் செழும்பேறாய்
இல்லை இனிக்குறையென்று இறுமாந்த எம்
எண்ணக் குவியலின் வண்ணமாய் வாழ்ந்த நீ!
இன்றிருந்தால் 45 ஆவது ஜனனதினம் குதூகலம் அது
கனவாய் கரைந்து ஆண்டவன் அடி சேர்ந்து
31 ஆண்டுகள் என் எண்ணச் சுமையில் கனதியாய்...
காலச்சக்கரங்கள் கனதியாய் சுழன்றாலும்
நாளும்பொழுதும் உன் நினைவில் வாழும் நாம்
நெஞ்சிருக்கும் வரை நினைத்திருப்போம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி !!

திருச்செந்தூர்,
நாவலம்பதி, அச்சுவேலி.

நீங்கா நினைவுடன்,
அப்பா, அம்மா, பெரியம்மா குடும்பத்தினர்.

(க/27001)(5-26)

## கண்ணீர் அஞ்சலி



09.03.2016 புதன்கிழமை இறைபதமடைந்த

**நாகலிங்கம் கிருஷ்ணபாலா**

(இளைப்பாறிய ஆசிரியர்-யா/சென். சாள்ஸ் மகா வித்தியாலயம்)
அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன், அன்னாரின் பிரிவால் துயரும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பிவிவால் துயருறும்
இ. பூலோகசிங்கம் குடும்பம் (சகலன்)
ஏழாலை மேற்கு, ஏழாலை
ஜெ.துஷ்யந்தன் பிரியங்கா குடும்பம் (பெறாமகன்-லண்டன்)

(69914) (10.17)

## கண்ணீர் அஞ்சலி



எமது நிலைய உறுப்பினரும், கழகத்தின் கிரிக்கட் வீரருமான **கிருபானந்தன்** மற்றும் உறுப்பினர் **கருணாகரன்** (கருணா-UK) ஆகியோரின் பாசமிகு தந்தை

**சிற்றம்பலம் சண்முகரட்ணம்**

அவர்கள் கொழும்பில் காலமான செய்திகேட்டு ஆழ்ந்த துயரடைவதுடன் அவரின் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

கொக்குவில் மத்தி சனசமூக நிலையமும்
கே.சி.சி.சி. விளையாட்டுக் கழகமும்.

(C.29810) (10.17)

## கண்ணீர் அஞ்சலி



எமது நிலைய ஸ்தாபக ஆயுள்கால உறுப்பினரும், சமூக ஆவலரான

**நாகராசா நவரட்ணராசா**

அவர்கள் காலமான செய்திகேட்டு ஆழ்ந்த துயரடைவதுடன் அவரின் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

கொக்குவில் மத்தி சனசமூக நிலையமும்
கே.சி.சி.சி. விளையாட்டுக் கழகமும்.

(C.29811) (10.17)

## கண்ணீர் அஞ்சலி



**நாகராசா நவரட்ணராசா**

(சாந்தித நிறுவனத்தின் முகாமைத்துவ குழு உறுப்பினர்)

யார்க்கும் இனியவராய்
இதய ஒளி பரப்பி
வாழ்ந்த நல்ல
மனிதமே
விழி நனைய நெஞ்சம்
நெகிழ்ந்து விடை
தருகின்றோம்.

மண்ணில் 1954.04.14
விண்ணில் 2016.03.08


ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(C/29807) (10.17)

ஆழ்ந்த துயரத்துடன்
முகாமைத்துவக்குழு, பணியாளர்கள்
சாந்திகம்

## நினைவலைகள்

32 ஆம் ஆண்டு 9 ஆம் ஆண்டு



**குருநாதர் சின்னத்துரை**
(முன்னாள் கிராம அலுவலர் தென்மராட்சி



**சின்னத்துரை சிவசுதன்**
(முன்னாள் ஆசிரியர் யா/ வரணி மகாவித்தியாலயம்
B.A (Hons)

24.11.1933 தோற்றம் 10.02.1975
12.01.1984 மறைவு 08.03.2007

காத தூரம் நீங்கள் சென்று
காலங்கள் பல கழிந்தாலும்
கண்மணிகள் நீங்கள்தான்
காவியமாய் எம் மனதில்
என்றென்றும் வாழ்ந்திடுவீர்

(55386) (45.37)

கைதடி வடக்கு,
கைதடி.
(71, நந்தாவில் அம்மன் வீதி,
கொக்குவில் கிழக்கு)

என்றும் உங்கள் நினைவில்
குடும்பத்தினர்.

### காருண்யனுக்கு இன்று மணிவிழா

கொழும்பு, மார்ச் 13
பொன்மனச் செம்மல் கல்விக் காருண்யன் ஈ.எஸ். பி. நாகரத்தினத்தின் மணிவிழா இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்ப்பாணம் சேர்.பொன் இராமநாதன் வீதியில் அமைந்துள்ள சரஸ்வதி மண்டபத்தில் இடம்பெற உள்ளது.
யாழ். பல்கலைக் கழகப் பேராசிரியர் க.தேவராஜா தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் பலரும் கலந்துகொண்டு வாழ்த்து'ரை வழங்கஉள்ளனர். நாகரத்தின மாலை என்ற மணிவிழா மலரும் வெளியிடப்படவுள்ளது.
(த-4-250)

### இளைஞர்கள் தாக்குதல் பொலிஸ் அதிகாரி காயம்

கொழும்பு, மார்ச் 13
பொலிஸாருக்கும் பிரதேச இளைஞர்களுக்கும் இடையில் இடம்பெற்ற மோதலில் பொலிஸ் அதிகாரி காயமடைந்தார். பொலிஸ் வாகனத்தின் கண்ணாடிகளும் நொறுங்கின.
இந்தச் சம்பவம் காலி, தடல்ல பிரதேசத்தில் நேற்று அதிகாலை இடம்பெற்றது.
திருமண நிகழ்வொன்றில் முரண்பாடு ஏற்பட்டிருக்கின்றது என்று பொலிஸ் அவசர இலக்கத்துக்கு அதிகாலை 3 மணியளவில் அழைப்புக் கிடைத்தது. அதையடுத்து காலி பொலிஸ் நிலையத்தின் நான்கு அதிகாரிகள் சம்பவ இடத்துக்கு விரைந்தனர். அங்கு பொலிஸாருக்கும் மது போதையில் இருந்த இளைஞர்களுக்கும் இடையில் கடும் மோதல் ஏற்பட்டது.
இந்த மோதலில், காலி பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் ஒருவர் தலையில் கட்டையால் கடுமையாகத் தாக்கப்பட்டார். அவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.
இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய நான்கு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.
(கு-வ-4)

# மகளிர் தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 13

மறுமலர்ச்சி இளைஞர் கழகத்தின் மகளிர் தினம் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில் காலையடி மறுமலர்ச்சி மன்றத்தின் தியாகராசா மகேந்திரன் குடும்ப உள்ளரங்கில் மறுமலர்ச்சி இளைஞர் கழகத்தின் தலைவர் செல்வி சாயினி சோதிராசாவின் தலைமையில் இடம்பெறவுள்ளது. நிகழ்வில் சிறப்புக் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (ந-ஐ-4)

**வீடு வாடகைக்குண்டு**

பல்கலைக்கழகத்துக்கு அருகில் கட்டை அம்மன் வீதியில் சிறிய குடும்பத்திற்கு / பல்கலைக் கழக பெண்பிள்ளைகளுக்கு வீடு வாடகைக்குண்டு.

077 666 5347, 258 9075

**நல்லின கறவை பசு மாடுகள் தேவை**

பிறேசியன், சகிவால், ஜேசி குறோஸ் ஆகிய நல்லின கறவை பசுக்கள் எமக்குத் தேவை.

076 531 0422

**வீடு வாடகைக்குத் தேவை**

அரச உத்தியோகத்தர் குடும்பமொன்றுக்கு வீடு தேவை. மானிப்பாய், திருநெல்வேலி, நல்லூர் பகுதிகள் விரும்பத்தக்கது.

077 669 2132


**TICKETING COURSE**

G.D.S. மூலமாக விமான பயணச் சீட்டுக்களை பதிவு செய்வதற்கு உங்களுக்கு பயிற்சியளிக்கப்படும்.
மேலதிக விபரங்களுக்கு தொடர்புகொள்ளவும்.

AIRMARK Travels & Tours (Pvt) Ltd.
#5, Stanley Road, Jaffna.
Email: info@airmarktravels.com
021 222 4888 / 0772252255

**மணிவிழா நாயகன்**

E.S.P நாகரத்தினம் அவர்களை வளர்மதியார் வாழ்த்துகின்றனர்



"பொன்மனச் செம்மல்", "கல்விக்காருண்யன்"
உயர்திரு E.S.P நாகரத்தினம்
அவர்கள் எமது சமூகத்திற்கு கிடைக்கப்பெற்ற பெரும்பேறாகக் கருதுகின்றோம்.

பொருளாதார ரீதியில் நலிவுற்ற சிறார்களின் கல்விவிருத்திக்கு மட்டுமன்றி பல்கலைக்கழகம் வரை கற்கும் மாணவர்களுக்கு அவர்களின் கல்வி தடையின்றி தொடர்ந்திடவும், சிறிய பாடசாலைகள் தொடக்கம் பெரிய பாடசாலைகள் வரையான ஒட்டுமொத்த மாணவ சமூகத்தினரின் கல்வி அபிவிருத்திக்கு, இளம் சமூகத்தினரின் உடல் உள ஆரோக்கியத்தை செழுமைப்படுத்தும் பல்வேறு விளையாட்டுத் துறையின் விருத்திக்கென சமூக உயர்விற்கான அனைத்துத்துறைகட்கும் தனது சொந்த உழைப்பை பொருளாதார பலமாக கொண்டு ஆற்றிடும் அளப்பெரும் சேவையாளன் பொன்மனச்செம்மல் மணிவிழா நாயகன் அவர்களை அனைவருடன் நாமும் இணைந்து சகலமும்பெற்று பெருவாழ்வு வாழ வாழ்க வாழ்க என மனதார வாழ்த்துகின்றோம்.

Congratulations

சம்பியன் லேன், கொக்குவில்.

கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகம்

**வேலையாள் தேவை**

யாழ்ப்பாணத்தில் உள்ள குடிநீர் விற்பனை நிலையமொன்றுக்கு வேலையாள்கள் தேவை. (சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்)

இல.51, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.
077 788 5011

**வயல்காணி விற்பனைக்கு**

இரண்டு வயல் காணிகள் இருபாலையில் விற்பனைக்குள்ளன.

01. கொட்டுக்குளி - நெற்பரப்பு - 31
02. கலியாணக்குளம் - நெற்பரப்பு - 27 1/2

077 9369 369, 077 6141 360, 078 7018 701

**விற்பனைக்கு உண்டு**

நல்ல நிலையிலுள்ள டிப்பர் வாகனம் ஒன்று விற்பனைக்கு உண்டு.

021 222 2829

பிள்ளையார் இன்
இல.31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

**எழுதுமட்டுவாழ் விழுபளை கண்ணகை என வழங்கும் ஸ்ரீ மீனாட்சி அம்பாள் தேவஸ்தானம்**

**பொதுக்கூட்டம்**

மேற்படி அம்பாள் தேவஸ்தானத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும், தேவஸ்தானத்தின் புதிய நிர்வாக சபைத் தெரிவும் எதிர்வரும் 27.03.2016 ஞாயிற்றுக் கிழமை காலை 9.00 மணிக்கு ஆலய முன்றலில் நடைபெறும் என்பதனை மகாசபை உறுப்பினர்களுக்கும் அம்பிகை அடியார்களுக்கும் அறியத்தருகின்றோம்.

இதுவரை மகாசபை உறுப்புரிமைகோரி விண்ணப்பிக்க தவறிய அம்பிகை அடியார்கள் செயலாளருடன் தொடர்பு கொண்டு தமது உறுப்புரிமையை உறுதிப் படுத்திக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

மகாசபையில் உறுப்பினர்களாக உள்ள அனைவரையும் தவறாது கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தலைவர் / செயலாளர்
தேவஸ்தான பரிபாலன சபை

**கைதடி மேற்கு சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 60ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு நடத்தப்படும் யாழ்.மாவட்ட மற்றும் தென்மராட்சி ரீதியிலான மென்பந்து சுற்றுப்போட்டி**

**ஆரம்பம்:** 26.03.2016 சனிக்கிழமை காலை 8.00 மணி


**இடம் :** கைதடி சரஸ்வதி மைதானம்

**முதலாம் பரிசு - 12,000**
**இரண்டாம் பரிசு - 6000**
வெற்றிக் கேடயமும் வழங்கப்படும்.

**குறிப்பு :**
விண்ணப்பப் படிவங்களை யாழ்.ரொப்பாஸ் புடைவையகம், கைதடி, டயானா சிகை அலங்கரிப்பு நிலையம் ஆகிய இடங்களில் பெற்று 20 ஆம் திகதிக்கு முன்னர் எமது சன சமூக நிலையத்தில் ஒப்படைக்கவும்.

**தொடர்பு:**
077 779 9898, 075 039 9881

# 53 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



**தோற்றம்:10.05.1944** **மறைவு:21.01.2016**

அமரர்
## மாணிக்கம் கிருஷ்னன்
(கார் கிருஷ்னன்)

எங்கள் உயிரின் உயிரே – அப்பாவே...
எதற்காக மறைந்தாய் அப்பா
உயிர் வாழ்ந்தீரே நமக்காக
எங்கே சென்றாய் ஒரு வார்த்தை சொல்லாமல்
உயிர்பிரியும் வலியை
உன் பிரிவில் உணர்கின்றோம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

கடந்த 21.01.2016 அன்று இறைபதமெய்திய எமது குடும்பத்தலைவரின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (13.03.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் இந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகைதருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கைதடி மத்தி, குமரநகர். (69250)(15.17) **குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்கள்

### ஆறுமுகம் ஏகாம்பரம் (சோட்டர்)



வல்வெட்டித் துறையைப் பிறப்பிடமாகவும் திருச்சியை (இந்தியா) தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் ஏகாம்பரம் (சோட்டர்) 10.03.2016 திருச்சியில் காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம்- சோதிமுத்து தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் வனசிங்கம் (லண்டன்), ராஜசிங்கம் (வல்வெட்டித் துறை) ரூபசிங்கம் (லண்டன்), ஜெசிங்கம் (லண்டன்), துரைசிங்கம் (லண்டன்), ரட்ணசிங்கம் (பிரான்ஸ்), பாலசிங்கம் (லண்டன்), சிவபாலசிங்கம்( பிரான்ஸ்), ஶ்ரீபத்மசிங்கம் (பிரான்ஸ்), காலஞ்சென்ற சாந்திதேவி, வசந்திதேவி (இந்தியா), ஜெயந்தி தேவி (இந்தியா), சரோஜா தேவி (கனடா), கலாதேவி(கனடா) ஆகியோரின் அன்பு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.03.2016) ஞாயிற்றுக்கிழமை திருச்சியில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வவுனியா
தோணிக்கல்.
(68282)
தகவல்:
பேரன் ஜெ.சிறிராம்

**077 357 9190**

---

திருமதி
### மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம்



தோற்றம் 03.07.1933 மறைவு 09.03.2016

மூளாயைப் பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் 09.03.2016 புதன் கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அ.அமிர்தலிங்கத்தின் (முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர்) அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - நாகம்மா தம்பதியரின் (பண்டாரவளை-வல்லிபுரம்அன்சன்ஸ்) சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்ற வர்களான அப்பாப்பிள்ளை - வள்ளியம்மை(பண்ணாகம்) தம்பதிய ரின் மருமகளும், காண்டீபன், பகீரதன் ஆகியோரின் அன்புத் தாயாரும், ஞானாம்பிகை, திகம்பரலிங்கம் (கனடா), காலஞ்சென்ற கணேசானந்தன் (கனடா) மற்றும் கிருஷ்ண வேணி, தங்கராசா, கோபாலச்சந்திரன் ஆகியோரின் சகோதரி யும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 20.03.2016 லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


மங்களகிரி,
மூளாய், சுழிபுரம்.
தகவல்:
சகோதரி - கிருஷ்ணவேணி
தங்கராசா (ராசா)

(சி/29803)
(11,17,20)
**077 945 3798**

---

### இராசா சின்னப்பு

(இளைப்பாறிய தலைமை தபால் அத்தியட்சகர், எழுதுவினைஞர் சங்கத் தலைவர்)



பிறப்பு 10.10.1930 இறப்பு 10.03.2016

யாழ்.இருபாலை வடத் தான்பத்தையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்ட இராசா சின்னப்பு 10.03. 2016 வியாழக்கிழமை Toronto வில் இறைவனடி சேர்ந் தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னப்பு- தெய் வானை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற கந்தையா- ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் கமலாகலாலட்சுமி அவர்களின் ஆருயிர்க் கணவரும் பிறேமராணி, சந் திரகுமார், தவச்செல்வம், கமலேஸ்வரி, தர்மசீலன் (பாலா) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான தியாகராஜா, பாலசிங்கம், பரமேஸ்வரி மற்றும் நாகேஸ் வரி (இலங்கை) ஆகியோரின் அன்புச் சகோதரரும் குக தாஸன், துஷ்யந்தி, சுபாஜினி, தர்ஷினி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் பவளம்மா , பத்மநாதன் ஆகி யோரின் அன்பு மைத்துனரும் திவ்வியஆரபி, குகேசன், பிரணவி, பிருந்தன், சந்துஷா, சதுர்ஷன், சதுர்ஷ்டிகா, சாகித்யன், ராகவி, நருஷன் , டிசான் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(13.03.2016) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் கனடா ரொரென்ரோவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கோண்டாவில் றோட்,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.
(68232)
தகவல்: திருமதி.
வி. நாகேஸ்வரி

---

## மரண அறிவித்தல்கள்

### இராமு சுப்பிரமணியம்



முதலாம் கட்டைவீதி, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராமு சுப்பிரமணியம் நேற்று முன்தினம் (11.03.2016) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காசிப்பிள்ளையின் அன்புக் கணவரும், சதயலட்சுமி, சிவதாஸ், சந்திரலட்சுமி, சிவகரன், யோகலட்சுமி ஆகியோரின் அன்புத் தந்தையும் உருத்திர குமாரன், மகாலட்சுமி, திருஞான சம்பந்தர், திருச்செல்வி, கிருஸ்ண குமார் ஆகியோரின் ஆசை மாமனும் தேவிகா - டிலக்ஷன், ராகுலன், சுரேஸ் - தர்சிகா, சுரேசினி - அன்னலிங்கம், ரதீஸ், செந்தாழினி - தெசாந் ஆகியோரின் அன்புப்பேரனும் டீன், யபிசன், சயன், சயூன், சோபிசாந் ஆகியோரின் ஆசைப் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.03.2016) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முதலாம் கட்டை வீதி,
சாவகச்சேரி.
(60769)
(15,17)
தகவல்: குடும்பத்தினர்.
தொ.பே: 077 196 1992

---

திருமதி
### நாகம்மா இளையதம்பி



தோற்றம் 23 . 02 . 1922
மறைவு 12 . 03 . 2016

நிலாவரை வீதி, புன்னாலைக் கட்டுவன் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகம்மா இளையதம்பி நேற்று (12.03.2016) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நாதன் இளையதம்பியின் அன்பு மனைவியும், ஞானம், குணசிங்கம், ராணி, காலஞ்சென்ற இராசேந்திரம் மற்றும் இரட்ணம் (விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தாயும், சிவசம்பு, இராசாத்தி, சிவக்கொழுந்து, றெஜிபிரான்சிஸ்கா ரட்ணம் (ஆசிரியை- யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம்) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.03.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 3734136
077 431 8419
(69913)
(10,17)
தகவல்:
குடும்பத்தினர்.

---



தோற்றம் 07 . 01 . 1934
மறைவு 11 . 03 . 2016

### வேலுப்பிள்ளை சிவகுரு

(ஒட்டுசுட்டான், முல்லைத்தீவு)

ஒட்டுசுட்டானை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை சிவகுரு 11.03.2016 வெள்ளிக் கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை- பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், சிவபாக்கியத்தின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற கந்தையா வின் அன்புச் சகோதரனும், புஸ்பராணி, காலஞ்சென்ற அருந்தவராசா மற்றும் சின்ராசா (அதிபர், மு/வள்ளிபுனம் கனிஷ்ட உயர்தர வித்தியாலயம்), சிவநீதிராசா, காலஞ்சென்ற சிவயோகராசா மற்றும் சிவமலர் ஆகியோரின் அன்புத் தந்தையும், பாலேந்திராசா (ஓய்வுபெற்ற காணி உத்தியோகத்தர்), ஜெயலட்சுமி (ஆசிரியர், மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி), சிவமலர், அருள்நாயகம் (முகாமையாளர், பல நோக்கு கூட்டுறவு சங்கம், புதுக் குடியிருப்பு) ஆகியோரின் பாசமிகு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.03.2016) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 02.00 மணியளவில் புளியங்குளம் இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஒட்டுசுட்டான்,
முல்லைத் தீவு.
(69912)
(10,17)
தகவல்:
குடும்பத்தினர்.
T.P: 077 272 6508

---

## அரசியல்

தெரிவித்ததாவது:
தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இளைஞர்கள் பற்றி ஒரு வார்த்தை. எந்தவித குற்றச்சாட்டுக்களும் முன்வைக்கப்படாது, முழுக்க முழுக்க சந்தேகத்தின் அடிப்படையில் சிறைகளில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் அத்தனை இளைஞர்களையும் விடுவிக்கும் முயற்சிகளை விரைந்து மேற்கொள்ளுங்கள் என்று இந்தத் தருணத்தில் கேட்டுக் கொள்கின்றேன்.
பயங்கரவாதத் தடைச்சட்டத்தைத் தாமதமின்றிக் கைவிடுங்கள் என்றும் கேட்டுக் கொள்கின்றேன். இலங்கையின் வரலாற்றில் சாதனைகள் படைத்த ஜனாதிபதி என்று உங்களை சரித்திரம் அடையாளம் காட்ட வேண்டும். போர்க் குற்றம் தொடர்பில், சர்வதேச விசாரணை வேண்டும் என்று கோரிக்கை விடுத்த அமைச்சரும் முன்னாள் இராணுவத் தளபதியுமான சரத் பொன் சேகாவை பாராட்டுகின்றேன்.
மக்கள் மீள்குடியமர்வின் பின்னரே விமான நிலையம் மற்றும் துறைமுக அபிவிருத்தி என்பன மேற்கொள்ளப்பட வேண்டும்.
உரும்பிராயில் அமைக்கப்பட்டுள்ள மாதிரி வீடு எமது மக்களுக்குச் சற்றும் பொருத்தமில்லாதது. எங்களுடைய காலநிலை, எங்களுடைய சூழல், எங்களது கலாசாரம், எங்களதுவாழ்க்கைமுறைக்கு இந்த வீடு பொருத்த மில்லாதது. இதில் ஒரு வீட்டுக்குச் செலவு செய்யும் நிதியில் 2 அல்லது மூன்று வீடுகள் அமைக்க முடியும்.
இந்த வீட்டுக்கு ஆரம்பத்தில் காஸ் அடுப்பு வழங்குகின்றனர். தொடர்ந்து அந்தக் குடும்பத்தினரால்காஸ்கொள்வனவு செய்ய முடியுமா? அவர்கள் மீளவும் தமது பழைய முறையில் சமையலை செய்ய முற்பட்டால், இந்த வீடுகள் அதற்குப் பொருத்தமாக இருக்க முடியுமா ?
எங்களது பொறியியலாளர்களைக் கொண்டு, இந்த வீடுகளை மதிப்பீடு செய்தேன். அவர்கள் இந்த வீடு எமது சூழலுக்குப் பொருத்தமில்லாதது என்று அறிக்கை தந்துள்ளனர் - என்றார்.

(வ-5)

---

## மரண அறிவித்தல்கள்

திருமதி
### உருத்திரநாயகி (மனோன்) தர்மலிங்கம்



அராலி வடக்கு நாகேந்திர மடத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி உருத்திரநாயகி (மனோன்) தர்மலிங்கம் கடந்த (09.03.2016) புதன்கிழமை கால மானார்.

அன்னார் காலஞ்சென்ற தர்மலிங்கத்தின் அன்பு மனைவியும் சரோஜினிதேவி (கனடா), நடேஸ்வரன் (அராலி கிழக்கு அ.மி.த.க பாடசாலை), தனேஸ்வரன் (கனடா) ஆகியோ ரின் அன்புத்தாயாரும் அமிர்தலிங்கம் (கனடா), ராஜினி, கோமதி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் நிதுஷா (கனடா), துஷாந் (கனடா) ஆகியோரின் அன்புப்பேர்த்தி யாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.03.2016) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அராலி வடக்கு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாகேந்திர மடம்
அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை
(சி/29813)
(15,17)
தகவல்: மக்கள்,
மருமக்கள்,பேரப்பிள்ளைகள்
த.நடேஸ்வரன் - 0776659534

---

### திருமதி செல்லையா சரஸ்வதி



புத்தூர் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லையா சரஸ்வதி நேற்று (12.03.2016) சனிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா- இலட்சுமி தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற நாகமுத்து செல்லையாவின் அன்பு மனைவி யும், கந்தையா, இராஜதுரை (இளைப்பாறிய A/O கச்சேரி) யின் அன்புச் சகோதரியும், செல்வராணி காலஞ்சென்ற பால சுப்பிரமணியம் மற்றும் தவராணி காலஞ்சென்றவர்களான அன்பழகன், வானதி மற்றும் காண்டீபன் (கனடா), குமுதினி (ஜேர்மனி), பன்னீர்ச் செல்வன் (ஆசிரியர், இடைக்காடு மகா வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தாயும், சண்முகரத்தினம் (இளைப்பாறிய அதிபர், கோப்பாய் ச.ப.வி) சிறிரதம், யசோதா (ஜேர்மனி), மகிந்தினி (கனடா), சௌந்தரராஜன் (ஜேர்மனி) உமையாள் (பிரதேச செயலகம் - D/O கோப்பாய்) ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.03.2016) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக புத்தூர் கிந்து சிட்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வைரவர் கோயிலடி,
புத்தூர் வடக்கு, புத்தூர்.
(69923)
(10,17)
தகவல்:
செ.பன்னீர்ச்செல்வன்
(மகன்)

## வாக்குறுதியை

இடம்பெற்றது. அங்கு உரையாற்றிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது உரையில் தெரிவித்ததாவது:

**போரினால் ஏழ்மை அதிகரிப்பு**

கடந்த மாதம் தேசிய சாரணர் ஜம்போறி நிகழ்வில் பங்கெடுப்பதற்காக யாழ்ப்பாணம் வந்திருந்தேன். அங்கு வடக்கு – தெற்கு சாரணர்கள் ஒன்றாக, சந்தோசமாக இருந்தனர்.

வடபகுதி மக்கள் கஷ்டமான வாழ்க்கை வாழ்கின்றனர். இந்தப் பகுதியில் உஷ்ணமான காலநிலை அதிகம். ஆனால் இங்குள்ள மக்கள் கஷ்டப்பட்டு தங்கள் விளைபொருள்களை அறுவடை செய்கின்றனர்.

இலங்கையின் ஒன்பது மாகாணங்களும் ஒரே மாதிரியாக அபிவிருத்தி செய்யப்படவேண்டும். ஆனால் வடக்கு – கிழக்கு மாகாணங்கள் போரினால் பாதிக்கப்பட்டவை. இவை கடந்த காலங்களில் அபிவிருத்தி செய்யப்படவில்லை. போர்க் காலத்தில் இங்குள்ளவர்களின் உயிர்கள் மட்டும் பறிபோகவில்லை. ஏழ்மை நிலையும் இங்கு அதிகரித்தது. போரின் காரணமாக வடக்கு – கிழக்கு மாகாணங்கள் மட்டுமல்ல தென்பகுதியும் பாதிப்புக்கு உள்ளானது.

**விவாதம் வேண்டாம்**

போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக 65 ஆயிரம் வீடுகளை நாம் அமைத்துக் கொடுக்கவுள்ளோம். இது தொடர்பில் வடக்கு மாகாண முதலமைச்சர் தனது கருத்தைக் கூறினார். மீள்குடியேற்ற அமைச்சர் சுவாமிநாதன் தனது கருத்தைக் கூறினார். இதில் விவாதம் தேவையில்லை. இந்த வீட்டில் நானோ, அமைச்சர் சுவாமிநாதனோ, முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரனோ இருக்கப் போவதில்லை. மக்கள்தான் இந்த வீட்டில் இருக்கப் போகின்றனர். போரினால் பாதிக்கப்பட்ட மக்கள்தான் இதில் குடியமரப் போகின்றார்கள். எனவே மக்களின் விருப்பத்துக்கே நாங்கள் விடவேண்டும். மக்கள் எவ்வாறான வீட்டை விரும்புகின்றார்கள் என்பதை, அவர்கள்தான் சொல்லவேண்டும்.

மக்களின் அபிப்பிராயத்தின் படியே இந்த வீட்டுத் திட்டத்தை முன்னெடுக்கலாம். மத்திய அரசு – வடக்கு அரசு எல்லோரும் சேர்ந்து மக்களின் கருத்தை அறிந்து கொள்வோம்.

**காணிகளைக் கொடுக்க வேண்டும்**

நான் மாதிரி வீடுகளைப் பார்த்தேன். அங்கு செல்லும்போது, அருகிலிருந்த மக்களுடனும் கலந்துரையாடினேன். அவர்கள் மிகவும் கஷ்டமான நிலையில் இருப்பதைக் கண்டு கொண்டேன். தங்கள் காணிகளைத் தாருங்கள் என்று என்னிடம் கேட்டார்கள். அவர்கள் கேட்பது இன்னொருவரது காணிகளை அல்ல. தங்களது பரம்பரைக் காணிகளை – சொந்தக் காணிகளைத்தான் கேட்கின்றார்கள். அதனை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு எங்களுக்கு இருக்கின்றது. எதிர்வரும் சில மாதங்களில் இந்த வேலையை முடிக்கத்தான் வேண்டும்.

டிசெம்பர் மாதம் நத்தார் விழாவுக்காக யாழ்ப்பாணத்திற்கு வந்திருந்தேன். இந்த ஆண்டு ஜுன் மாதத்தினுள் இடம்பெயர்ந்த மக்களை அவர்களது சொந்த நிலங்களில் குடியமர்த்துவேன் என்று அப்போது சொல்லியிருந்தேன். இந்த வருடத்தில் 3 மாதங்கள் முடிந்து விட்டன. வாக்குறுதியை நிறைவேற்ற 3 மாதங்கள் மாத்திரம்தான் இருக்கின்றன. இதனை எவ்வாறு செய்ய வேண்டும் என்று சிந்திக்கின்றேன். எல்லோரும் இதனை நிறைவேற்ற ஒத்துழைக்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கின்றேன்.

**சர்வதேசமும் கண்காணிக்கின்றது**

காணிகளை மீள ஒப்படைப்பதை இந்த அரசு தனது முக்கிய நடவடிக்கையாக மேற்கொள்கின்றது. ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் செயிட் அல் – ஹுசேன் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருந்தார். என்னைச் சந்தித்து, இந்த மக்களை எப்போது மீள்குடியமர்த்தப் போகின்றீர்கள் என்பதைத்தான் கேட்டார். இடம்பெயர்ந்த மக்களின் பிரச்சினை, உள்நாட்டில் மட்டுமல்ல சர்வதேச ரீதியிலும் முக்கியமானதாக இருக்கின்றது.

**விமர்சனங்களுக்கு அஞ்சவில்லை**

மக்களின் காணிகளை நாங்கள் இங்கு விடுவிக்கின்றபோது, தென்னிலங்கையில் பல்வேறு விமர்சனங்கள் எங்களுக்கு எதிராக முன்வைக்கப்படுகின்றன. எந்த வேலையைச் செய்தாலும் விமர்சனங்களை முன்வைப்பார்கள். விமர்சனங்களால் எம்மைக் கட்டுப்படுத்த முடியாது. விமர்சனம் செய்கின்றவர்கள், அதனைச் செய்து கொண்டுதான் இருப்பார்க்ள். ஆனால் நாம் மக்களுக்கான வேலையைச் செய்ய வேண்டும்.

தற்போது மீண்டும் சொல்கின்றேன், தெற்கிலிருந்து விமர்சனம் செய்கின்றவர்களே! இங்கு இடம்பெயர்ந்த மக்களின் துன்பங்களை நேரில் வந்து பாருங்கள். அதன் பின்னர் உங்கள் விமர்சனங்களை முன்வையுங்கள்.

இந்த நாட்டில் நல்லிணக்கம் உருவாக்கப்பட வேண்டும் என்று சொன்னவுடன், எல்லா நிறுவனங்களும் வடக்கு மக்களை நோக்கித்தான் வருகின்றன. உண்மையில் நல்லிணக்கம் தென்னிலங்கை மக்களிடத்திலிருந்துதான் உருவாகவேண்டும். தென்னிலங்கை மக்கள் மத்தியில்தான் கடும்போக்காளர்கள் இருக்கின்றனர்.

**சமத்துவமான நாடு**

எல்லோரும் சம உரிமையோடு இருக்கத்தானே வேண்டும்! எல்லோரும் சந்தோசமாக வாழத்தானே வேண்டும்! இந்த நாட்டில் எல்லோருக்கும் சம உரிமையோடு வாழ்வதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படவேண்டும். சமத்துவமாக வாழ்வதற்கு உரிய நாட்டை உருவாக்க முன்வருமாறு சகலரையும் கோருகின்றேன் – என்றார். (உ–வ–5)

## ரூ. 18 கோடி

சிவப்பு நிறக் காரொன்றில் அச்சுவேலிப் பகுதியில் இருந்து ஹெரோயின் கடத்தப்படுவதாக வல்வெட்டித்துறைப் பொலிஸ் புலனாய்வுப் பிரிவுக்கு இரகசியத் தகவல் கிடைத்தது. சந்தேக நபர்களையும் போதைப்பொருளையும் பிடிக்கத் தீவிர முயற்சி எடுக்கப்பட்டது. இதற்காக, சுற்றிவளைப்புகள் – தேடுதல்கள், சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. கடத்தல் பற்றிய தகவல் கிடைத்ததும் வடமராட்சிக்குள் நுழையும் பிரதான வீதிகள் பொலிஸாரின் தீவிர கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டன. தொண்டமானாறு பகுதியில் வைத்துக் குறித்த கும்பலை மடக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

பொலிஸ் கெடுபிடிகளை அறிந்த சந்தேக நபர்கள் தொண்டமானாறுப் பாலத்துக்கு அருகில் ஹெரோயினை மறைத்து வைத்துவிட்டு தப்பிவிட்டனர். ஹெரோயின் பைக்கெற்றுகள் பொலித்தீனால் சுற்றப்பட்டு பொதி செய்யப்பட்டிருந்தன. சந்தேகநபர்களை மடக்கத் தீவிர நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

யாழ்ப்பாணத்தில் கடந்த காலங்களுடன் ஒப்பிடும்போது, பொலிஸ் நடவடிக்கையில் கைப்பற்றப்பட்ட அதிகூடிய பெறுமதியைக் கொண்ட போதைப்பொருள் இதுவாகும்.

கடந்த காலங்களில் யாழ். மாவட்டத்தில் மீட்கப்பட்ட ஏனைய போதைப் பொருள்களோடு ஒப்பிடும்போது, இதுவே மிகப்பெரியது. இந்த ஹெரோயின் பைக்கெற்றுகள் இந்தியாவின் தமிழகத்தில் இருந்து படகு மூலமாக எடுத்து வரப்பட்டதாகச் சந்தேகிக்கின்றோம். அவற்றைக் கொழும்புக்குக் கடத்துவதே திட்டம்.

கடத்தல் கும்பல், அச்சுவேலியில் இருந்து ஹெரோயின் பைக்கெற்றுகளை வடமராட்சி ஊடாக நகர்த்திக் கொழும்புக்குக் கடத்த முயற்சித்துள்ளது. வடமராட்சியில் பொலிஸார் கண்காணிப்பை இறுக்கியதால் மேலும் நகர்த்த முடியாமல், தொண்டமானாறுப் பகுதியில் தற்காலிகமாக மறைத்து வைத்து விட்டுக் கும்பல் மறைந்து விட்டது. – என்றார்.

குடாநாட்டில் கஞ்சா கடத்தல் முயற்சிகள் அதிகரித்துள்ள நிலையில், அதிக பெறுமதியுடைய உயிர்கொல்லி ஹெரோயின் போதைப்பொருள்கள் சிக்கியிருக்கின்றமை மக்களை அதிர்ச்சியடைய வைத்துள்ளது.

(உ–த–வ–4–109–107)

## இளைஞர்

ஏறாவூரில் நேற்று நண்பகல் இடம் பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:

ஏறாவூர் ஹிஸ்புல்லாஹ் நகர்– மிச்நகர் கிராமத்தைச் சேர்ந்த அப்துல் மலிக் பௌமி (வயது – 18) என்ற இளைஞர், கட்டிலில் படுத்திருந்துகொண்டு நீண்ட நேரமாக அலை பேசியில் கதைத்துள்ளார்.

சிறிதுநேரத்தின் பின்னர், இளைஞரிடம் எந்த அசைவையும் காணாத குடும்பத்தவர்கள், இளைஞரைத் தட்டி எழுப்பியபோதும் அவர் மூச்சுப்பேச்சின்றிக் கிடந்துள்ளார்.

உறவினர்கள் உடனடியாக அவரை வைத்தியசாலையில் சேர்த்தனர். அங்கு அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என்று மருத்துவர்கள் அறிவித்தனர்.

குறித்த இளைஞர் ஒரு இருதய நோயாளி என்றும் அவரது பெற்றோர் தெரிவித்தனர்.

சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது. (உ–த–சி)

## அச்சுவேலி

வடக்கு மாகாண இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புக் கிட்டும் என்ற நம்பிக்கையில் பல திட்டங்களை மேற்கொண்டது.

அதனாலேயே அச்சுவேலிப் பகுதியில் தொழிற்பேட்டைக்கான செலவையும் இந்திய அரசு ஏற்றுக்கொண்டது. இருப்பினும் அது பூரண திருப்தியை இன்று வரை எட்டவில்லை. இதனால் குறித்த திட்டம் வீணாகிப் போய் விட்டதோ என எண்ணத்தோன்றுகின்றது.

இந்திய அரசின் நிதியுதவியில் மேற்கொள்ளப்படும் துரையப்பா விளையாட்டரங்குக்கான பணிகள் இன்னும் 20 நாள்களுக்குள் முழுமை பெறும். இந்த ஆண்டின் சர்வதேச யோகா தினத்தை இந்த மைதானத்தில் நடத்த எண்ணியுள்ளோம். இதுதவிர, யாழ். பொதுநூலகத்தில் இந்திய முன்னாள் ஜனாதிபதி கலாநிதி ஏ.பி.ஜே. அப்துல் கலாமின் உருவச் சிலையை நிறுவத் தீர்மானித்துள்ளோம்.

யாழ். பொதுநூலகத்தில், இந்தியன் கோர்னர் என்ற புத்தக நிலையம் ஒன்று உருவாக்கப்பட்டு, அதில் இந்தியப் புத்தகங்கள் 10 ஆயிரம் வைக்கப்பட்டுள்ளன. இந்தப் புத்தக நிலையத்தை வெறும் காட்சிக் கூடமாகப் பார்க்காமல், அங்கு உள்ள புத்தகங்களை பொதுமக்கள் பாவித்துப் பயன்பெற வேண்டும் –என்றார்.

(த–வ–4,101,106)

## பாண்

குறைப்பை மேற்கொள்ளுமாறு, தமது சங்கத்துக்குட்பட்ட வெதுப்பகங்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

நுகர்வோர் அதிகார சபையினால், முதல் தடவையாக இலங்கையில் நுகர்வோர் வாரம் அனுஷ்டிக்கப்படவுள்ளது. இன்று திங்கட்கிழமை தொடக்கம் எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரையான ஒரு வார காலம் இதற்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

பாவனையாளர்களைக் கவனிக்கும் இந்த வாரத்துக்குள், பாவனையாளர்கள் மீது காட்டும் உபசரிப்பு என்ற ரீதியில் பாணின் விலையைக் குறைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை வெதுப்பக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் எம்.கே.ஜயவர்த்தன தெரிவித்தார்.

500 ஆண்டுகள் வரலாற்றைக் கொண்டுள்ள வெதுப்பகத் தொழிலின் மூலமாக, பாவனையாளர்களுக்கு இதுவரை உபசரிப்பு வழங்கப்பட்டதில்லை என்பதால் பாவனையாளர்களைக் கவனிக்கும் இந்த வாரத்தினுள் அந்த உபசரிப்பை வழங்க அனைத்து வெதுப்பக உரிமையாளர்களும் ஒத்துழைப்பர் எனத் தாம் எதிர்பார்க்கிறார் எனத் தலைவர் தெரிவித்துள்ளார்.

(உ–த–வ–5–22)

## இராணுவத்தை

வடக்கு மாகாண முதலமைச்சர் தனது உரையில் தெரிவித்ததாவது:

காலம் கடந்தாவது, 553 குடும்பங்களுக்குரிய 700 ஏக்கர் காணிகள் மற்றும் நடேஸ்வராக்கல்லூரி, நடேஸ்வரா கனிஷ்ட வித்தியாலயம் ஆகியவற்றைப் பொது மக்களிடம் மீளக் கையளிக்கும் இந்த நல்ல நிகழ்வின் மூலமாக ஜனாதிபதி தான் தந்த வாக்குறுதிகளை மெல்ல மெல்ல நிறை வேற்ற எத்தனித்து வருகின்றார் என்று கூறலாம். இதற்கு எமது மக்கள் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நீங்கள் ஜனாதிபதியாகப் பொறுப்பேற்ற காலத்திலிருந்து தமிழ் மக்கள் படிப்படியாகச் சில நன்மைகளைப் பெற்று வருவதை நன்றியறிதலுடன் நினைவுகூருகின்ற இந்த நல்ல சந்தர்ப்பத்தில், எமது மக்களின் துன்ப துயரங்களையும், அவர்களின் அல்லற்பாடுகளையும் நீங்கள் நேரில் கண்டும் விசாரித்தும் அறிந்து கொண்டவர் என்ற வகையில், இந்த மக்களுக்கான ஒரு இயல்பு வாழ்க்கையை அமைத்துக் கொடுக்க வேண்டிய மிகப் பெரிய பொறுப்பு உங்கள் மீது சுமத்தப்பட்டிருக்கின்றது என்பதுதான் யதார்த்தம் என்பதை நீங்கள் உணர்ந்திருப்பீர்கள். அதை நீங்கள் செவ்வனே செய்து முடிப்பீர்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

தமிழ் மக்கள் சிங்கள மக்களுக்கு எதிரானவர்கள், அவர்கள் எந்த நேரமும் சிங்கள் மக்களை வெறுப்புணர்வுடன் நோக்குகின்றார்கள் என்ற ஒரு தவறான கருத்து முன்னைய அரசியல் தலைவர்களால் சிங்கள மக்கள் மத்தியில் வேண்டு மென்றே விதைக்கப்பட்டிருந்தது. இந்தத் தவறான கருத்தை சிங்கள மக்களின் மனங்களிலிருந்து நீக்குவதற்கு இன்றைய அரசியல் தலைவர்கள் முன்வரவேண்டும். அரசியல் இலாபத்துக்காகவே, அவ்வாறு அவர்கள் செய்தார்கள் என்பதை சிங்கள மக்கள் உணர்ந்துகொள்ள வேண்டும்.

இன்று விடுவிக்கப்பட்ட 700 ஏக்கர் காணிகளைப் போன்று வலி. வடக்கில் மட்டும் எஞ்சியுள்ள 4 ஆயிரத்து 700 ஏக்கர் காணிகளையும் படிப்படியாக, ஒரு குறிப்பிட்ட காலஎல்லைக்குள் மீளக் கையளிக்க ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன். அதைவிட வடக்கு மாகாணம் முழுவதும் பல்லாயிரம் ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட வேண்டிய நிலையில் உள்ளன – என்றார்.

(வ–5)



## ஈகையில் இமயத்தின் வடிவம் ஈ.எஸ்.பி

சிந்தையில் உயர்ந்த கொடையாளர்
சீர்மிகு சமூகப் பற்றாளர் இவர்
விந்தையைப் போற்றுவோம் உளமார
வியப்புறு(ம்) அவர்பணி உயர்வாக....

தேவைகள் அறிந்து உதவிடும் நல்
சேவையில் உயர்ந்த சிகரமதாய்
ஈகையில் இமய வடிவானீர்
இதந்தரும் இனிய மக(ர)னானீர்

கற்பதன் தேவையை அறிந்துணர்ந்து
கனபணி ஆற்றும் மாண்புடையான்
குற்றமே அற்ற குணத்துடையான்
குறையா உதவும் மனத்துடையான்

அற்புதம் தரும் நல்மெய் பொருளாய்
அளப்பெரும் சேவைக் கொடையாளன்நின்
நற்பணி போற்றி வாழ்த்துகின்றோம்
நலம் பல பெற்று நீடு(டு) வாழி!

யாழ்ப்பாணம்
தேசிய கல்வியியற் கல்லூரிச் சமூகம்

# சம்பியனாகியது புதுக்குளம் ம.வி.; வவுனியா வலய துடுப்பாட்டத்தில்

வவுனியா வடக்கு கல்வி வலயப் பாடசாலை களுக்கிடையிலான பெண்களுக்கான துடுப்பாட்டத் தொடரில் புதுக்குளம் மகா வித்தியாலய அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துள்ளது.

புதுக்குளம் மகா வித்தியாலய மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை இறுதியாட்டம் நடைபெற்றது. இறுதியாட்டத்தில் புதுக்குளம் மகா வித்தியாலய அணியை எதிர்த்து ஓமந்தை மத்திய கல்லூரி அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய ஓமந்தை மத்திய கல்லூரி அணி நிர்ணயிக்கப்பட்ட 5 பந்துப் பரிமாற்றங்களில் 3 இலக்குகளை இழந்து 59 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக ஜதுசிகா ஆட்டமிழக்காமல் 37 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் புதுக்குளம் அணி சார்பாக சோபிகா, சாந்தி தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய புதுக்குளம் அணி 4.5 பந்துப் பரிமாற்றங்களில் இலக்கை அடைந்தது. அதிகபட்சமாக லக்சிகா 16 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். பந்துவீச்சில் ஓமந்தை அணி சார்பாக யதுர்சிகா, டிலானி, கஜனி மூவரும் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினர். 3ஆம் இடத்தை தரணிக்குளம் சிறிகணேசா வித்தியாலய அணி பெற்றது. (ம-422)

# ரி-20 உலகக் கிண்ணத்துக்கான இன்றைய தகுதிகாண் ஆட்டம்

ரி-20 உலகக்கிண்ணத் தொடருக்கான தகுதிகாண் ஆட்டங்கள் தற்பொழுது நடைபெற்று வருகின்றன. தர்மசாலா மைதானத்தில் இன்று பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அயர்லாந்தை எதிர்த்து நெதர்லாந்து மோதவுள்ளது. இரவு 7.30 மணி க்கு இடம்பெறும் ஆட்டத்தில் பங்களாதேஷை எதிர்த்து ஓமன் மோதவுள்ளது. (ம)




# தாஸ் ஞாபகார்த்த கிண்ணத்தை தனதாக்கியது சென்.அன்ரனிஸ்

## போராடி வீழ்ந்தது சென்.மேரிஸ்

யாழ்ப்பாணம், மார்ச் 13

கழுகுகள் வி.கழகம் நடத்திய கால்பந்தாட்டத் தொடரில் நாவாந்துறை சென்.மேரிஸ் அணியை வீழ்த்தி தாஸ் ஞாபகார்த்தக் கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது பாசையூர் சென்.அன்ரனிஸ் அணி.

கழுகுகள் விளையாட்டுக்கழகம் நடத்திய தாஸ் ஞாபகார்த்த கிண்ணத்துக்கான விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம் வல்வெட்டித்துறை கழுகுகள் விளையாட்டுக்கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. இறுதியாட்டத்தில் பாசையூர் சென்.அன்ரனிஸ் அணியை எதிர்த்து நாவாந்துறை சென்.மேரிஸ் அணி மோதிக் கொண்டது. வாய்ப்புக்கள் கிடைப்பதும் வீணடிக்கப்படுவதுமாகக்கோல் கணக்குகள் ஆரம்பிக்கப்படாமல் முடிவடைந்தது முதல் பாதி.

இரண்டாம் பாதியின் பத்தாவது நிமிடத்தில் பாசையூர் சென்.அன்ரனிஸ் அணியின் தலைவர் மதுசன் முதல் கோலைப் பதிவு செய்தார். பழிதீர்க்க வேண்டிய கட்டாயத்தில் சென்.மேரிஸ் அணியும் ஆதிக்கத்தை தொடரும் முனைப்பில் சென்.அன்ரனிஸும் தீவிரம் காட்ட ஆட்டத்தில் விறுவிறுப்பு இரட்டிப்பானது. இருப்பினும் சென்.மேரிஸால் பதிலடி கொடுக்க முடியாது போக முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது சென்.அன்ரனிஸ். ஆட்டநாயகனாகப் பாசையூர் சென்.அன்ரனிஸின் தலைவர் மதுசன் தெரிவானார். தொடராட்ட நாயகனாக பாசையூர் சென். அன்ரனிஸ் அணியின் கலிஸ்ரஸ் தெரிவானார். சிறந்த கோல் காப்பாளராக நாவாந்துறை சென்.மேரிஸின் சுதா தெரிவானார்.

மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் பலாலி விண்மீன் அணியை எதிர்த்து நவிண்டில் கலைமதி அணி மோதிக் கொண்டது. இதில் பலாலி விண்மீன் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று மூன்றாம் இடத்தைத் தனதாக்கிக் கொண்டது. நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினராக அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கவிந்திரன் கோடீஸ்வரனும், கௌரவ விருந்தினராக வடமாகாண மீன்பிடி, போக்குவரத்து, கிராம அபிவிருத்தி அமைச்சர் பா. டெனீஸ்வரனும் கலந்து கொண்டனர். (ம-23)

# பளுதூக்கல், கராத்தே தொடர்கள்

கரணவாய், மார்ச் 13

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் அனுமதியுடன் யாழ். மாவட்டச் செயலக விளையாட்டுப் பிரிவினர், மாவட்ட ரீதியாக நடத்தும் இருபாலாருக்குமான பளுதூக்கல் மற்றும் கராத்தே தொடர்கள் எதிர்வரும் 22 ஆம் திகதி அரியாலை சரஸ்வதி விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ளன. தொடர்களில் பங்குபற்ற விரும்பும் வீர, வீரங்கனைகள் தமது பிரதேச செயலக விளையாட்டு அலுவலரூடாகத் தமது பதிவுகளை எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன் மேற்கொள்ளுமாறு மாவட்ட விளையாட்டு அதிகாரி கே.விஜிதரன் அறிவித்துள்ளார். (ம-108)

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 13

**வைகறை வி.க.தொடர்**

யாழ். மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுமதியுடன் புதுமடம் வைகறை விளையாட்டுக்கழகம் நடத்திய தாச்சித் தொடரின் ஆட்டங்கள் புதுமடம் வைகறை விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று ஞயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறவுள்ள ஆட்டத்தில் சாந்தை அணியைஎதிர்த்துதாவடி காளி அம்பாள் 'ஏ' அணி மோதவுள்ளது.

**யுனைற்றெட் வி.க.தொடர்**

மன்னார் கால்பந்தாட்ட லீக்கும் ஜோசவாஸ்நகர் யுனைற்றெட் விளையாட்டுக்கழகமும் இணைந்து நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் ஜோசவாஸ்நகர் யுனைற்றெட் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் சாந்திபுரம் குறோஸ்ரார் அணியை எதிர்த்து விடத்தல்தீவு ஐக்கியம் அணி மோதவுள்ளது. தொடர்ந்து 8.30 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது ஆட்டத்தில் ஜோசவாஸ்நகர் ஜோசவாஸ் அணியை எதிர்த்து பள்ளிமுனை சென். லூசியா அணி மோதவுள்ளது. (ம-23)



# புதுக்குளம் ம.வியைப் பந்தாடியது கனகராயன்குளம் மகா வித்தியாலயம்

வவுனியா, மார்ச் 13

வவுனியா வடக்குக் கல்வி வலய பாடசாலைகளுக்கிடையிலான பெண்களுக்கான கரப்பந்தாட்டத்தில் கனகராயன்குளம் மகா வித்தியாலயம் இம்முறையும் கிண்ணத்தை சுவீகரித்துள்ளது. கனகராயன்குளம் மகா வித்தியாலய மைதானத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில் கனகராயன்குளம் மகா வித்தியாலயத்தை எதிர்த்து புதுக்குளம் மகா வித்தியாலய அணி மோதியது. கனகராயன்குளம் மகா வித்தியாலய அணி வீராங்கனைகளான கிலானிகா, அனுசாயினி இருவரும் தலா இரு கோல்களை பதிவுசெய்ய முதல் பாதியில் 4:0 என முன்னிலை வகித்தது அந்த அணி. இரண்டாம் பாதியிலும் ஆட்டம் கனகராயன் குளம் மகா வித்தியாலய அணியின் பக்கமே இருந்தது. அந்த அணியின் வீராங்கனைகளான கிலானிகா 3 கோல்களையும் அனுசாயினி இரு கோல்களையும் பதிவு செய்ய முடிவில் கனகராயன் குளம் மகா வித்தியாலய அணி 9:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது. (ம-422)

# உலகக்கிண்ணத்தை வெல்ல தென்னாபிரிக்காவுக்கும் வாய்ப்பு

## —பிளாசிஸ்

நாங்கள் முழுத்திறமையை வெளிப்படுத்தும் பட்சத்தில் உலகக்கிண்ணத்தை வெல்வோம் என்று தென்னாபிரிக்க அணித்தலைவர் பிளாசிஸ் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

ரி-20 அரங்கில் தென்னாபிரிக்கா சிறந்த நிலையில் உள்ளது. அந்த அணியில் பிளாசிஸ், வில்லியர்ஸ், மில்லர், அம்லா, ஹொக், பெக்கார்டின், மொறிஸ் என பல அதிரடி வீரர்கள் உள்ளனர். பந்துவீச்சைப் பொறுத்த மட்டில் ரபாடா, ஸ்ரெயின், தாகிர் மூவரும் அசத்துகின்றனர். இந்த அணிச் சேர்க்கையை வைத்தே பிளாசிஸ் உலகக்கிண்ணம் தொடர்பான தனது கருத்தைப் பகிர்ந்துள்ளார். ரி-20 உலகக்கிண்ணத் தொடர் தொடர்பாகப் பிளாசிஸ் தெரிவிக்கையில் - எங்களது திறமைக்கு ஏற்ப முழு திறமையை வெளிப்படுத்தினால், கிண்ணத்தை வெல்ல முடியும் என்பதை அறிவோம். உலகக்கிண்ணத்தை வெல்ல எல்லா அணிக்கும் வாய்ப்புள்ளது. ஆனால் இந்திய அணி விளையாடி வரும் விதத்தை பார்க்கும் போது, அவர்களுக்கு வாய்ப்பு சற்று அதிகமாக வாய்ப்பு இருப்பதாக நினைக்கிறேன். கடந்த காலங்களில் இந்திய துணை கண்டத்தில் நாங்கள் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தி இருக்கிறோம். உலகக்கிண்ணத் தொடரிலும் எமது ஆட்டத்தைத் தொடருவோம் என்றார். (ம)



# இரு அணிகளும் இறுதிவரை பெரும் போராட்டம் இருப்பினும் வடக்கின் போர் சமநிலையில் முடிவு



வடக்கின் போர் நேற்றைய மூன்றாம் நாளில் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. யாழ். மத்திய கல்லூரியின் இரண்டாவது இன்னிங்ஸ் 264 ஓட்டங்களுடன் முடிவுக்கு வந்ததுடன் 263 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு பதிலுக்கு களமிறங்கிய சென்.ஜோன்ஸ் கல்லூரி நாள் முடிவில் 179-5 என்ற நிலையில் இருந்ததையடுத்து 110ஆவது வடக்கின் போர் சமநிலையில் முடிவு கண்டது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற யாழ். மத்திய கல்லூரி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. முதல் இன்னிங்ஸுக்காக சகல இலக்குகளையும் இழந்து 161 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. அதிகபட்சமாக ஜெரோசன் 51 ஓட்டங்களையும், கோமேதகன் 39 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் சென். ஜோன்ஸ் கல்லூரியின் சார்பாக யதுசன் 4 இலக்குகளையும், நிலோஜன் 3 இலக்குகளையும், கானமிர்தன் 2 இலக்குகளையும், கபில்ராஜ் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு களமிறங்கிய சென்.ஜோன்ஸின் இன்னிங்ஸ் 163 ஓட்டங்களுடன் முடிவுக்கு வந்தது. அதிகபட்சமாக கிசாந்துயன் 31 ஓட்டங்களையும், யதுசன் இறுதிவரை ஆட்டமிழக்காது 28 ஓட்டங்களையும், கபில் ராஜ் 22 ஓட்டங்களையும் டினோயன் 13 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் யாழ்.மத்திய கல்லூரியின் சார்பாக தீபன்ராஜ் 4 இலக்குகளையும், தசோபன் 3 இலக்குகளையும், அலன்ராஜ் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

இரண்டு ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் இருந்து தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த யாழ். மத்திய கல்லூரி, இரண்டாம் நாளான நேற்றுமுன்தின முடிவில் 164-6 என்ற நிலையில் இருந்தது. கிருபாகரன் 30 ஓட்டங்களுடனும், கார்த்தீபன் ஓட்டமெதனையும் பெறாதும் இறுதி நாளுக்காக நேற்றுக் களமிறங்கினர். கிருபா கரனின் ஆட்டத்தில் நேர்த்தி எதிரொலித்தது. கார்த்தீபனும் ஓரளவு தாக்குப்பிடிக்க அடுத்த இலக்கு வீழ்த்தப்பட முன்பு அரைச்சதம் கடந்தார் கிருபாகரன். 19 ஓட்டங்களு டன் கார்த்தீபன் ஆட்டமிழந்ததுதான் தாமதம் கிருபாகரன் ஆட்டத்தில் அதிரடி காட்டினார். சிக்சர்களும் அவ்வப்பொழுது இருக்கத்தான் செய்தன. இலக்குச் சரிவை தவிர்க்கும் நோக்கில் பெருமளவான பந்துகளை தானே எதிர்கொண்டார் கிருபாகரன். இக்கட்டான நிலையில் சதமும் கடந்தார். மைதானம் சில நிமிடங்களுக்கு அல்லோலகல்லோலப்பட்டது. வடக்கின் போருக்கே உரிய அடையாளக் கூக்குரல் அது. 103 ஓட்டங்களுடன் கிருபாகரன் ஆட்டமிழக்க 264 ஓட் டங்களுடன் மத்திய கல்லூரியின் இன்னிங்ஸ் முடிவுக்கு வந்தது.


சதம் விளாசிய கிருபாகரனை தாங்கி வரும் மத்தியின் ஆதரவாளர்கள்

பந்துவீச்சில் சென்.ஜோன்ஸ் கல்லூரியின் சார்பாக கபில் ராஜ், யதுசன் இருவரும் தலா மூன்று இலக்குகளையும், கானமிர்தன், நிலோஜன் இருவரும் தலா இரு இலக்குகளையும் வீழ்த்தினர்.

முதல் இன்னிங்ஸில் இரு ஓட்டங்கள் முன்னிலை பெற்றமையால் சென்.ஜோன்ஸுக்கு இலக்காக 263 ஓட்டங்கள். ஒருநாள் ஆட்டங்களின் பாணியில் ஆடினால் இலக்கை எட்டக்கூடிய நிலைமை. ஆரம்ப வீரர்களாக சோமஸ்கரனுடன் தேவபிரசாந். அளவுக்கு அதிகமான நிதானம் எதிரொலித்தது. 24 ஓட்டங்களுடன் சோமஸ்கரனும் 11 ஓட்டங்களுடன் தேவபிரசாந்தும் ஆட்டமிழக்க ஜெனிபிளெமிங் அவர்கள் இருவரையும் விட நிதானித்தார். 107 பந்துகளில் 37 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். சூபீட்சன், நிலோஜன் பெரிதாக இல்லை. ஆட்டத்தின் இறுதி 5 பந்துப்பரிமாற்றங்கள் இருக்க வேடிக்கையை ஆரம்பித்தனர் யதுசனும் கபில்ராஜ்ஜும். சிக்சர்கள், பவுண்டரிகள் எனச் சீறிப்பாய்ந்தன. வெள்ளை உடையில் ரி-20 ஆட்டம் நடைபெற்றது. சென்.ஜோன்ஸ் 179-5 என்ற நிலையில் இருந்தபொழுது நாள் முடிவுக்கு வர ஆட்டம் சமநிலையானது.

பந்துவீச்சில் மத்திய கல்லூரியின் சார்பாக மதுசன் 2 இலக்குகளையும், கிருபாகரன், அலன்ராஜ் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர். ஆட்டநாயகனாகவும், சிறந்த துடுப்பாட்ட வீரராகவும் சதம் விளாசிய கிருபாகரன் தெரிவானார். சிறந்த பந்து வீச்சாளராகவும், சகல துறை வீரராகவும் சென்.ஜோன்ஸின் யதுசனும், சிறந்த களத் தடுப்பாளராக யாழ். மத்திய கல்லூரியின் பிரியலக்சனும், சிறந்த இலக்குக்காப்பாளராக சென்.ஜோன்ஸின் தேவ பிரசாந்தும் தெரிவானார்கள். (ம-23-ரி5-ரி2)




ஆட்டநாயகனாகவும், சிறந்த துடுப்பாட்ட வீரராகவும் தெரிவான கிருபாகரன்.


சிறந்த பந்துவீச்சாளராகவும், சகல துறை வீரராகவும் தெரிவான யதுசன்.


சிறந்த களத்தடுப்பாளராக தெரிவான பிரியலக்சன்.


சிறந்த இலக்குக் காப்பாளராக தெரிவான தேவபிரசாந்.

## காணி விற்பனைக்கு

வவுனியா ஓமந்தை நொச்சிமோட்டைக்கு இடைப்பட்ட பகுதியில் A-9 வீதிக்கு அருகே 15 ஏக்கர் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புக்கு: 0777464695

## காணி விற்பனைக்கு உண்டு

A-9 வீதி எழுதுமட்டுவாள் சந்தைக்கு அருகிலுள்ள 21 பரப்பு 8 குழி தென்னம்பிள்ளை, கிணற்றுடன் கூடிய காணி விற்பனைக்கு உண்டு.

077 229 9557

## வேலை வாய்ப்பு

யாழ்ப்பாணம் கே.கே.எஸ் வீதியில் இயங்கும் பிரபல நிறுவனத்திற்கு பணியாளர் தேவை

- வரவேற்பாளர் - பெண்
- கணனி ரைப்பிங் - ஆண்/பெண்
- சுத்திகரிப்பாளர் (பியோன்) - பெண்

தொடர்புக்கு : 0771974875

## தேவை

கட்டட நிர்மாணப் பணிகளை மேற்கொண்டு வரும் எமது நிறுவனத்திற்கு (Decon) உப ஒப்பந்தகாரர்கள் (Sub Contractors) மேசன், கூலி மற்றும் தினக்கூலி அடிப்படையில் மேசன், கூலியாளர்கள் தேவை.

T.P:0773614638,0778038567

## இலவச கணினி வகுப்புக்கள்

அடிப்படை கணினிக் கற்கைகளினை கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்ற வகையிலான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

பிரிவு III
Diploma in business Applications(DBA)
(ms office+Internet Technology)

IPS Thirunelvely
contact:0766852529

## விற்பனைக்கு உண்டு

தரமான சீமெந்துக்கற்கள், தூண்கள் மலிவான விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
வவுனியா, கிளிநொச்சி, யாழ்ப்பாணம்.

தொடர்புக்கு : 0750391980

## வேலையாள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பென்சி கடைக்கு ஆண் விற்பனையாளர் தேவை விரும்பியோர் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புக்கு: 0775258922

## தேவை

யாழ். நகரில் இயங்கும் பிரபல நில ஓடுகள் விற்பனை நிலையத்திற்கு களஞ்சிய காப்பாளர் தேவை.

#212, Palaly Road,Jaffna.
0212220033
e-mail: rsurendran@live.com

## வேலையாள்கள் தேவை

கொழும்பு நகரில் வேலை செய்வதற்கு பெயின்ட் வேலையாள்கள், உதவியாளர்கள் தேவை.

077 470 7511, 077 230 9164

## வீடு வாடகைக்குத் தேவை

யாழ். நல்லூர் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பகுதிகளில் 4 பேர் கொண்ட குடும்பம் ஒன்றிற்கு வீடு வாடகைக்கு தேவை.

075 925 1036

## சுத்தமான பசுப்பால் தேவை

வடமாகாணத்தின் எப்பகுதிகளிலும் இருந்தும் எம்மால் மொத்த அளவிலும் கொள்வனவு செய்யப்படும்.

076 531 0422

## வீடு விலைக்குத் தேவை

யாழ் நகருக்கு அண்மையாக (நல்லூர், திருநெல்வேலி, கொக்குவில் நாச்சிமார் கோயிலடி, சுண்டுக்குளி...)
சகல வசதியுடைய வீடு தேவை.
தரகர் தேவையில்லை.

தொடர்பு: 077 8051655

## வாடகைக்கு

யா/ மல்லாகம் விசாலாட்சி மகாவித்தியாலயத்திற்கு அருகாமையில் பிரதான வீதியில் அமைந்துள்ள 2 படுக்கையறையுடன் கூடிய வீடு வாடகைக்கு விடப்படும்.

T.P:0212241061,0773752291,0778038567

## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

வெற்றி வாரம்: 2750 திகதி 12.03.2016

வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து: 14 20 24 30 H
போனஸ் இல: 69
புதன்கிழமை ஜக்பொட்: ரூ. 17,463,075/-

Web: www.dlb.lk

## SUPER BALL

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 473
சீட்டிழுப்பு திகதி 2016.03.12

வெற்றி இலக்கங்கள்: 15 42 46 64 D
அடுத்த திங்கட்கிழமைக்கான ஜக்பொட்: ரூ. 46,978,420/=

Web: www.dlb.lk

## FLC FRENCH LANGUAGE CENTRE FOR BETTER FRENCH

பிரெஞ்சு மொழி வகுப்பு

Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட International Diploma in French
FRANCE, CANADA, SWISS, BELGIUM
விரிவுரையாளர் : MR. V. JEGAN (Trained in France - 2007, University இல் French விரிவுரைகளை மேற் கொண்டவரும்)
DELF A1, A2 Exam இல் 100 % சித்தி.. 1059 மாணவர்கள் French கற்றுள்ளனர்....

No. 40, பலாலி வீதி, இலுப்பையடி.
0779 789 456 / 021 221 7781
ஆரம்பம் : 19.03.16 சனி 08 am.

பிரதான வீதி, நெல்லியடி
TP: 021 3202973
ஆரம்பம்: 21.03.16 Mon@ 4pm.

ஆரியகுளம் → 100M → பலாலி வீதி → அப்பலோ Hospital → FLC

## திவ்விய ஆயுர்வேத வைத்தியம்

சகல நோய்களுக்குமான ஆயுர்வேத வைத்தியம்

50 வருட பாரம்பரியம் வாய்ந்ததும் மற்றும் முற்றிலும் பக்கவிளைவுகள் அற்ற மூலிகைகளினால் ஆன ஆயுர்வேத வைத்தியம்

இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்ட மூலிகைகளினால் ஆன நவீன மாத்திரைகள் மற்றும் எண்ணெய் வகைகள், சூரணங்கள், லேகியங்கள் போன்றவற்றினால் ஆன விசேட சிகிச்சைகளுக்கு மூட்டுவாதம், பாரிசவாதம், அடிபட்ட நோவு, ஆண்மைக்குறைபாடு, மாதவிடாய் கோளாறு மற்றும் தலைமுடி தொடர்பான பிரச்சனைகளுக்கும் உடற்பருமனை அதிகரிக்க/குறைக்க, முகப்பரு மற்றும் முகத்திலுள்ள அடையாளங்கள் நீங்க, நீரழிவு, வயிற்றுப்புண், மூலவியாதி, புற்கள் சம்பந்தமான நோய்கள், தோல்நோய்கள் போன்றவற்றை குணப்படுத்த

திவ்விய ஆயுர்வேதம்
இல.73, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 077 666 4674


## கோப்பாய் கரப்பந்தாட்டம்

கோப்பாய் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான கரப் பந்தாட்டத் தொடர் நாளையும் நாளை மறுதினமும் கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி மைதானத்தில் காலை 8.30 மணி முதல் நடைபெறவுள்ளது.

பெண்களுக்கான தொடர் நாளை திங்கட்கிழமையும், ஆண்களுக்கான தொடர் செவ்வாய்க்கிழமையும் நடைபெறவுள்ளன.

(ம-422-108)

## வவுனியா எல்லே

வவுனியா, மார்ச் 13

வவுனியா வடக்கு கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான இருபாலாருக்குமான எல்லே தொடர்கள் நாளை திங்கட்கிழமை காலை 8.30மணி முதல் புளியங்குளம் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

(ம-422)


## வீட்டு உதவியாளர் தேவை

கொழும்பில் வதியும் யாழ் குடும்பத்தினர் தம்மோடு தங்கியிருந்து சமையல் மற்றும் தமது சிறு பெண் குழந்தைகளை மாலையில் பார்த்துக் கொள்வதற்காக 35 -55 வயதில் பெண்ணொருவரை எதிர்பார்க்கின்றனர். சம்பளம் 18,000+

077 381 9855, 077 345 6779

## வேலையாள்கள் தேவை

கொழும்பில் இயங்கும் சலூன் ஒன்றுக்கு வேலையாள்கள் தேவை.

தொடர்பு : 077 1805474

## வீட்டுக்கு வீடு பால் விற்பனை

யாழ் மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வீடுகளுக்கு பால் விற்பனை செய்யப்படும். உங்கள் வீடுகளுக்கே கொண்டு வந்து தருகிறோம்

076 531 0422


## மரண அறிவித்தல்

### செல்வன் கணேசமூர்த்தி தனுசாந்
(BA Hons மெய்யியல்துறை யாழ்.பல்கலைக்கழகம்)



கண்ணாமலை, உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வன் கணேசமூர்த்தி தனுசாந் 12.03.2016 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் கணேசமூர்த்தி - திலகேஸ்வரி தம்பதியின் சிரேஷ்ட புதல்வனும், பிரசாந் (கிழக்குப் பல்கலைக்கழகம்), குலசாந் (யாழ். பல்கலைக்கழகம்), தர்சினி, செந்தூரன் ஆகியோரின் பாசமிகு சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.03.2016) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக எள்ளங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கண்ணாமலை,
இமையாணன்,
உடுப்பிட்டி.

தகவல்:
குடும்பத்தினர்.

077 809 8116

## கண்ணீர் அஞ்சலி



கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க உள்ளகக் கணக்காய்வாளர்

### நாகராசா நவரட்ணராசா

அவர்களின் மறைவிற்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பழைய மாணவர் சங்கம்
கொக்குவில் இந்துக் கல்லூரி.

(69918)
(10.3)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் சிரேஷ்ட ஆசிரியை
திருமதி ஸ்ரீ. பத்மலோஜினி அவர்களின்
அன்புத் தாய்

### திருமதி அழகதுரை ஜானகியம்மா

அவர்கள் சிவபதமடைந்ததையிட்டு துயரடைவதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி சாந்தி சாந்தி

பாடசாலை சமூகம்
யா/விக்னேஸ்வர கல்லூரி, கரவெட்டி.

(C29812)
(10.17)


## கடை வாடகைக்கு

கே.கே.எஸ் வீதி மனோகரா சந்திக்கு அருகில் மேல்மாடியுடன் உள்ள கடை வாடகைக்கு உண்டு.

தொடர்பு : 077 661 5973

## தேவை

யாழ் நகரில் இயங்கி வரும் தங்கும் விடுதி ஒன்றுக்கு இரவு தங்கி நின்று பணிபுரியக்கூடிய 45வயதுக்கு மேற்பட்ட ஆண் வேலைக்குத் தேவை.

தொடர்பு : 071 340 3400

## தேவை

அச்சகத்தில் பைண்டிங் (புத்தகம் கட்டுநர்) வேலை செய்வதற்கு அனுபவமுள்ளவர்களும் பழக விரும்புவோரும் உடன் தேவை.

புதிய கங்கை பிறின்டேர்ஸ்
077 555 3918, 021 221 7867

## வீடு வாடகைக்குத் தேவை

தனியார் நிறுவனம் ஒன்றில் முகாமையாளராக கடமைபுரியும் சிறிய குடும்பத்திற்கு யாழ்.மாநகர சபைக்குட்பட்ட பகுதிக்குள் வீடு வாடகைக்குத் தேவை.

077 342 4034


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13.03.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.